SILVER JUBILEE SPECIAL LECTURES

EDITOR

DR. R. VIJAYALAKSHMY

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES MADRAS

SILVER JUBILEE

SPEICIAL LECTURES

EDITOR

DR. R. VIJAYALAKSHMY

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
C.I.T. Campus, TARAMANI
MADRAS - 600 113.

SILVER JUBILEE SPECIAL LECTURES

Bibliographical Data

Title of the Book	: SILVER JUBILEE SPECIAL LECTURES
Editor	: Dr. R. VIJAYALAKSHMY D. Phil (oxon) Senior Research Fellow I.I.T.S.
Publisher & Copyright	: International Institute of Tamil Studies, CIT Campus, Tharamani, Madras-600 113.
Publication Number	: 225
Language	: English and Tamil
Date of Publication	: December 1995
Edition	: First
Paper used	: 16Kg. Creamwove
Size of the Book	: ⅛ Demy size
Printing types Used	: 10 Pt.
Number of Pages	: 284 + 8
Number of Copies	: 1000
Price	: Rs. 60/-
Printers	: Pavai Printers Pvt. Ltd., Madras-14. Phone : 832441
Binding	: Paper Pack
Subject	: Articles on various subjects related to Tamil and Tamil Nadu.

Neither the editor nor the Institute are responsible for the ideas expressed by the authors in their articles.

Editor's Preface

The year 1996 represents an important landmark in the growth of the International Institute of Tamil Studies as it is the Silver Jubilee Year. The Eighth International Conference on Tamil which was held during January 1995 at Thanjavur, Tamil Nadu provided an opportunity for the Institute to invite eighteen eminent scholars from different parts of the world and engaged in a wide variety of research studies in different aspects of Tamil language, literature and culture and organize a series of special lectures called the Silver Jubilee Special Lecture Series. Along with these there were also some lectures delivered by Tamil scholars.

This volume contains nine contributions all of which were delivered at the International Institute of Tamil Studies under the Silver Jubilee special lecture series. It is designed primarily to suit both the readers and the scholars of Tamil. It is bilingual and deals with the following subjects: Tamil Poetry, Poets, Authors, Manuscripts, Unpublished Texts, A Comparative Study of the Ramayana Texts, Women and Politics, Script Reform and Tamil Society.

Often good papers are presented in various seminars but unfortunately are seldom published. In this Volume nine good papers which were originally presented as invited lectures have been compiled together and in my opinion will be undoubtedly of use to Tamil readers and scholars.

I would like to thank Dr. Ramar Ilango, the Director of the International Institute of Tamil Studies who constantly encouraged this endeavour at our Institute.

My thanks are due to Miss. K. Narmada, S. Latha, K. Kanmanipriya and S. Malarkoti who took pains to go through the proofs. My sincere thanks are also due to the Proprietor, Pavai Printers, Madras for executing the task of printing these papers in the form of an attractive book.

R. VIJAYALAKSHMY

முனைவர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113.

அணிந்துரை

தமிழர் கலை, நாகரிகம், பண்பாடு, இலக்கியம், இலக்கணம் முதலிய அனைத்தும் உலகெங்கும் பரவவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கினார். அப்பெருந்தகை உருவாக்கிய நிறுவனம் வெள்ளி விழா ஆண்டை நோக்கி பீடு நடை போடுகிறது.

அவ்வையாரின் வாழ்வும் வாக்கும் பற்றிப் பேராசிரியர் தி. முத்துக்கண்ணப்பர், தமிழ்ச் சுவடிகள் பற்றித் திரு. மு. கோ. இராமன் மறைந்துபோன தமிழ்நூலை மீட்டெடுக்கும் வகையில் பெரும் பொருள் விளக்கம் பற்றிப் புலவர் இரா. இளங்குமரன், சங்ககாலச் சமுதாயப் பழக்கவழக்கம் பற்றிப் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை, நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் தமிழ்ப் பணிகள் பற்றிப் பேராசிரியர் பி. விருத்தாசலம், கம்பராமாயணத்தோடு பர்மிய இராமாயணத்தை ஒப்பிட்டுச் சப்பானியப் பேராசிரியர் ஓனோ டோரு, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் புருனைப் பேராசிரியர் முனைவர் கே. சி. இராசாராமன், தனித்தமிழ் இயக்கம் குறித்துச் சிம்லாவிலுள்ள இந்தியச் சிறப்பாய்வு மைய ஆய்வாளர் விஜயா இராமசாமி, குறிஞ்சிப் பாட்டுப் பற்றி உருசியப் பேராசிரியர் ஏ. எம். துபியான்ஸ்கி ஆகியோர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வாழும் தமிழறிஞர்கள் இந் நிறுவனத்தில் நிகழ்த்திய அச்சொற்பொழிவுகள் நூலாக்கம் பெற்று வெளிவருகின்றன.

அறிஞர் பெருமக்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் ஆழ்ந்த சிந்தனைக்குரியவை. நுண்மாண் நுழைபுலம் பெற்ற அப்பெருமக்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் புதிய நோக்கில் அமைந்தவை. தமிழுக்குத் தொண்டாற்றிய அறிஞர் பெருமக்கள் பலர் இன்று இருளில் மறைந்த ஓவியங்களைப் போல் வெளியுலகிற்குத் தெரியாமல் உள்ளனர். அவர்களை அடையாளம் காட்டுகின்ற சொற்பொழிவுகளும் இத்தொகுப்பில் உள்ளன.

திறமையான புலமையெனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கருத்துக்கேற்ப வெளிநாட்டு அறிஞர்கள் தமிழிலக்கியத்தின் அருமையையும் பெருமையையும் செம்மாந்த செழிப்பையும் எடுத்தியம்பியுள்ளனர்.

இச் சொற்பொழிவுகளை ஒருங்கிணைத்து நடத்திய பொறுப்பாளர் முனைவர் ஆர். விஜயலட்சுமி அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அயராத உழைப்பும் ஆய்வுத் திறனும் வாய்க்கப் பெற்ற இவரின் பங்கு சிறப்புக்குரியது.

நிறுவன வளர்ச்சியில் ஆர்வங்கொண்டு எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும் பல்லாற்றானும் உறுதுணையாய் இருக்கின்ற தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் அவர்களுக்கும் வனப்புடன் நூலை அச்சிட்டுத்தந்த பாவை அச்சகத்தார்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்

பொருளடக்கம்

1. அவ்வையார் வாழ்வும் வாக்கும் -
தி.முத்துக்கண்ணப்பன் 1

2. தமிழ்ச்சுவடிகள் - **மு.கோ.ராமன்** 46

3. பெரும்பொருள் விளக்கம் -
இரா.இளங்குமரன் 63

4. சங்ககாலச் சமுதாயப் பழக்க வழக்கம் -
பேராசிரியர் மு.சண்முகம் பிள்ளை 144

5. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்
தமிழ்ப்பணிகள் - **பி. விருத்தாசலம்** 193

6. Some Features of the Mon Rama Story
OHNO TORU 234

7. Tamil Orthography:
a System of Phonetic Notations
Dr.K.C.Rajaraman 251

8. Tani Tamizh Iyakkam:
Gender Politics and Literature in Tamil Nadu
VijayaRamasamy 259

9. Some Observations on Kurinci Poetry -
A.M.Dubiansky 278

அவ்வையார்

வாழ்வும் வாக்கும்

தி. முத்துக்கண்ணப்பன்

நீராடும் கடலுடுத்த நிலவுலகமாகிய உடலின் திருமுகமாகத் திகழ்வது புண்ணிய பாரத பூமி. இப் புண்ணிய பாரதபூமியின் திலகமாக ஒளிர்வது தமிழ் நாடு என்று கூறின் மிகையாகாது.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனப் பாடுகிறார், மகாகவி பாரதியார். அதாவது உலகில், இந்தத் தமிழ் மண் வான்புகழ் பெற்றதற்கு முதன்மைக் காரணமாய் விளங்குபவர் திருவள்ளுர் என்பதே.

உலக அரங்கில் தமிழ்நாட்டின் சிறப்பை உயர்ந்த நிலையில் நிறுத்திய பெருமை வள்ளுவரைவிட அவ்வையாரையே பெரிதும் சாரும் என்று கூறுவது சாலப் பொருந்தும். அதற்கான சான்றுகள் சிலவற்றை இப்போது ஆராயலாம்.

உலகத்தில் ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. ஒவ்வொரு மொழியிலும் எண்ணற்ற பெரும் புலவர்கள் இருப்பர். சங்க காலத்தில், அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் தான் பெரும்பாலான பெண்பாற் புலவர்கள் பிறந்துள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. சங்ககாலப் புலவர் பெருமக்களில் முப்பதுக்கு மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதியார், 'கட்டுரைகள்', 'வசனங்கள்' என்னும் இரண்டு பெரிய தொகுப்பு நூல்களையும் படைத்துள்ளார். அவற்றைப் படித்தால் பாரதியார், அவ்வையாரே அனைத்துப் புலவரினும் பெரிதும் சிறந்தவர் எனக்கருதியுள்ளார் என்னும் உண்மை நன்கு புலனாகும்..

மகாகவி பாரதியார், 'யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை' என்றும், 'கம்பன் பிறந்த தமிழ்நாடு...வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று ஓர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' என்றும் கம்பன், வள்ளுவர், இளங்கோ ஆகிய மூவரைத்தான் பெருமையோடு போற்றுகிறார். இவர்கள் எல்லாம் உலகக் கவி அரங்கில் தங்கள் கவிதை மூலமாகத் தமிழ் மொழியின் தொன்மையையும் பெருமையையும், சிறப்பினையும் உணர்த்தி யுள்ளார்கள் என்ற பொருளில் பாரதியார் பாடியுள்ளார். ஆனால்

அவ்வையார், உண்மையிலேயே கம்பன், வள்ளுவர், இளங்கோ இம்மூவரிலும் மிகமிகச் சிறந்தவர், உயர்ந்தவர் என்பதைத் தம்முடைய 'பாரதி நூல்கள் - வசனங்கள்' 'பாரதி நூல்கள் - கட்டுரைகள்' என்னும் இருபெரும் உரைநடை நூல்களிலும் தெளிவாகக் கூறியுள்ளார்.

தமிழில் ஆயிரம் ஆயிரம் புலவர்கள் சங்க காலத்திலும், இடைக் காலத்திலும், பிற்காலத்திலும் இருந்தார்கள் என்றாலும், குழந்தைகள் முதல் முதியோர்வரை, பாமரமக்கள் முதல் கற்றறிந்த பெரும் பண்டிதர்கள் வரை அனைவர்களின் உள்ளத்திலும் என்றும் நிலைத்து வாழும் ஒரே கவிஞர் பெருமாட்டியார்தான் என்பதை யாவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. பாரதியார், கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகிய முப்பெரும் புலவர்களைவிட மிகவும் பெருமையோடு பாராட்டியவர், பாராட்டப்படுவர் அவ்வையார் என்பதை அவரே தம்முடைய உரைநடை நூல்களிலும் கட்டுரை நூல்களிலும் பின்வருமாறு கூறுகிறார்:-

'ஒரு தேசத்து நாகரிகத்துக்கு அந்த அந்தத் தேசத்தின் இலக்கியமே அடையாளமாகும். ஆங்கில நாகரிகத்துக்கு ஷேக்ஸ்பியர் முதலிய மகாகவியின் நூல்களே அளவுக் கருவியாகக் கருதப்படுகின்றன. 'நாங்கள் இந்திய தேசத்து ராஜ்யாதிகாரத்தை இழக்க ஒருப்பட்டாலும், ஒருப்படுவோமேயன்றி, ஷேக்ஸ்பியரை இழக்க ஒருப்பட மாட்டோம்' என்று நாம் மறுமொழி சொல்வோம்' என்று மெக்காலே என்னும் ஆங்கில அறிஞர் சொல்கிறார். இம்மாதிரியாகப் பெருமை படைத்த நம்மவர் கம்பனைச் சொல்லலாம். வள்ளுவரைச் சொல்லலாம். இளங்கோவடிகளைக் கூறலாம். இன்னும் பல புலவர்களைக் காட்டலாம்: எனினும் கம்பர் திருவள்ளுவர் முதலிய பெரும் புலவர்களாலேயே தம் அனைவருக்கும் மிகமிகச் சிறந்தவர்களாகக் கருதப்பட்ட அவ்வை பிராட்டியை மிகவும் விசேஷமாக எடுத்துச சொல்லக்கூடும்.

'தமிழ்நாட்டின் மற்ற செல்வங்களை எல்லாம் இழந்துவிடக் பிரியமா அல்லது அவ்வையாரின் நூல்களை இழந்துவிடப் பிரியமா?' என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களானால் 'மற்றச் செல்வங்களை எல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு அமைத்துக்கொள்ள வல்லது, ஆனால் அவ்வை பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்பட மாட்டோம். அது மீண்டும் அமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெருஞ் செல்வம்' என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். தமிழ் நாட்டு நாகரிகத்துக்கு இத்தகைய பெரும் செல்வமாகவும், இத்தனை ஒளிசான்ற வாடா விளக்காகவும் தனிப் பேரடையாளமாகவும் தமிழ் மாது ஒருத்தியின் நூல்கள் விளங்குவது நமக்குப் பெருமகிழ்ச்சி தரத்தக்கதொரு செய்தியன்றோ?''

1. 'அவ்வையார் உலகம் முழுவதும் கண்டு உவக்கத்தக்க நீதி நூல்கள் சஷமத்தவர்'

2. 'அவர் மகிமை பொருந்திய ஆத்மஞானி'

3. 'அவர் சிறந்த யோக சிந்தியால் உடம்பை முதுமை நோவு சாவுகளுக்கு இறையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றியவர்.

'அவ்வையார் வெறுமே நூல் ஆசிரியர் மட்டும் அல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜ நீதியில் மிகவும் வல்லவர் என்று தமிழ் நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்று ராஜாங்கத் தூதில் நியமனம் பெற்றிருக்கிறார் (அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றமை)

'ஜனசமூக நீதிகளின் விஷயத்தில் தமிழ்நாட்டில் எப்போதும் பிரமாணமாக இயன்று வருவது அவ்வையின் நீதி வாக்கியங்களும் நீதிநூல்களுமேயாம். ஆண்மக்களிடையே கூட உயர்ந்த கல்வி பயின்றோர் மாத்திரமே ஜனசமூக விஷயங்களில் வள்ளுவர் குறள், நாலடியார் முதலியவற்றைப் பிரமாணமாகக் கூறுவர். அதிகம் படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண் பெண் அனைவருக்கும் அவ்வையாரின் நீதியே வழிகாட்டி, தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்குச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களாக அவ்வையாரின் நீதியே பிரமாணமாகக் நடைபெற்று வருகிறது.'

'சாமான்ய ஜனங்கள் அவ்வை நீதியைக் கொண்டாடி வருகிறார்கள். எனில் கற்றோரும் அரசரும் அதைப் புறக்கனித்து வந்தார்கள் என்று கருதுதல் வேண்டா. கற்றோருக்கும் அரசருக்கும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் குறள் நாலடியார் முதலிய நூல்களைக் காட்டிலும் அவ்வையாரின் நூல்களில் அகப்பற்றுதலும் அபிமானமும் இருந்து வருகின்றன.'

ஆத்ம ஞானி அவ்வையார் இயற்றியிருக்கும் 'அவ்வை குறள்' என்ற நூல் தமிழ் நாட்டு யோகிகளாலும் சித்தர்களாலும் உபநிஷத்துக்குச் சமானமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. யோக சாஸ்த்திரத்துக்கும் மோட்சசாஸ்திரத்துக்கும் இந்நூல் முக்கிய பாடங்களில் ஒன்றாகக் கருதத் தக்கது.

மேலும், யோகானுபூதி சம்பந்தமாப் பிறர் கூறுமிடத்தே மிகவும் கடினமும் அசாதாரணமும் ஆகிய கொள்களையும் வாக்கியங்களையும் வழங்குதல் இன்றியமையாதது என்ற கருத்துடன் வேலை செய்து இருக்கிறார்கள். அவ்வையார் நூ லோமிகத் தெளிந்த, மிகஎளிய தமிழ் நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும் படியாக எழுதப்பட்டிருக்கிறது. 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் அவ்வை

ஒப்பற்றவர். இத்துடன் மிகவும் கடுமையான, நுட்பமான விஷயங்களை யாருக்கும் அர்த்தமாகும் படி எளிய நடையில் சொல்வதாகிய அற்புதத் தொழிலை உயர்ந்த கவியரசர்களே, தெய்வீகத் தொழில் என்று கருதுகிறார்கள். இந்த அற்புதத் தொழிலில் அவ்வை நிகரற்ற திறமைவாய்ந்தவர்.'

எனவே, தமிழ் நாட்டின் மிகஉயர்ந்த புலவர் **அவ்வையாரே** என்பது மகாகவி பாரதியார் கண்ட உண்மை என்பதை இவை நன்குணர்த்துகின்றன.

அவ்வையாரின் பெற்றோர்:

இப்போது அவ்வையாரின் பெற்றோர் யார் என்பதைப் பற்றிக் காணலாம். துரதிருஷ்டவசமாக, சங்ககாலப் புலவர்கள் முதல் இடைக்காலப்புலவர்கள் வரை வாழ்ந்த புலவர்களின் பெற்றோர், பிறந்த, வாழ்ந்த இடம், காலம். ஆகியவற்றைப்பற்றிய விளக்கமான சான்றுகளோடு கூடிய வரலாறு நம் தமிழ் மொழியில் இல்லை. அவ்வாறே அவ்வை பெருமாட்டியின் பெற்றோர் பிறந்த ஊர். பிறந்த இடம். வாழ்ந்த காலம் இவற்றை நாம் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

'சண்டாளப் பெண் ஒருத்தி பிராமணனால் வளர்க்கப்பட்டு யானி தத்தன் என்னும் அந்தணனை மணந்து அவ்வை, கபிலர் அதியமான், வள்ளி, வள்ளுவர், உப்பை, உறுவை ஆகிய எழுவரைப் பெற்றாள் என்பது சிலர் கருத்து. 'பெற்றோர் யாளிதத்தன், ஆதி என்னும் புலச்சி' என்றும், 'பெற்றோர் ஆதி என்னும், புலச்சி பகவன் என்னும் அந்தணன் என்றும், ஒன்றுக்கு ஒன்று முரணான கருத்துகளைச் சிலர் கூறுகிறார்கள். இது வெறும் புனைந்துரை, 'அவ்வையாரின் பெற்றோர் இவர்' என்று துணிதற்குச் சான்று இல்லை' என்று கார்மேகக் கோனார் போன்ற புலவர் பெருமக்கள் கூறுகின்றனர் (நல்லிசைப் புலவர்கள் 1928; பக்.176)

எனவே, அவ்வையாரது பெற்றோர்கள் யார் என்பதையும் நாம் அறுதியிட்டு உறுதியாக கூறமுடியவில்லை. இவ்வாறே அவர் குலத்தைப் பற்றியும் கூறுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை. அவர் பாணர் குலத்தவர் என்பது அறிஞர் சிலர் கருத்து. பாணர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து, சுவையான செய்யுட்கள்யாத்தும், ஆடுதலிலும் பாடுதலிலும், வேந்தர்க்குத்தூது செல்வதிலும் சிறந்து விளங்குபவர்கள். அவ்வையார் புறநானூறு 89இல் 'மடவரல் உண்கண் வாணுதல் விரலி, பொருநரும் உளரோ நும் அகன்றலைநாட்டு' என்றும் 'அரிக்குரல் தடாரி இரிய ஒற்றி, பாடிநின்ற' (புறநானூறு 390ஆம் பாடல்) என்றும் 'காவினன் கலனே கருக்கினன் கலப்பை' என்றும் (புறம்206) பாடியிருப்பதிலிருந்து அவ்வையார் பாணர் இனத்தைச் சார்ந்தவராக இருக்கலாம் என்பது கார்மேகக் கோனார் போன்ற புலவர் சிலருடைய கருத்து. தம்மைப்

பாணர் போல் வைத்துப் பாடுதல் புலவர்கள் இயல்பு. ஆராய்ந்து பார்க்கும்போது அவ்வையார் பாணர் இனத்தினர் என்னும் கருத்துகள் சரியல்ல என்பது புலனாகும்.

அவ்வை - பெயர்க்காரணம்...

'அவ்வை என்னும் பெயர் அம்மை என்பதன் திரிபு என்று சிலர் கூறுகின்றனர். (கலைக்களஞ்சியம். தொகுதி 2, பக்க.754) அவ்வை என்ற பெயர் ஆர் என்ற பன்மை விகுதி பெற்று அவ்வையார் என்று வழங்கப்பட்டது', என்று கொள்வதிலும்.தவறில்லை.

'அவ்வை பாட்டி' என்னும் தொடரிலுள்ள 'பாட்டி' என்ற சொல்லுக்கு இசையோடு பாடுதல் என்று பொருள் கூறி அதனால் அவ்வை பாட்டி....என்னும் பெயர் வந்தது என்றும் சிலர் கூறுகின்றனர். (நல்லிசைப் புலவர்கள்; கார்மேகக்கோனார். பக்.177) அது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

சமயம்...

அடுத்து, அவ்வையார் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர் என்பதைக் காணலாம்.

அவ்வையார், பொதுவாக விநாயகர் வழிபாட்டினர். எடுத்துக்காட்டாக, 'ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித்தொழுவோம் யாமே' என்று ஆத்திசூடியில் கடவுள் வழிபாட்டுப் பாடலாகப் பாடியுள்ளார்'. அதாவது 'ஆத்தி மாலை சூடிய சிவபெருமான் விரும்பும் மகன் விநாயகன்' என்பது பொருள். அவ்வாறே, கொன்றை வேந்தன் என்னும் நூலில் முதல் இறை வணக்கப் பாடலில் 'கொன்றை வேந்தன் செல்வன் மலரடி, என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே' அதாவது கொன்றை மலர் அணிந்த சிவபெருமான் மகனாகிய விநாயகனின் திருவடிகளைத் துதிப்போம் என்று பாடுகிறார்.

'துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் நமக்கு வாக்குண்டாம்' என்று. மூதுரை என்னும் நூலில் விநாயகரைப் பாடுகிறார். அவ்வாறே 'நல்வழி' என்னும் நூலிலும் 'துங்கக் கரிமுகத்துத் தூமணியே' என்று விநாயகப் பெருமானைத் தம் இறைவனாகப் பாடுகிறார். இவற்றினும் சிறப்பாக 'விநாயகர் அகவல்' என்னும் பாடலில் விநாயகப் பெருமானின் திரு உருவத்தையும், சிறப்பையும், பெருமையையும் சுவையுடன் வருணித்து, 'தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட வித்தக விநாயக விரைகழல் சரனே' என்ற பாடலும் இக்கொள்கைக்குத் தக்க சான்றாகும்.

மேலும், சேரமான் பெருமான் நாயனாரும், சுந்தரமூர்த்தி அடிகளாரும் கயிலாய மலைக்குச் செல்வதை அறிந்த அவ்வையார். தம் விநாயக வழிபாட்டினை, தாமும் அவரோடு செல்லவேண்டுமென்று

நினைத்து விரைவாகச் செய்தபோது, விநாயக பெருமான் தம் உள்ளத்தே தோன்றி, 'அமைதியாகச் செய்க. அவர்களுக்கு முன்னே நீ அங்கு இருப்பாய்' என்று கூறியதாகவும் பின்னர் அவ்வையார் அமைதியாக பூஜை முடித்துக் கண்ணைத்த திறந்து பார்த்தபோது அவ்விருக்கும் முன்னரே. தாம் கயிலாய மலையில் கொண்டு வந்து விடப்பட்டு இருப்பதை உணர்ந்த்தாகவும் ஒரு கதை உண்டு. இவை அனைத்தும் அவ்வையார் விநாயக வழி பாட்டினர் என்னும் உண்மையை விளக்குகின்றன.

அவ்வையார் விநாயகப் பெருமானைத் தம் குருவாகக் கொண்டு குண்டலினி யோகத்தில் ஆழ்ந்து பெருவாழ்வு வாழ்ந்த ஒரு சித்தர் என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் சித்தர்கள் அனைத்துத் தெய்வத்தையும் ஒரே தெய்வமாக எண்ணுவது இயல்பு.

'அவ்வையார் அரனை மறவேல்' என்று சிவபெருமானையும், 'திருமாலுக்கு அடிமை செய்' என்று திருமாலையும், இடைச்சிறுவனாக, 'பெரியது, அரியது, இனியது, கொடியது' என நான்கு வினாக்களை விடுத்து, விடை கண்ட முருகனைப் பற்றிய குறிப்பும் அனைவரும் அறிந்தவையே. எனவே, அவ்வையார் எல்லாம் ஒரே கடவுள் என்னும் கொள்கையினர் என்பது இங்குத் தெளிவாகிறது. அனைத்துத் தெய்வங்களையும் ஒன்றாகக் கருதுவதே, குண்டலினி யோகம் பயிலும் சித்தர்களின் இயல்பு. எனவே, அவ்வையார் ஒரு சித்தர்; குண்டலினியோகியர் என்பது தெளிவு.

பிறப்பிடம்...

'அவ்வையார் பிறந்தது சோழ நாட்டில் உறையூர் என்ற ஊர்' என்று அபிதான சிந்தாமணியிலும், வினோதரச மஞ்சரி என்னும் நூலிலும் குறிப்புள்ளது. 'பெண்ணை ஆற்றங்கரையில் புல்வேளூரிலும் அதியமான் ஊராகிய திருக்கோவலூரிலும் வதிந்தார்' என்கிறார் ரா. ராகவையங்கார், தம் நல்லிசைப் புலமை மெல்லியலார் என்னும் நூலில். (பக்.31) 'சங்ககால அவ்வையின் நாடு, அதியமான் நாடு, அங்கே பிறந்து, வாழ்ந்து புகழ்பெற்று அதியமான் பால் சென்று அவன் ஆஸ்தானப் புலவராய் விளங்கியிருத்தல் வேண்டும்' என்றும் கூறுகிறார், அனாவிரத விநாயகம் பிள்ளை ('அவ்வையார்' பக்.150) 'சேரமான் நாட்டிலும் ஓர் பகுதி அதியமான் நாடு. மைசூர் எல்லையில் தகடூர் என்னும் ஓர் ஊர் உண்டு. புறநானூறு கூறும் குதிரைமலையும் அங்கு உள்ளது. ஆதலால் அவ்வையார் மைசூர் எல்லையிலுள்ள அத் தகடூர் என்னும் ஊரில் பிறந்தார்' என்கிறார் கார்மேக கோனார். சேலம் மாவட்டத்திலுள்ள தர்மபுரியே தகடூர் என்றும் சிலர் கூறுகின்றனர். (நல்லிசைப் புலவர்கள், பக்.177)

'அவ்வையார் வளர்ந்தது காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த பாணர் சேரி என்று கூறுவாருள் உளர், என்றும் அனவிரத விநாயகம் பிள்ளை கூறுகிறார் (அவ்வையார் என்ற நூலில்).

'அவ்வையார் கோயில் தஞ்சை மாவட்டத்தில் வளவனாற்றங் கீழ்க்கரையில், துளசிமான்பட்டி என்னும் ஊரில் உள்ளது' அபிதான சிந்தாமணி தொகுதி 2, பக்.310) அது தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டத்தைச் சேர்ந்தது. அதில் உள்ள சிலை மூதாட்டி வடிவில் உள்ளது' என்றும், 'கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலிருந்து 10 கி.மீ. தொலைவில், தாடகமலை அடிவாரத்தில் தோவாளை ஆற்றங்கரையில் அவ்வையாருக்குக் கோயில் உள்ளது. அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது' என்றும் அனவிரத விநாயகம் பிள்ளை கூறுகிறார்.

எனவே, அவ்வையார் பிறந்து, வாழ்ந்த ஊர் பற்றியும் ஒன்றுக்கொன்று முரணான கருத்தே நிலவுகிறது. ஆதலால், அவ்வையாருடைய பிறப்பிடமும் ஐயப்பாடாகவே உள்ளது.

அவ்வையார் ஒருவரா? பலரா?

'அவ்வையார் ஒருவரா, பலரா?' என்பதில் ஐயப்பாடு உண்டு. ஆராய்ச்சி அறிஞர்கள் சிலர் அவ்வையார் எனும் பெயரால் மூவர் வாழ்ந்தனர் என்றும், சிலர் 'இருவர்' என்றும், சிலர் 'ஒருவர்' என்றும் கூறுகின்றனர். அக்கருத்துகளை இனிக் காண்போம்:

மூவர்

'அவ்வையார் ஆயிரம் ஆண்டுகள் முன் வாழ்ந்தவர். இவர் காலத்தில் கம்பர், ஒட்டக்கூத்தர் என்னும் பெரும் புலவர்கள் வாழ்ந்தனர்'....

'அவ்வையார் என்னும் பெயருடைய பெண்புலவர்கள் வேறு இருவர் இருந்தனர். ஒருவர் 'விநாயகர் அகவல்' என்ற யோகநூல் ஒன்றை எழுதியுள்ளார். மற்றொருவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் என்று கூறுகிறது' குழந்தைகள் கலைக்களஞ்சியம். (தொகுதி 2; பக்கம்-96).

அவ்வையார் இருவர்

'தமிழகத்தில் தனிச் சிறப்புடன் விளங்கிய பெண்பாற் புலவர்கள் இருவர். இருவருள் ஒருவர் சங்க காலத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். மற்றொருவர் 12ஆம் நூற்றாண்டில் கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியோர் காலத்தில் இருந்தவர்' என்கிறது கலைக் களஞ்சியம் (தொகுதி -2, பக்கம். 754).

....'முன் அவ்வையார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். பின் அவ்வையார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். அவ்வையார் என்னும் பெயரில் 'இருவர் ஆதல் நிச்சயம்' என்கிறார்' அவ்வையார்' என்னும் தம் நூலில், அனவரத விநாயகம் பிள்ளை என்னும் தமிழறிஞர்.

ஒருவர்

அவ்வையார் என்னும் பெயரில் ஒருவரே இருந்துள்ளார் என்பது என் ஆராய்ச்சியின் முடிவு. அதற்குச் சான்றாக், கனகசபை பிள்ளை அவர்கள் "Tamil Eight Hundred Years ago' என்னும் நூலில் எழுதியுள்ள,

"It is clear from her (Avviyar) poems which are preserved in the "Pura Nanooru' and "Aka Nanooru' that she (Avvaiyar) flourished during the reign of the Pandian King, Ugra Peruvazhuthi in the beginning of the Second Century A.D. and could not have therefore, been contemporary of the midieval Kings Kulothunga Cholan or Cheraman Perumal. But Tamil Pandits, who loved the marvellous, assert with a show of wisdom, that Avvaiyar lived to the extraordinary age of six or seven hundred years, and that in her youth she was a contemporary of Ugrapandia, and in her old age of Kulothunga Chola, whose reign commenced seven centuries later" என்பதைக் குறிப்பிடலாம். (1966, page206)

'அவ்வையாருக்கு அதியமான் நெல்லிக்கனியை அளித்தார். இந்த அருங்கனி கொல்லிமலைச் சாரலில் பழுக்கும் ஒரே பழம். அதை உண்பவர்கள் பன்னூறு ஆண்டுகள் வாழவேண்டுமென்று அதியமான் அவ்வைக்கு அளித்தான்' என்று நல்லிசைப் புலவர்கள் என்ற நூலில் கார்மேகக் கோனார் என்னும் தமிழ் அறிஞர் கூறுகிறார். (பக். 152)

'நெல்லிக்கனியை ஒரு முனிவர் கஞ்ச மலையிலிருந்து 'பிரான்மலை) பெற்று அதியமானுக்குச் 'சாதல் நீங்கக் கொடுத்தான்' என்கிறது கரு'ர நாதர் புராணம்' என்று நல்லிசைப்புலவர் என்றும் நூலில் கார்மோகக் கோனாரே குறிப்பிடுகிறார். (ஷ.பக்.152)

'மால்வரை கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி அமிழ்து விளை
தீங்கனி அவ்வைக்(கு) ஈந்த அதியன்'

என்று கூறப்பட்டுள்ளது (சிறுபாண். 99-103).

'சாதலை நீக்கும் கருநெல்லிதன்னைத் தமிழ்ச்சொல் அவ்வைக்கு ஆதாரத்தோடு கொடுத்தவன் (அதியமான்)' என்கிறது கொங்கு மண்டலச் சதகம். (ஷ.பக்.152)

திருக்குறள் பரிமேலழகர் உரை (குறள்.11) இக்கருத்தையே குறிப்பிடுகிறது. புறநானூறு 91ஆம் பாட்டில் அவ்வையார் 'பால்புரை பிறை நுதல் பொதிந்த சென்னி, நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும! நீயே, தொன்னிலைப், பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட சிறு இலை நெல்லித் தீங்கனி குழியாது, ஆதல் நின்கைத் தடக்கிச் சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே' என்று குறிப்பிடுகிறார்.

'இங்குச் சாதல் நீங்க' என்னும் சொல் குறிப்பிடத்தக்கது. நெல்லிக்கனி தின்பவர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழ்தல் கூடும். 'சாதல் நீங்க' என்று குறிப்பிடுவதினின்றும் அவ்வையார் பல நூற்றாண்டுகள் வாழ்ந்தார் என்பது பெறப்படுகிறது.

மேலும் அவ்வையார் ஒரு குண்டலினி யோகி. குண்டலினியோகம் பயில்பவர்கள் சித்தர்கள். சித்தர்கள் மரணம் இல்லாப் பெருவாழ்வு வாழ்பவர்கள். அவ்வையார் குண்டலினியோகி என்பதை அவர் இயற்றிய 'விநாயகர் அகவல்' என்ற நூல் தெளிவாகக் கூறுகிறது. அவ்வையார் விநாயகப் பெருமானைக் குருவாகக் கொண்டு மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்தவர் என்பதை முன்னர் அறிந்தோம். அதனை இப்போது மேலும் சிறிது அறிவோம்.

'குருவடிவாகிக் குவலயதந் தன்னில்
திருவடி வைத்துத்
திறமிது பொருள் என;
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள்கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடையிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி
....
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வேளிப் பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்து
....
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
....

தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே'

என்று கூறுவது அவ்வையார் விநாயகரைக் குருவாக அடைந்து, அவர்பால் குண்டலியோகம் பயின்று மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்தவர் என்பதை நன்கு புலப்படுத்துகிறது.

'...மேலும், அவ்வையார் யோகப் பயிற்சியில் முதிர்ந்தவர் ஆகையாலும், நீண்ட ஆயுள் தரும் நெல்லிக்கனியை உண்டமையாலும் திருவள்ளுவரின் காலந் தொடங்கி ஒட்டக்கூத்தரின் காலம் வரையில் ஏறக்குறைய பன்னிரெண்டு நூற்றாண்டுகள் வாழ்ந்திருக்கக்கூடும் என்று நம்பிக்கையும் இருந்து வந்தது' என்று கலைக்களஞ்சியம் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது (கலைக்களஞ்சியம், -2; பக்.756).

குண்டலி யோகிகள் சித்தர்கள்; பன்னூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழ்பவர்கள் என்பது பலரும் அறிந்த உண்மை. இன்றுங்கூட,நமது நாட்டில் பல சித்தர்கள் பன்னூறு ஆண்டுகளாக வாழ்கின்றனர்.

இவை, 'அவ்வையார் ஒருவரே இருந்திருத்தல் வேண்டும்; சங்க காலத்தில், அப்போது வழக்கிலிருந்த தமிழ்நடையில் செய்யுள்களை இயற்றியிருக்கிறார். பின்னர் இடைக்காலத்தில் வாழ்ந்தபோது அக்காலத்தில் மக்கள் வழங்கிய எளிய நடையில் பல செய்யுள்களை எழுதியிருக்கிறார்', என்னும் என்னுடைய கருத்துக்குத் தக்க சான்றாக உள்ளன.

அவ்வையார் வாக்கு

இதுகாறும் அவ்வையாரின் பிறப்பும் சிறப்பும் பற்றிக் கண்டோம். இனி, அவ்வையாரின் வாக்கைக் காண்போம்.

அவ்வையார் சங்க காலத்தில் பாடிய பாடல்கள் 59. அவை:

1. நற்றிணை - 7
2. குறுந்தொகை - 15
3. அகம் - 4
4. புறம் - 33

இவற்றுள் புறநானூற்றிலுள்ள 33 பாடல்களுள் 22 பாடல்கள் தம்மை ஆதரித்த வள்ளல் மன்னனாகிய அதியமானைப் பற்றிப் பாடியனவையே என்பது குறிப்பிடத் தக்கது.

அவ்வையார் இடைக்காலத்தில் பாடியவை:

1. ஆத்திச்சூடி
2. கொன்றை வேந்தன்
3. நல்வழி
4. வாக்குண்டாம் அல்லது மூதுரை

இவற்றுடன் 'விநாயகர் அகவல்' 'அவ்வை குறள்' என்னும் குண்டலினி யோகமாகிய சித்தர் நெறியைப் பற்றி இரு நூல்களும் பாடியுள்ளார். இவற்றைத் தவிர,

1. பந்தனந்தாதி
2. அசதிக் கோவை
3. கல்வி ஒழுக்கம்
4. நான்மணிக்கோவை
5. அருந்தமிழ் மாலை
6. தரிசனப்பத்து
7. வைத்திய நிகண்டு
8. நன்னூற் கோவை

என்னும் வேறு சில நூல்களையும் பாடியுள்ளார் எனக் கூறப்படுகிறது. இந்நூல்களில் அசதிக்கோவையில் சில பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. மற்ற நூல்கள் கிடைக்கவில்லை.

முதலில், அவ்வையார் சங்க காலத்தில் பாடிய பாடல்களில் முக்கியமான சிலவற்றின் சுவையான கருத்துகளை மட்டும் காண்போம். பிறவற்றை விரிக்கின் பெருகும்.

புறநானூற்றில் பெரும்பாலும், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், மன்னர்கள், அதியமான் நெடுமான் அஞ்சி அவன் மகன் பொகுட்டு எழுனி, தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், மூவேந்தர்கள் முதலியவர்களின் வீரம், போர்த்திறம், கொடைத்திறம் முதலியவற்றைப் பற்றியே குறிப்பிடுகிறார்.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, இம்மூன்றும், அகத்துறைப் பாடல்கள். பாடல்களில் காதல் பற்றிய சில அரிய செய்திகளைக் கூறியிருக்கிறார்.

காதல் பற்றிய செய்திகளைக் கூறும் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி முதலியோர் கூற்றை நயமாகக் கூறுவதோடு அவற்றில் இயற்கை வருணனைகளையும், சில வரலாற்றுச் செய்திகளையும் கூடக் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

நற்றிணை 187இல் மாலைக் காலத்தை நயம்பட வருணித்துள்ளார்.

'நெய்தல் கம்ப நிழல் குணங்கு ஒழுக
கல்சேர் மண்டிலம் சிவந்து நிலம் தணியப்
பல்பூங்கானலும் அல்கின்றன்றே' (நற்.187)

அதாவது நெய்தல் மலர் கூம்பவும், பலவகை மலர்களையுடைய கடற்கரைச் சோலையின் தோற்றப் பொலிவு குறையவும், மரத்து நிழல்கள் கிழக்குத் திசையில் விழவும், செந்நிறச் சூரியன் மலையில் மறைந்தது; அதனால் வெப்பம் உலகில் தணிந்தது என்பது பொருள்.

அடுத்து 295ஆம் பாடலில் அரிய வரலாற்றுச் செய்தி ஒன்று குறிப்பிடப்படுகிறது.

'...........எந்தை
வேறு பன்னாட்டிற் கால்தர வந்த
பல வினை நாவாய் தோன்றும் பெருந்துறை
கலிமடைக் கள்ளின் சாடி......' (நற்.295)

என்று கூறுகிறார்.

பல்வேறு நாடுகளிலிருந்து, காற்றினால் பாய் விரித்துச் செலுத்தப்பட்ட, சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த கலங்களில், மது நிறைந்த சாடிகள் ஏற்றிக்கொண்டு வரப்பட்டு, நம் தமிழ் நாட்டுக் கடற்கரையில் இறக்குமதி செய்யப்பட்டன என்னும் வரலாற்றுச் செய்தியை இது குறிப்பிடுகிறது.

381-ஆம் பாடலில் தலை நிமிர்ந்து விரைந்து செல்லும் யானைப் படையையும், குதிரைப் படையையும் உடைய அதியமான், குளிர்ந்த உள்ளத்துடன் தன் புகழ் நாடு முழுவதும் பரவி விளங்குமாறு அரசவையில் வீற்றிருந்து, இரப்போருக்குத் தேர்களைப் பரிசாக வழங்குவான் என்று தம்மை ஆதரித்த அதியமான் நெடுமானஞ்சியின் படை வீரத்தையும் கொடைத் தன்மையையும் குறிப்பிடுகிறார்.

'கடும்பகட்டி யானை நெடுமானஞ்சி
ஈர நெஞ்ச மோடிசைசேண் விளங்கத்
தோவீ சிருக்கை போல' (நற்.381)

என்பதே இவ்வடிகளின் திரண்ட கருத்து.

பின்னர், அகநானூற்றுப் பாடல்களில் அவ்வையார் குறிப்பிடும் செய்தியைக் காண்போம்.

'வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு,
இலையி மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிதொகுபு எடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொறப்பத் தோன்றும்... (அக.11)

அதாவது, ஞாயிறு நெருப்பைப் போல் சிவந்து எரியும் வெப்பமிக்க காட்டில் (பாலை நிலத்தில்) இலையில்லாமல் மலர்ந்துள்ள அரும்பு இல்லாத இலவம் பூக்கள், பேச்சொலி மிக்க பெண்களின் கூட்டம் மகிழ்ச்சியோடு ஏற்றிய நெடிய வரிசையான அழகிய கார்த்திகை விளக்குகளின் காட்சி போலத் தோன்றின என்பது பொருள்.

இலவப் பூக்கள் வரிசையாகத் தோன்றுவது கார்த்திகைத் திருவிழாவில் மகளிர் ஏற்றி வைக்கும் விளக்கு வரிசையைப் போலக் காட்சியளிக்கிறது என்று கூறுவதிலிருந்து, பழங்காலத்தில் பெண்கள்

வரிசையாக விளக்குகளை ஏற்றிக் கார்த்திகை விழாவினைக் கொண்டாடினர் என்னும் வரலாற்றுச் செய்தியும் நமக்குப் புலனாகிறது.

'........வென்வேல்
மறமிகு தாளைப் பசும் பூட் பொறையன்
கார்புகன்றெடுத்த சூர்புகல் நனந்தலை
மாயிருங் கொல்லி யுச்சித்தா அய்த்
ததைந்து செல்லருவியின் அலரெழப் பிரிந்தோர்
புலம் கந்தாக இரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ் பாரிப் பறம்பின்
நிரைபறைக் குரீஇயினம் காலைப் போய்
முடங்கு புறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு
இரைதேர் கொட்பினவாய்ப் பொழுதுபடப்
படர்நிலை மாலைப் படர்தந்தாங்கு
வருவர் என்று உணர்ந்த படங்கெழு நெஞ்சம்
ஐயம் தெளியரே, நீயே' (அகம்.303)

வெற்றி வேலினையும் மிகுந்த மறத் தன்மையினையும் கொண்ட சேனையினையுடையவன் பசும்பூட் பொறையன் என்னும் மன்னன்.

மேகங்கள் ஆரவாரித்து எழுந்த, அச்சத்தை அறிவிங்கும் அகன்ற இடத்தையடைய, மிகப் பெரிய மலை அவனுக்கு உரியது. அதன் உச்சியினின்றும் வீழ்ந்து மிக்குப் பெருகச் செல்லுகின்ற அருவிநீரின் ஒலியைப் போல் ஊரில் அலர் எழப் பிரிந்தான் காதலன்.

அறிவினையே ஆதாரமாகக் கொண்டு இரவலர் சென்றாராயின், குன்றினையொத்த களிறுகளுடனே நல்ல அணிகலன்களையும் அவர்களுக்குக் கொடுத்து, மிகுதியாகப் பேசப்பட்ட பெரும் புகழினை உடையவன் பாரி என்னும் வள்ளல். அவனுடைய பறம்பு மலையிடத்தே, வரிசையாய்ப் பறந்து செல்லும் குருவிக்கூட்டம், வளைந்து சாய்ந்துள்ள செந்நெற்கதிர்களைக் கொண்டு தரும் பொருட்டாகவும், சில வேளைகளில் தாமே இரை தேடும் பொருட்டாகவும் காலையிலே சென்று பொழுது சாயும் மாலை வேளையிலே மீண்டும் திரும்பிவரும்.

அவ்வாறே, பிரிந்து சென்ற காதலரும் மாலையில் திரும்பி வருவார் என்று உணர்ந்த என்மட நெஞ்சமே! இனியேனும் உன் ஐயத்தைத் தெளிந்து தேர்ந்துகொள். (அவர் வர மாட்டார்) என்பது இப்பாடலின் பொருள்.

இப்பாடலிருந்து, பொறையன் என்னும் மன்னனைப் பற்றியும், அவனுக்குக் கொல்லிமலை உரியது என்பதையும், அறிவையே பற்றுக்கோடாகக் கொண்ட புலவர்கள் பாரி என்னும் வள்ளலிடம்

சென்றால் அவன் மலைபோல் பெரிய களிறுகளையும், உயர்ந்த அணிகலன்களையும் வழங்கும் பெரும்புகழ் படைத்தவன் என்பதையும், அவனது பறம்பு மலையிலிருந்து, பறவைகள் காலையில் பறந்து, வெளியே சென்று செந்நெற்கதிர்களைக் கொத்திக் கொண்டு மாலை வேளையில் பாரியின் நாட்டினுள் வரும் என்பதையும் அறிகிறோம்.

இதிலிருந்து மூவேந்தர்கள் பாரியின் பறம்பு நாட்டை முற்றுகையிட்டபோது, அந்நாட்டினுள் இருந்து மக்கள் வெளியே சென்று உணவுக்குரிய தானியங்களைத் தேடித் திரும்பக்கூடாத நிலையில், அப்பறவைகள் கொண்டு வந்த நெற்கதிர்களைத் தம் உணவுக்குப் பயன்படுத்திப் பசியின்றி வாழ்ந்தனர் என்று கூறப்படும் செய்தியையும் நாம் அறிகிறோம்.

மேலும் அவ்வையார்,

'ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேரஞ்சி
கொன்முனை யிரவூர்' (குறுந்.91)

எனப் பாடியுள்ளார். அதாவது, காலமும் இடமும் கருதாது, ஒழியாமல் எப்போதும் மழை கொடுக்கும் மேகம் போன்ற கைம்மாறு கருதாத வள்ளன்மையுடையவன் அதியமான் நெடுமானஞ்சி என்னும் உபகாரி என்று, தம்மை ஆதரித்த அதியமான் நெடுமானஞ்சியின் படை வீரத்தையும் கொடைச் சிறப்பையும் அவ்வையார் இதில் குறிப்பிடுகிறார்.

...இவ்வாறு, காதலைப் பற்றிப் பாடும் அகத்துறைப்பாடல்களின் ஊடேயும், ஆங்காங்கே தம்மை ஆதரித்த அதியமானின் கொடையையும், வீரத்தையும் பதமாக நுழைத்துக் கூறுவது அவ்வையாரின் நன்றிக் கடப்பாட்டுணர்வை நனி விளக்குகின்றதன்றோ!

இனி, அவ்வையார் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் முப்பத்து மூன்றனுள் காணும் முக்கியமான சிலவற்றையும், அவை கூறும் அரிய செய்திகளையும் காண்போம்.

இப்பாடல்களில் முன்னர்க் குறிப்பிட்டவாறு தம்மை ஆதரித்த அதியமான் நெடுமானஞ்சி, கடையெழு வள்ளல்களில் ஒப்பற்ற வள்ளல் என்பதையும், நிகரற்ற போர் வீரன், மழவர் தலைவன் என்பதையும் அவன் தமக்கு நெல்லிக்கனி ஈந்தமையையும், காஞ்சி தொண்டைமானிடம் அரசியல் தூதுவராகச் சென்றமையையும் அவன் சேரனுக்கு உறவானவன் என்பதையும் குறிப்பிடுகிறார்.

பனம்பூ மாலையையும், வெட்சி வேங்கைப்பூ மாலைகளையும் அணிபவன் என்றும், ஏழு அசுரர்களை எதிர்த்து வென்றவன் என்றும் கோவலூரை வென்றவன் என்றும் பரணர் போன்ற புலவர்களால் புகழ்ந்து பாடப்பட்டவன் என்றும் வேறுபல செய்திகளையும் குறிப்பிடுகிறார்.

அதியமானின் ஊர் தகடூர். அவனது மலை குதிரைமலை. அவன் மகன் பொருட்டெழினி. அவனது முன்னோர் தேவர்களைப் போற்றி வழிபட்டுத் தேவலோகத்திலிருந்து பூவுலகத்திற்குக் கரும்பினைக் கொணர்ந்தனர் என்றும், அவர்களுக்கு வரம் கொடுக்கத் தேவர்கள் தங்கிய சோலை உள்ளது என்றும், அஞ்சி, நெடுமானஞ்சி, அதியமான் நெடுமானஞ்சி, எழினி என்னும் பல பெயர்கள் இவனுக்கு உண்டு என்றும் - இவை போன்ற இன்னும் பல்வேறு செய்திகளையும் அவ்வையார் குறிப்பிடுகிறார்.

'அரசர்களே நீங்கள் எத்தகைய வலிமையுடையவராயினும் பின்னணிப் பலப்படையைக் கொண்டு, 'யாம் அதியனை வெல்லுவோம்' என்று மட்டும் அவனைப்பற்றி, அறிவதற்கு முன்னர் வேண்டுமானால் கூறலாம். ஆனால், அறிந்த பின்னர் அவன் பலத்தை நீங்களே உணர்ந்து அஞ்சுவீர்கள் என்பதில் ஐயமில்லை. அவன் மிக உயர்ந்த வலிமை படைத்தவன். வாள் ஏந்திய படை மழவர் தலைவன்; அகன்ற மார்பினை உடையவன்'.

'யாவீர் ஆயினும் கூழை தார் கொண்டு
யாம் பொருதும் என்றல் ஓம்புமின் ஓங்குதிறல்
. . . .
என் ஐயையைக் காணா ஊங்கே' (புறம். 88)

என்று பாடுகிறார். அவனுடைய வலிமையையும், திண்மையையும் பற்றிக் குறிப்பிடும்போது, 'நாள்தோறும் எட்டுத் தேர்களைச் செய்யும் தச்சன். ஒரு மாதமெல்லாம் முயன்று ஒரு சக்கரத்தைச் செய்வது போன்று விரைவும் வலிவும் கொண்டவன். அத்தகைய ஆற்றல் வாய்ந்த போர்வீரன் எங்களிடத்தே உள்ளான். அதனால் அவனை எதிர்த்துப் போக்களம் புகும் கருத்தை விட்டுவிடுங்கள்' என்னும் கருத்தையே,

'களம்புகல் ஓம்புமின் தெவ்வீர் போரெதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன், வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே' (புறம். 87)

என்று பாடியுள்ளார்.

புறம் 89ம் பாடலில் அவ்வையாரை நோக்கி,

'விறலி நீ வாழும் பெரிய நாட்டிலே
என்னோடு போர் புரியும் வீரரும் உளரோ?'.

எனக் கேட்ட வேந்தரை நோக்கி அவ்வையார்;

'. . . பொருபடை வேந்தே!
எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளரும் உளரே அதாஅன்று
பொதுவில் தூங்கும் விசையுறு தண்ணுமை

வலிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும்என் ஐயனும் உளனே' (புற.89)

அதாவது 'கோலைக் கண்டு சீறும் பாம்பை அடித்தால் அது மிகுந்த சினம் கொண்டு சீறி எழுவதுபோல், அவனைத் தூண்டினால், உடனே சீறி எழுந்து போர் செய்யப் புறப்படும் வீரர் பலர் அதியமானிடம் உள்ளனர். அது மட்டுமன்றிப் பொது மன்றத்தில் கட்டப்பட்டுத் தொங்கும் பறையில் காற்று மோதுவதனால் எழும் ஓசையைக் கேட்டால், அது போர் முரசு என்று எண்ணி உடனே வீரத்தோடு எழும் தலைவன் எங்கள் அதியமான்' என்று கூறுகிறார்.

மற்றும் 90ஆம் பாடலில், 'புலி சீறினால் அதன் முன் மான் நிற்காது. ஞாயிற்றின் முன் இருள் நிற்காது. அது போன்ற வீரன் அவன். முழங்கால் வரை நீண்ட வலிய கரங்களை உடைய வீரன் அவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்' என்று அதியமானின் போர்த்திறனையும், வலிமையையும், அவனை எதிர்க்க எண்ணும் மாற்றாரை அச்சுறுத்தி, அவர்கள் அதியன் மீது படையெடுக்கும் எண்ணத்தையே விட்டுவிடுமாறு மறைமுகமாக அறிவுரை கூறுகிறார்.

ஒருமுறை மலைப் பிளவின்கணிலிருந்து தனக்குக் கொண்டு வந்து கொடுத்த அருநெல்லிக்கனியை அவ்வைக்கு அதியமான் கொடுத்தான். அக்கனியை உண்பவர் பன்னூறு ஆண்டுகள் வாழ்வர். அத்தகைய கனியைத் தான் உண்டு வாழ வேண்டும் என்று எண்ணாமல் அவ்வைக்குக் கொடுத்தால், அவ்வையார் நீண்டநாள் வாழ்ந்து மக்களுக்குத் தன்னைவிட அருந் தொண்டாற்றுவார் என்ற எண்ணத்துடன் கொடுத்தான். அதன் அருமையைப் பின்னர் அறிந்து அவ்வையார் அதியமானின் வியக்கத்தக்க தியாக உணர்வை எண்ணி மகிழ்ந்து, 'போர்க்களத்தில் பகைவரை மாய்க்கின்ற பெரிய கையினையும், மாற்றாரை வெல்லும் வீரச் செல்வத்தினையும், பொன்னால் செய்யப்பட்ட மாலையையும் உடைய நீ, நான் சாதல் இன்றி பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு, அரிய நெல்லிக்கனியை அளித்தாய்; நீ பால் போலும் பிறை நுதல் விளங்கும் திருமுடியினையும் நீலமணி போலும் கரிய கண்டத்தினையும் உடைய சிவபெருமானைப்போல் பல்லாண்டுகள் சிறப்புடன் வாழ்வாயாக' எனும் பொருள்படும் பின்வரும் பாடலைப் பாடி வாழ்த்துகிறார்.

'போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே, தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி, குறியா
தாத னின்னகைத் தடக்கிச்
சாதனீங்க வெமக்கீத்தனையே' (புறம். 91)

இதனை முன்னரும் குறிப்பிட்டோம்.

பின்னர், ஒருமுறை அஞ்சியின் அன்பையும் அருளையும் வியந்து,

'தந்தைக்கு, தன் பிள்ளையுடைய மழலை மொழி யாழ் ஓசை போல் இன்பமாயும் இராது. காலத்துக்குத் தக்கதாயும் இராது. அதில் பொருளும் இராது'. ஆனாலும், அம் மழலைச் சொல் அவனுக்குப் பேரின்பம் பயக்கும். என் வாய்ச் சொல்லும் அது போன்றதே. அப்படியிருந்தும் என்னிடம் அன்பும் கருணையும் நீ காட்டுகின்றாயே!

'யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள் வந்தனவாற் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லு மன்ன, வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமானஞ்சி நீ யருளன் மாறே' (புறம். 92)

எனப் பாடி வியந்தார். குழந்தையின் மழலைச் சொல் பெற்றோருக்குப் பேரின்பம் பயப்பது என்னும் இக்கருத்து.

'குழலினிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்'

என்றும்,

'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்'

என்றும்,

'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொல்கேட்டல் இன்பம் செவிக்கு'

என்றும் கூறும் குறட்பாக்களின் கருத்தையும்,

'. . . . .
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்ந்தும்
மயக்குறு மக்கள்'

என்னும் புறநானூற்று 188ஆம் செய்யுளின் கருத்தையும் ஒத்துள்ளது.

மற்றும் ஓர் பாடலில் அவ்வையார் சிறிய குளத்தில் பெரிய யானை குளிக்கும் போது அதன் மேல் சின்னஞ்சிறார்கள் அமர்ந்து கொண்டு அதன் வெள்ளைத் தந்தங்களைக் கழுவுவர். அப்பொழுது அது அமைதியாக இருக்கும். ஆனால், அதே யானை போர்க்களம் சென்றால் சீறி எழுந்து பகைவரை அழிக்கும். அதுபோல பெரும! நீ, எம் போன்ற புலவர்களுக்கு இனிமையானவன். ஆனால், போர்க்களத்தில்

மாற்றாருக்கு மதங்கொண்ட யானையைப் போன்றவனாவாய் என்னும் கருத்தமையப் பாடுகிறார். (புறம். 94)

'வீட்டு இறப்பில் செருகப்பட்ட தீக்கடைக் கோலைப் போலத் தன் வலிமை வெளிப்பட வேண்டாத காலத்தில் அடங்கியிருந்து, அதனைக் கடைகின்றபோது தீ வெளிப்படுவது போல், அதியமானஞ்சி தன்னை மதித்துப் பணிவோரிடம் அமைதியாக இருந்து, பகைவரிடத்திலே கடுஞ்சினத்தை காட்டிச்சீறிப்போர் புரிவான்' என்னும் கருத்துக் கொண்ட பாடலும் ஒப்புநோக்கத் தக்கது. (புறம். 315)

அதியமான், தேவர்களைப் போற்றி வழிபட்டு, விண்ணுலகிலிருந்து கரும்பினை மண்ணுலகத்துக் கொண்டுவந்த மூதாதையர்கள் பரம்பரையில் வந்தவன், ஏழரசரோடு பகைத்து மேற்சென்று போரின்கண் அவர்களை வென்றவன், கோவலூரை அழித்து வென்றவன், பரணர் என்னும் பெரும் புலவரால் பாடப்பட்ட பெருமையுடைவன் என்று அதியமானின் வீரத்தையும் போர்த் திறனையும் பாடியுள்ளார் என்பதையும் முன்னர்க் கண்டோம். (புறம். 99)

பரிசிலர் ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும், பலநாள் பலரோடு சென்றாலும், சிறிதும் வெறுப்பும், சலிப்புமின்றி முதல்நாள் உபசரித்தது போன்றே அன்போடும் ஆர்வத்தோடும் வரவேற்று உபசரிப்பவன், யானை தன் கொம்பினிடையே வைத்த கவளம் எவ்வாறு தவறாமல் அதன் வாய்க்குள் செல்லுமோ, அவ்வாறே அதியமானிடம் பரிசில் பெறச் சென்ற இரவலர் சிறிது கால தாமதம் ஏற்பட்டாலும், நிச்சயமாக அவனிடமிருந்து பரிசில் பெற்றே திரும்புவர். அத்தகைய கொடைவள்ளல் அதியமான் என்று அவன் கொடை வளத்தைப் புகழ்கிறார். (புறம். 101)

'நீண்டநாள்களுக்குப்பின் தனக்கு மைந்தன் பிறந்துள்ளான் என்னும் மகிழ்ச்சிச் செய்தியைக் கேள்விப்பட்டு, போர்க்களத்தினின்றும் போர்க்கோலத்தோடே மைந்தனைக் காணவந்தபோதுகூட, புலியோடு போர் புரிந்த வலிய யானையைப் போல, பகைவரை வெகுண்டு நோக்கிய அந்தக் கண்களின் சிவப்பு மாறாது. அவ்வெஞ்சினம் தணியாது காணப்பட்டான்' என்று அதியமானின் தணியாத போர் ஆர்வத்தைப் புகழ்கிறார். (புறம். 100).

மேலும், 'அதியமானின் வாள்கள் பகைவர் தசையின்கண்ணே குளித்து வடுப்பட்டுவிட்டன; வேல்கள் பூணோடு காம்பின் ஆணிகள் கழன்று நிலையழிந்தன; யானைகள் பகைவர் கோட்டைக் கதவுகளைத் தகர்த்துத் தந்தங்களின் கிம்புரிகள் கழன்றுவிட்டன; குதிரைகள் பகைவர்களின் மார்பையும், உடல்களையும் மிதித்துக் குளம்புகள் இரத்தக் கறைபட்டுள்ளன; கேடயங்கள் பகைவர் அம்புகளால் துளைககப்பெற்றுள்ளன; அவ்வளவு ஒப்பற்ற போராற்றல் பெற்றவன் அதியன்; ஆதலால் உங்கள் வளமான ஊர்கள் உங்களுக்கே உரிமையாய்

இருக்க வேண்டுமென்றே நீங்கள் எண்ணினால், முறையாக அதியனுக்கு உரிய கப்பம் கட்டி விடுங்கள்' என்று அதியன்பால் போர்செய்ய எண்ணும் பகை மன்னர்களை நயமாக எச்சரிக்கிறார். (புறம். 97).

பின் வரும் பாடல்களும் குறிப்பிடத்தக்க சிறந்த கருத்துடையவை.

'.................உமணன்
கீழ் மரத்து யாத்த சேம அச்சு அன்ன
இசை விளக்கு கவிதை நெடியோய்

அதாவது உப்பு வாணிகர் எருதுகள் பூட்டப்பட்ட வண்டிகளில் உப்பை ஏற்றிச் கொண்டு விற்பனைக்காக அயலூர் செல்வார்கள். அப்போது அவ்வண்டிகளில் சக்கரமும் அச்சும் பழுதடைந்தால் அவற்றை மாற்றி வேறு நல்ல சக்கரத்தினையும் அச்சினையும் அவ்வண்டியில் பூட்டிச் சீர்படுத்தி விடுவர். அந்த மாற்று அச்சை வண்டியின் கீழ்ப்பகுதியில் கட்டிச் செல்வர். அதற்குச் 'சேம அச்சு' என்று பெயர். இப்போது 'மோட்டார்' பேருந்து முதலியவற்றின் சக்கரமும், அச்சும், பழுதடைந்தால் மாற்றிப்பூட்ட உடன் வைத்துச் செல்லும் "Stepney'யே 'அச்சேமஅச்சு' என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றோரு பாடலில் மக்களின் வாழ்வும் தாழ்வும் அவர்கள் வாழும் இடத்தைப் பொறுத்ததன்று. அவ்வந் நிலத்து வாழும் ஆடவரைப் பொறுத்ததே. 'நாடானால் என்ன? காடானால் என்ன? மேடானால் என்ன? பள்ளமானால் என்ன? எவ்விடத்தில் ஆடவர் நல்லவராக விளங்குகின்றனரோ அவ்விடத்திலே நிலமே! நீயும் நன்றாக விளங்குவாய்' என்கிறார்.

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!' (புறம்.189)

என்பதே அக்கருத்தமைந்த பாடல். இது ஆடவர்கள் கருதத்தக்கது.

தமிழ் மூவேந்தர்கள் என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் சேர சோழ பாண்டியர் தமக்குள் பிணக்குக் கொண்டே பெரும்பாலும் வாழ்ந்திருந்தனர். ஒருவரை எதிர்த்து ஒருவர் போர் புரிந்து நாட்டின் அமைதியைக் குலைத்து வந்தனர். இம் முப்பெரு வேந்தரும் தத்தம் எல்லைகளுக்குட்பட்டு மாற்றரசனின் மண்ணை விரும்பாது வாழ்ந்திருந்தால் நம் தமிழ்நாட்டை வேற்று மொழியரசர் எவரும் நெருங்கி இருக்க மாட்டார். ஆனால் அத்தகைய ஒன்றுபட்ட நிலைமையைக் காண்பது மிக மிக அரிதாயிருந்தது.

ஒருமுறை, சோழ நாட்டில் உறையூரில் பெருநற்பள்ளி என்னும் சோழ மன்னன் இராஜ சூய வேள்வி நடத்தினான். அவ் வேள்வி மண்டபத்தில் சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் வந்து அச்சோழனோடு ஒருங்கமர்ந்திருந்தனர். அப்போது அங்குப் போந்த அவ்வை பெருமாட்டியார் மூவேந்தரும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்டு பெருவியப்பும் மகிழ்ச்சியும் கொண்டார். அந்த மாட்சி மிகு அரிய காட்சியை அவ்வையார் போற்றி அம்மூவேந்தரையும் உள்ளங்குளிர வாழ்த்தி அவர்க்கு அறிவுரை புகட்டுகிறார்.

'தேவலோகத்தையொத்த நாடு தம்முடையதேயாயினும், அது எப்போதும் தமக்கே உரிமைப்பட்டிராது. ஒருவர் அந்நாட்டுக்கு உரியர் அல்லராயினும், நற்றவம் செய்தவராயின் அது அவர்க்கே உரியதாகும். ஆகையால் நீவிர் நும்மிடம் வந்து இரக்குப் பார்ப்பார் கைநிறையப் பூவையும், பொன்னையும் நீர்வார்த்து அளித்து, இரப்போர்க்குச் செல்வத்தைக் குறையாமல் வழங்கி, உங்களுக்கு அறுதியிட்ட வாழ்நாள் முழுவதும் நன்கு வாழ வேண்டும். பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு நற்கருமம் அன்றி வேறு புகல் இல்லை. ஐம்புலன்களையும் அடக்கியிருக்கும் ஆற்றல் பெற்ற அந்தணனார் வேள்வியில் வளர்க்கும் முத்தீயையும் போல ஒருங்கு சேர்ந்து, அழகுமிக்க கொற்ற வெண்குடை நிழற்றும் கொடித்தேர் வேந்தர்களே! இவ்வாறு நீங்கள் ஒன்றுசேர்ந்து உறைதலால் உண்டான பெருமையும், பயனும், உலக நன்மையும் யான் அறிந்துரைக்கும் அளவினையுடைன அல்ல!

உங்கள் வாழ்நாள் விண்மீன்களினும், மழைத்துளிகளினும் மேம்பட்டுப் பல்கிப் பெருகுவதாக!'

'நாகத்தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும் தம்மொடு செல்லா:

வேற்றோர் ஆயினும் நோற்றார்க்கு ஒழியும்:
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொனனும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங் கலத்துஏந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ் சிறந்து,
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங்காலைப் புகல் பிறிது இல்லை
ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தீர்,
யான் அறிபவவையோ? இதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும் இம் என
பரந்து இயங்கு மாமழை உறையினும்
உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நும் நாளே!' -புறம்.367

இது முப்பெருவேந்தர்க்கு உரிய காலத்தோடு பொருந்திய அரிய அறவுரையும், அறிவுரையும் வாழ்த்துரையும் ஆகும் அன்றோ!

மற்றும், தம்மை யாதறிந்த வள்ளல் அதியமானை எதிர்த்துப் போரிடத் தொண்டைமான் ஆயத்தம் செய்கிறான் என்பதை யறிந்த அவ்வையார், தொண்டைமானிடம் தூது சென்று, அவனுடைய படைக்கலக் கொட்டிலில் போர்க்கருவிகள் எல்லாம் புதுமையும், வடிவமும் குலையாது நெய்பூசி மாலையணிவிக்கப்பட்டு அழகுடன் விளங்குகின்றன வென்றும், அதியமானுடைய போர்க் கருவிகளோ பகைவர்களை அடிக்கடி தாக்குவதால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன என்றும் நயம்படக் கூறும் பின்வரும் வஞ்சப்புகழ்ச்சிப் பாடல் எண்ணி யெண்ணி இன்புறத்தக்கது.

'இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
கடியுடை வியல்நகர் அவ்வே; அவ்வே
பகைவர் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக்கு உற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம்கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம் கோமான் வைந்துதி வேலே' -புறம்.95

அவ்வையார் பாடல்களின் சுருக்கச் சிறப்பு

அவ்வையார் தம் கருத்துகளைச் சுருங்கக் கூறி விளங்க வைப்பதில் திருவள்ளுவரையும் விஞ்சியவர்.

திருவள்ளுவர் தம் கருத்துகளையெல்லாம் ஒன்றே முக்கால் அடிகளால் ஆன குறட்பாக்களில் செறியப் பாடியுள்ளார் என வியந்து பேசுகிறோம்.

'கடுகைத்துளைத்து எழுகடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

என்றும்

'அணுவைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

- என்னும் பாடல்களும் அக்கருத்தைக் கூறுகின்றன.

ஆனால், அவ்வையார், ஒரே அடியில், ஒரே வரியில் கூட மிகுந்த பொருள் பொதிந்த கருத்துகளையெல்லாம் திணித்துச் சுருங்கக் கூறுவதில் வள்ளுவரினும் மேலோங்கி நிற்கிறார். திருவள்ளுவர் பல குறட்பாக்களில், பல அதிகாரங்களில் கூறிய கருத்துக்களைக் கூட ஒரே வரியில் அடக்கிப் பாடியுள்ளார்.

'அறம் செய விரும்பு', 'ஆறுவது சினம்' 'ஏற்பது இகழ்ச்சி', 'ஐயம் இட்டுண்' 'ஒப்புர ஒழுகு', நன்றி மறவேல்', 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்', 'சீரைத்தேடின் ஏரைத்தேடு', 'காவல்தானே பாவையர்க் கழகு', தீராக் கோபம் போராய் முடியும்' -முதலியன சில எடுத்துக்காட்டுகள்.

சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில் வள்ளுவரினும் அவ்வையார் வல்லர் என்னும் கருத்தை மகாகவி பாரதியாரும் கூறியுள்ளதை முன்னர்க் கண்டோம்.

திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களில் பாடியுள்ளார். ஆனால் நான்காவதான 'வீட்டி'னை விட்டு விட்டார். ஆனால் அவ்வையாரோ அவ்வீட்டினையும் சேர்ந்த நான்கு புருடார்த்தங்களையும் ஒரே வெண்பாவில் கூறிவிட்டார் என்று கூறிப் பாரதியாரே வியப்படைகிறார்.

'ஈதல்அறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்து - ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு'

- என்பதே அந்த வியத்தகு வெண்பாவாகும்.

இன்னொரு செய்தியும் இங்குக் குறிப்பிடத்தக்கது. அதாவது, அவ்வையார் 'விதி'யில் அசையாத நம்பிக்கை கொண்டவர். ' விதி மிகமிக வலிது: அதை வெல்வது இயலாது; எல்லாம் விதியின்படிதான் நடக்கும்; முற்பிறவியில் செய்தவினை (ஊழ்வினை)யின் பயனே இப்பிறவியல் அனுபவிப்பது - என்பவற்றில் அவருக்கு ஆழமான நம்பிக்கை இருந்தது.

இக்கருத்துகளுக்குப்பின்வரும்சில பாடற்பகுதிகளும், பாடல்களுமே தக்க சான்றாகும்.

1. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'

2. 'அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா....'

3. 'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்'

4. 'எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம் - கருதிப் போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை'

5. 'வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா....'

6. 'உள்ள தோழிய ஒருவர்க் கொருவர் சுகம்
கொள்ளக் கிடையாக் குவலயத்தில் - வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னால்என்
உடலோடு வாழும் உயிர்க்கு'

7. 'ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்க்
கூட்டுப் படியன்றிக் கூடாவாம்-.'

8. 'ஆவரை யாரே யழிப்பார்? அதுவன்றிச்,
சாவாரை யாரே தவிர்ப்பார்?-சாவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்கிடுவார்?
மெய்யம் புவியதன் மேல்'

9. 'செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் - வையத்து
அறும்பாவம் என்னஅறிந்து அன்றிடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்'

10. 'தாந்தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே
ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி'

11. 'விதிப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவது அல்லால் கவலை படேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க்கு இல்லை விதி'

(இப்பாடலில் 'ஆன்மிக நெறியினர் மட்டுமே விதியினை, வினைப்பயனை ஓரளவு வெல்லலாம்' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது).

...இடைக்கால, பிற்காலப் பாடல்கள்

அவ்வையார் பிற்காலத்திலும், இடைக்காலத்திலும் பாடிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை (வாக்குண்டாம்) நல்வழி முதலிய நூல்களில், சிறந்த அறவுரைகளையும் அறிவுரைகளையும் தெளிவாகக் கூறியுள்ளார்.

அவர் தம் பாடல்களில் தாம் காணும் இயற்கைக் காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் உவமைகளாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் சிறந்த உண்மைகளையும் உயர்ந்த கருத்துகளையும் அழகுற விளக்கிக் கூறியுள்ளமை வியந்து போற்றிப் பாராட்டத்தக்கவை.

அவற்றில் சிலவற்றை இனிக் காண்போம்:-

உண்மை உறவினர்

அவ்வை பெருமாட்டியார் உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் எளிமையும் அடக்கமும் கொண்ட கவிஞர். அவர் கால் நொந்து நொந்து கடுக வழி நடந்து சிற்றூர்கள், பேரூர்கள் பட்டி தொட்டிகள் தோறும் சென்று மக்களுக்கு நீதியையும், நேர்மையையும், நல்வழியையும், நன்னடத்தையையும் போதிப்பதையே தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்டவர் என்பதை முன்னரே அறிந்துள்ளோம்.

அவர் உணவையும் உடையையும் பிற தேவைகளையும் வேண்டி எவரிடமும் சென்று கேட்க மாட்டார். பிச்சை எடுப்பதைப் பெருங் கேவலமாகக் கருதியவர். ஏற்பது இகழ்ச்சி என்னும் அக்கருத்தை தம் ஆத்திசூடி நூலில் ஆணித்தரமாகக் கூறியுள்ளார் அன்றோ? மானமே பெரிது என்று வாழ்ந்து காட்டியவர் அவர். வயிறு வளர்த்தலுக்காக - பசியைப் போக்கிக் கொள்வதற்காகப் பிறரிடம் சென்று பிச்சை எடுத்து வாழும் அவமானத்தை விட மாண்டு மடிந்து போவதே மிக மிக மேலானது, 'சிச்சி' - வயிறு வளர்க்கைக்கு மானம் அழுங்காது உயிர் விடுதல் சால உறும்' என்று கூறி வாழ்ந்தவர்.

அவரைக் கண்டு, 'ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மை பேசி உப்பிலாக் கூழிட்டாலும் உண்டு, உள்ளம் மகிழ்ந்து அவர்களை வாழ்த்திப் போற்றும் நன்றிக்கடப்பாட்டினர்.

எனக்கென்ன சோற்றுக்கா பஞ்சம்? எத்திசைச் செல்வினும் அத்திசைச்சோறே!' என்று மிடுக்குடன் வாழ்ந்தவர்.

அவர், நீர் நிலைகளைக் கண்டால் அவற்றின் அருகே சென்று இயற்கையாய் அவற்றில் ஊற்றெடுத்தும் பெருகும் தெளிர்ந்த தூயநீரை அமுதமாக எண்ணி அருந்தி மகிழ்வார். அத்தகைய நீர் நிலைகளின் எழிலைக் கண்டு பேரின்பம் கொள்வார். அவற்றில் பூத்துக் குலுங்கும்

தாமரை, அல்லி, நெய்தல் போன்ற மலர்களையும் அவற்றின் வண்ணமிகு தோற்றத்தையும் பேரழகையும் கண்டு பூரிப்படைவர். அந்நீர் நிலைகளில் நெளிந்தும் பின்னியும், பிறழ்ந்தும் உறழ்ந்தும், துள்ளியும் துடித்தும் சுதந்தரமாக ஓடி உலவும் மீனினங்களைக் கண்டு வியப்பார். அவற்றைத் தின்னக் கூட்டம் கூட்டமாக வந்து கரைகளில் உரிய மீன்கள் வருமளவும் ஆடாமல் அசையாமல் கால் கடுக்கக் காத்து நின்றுகொண்டிருக்கும் ஏராளமான கொக்குகளையும், நாரைகளையும், நீர் மட்டத்துக்கு மேலே பறந்து வட்டமிட்டுக் கொண்டிருக்கும் மீன் கொத்திகளையும், பருந்துகளையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருப்பார். தம் இலக்கை அடைவதில் அவை மேற்கொள்ளும் சலிப்பில்லாத முயற்சியையும் கூரிய பார்வையையும், விழிப்புணர்வை யும் கண்டு வியப்படைவார்.

அன்னிய ஆடவரைக் காண நாணமடைந்து கண்களை மூடித் தம் முகத்தைச் சுளித்துக் கொள்ளும் மங்கை நல்லார்களைப் போலச் சூரியனைக் காண மறுத்துக் குவிந்துநிற்கும் ஆம்பல் (அல்லி) மலர்களையும், தம் காதல் கணவர்களை இமை கொட்டாமல் உற்று நோக்கிப் பூரிப்படைந்து நிற்கும் மாதர்களின் கோல விழிகளைப் போலச் சூரியனையே நோக்கிக் கொண்டு மலர்ந்து விளங்கும் நீல வண்ண நெய்தல் பூக்களையும், தம் கிழங்குகளை நீரடி மணலில் ஒளித்து வைத்துக்கொண்டு அவற்றைக் காவல் காப்பது போல் நீரின் மேலே படர்ந்து மிதந்து நிற்கும் கொட்டிக் கிழங்குக் கொடிகளையும் கண்டு இயற்கையின் அற்புதத்தை எண்ணியெண்ணி மகிழ்வார்.

உண்மை உறவினர்...

கோடைக் காலத்தில் ஒரு நாள் அவ்வையார் ஒரு சிற்றூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். நெடுந்தூரம் வெயிலில் நடந்து வந்தமையால் தண்ணீர்த் தாகம் அதிகமாயிற்று. பல மாதங்களுக்கு முனனர், மழைக்கால முடிவில், அவ்வழியே சென்று கொண்டிருந்த போது, தாம் அங்குக் கண்ட ஒரு பெரிய குளம் நினைவுக்கு வந்தது. உடனே அக்குளத்தை நோக்கி விரைவாக நடந்து சென்றார்.

அந்தோ! அக்குளம் துளி நீர்க்கூட இல்லாமல் கோடை வெய்யிலின் கொடுமையால் நற்றி வறண்டு கிடந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டார்! அத்துடன், அக்குளத்தில் நீர் நிறைந்திருந்த போது பசுமையோடும், செழுமையோடும், எழிலோடும் விளங்கிய கொட்டிக் கிழங்குக் கொடிகளும், அல்லி, நெய்தல் ஆகிய மலர்களும் தண்டுகளும் கொடிகளும் உருத்தெரியாமல் உலர்ந்து கருகிக்கிடந்ததையும் கண்டு வருந்தினார். முன்னர், அக்குளத்தின் மீன்களைப் பிடித்து உண்பதற்காக முற்றுகை இட்டுக் கொண்டு கிடந்த ஏராளமான கொக்கு, நாரை, மீன் கொத்தி முதலிய பறவைகள் ஒன்று கூட அங்குக் காணப்படவில்லை என்பதையும் உணர்ந்தார்.

இந்நிலையைக் கண்டு அவ்வையார் திடுக்கிட்டார்! எதற்கும் உவமைகாணும் அவர் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது.

'ஆம், உண்டான போது கோடி உறவு முறையார்கள் கூடிக் கொண்டாடி மகிழ்வர். பசை - செல்வமும் செல்வாக்கும் அற்றுப் போனால் பின்னர் ஒருவரும் நெருங்கமாட்டார். அத்தகையோரை உறவினராகவோ, நண்பராகவோ கொள்ளுதல் கூட வே கூடாது. அவர்கள் நீரற்றுப் போன குளத்தை எட்டிக் கூடப் பார்க்காத அந்தப் பறவைகளைப் போன்ற பாதகர்கள்; துரோகிகள்!

ஆனால், ஆம்ஆ! இந்தக் கொட்டி, ஆம்பல் நெய்தல் முதலியன நீரோடு பிறந்து நீரால் வளர்ந்து வாழ்ந்து அந்நீர்வற்றிப் போகும்போது தாமும் உடன் காய்ந்து மடிந்து போகின்றனவே! என்னே இவற்றின் உண்மைப் பற்றும், பாசமும் ஒட்டிய உறவு நெறியும், நட்பின் திட்பமும்!

இவற்றைப் போன்று நம் வாழ்விலும் தாழ்விலும் நம்மை விட்டு அகலாது நம்மோடு ஒருங்கிணைந்து என்றும் வாழ்பவரே உண்மையான உறவினர். உயிரான நண்பர்!

இதனை நன்குணர்ந்து நாம் என்றும் விழிப்புணர்வோடு வாழ வேண்டும்' என்று தலையை அசைத்தவாறே பின் வரும் கவிதையைப் பாடினார்.

'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழிந் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு' - (மூதுரை 117)

('அற்ற - நீர் வற்றிப் போன; அறுநீர்ப் பறவை - விட்டு நீங்கி விடுகின்ற நீர் வாழ் பறவைகள்; உற்றுழி - வறுமை அல்லது துன்பம் வந்த போது; தீர்வார் - விட்டு நீங்கிப் போய் விடுபவர்; உறவு அல்லர் உறவினர் ஆகார்; ஆம்பல் - அல்லி; கொட்டி - ஒருவகை நீர்க் கிழங்கு; ஒட்டி உறுவார் - நீங்காது உடனிருந்து வருத்தத்தை அனுபவிப்பவர்: உறவு - உண்மையான உறவினராவர்)

நல்ல குடிப்பிறந்தார்

இயற்கை அன்னை, தான் படைத்த உலகத்தைக் காப்பதற்கு மேற்கொள்ளும் முறையே அற்புதமானது! பரந்த ஆழ்கடலைப் படைத்து, கதிரவனை ஏவி அந்நீரை ஆவியாக்கி, மேகமாக மாற்றி நீல நெடு வானத்திலே சஞ்சரிக்க விட்டு, காடு மலைகளின் துணையால் குளிரூட்டி மழையாகப் பொழிய வைக்கிறது. பின்னர் அம்மழை நீர் சிற்றோடைகளாகவும் பேரோடைகளாகவும் பெருகி ஆறுகளாய், பரந்த நிலப் பரப்பிலே பாய்ந்தோடுகின்றன. அவை குளங்களாகவும், ஏரிகளாகவும் நிலைத்திருந்து உழவர்கள் உணவைப் பயிரிடத் துணை செய்கின்றன. மக்கள் பருக நீர் தருகின்றன. ஆற்று நீர் இல்லாமல் பயிர்

விளையுமோ? உயிரினங்கள் வாழ முடியுமோ? ஆற்று நீர் நிலத்தடியிலும் இறங்கி ஊற்று நீராய் மறைந்து கிடக்கிறது.

அவ்வையார் மழைக்காலத்தை அடுத்த ஓரிரண்டு மாதங்களுக்குப் பின்னர், ஒரு நாள் ஓர் ஆற்றங்கரையோரமாக நடந்து சென்றார். அந்த ஆற்று நீர் ஒழுங்காக ஓடிக்கொண்டிருந்த பாங்கையும், அதனால் மக்கள் பெறும் பயனையும் எண்ணி வியப்படைந்தார்.

'இந்த ஆறு தன்னலங்கருதாது, தன்னை நாடி வருபவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கும் பெரிய கொடை வள்ளல் போன்றது! இதன் இரு கரைகளையும் ஒட்டியுள்ள ஊர்மக்கள் குடிக்க குளிக்க, உடைகளையும் உடைமைகளையும் சுத்தம் செய்து கொள்ள, உணவு சமைக்க, உணவுக்கு வேண்டிய தானியங்களும், கறிகாய் வகைகளும் விளைய, மரஞ்செடி கொடிகளும் வளமாகச் செழித்து வளர. மூல காரணமாய் உள்ளதல்லவா? இந்த ஆறு உண்மையிலேயே பெரும் கொடை வள்ளல்தான்!' என்று புகழ்ந்து சென்றார்.

கோடைக் காலத்தில் ஒரு நாள், அவ்வையார் அந்தப்பக்கம் சென்றார். அந்த ஆறு அடியோடு வற்றி வரண்ட பாலையாய், கால் வைத்தாலே கொப்புளிக்கச் செய்யும் சுடு மனற்படுகையாய்க்கிடந்ததைக் கண்டார். 'ஆஃஆ! அன்று வளமாய் ஓடிக்கொண்டிருந்த இந்த ஆறு இன்று இப்படிச் சுடுமணற் பொட்டலாய் மாறிவிட்டதே!' என்று எண்ணிக் கொண்டிருந்த போது. அண்டை அயல் ஊர்களில் வசித்த பெண்கள் பலர் மட் குடங்களையும், செப்புப் பாத்திரங்களையும் சுமந்து கொண்டு அந்த ஆற்றுப் படுகைக்குச் சாரை சாரையாய் வந்து கொண்டிருந்ததைக் கண்டார்.

'இது என்ன? இந்தப் பெண்கள் வறண்டு கிடக்கும் ஆற்றுப் படுகைக்குக் குடங்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார்களே! நீரில்லை என்பது இவர்களுக்குத் தெரியாதா என்ன?' என்று தம்முள் கூறிக்கொண்டார்.

வந்த பெண்கள் ஆற்றுப்படுகையில் இறங்குவதைப் பார்த்து 'இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? பார்ப்போம்' என்று அந்தப் பெண்கள் செயலை, வைத்த கண் வாங்காமல் உற்றுக் கவனித்துக் கொண்டு நின்றார்.

அந்தப் பெண்கள் படுகைப் பகுதியில், ஆங்காங்கே மேல்மணலைக் கைகளால் விலக்கித் தோண்டுவதைக் கண்டார். தோண்டிய இடங்களிலெல்லாம், ஊற்று நீர் மேலே கொப்புளித்துக் கொண்டு பீரிட்டுச் சுரந்து, சிறு சிறு ஊற்றுக் குழிகளானதைப் பார்த்து வியப்படைந்தார்!

'என்னே, இந்த ஆற்றின் கருணை! அன்று பெருக்கெடுத்து ஓடிய போதும் வேண்டிய அளவு நீர்கொடுத்து உதவியது. இன்று வறண்ட

நிலையிலும், மேல் மணலை விலக்கியதும் போதிய நன்னீரைச் சுரந்து கொடுத்து உதவுகிறதே! இது நற்குடிப் பிறந்த பெருமக்களின் உயர்ந்த கருணையுள்ளத்தை அல்லவா நமக்கு நினைவூட்டுகிறது!

நற்குடிப்பிறந்தோர் தாம் வசதியோடு செல்வத்துடனும், செல்வாக்குடனும் வாழும்போதும் தம்மிடம் வருவோர்க்கு வாரி வாரி வழங்கி மகிழ்விப்பர்; மகிழ்வர்!

துர் அதிர்ஷ்டவசமாய் அவர்கள் வறுமை நிலையை அடைந்தாலும், தம்மிடம் வருவார்க்கு இல்லையென்று சொல்லாமல், தம்மால் இயன்ற அளவு வேண்டியதை அளித்து மனநிறைவுடன் மகிழ்ச்சியடைவர்.

இந்த உண்மையை அல்லவா இந்த ஆறு உணர்த்துகிறது! ஆம்.

ஆற்றுப் பெருக்கற்று அடி சுடும் அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நலல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து' -(நல்வழி-9)

(ஆற்றுப் பெருக்கற்று - ஆறு வளம் அற்றுப்போய்; அடிசுடும் - வைக்கும் காலடியைக் கொப்புளிக்குமாறு கொதித்துச் சுடுகின்ற; உலகு ஊட்டும் - உலகத்தவருக்கு வேண்டிய நீரை அளித்துக் காப்பாற்றும்; ஏற்றவர்க்கு - தம்மை நாடி உதவிக்கு வருபவர்க்கு; நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர்; இசைந்து - (மனம் மகிழ்ந்து) இணங்கி.)

எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது

அவ்வையார், ஒரு நாள் இருபுறத்திலும் அடர்ந்த புதர்களும், மரங்களும் பெருகியிருந்த ஒற்றையடிப் பாதை வழியே சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு மரத்தில், நீண்ட காம்பிலிருந்து காய்கள் போன்ற ஏதோ சில தொங்கிக் கொண்டிருந்ததையும், அவற்றில் பறவைகள் அமர்ந்து பறந்து செல்வதையும், சில பறவைகள் அவற்றின் உள்ளே நுழைந்து மீண்டும் வெளியே பறந்து செல்வதையும் பார்த்து வியப்படைந்து அருகில் சென்றார். தொங்கிக்கொண்டிருந்தவை காய்கள் அல்ல. தூக்கணாங்குருவிக் கூடுகள் என்பதை உணர்ந்து கொண்டார். கையெட்டும் உயரத்தில் இருந்த ஒரு கூட்டினைக் கூர்ந்து பார்த்தார். அக்கூடு மெல்லிய நார்களாலும், இழைகளாலும் அருமையாகப் பின்னப்பட்டிருந்தது.

ஒரே அலகினையுடைய இப்பறவைகள் எப்படி இந்த இழைகளையும் நார்களையும் சேர்த்து, இணைத்துப் பிரிக்கமுடியாதபடி உறுதியாக இக்கூட்டை அமைக்கின்றன? இக்கூட்டைக் கிளையோடு உறுதியாகப் பிணைத்துக் கீழே விழாதபடி எப்படிக் கட்டுகின்றன! இப்பறவைகள், தாம் உள்ளே நுழையுமாறு வழி அமைத்துத் தம் உடலும், தம் முட்டைகளும், பொரிக்கும் குஞ்சுகளும் தங்குமாறு

அளவாகப் படைத்திருக்கின்றனவே! இத்தகைய ஆற்றலும், திறமையும், அறிவும் இப்பறவைகளுக்கு எப்படி வந்தன? இது விந்தையிலும் விந்தை! நுட்பமும் கைத்திறனும் மிக்க மனிதர்கள் எவராவது இந்தக் கூட்டைக் கட்ட முடியுமா!' என்று கூறிக் கொண்டே நின்ற போது குளவிகள் போன்ற சில பூச்சிகள் அடி மரத்தை நோக்கிப் பறந்து சென்று கொண்டிருந்ததைக் கண்டார். அவை அப்புறம் பறந்து சென்ற பின் மெல்ல அடிமரத்தின் அருகில் சென்று அப்பூச்சிகள் தங்கிய இடத்தைப் பார்த்தார். பழுப்பு மஞ்சள் பசை போன்ற ஒரு பொருள் அம்மரத்தின் சிறு பொந்தில் இருப்பதைக் கண்டார். அது அரக்கு - கொம்பரக்கு. 'இப்படி உண்டாவதுதானா இந்த அரக்கு? பழுப்பு மஞ்சள் நிறமும், இளஞ்சிவப்பு நிறமும் இப்பூச்சிகளுக்கு எங்கிருந்து கிடைக்கின்றன? இந்த அரக்கைத் சேகரித்துத்தான் மக்கள் பல பொருள்களைத் தயாரிக்கிறார்கள். மக்கள் தாங்களே செய்யும் செயற்கை அரக்கு இந்த இயற்கை அரக்கிற்கு இணையாகுமா? இந்த அரக்கை மக்கள் செய்ய முடியுமா? எல்லாம் இயற்கை அன்னையின் அற்புத ஆற்றல்' என்று மெல்லப் பேசிக் கொண்டே மேலும் சிறிது தூரம் நடந்து சென்றார். ஓரத்தில் இடுப்பளவு உயரமுள்ள சின்னஞ்சிறு கோபுரங்கள் போன்றவை பல ஒருங்கிணைந்து நிற்கும் தோற்றத்தைக் கண்டு அவற்றின் அருகில் சென்றார். அவை கறையான் பூச்சிகள் நிலத்தை அகழ்ந்து களி மண்ணைக் கொண்டு அழகுற அமைத்த குட்டிக் கோபுரங்களின் இணைப்பு! அந்தப் புற்றின் அமைப்பை எண்ணிப் பார்க்கிறார்.

'இந்தப் புற்றுகளில் தானே நச்சுப் பாம்புகள் வசிக்கின்றன! அரும்பாடுபட்டுக் கறையான் பூச்சிகள் கட்டி வைக்கும் இந்தப் புற்றுகள் பாம்புகளின் புகலிடமாய் உள்ளன அன்றோ? இவற்றுள் நச்சு நாகங்கள் புகுந்து கொண்டு, அக்கறையான்களையும் தின்றுகொண்டு சுகமாக வாழ்கின்றன! நெற்றி வியர்வை நிலத்தில் சிந்திப் பாடுபடும் உழைப்பாளிகளின் உழைப்பின்பயனை, மாளிகைகளில் சோம்பேறிகளாய் இருந்து கொண்டே வயிறுபுடைக்கத் தின்று சுகபோகம் அனுபவிக்கிறார்களே. மேற்குடி மக்கள் சிலர்! ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டுகின்ற நிலை நமக்கு மிகவும் பழைமையானதாயிற்றே! அந்த உண்மையைத் தான் இப்புற்று நினைவூட்டுகிறது!

இப்புற்றுகளை எந்தக் கட்டடக்கலைஞனாவது வடிவமைக்க முடியுமா?' என்று எண்ணிக்கொண்டே மேலும் சிறிது தூரம் சென்றார்

ஓரிடத்தில் தேனீக்கள் பல இரைச்சல் இட்டுக் கொண்டே பக்கத்தில் இருந்த மரக்கிளையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன அக்கிளையில் தேன் கூடு ஒன்று இருப்பதைக் கண்டார். அந்தக் தேன்கூட்டினைப் பற்றிச் சிந்திக்கலானார்.

'ஆயிரக்கணக்கான சதுர சமசதுர வடிவ அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டுக் கட்டுக் கோப்பாக உள்ள அற்புதக் கூட்டில்

அருமைப் பாட்டினை எப்படிப் புகழ்வது? கட்டடக் கலைஞர்கள், சிற்பக்கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள் முதலியோர் பல்லாண்டுகள் பயிற்சி பெறுகிறார்கள். வரைபடம் வரைந்து அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு தங்கள் செயல்களைத் தொடங்குகிறார்கள். ஆனால் இந்தத் தேனீக்கள் எங்கே பயிற்சி பெற்றன? எடுத்த எடுப்பில் தாமாகவே கூட்டினைத் திறம்பட - இயல்பாகவே கட்டிவிடுகின்றன. இத்தேனீக்களைக் கருவிலே திருவுடைய அற்புதக் கலைமாமணிகள் என்று கூறுவதில் என்ன தவறு?

'அப்பப்பா, இந்தத் தேனீக்களின் விரைந்து செயல்படும் தன்மையை சுறுசுறுப்பை, தளராத முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும் எங்கோ நெடுந் தொலைவில் உள்ள மரஞ்செடி கொடிகளை நாடிச் சென்று, அவற்றின் மலர்களில் தேங்கிநிற்கும் நுண்ணிய தேன்துளிகளைப் பதமாக உறிஞ்சி வந்து இக்கூட்டில் சேமித்து வைக்கின்றன. பின்னர்த் தேன்கிட்டாத காலங்களில் தாம் சேமித்து வைத்த தேனையுண்டு இன்பமாக வாழ்ந்து இனத்தையும் பெருக்குகின்றன.

இப்படி அரும்பாடு பட்டு உழைத்துச் சேர்த்துவைக்கும் தேனை, வழிபறிக் கொள்ளையர்கள் போல் முரட்டு மனிதர்கள் கூட்டையழித்துத் திருடிச் செல்கிறார்கள்! அதுவும், தேனீக்களின் அடைகளில் தேன் முழுவதும் நிரம்பும் முன்னரே, அவற்றைப் பறித்து அவற்றில் உள்ள குஞ்சுகளையும், முட்டைகளையும் தேனீக்களையும் அழித்து விடுகிறார்களே! இந்தக் கொடுமையை யாரிடம் முறையிடக் கூடும்?

உரிய நேரத்தில், தேனீக்களோ, அவற்றுள் உள்ள குஞ்சுகளோ, முட்டைகளோ பழுதடையா வண்ணம் பத்திரமாகத் தேனைச் சேகரித்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்! இறைவன் படைத்த உயிரினங்களில் கொடுமை மிக்கவர்கள். சுயநலமே உருவெடுத்தவர்கள் ஆறறிவு படைத்த மனிதர்கள் சிலர்தான்' என்று தம்முள் எண்ணிக் கொண்டே அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் தம்நடைப் பயணத்தை மேலும் தொடர்ந்தார்.

சிறிது தூரம் சென்றதும் அவ்வையாரின் ஆழ்ந்த பார்வை வழியருகில் இருந்த ஒரு புதரின் மீதுபட்டது.

அப்புதரில் சிலந்திப் பூச்சியொன்று பல முக்கோணங்களை ஒருங்கிணைந்தது போலப் பள பளக்கும் மெல்லிய இழைகளால் வலை பின்னியிருந்தது. அந்த வலையின் அமைப்பும், அருமைப் பாடும் அவ்வையார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. 'தன் எச்சலினாலேயே மெல்லிய இழைகளைப் படைத்து, அவற்றைப் பலசுற்று வரிசைகளாகப் பின்னிப் பிணைத்து அற்புதமாக இவ்வலையை அமைத்திருக்கிறதே! இத்தகைய நுட்பத்திறனையும், திறமையையும் இதற்கு யார்

கற்பித்தார்கள்? எல்லாம் அந்த இயற்கை அன்னையின் விந்தைகள்' என்று வியப்பு மீதூர எண்ணமிட்டுக் கொண்டே நின்றிருந்தார்.

அந்த வலையைப் பின்னிய சிலந்திப் பூச்சி அவ்வலையின் நடுவே, ஆடாமல் அசையாமல் அமைதியாகப் படுத்துக் கிடந்தது..விரைந்து பறந்து சென்ற சின்னஞ்சிறு பூச்சிகளும், ஈக்களும், கொசுக்களும் அவ்வலையில் தாமே சென்று சிக்கி, விடுவித்துக் கொள்ள முடியாமல் தவித்துச் சிறிது நேரத்தில் வலியிழந்து அப்படியே சுருண்டு கிடந்தன. அசையாமல் வலை நடுவே கிடந்த அச்சிலந்தி திடும் என எழும்பி விரைந்து பாய்ந்து அப்பூச்சிகளைத் துடிதுடிக்க விழுங்கி, மீண்டும் அவ்வலை நடுவில் அமைதியாய்ப் படுத்துக் கொண்டது. இந்நிகழ்ச்சி அவ்வையார் உள்ளத்தை நெகிழ வைத்தது.

'இச்சிலந்தி தன் உணவை அப்படித்தான் பறித்து உண்ண வேண்டும் என்பது இயற்கையே விதித்த விதியல்லவா? அது இருக்கட்டும்; இந்தச் சிலந்தி எவ்வளவு திறமையாக நுட்பமாக இவ்வலையைப் பின்னியிருக்கிறது!

'இப்படியோர் அரிய அமைப்புடையவலையை எந்தப் பொறியியல் வல்லுநராவது செயற்கையாகப் பின்ன முடியுமோ?' என்று வியப்புற்றுச் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

முன்னர் அவர் கண்ட தூக்கணங் குருவிக்கூடு, அரக்கு, கரையான் புற்று, தேன்கூடு, சிலந்தி வலை இவையனைத்தும் அவ்வையாரின் நெஞ்சத்திரையில் நிழலாடின.

பின்னர், மெல்லப் பேசிக் கொள்கிறார். 'இயற்கைத் தெய்வம் ஒவ்வொருவகை உயிரினத்துக்கும் ஒவ்வொரு திறனையும், ஆற்றலையும், நுட்பத்தன்மையையும் இயல்பாகவே படைத்திருக்கிறது. ஒவ்வொன்றின் திறமை, நுட்பக்கூறு, ஆற்றல், தனித்தன்மை முதலியன மற்றவற்றிற்கு அமையா!

அவ்வாறே, மனிதர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகைத் தனித்திறமையும், தனித் தன்மையும் கலையாற்றலும், நுட்பக்கூறும் பெற்றவர்களாக இருப்பர்.ஒருவரிடம் காணும் அரிய ஆற்றலும், நுட்பமும், புதுமைச் செயலும் மற்றவர்க்கு இல்லையென்று எண்ணுவது தவறு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது. ஒவ்வொருவரும் ஒவ்வோர் கலையில் அல்லது செயலில் சாதனையில் வல்லவர்களாக இருப்பார்கள். இது இயற்கையின் நியதி.

இந்தக் கருத்து ஓர் அரிய பாடலாக மலர்ந்தது. அதுதான்:

'வான்குருவி யின்கூடு, வல்லருக்கு, தொல்கறையான்
தேன்சிலந்தி யாவர்க்கும்செய்யரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாம்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன்(று) எளிது'

(வல்லரக்கு - உறுதியான கொம்பு அரக்கு; தேன் - தேன்கூடு; சிலந்தி - சிலந்தி வலை; வலிமை சொல - (தானே) வல்லர் என்று சொல்லி)

மூவகை சினத்தினர்

அவ்வையார் ஒரு சிற்றூர் வழியாக 'ஒரு நாள் சென்று கொண்டிருந்தார். தெருக்கோடியில் ஒரு நீண்ட கொட்டகை. அதன் பக்கத்தில் நிறையக் கருங்கற்களும், பாறைத்துண்டுகளும் கிடந்தன. அக் கொட்டகையினுள்ளிருந்து 'டக் டக்' என விட்டு விட்டு ஓசை வந்து கொண்டிருந்தது. அங்கிருந்த கற்களின் அருகே அவ்வையார் சென்றார். சிதைந்த உருவங்களோடு சில கற்களும் அங்குக் கிடந்தன. அக் கொட்டகை, சிற்பம் செதுக்கும் சிற்பப்பட்டறை என்பதைப் புரிந்து கொண்டார். சிதைந்த உருவக் கல் ஒன்றை மெல்லத் தூக்கி நிமிர்த்திப் பார்த்தார். அது திருமகள் - இலட்சுமி உருவம்! அவயவங்கள் எல்லாம் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருந்தன. ஆனால் அச்சிலையின் முகத்தில் மூக்குப்பகுதி உடைபட்டிருந்தது. 'ஆஃஆ! எவ்வளவு அழகான சிலை. இதன் மூக்கு உடைபட்டுவிட்டதால் அல்லவா இது தூக்கி எறியப்பட்டுக் கிடக்கிறது! ஏன்? மூக்கைச் சரிப்படுத்த முடியாதா? வேறு மூக்கைக் கல்லால் செதுக்கி அதில் பொருத்தி விட..... ஊ, உம், முடியாது. கல்லோடு கல்லைச் சேர்த்தால் எப்படி ஒட்டும்? பிளந்த கற்களைப் பழையபடி இணைக்க முடியாதே! இதுவே பொன்னால் செய்யப்பட்ட சிலையாய் இருந்தால் பொடி வைத்து உருக்கி அழகாய்ப் பொருத்திவிடலாம். ஊனம் தெரியாமல் செம்மைப் படுத்தித் திருமகளின் எழிலான காட்சியைக் கண்டுகளிக்கலாம்!' என்று சிந்தித்துக் கொண்டே அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டார்.

சிறிது தூரம் சென்ற பிறகு அங்கு ஒரு தாமரைக் குளத்தைக் கண்டார். தெளிந்த நீர் நிறைந்த குளம். செந்தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கிப் பொலிவுடன் காட்சியளித்தன. தம்மை மலர்வித்த பகலவனைக் கண்டு பூரித்து, அவனுக்கே (சூரியனுக்கே) தம்மை முழுவதுமாக அர்ப்பணம் செய்து விட்டதை மௌனமாக உணர்த்திக் கொண்டிருந்தன. அருகருகே இருந்த மொட்டுகள், தாமும் அந்நிலை அடையத் தவம் செய்வது போலக் கூம்பி நின்றன! இலைகள் நீர்த் துளிகளாம் முத்துகளை ஏந்திக் கொண்டிருந்தன. அத் துளிகள் எங்களை விரைவில். உன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்' என்று சூரியனைக் கெஞ்சிக் கொண்டிருந்தமை போல் தோன்றின.

அருகே சென்று, அக் குளத்தின் மாசு மறுவற்ற தெளிந்த தூய நீரை, அவ்வையார் கையில் அள்ளி எடுத்துப் பருகி, அக் குளத்தின் எழிலில் திளைத்துச் சற்று நேரம் அங்கேயே அமர்ந்துவிட்டார்.

குளத்தில் சிறியனவும் பெரியனவுமான மீன்கள் பல சுதந்திரமாகத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தன. ஒரு புறத்தில் மீன்கள்

ஒருங்கே மொய்த்துக் கொண்டு ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் அமைதியாக இரையைச் சுவைத்துக் கொண்டிருந்தன. 'குறையறிவு படைத்த இந்த மீனினம், ஒன்றோடு ஒன்று பகை கொண்டு முட்டி மோதிக் கொள்ளாமல், அமைதியாக இரையைத் தின்று கொண்டுள்ளனவே! நிறையறிவு — ஆறறிவு படைத்த மனிதர்கள் இவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுவார்களா? அப்பப்பா, தன்னலமே தலைவிரித்தாட, எனக்கு உனக்கு என்று பகையும் பொறாமையும் கொண்டு முட்டிமோதிக் கொள்வார்களே!' என்று தம்முள் எண்ணிக் கொண்டு சற்று நிமிர்ந்து, குளத்தின் மறுகரையைப் பார்த்தார்.

ஒரு வேடன், கையில் வில்லை வைத்துக்கொண்டு, அக் குளத்தில் விரைந்து ஓடிக்கொண்டிருந்த பெரிய மீன் ஒன்றன்மீது குறிவைத்து அம்பை எய்தான். அந்த அம்புநீரைக் கிழித்துக்கொண்டு; ஊடுருவிச் செல்லும்போது, அம்பினால் விலகிய நீர் உடனுக்குடன் இணைந்து சென்று சேர்ந்து கொள்வதைக் கண்டார்.

அவ்வையார் உள்ளம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் பதிந்திருப்பதை அவர் முகம் உணர்த்திற்று. ஆம், அவர், முன்னர்த் தாம் கண்ட நிகழ்ச்சிகளை மீண்டும் நினைவு கூர்கிறார்.

'கற்சிலை, எழில் தவழும் திருமகள் உருவம்! செதுக்கும்போ மூக்குச்சிதறுண்டு போனதால் தூக்கி எறியப்பட்டு விட்டது; பயனற்று கிடக்கிறது. அதுவே பொன்னால் செய்யப்பட்டதாக இருந்தால், பொற்கொல்லர்கள் அதனை மீண்டும் பழையபடி பொருத்திவிடுவர். இதோ, இங்கு, வேடன் மீனின்மீது எய்த அம்பால் பிளவுண்ட நீர் உடனுக்குடன் தானாகவே கூடி விடுகிறது!' என்று அம்மையார் தமக்குள் மெல்லப் பேசிக் கொண்டார்.

பின்னர், கோபத்தின் தன்மையை எண்ணிப் பார்க்கிறார். 'கோபம் அப்பப்பா பொல்லாதது. அது மக்களுக்கு இயல்பானது; உடன் பிறந்தது! மக்களுக்கு மட்டுமா? இயங்குகின்ற உயிரினங்கள் அனைத்துக்குமே இக் கோபம் உடன் பிறவிக் குணம் தான். ஆனால், பகுத்தறிவு படைத்த மக்களிடம்தான் இக் கோபத்தின் கொடுமை அதிகம். கோபத்தால் அழிந்த, அழிகின்ற குடும்பங்கள் எத்தனை! மன்னர்கள், அரசுகள், நாடுகள் எத்தனை! எத்தனை! எண்ணவே இதயம் நடுங்குகிறதே! கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை; குடிகெடுக்கும்; சீர் குலைக்கும்; உறவறுக்கும்! சுருக்கமாகச் சொன்னால் அழிவுகளுக்கெல்லாம் மூலகாரணமாய் உள்ளது கோபம்தானே! என் சகோதரர் - வள்ளுவர், இக் கோபத்தின் கொடுமையை எண்ணி வேதனை மீதூரப் பத்துக் குறட்பாக்கள் கொண்ட ஓர் அதிகாரத்தையே படைத்திருக்கிறாரே!

'மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.'

எவரிடத்தும் கோபம் கொள்வதை மறந்துவிடு; இல்லையானால், உனக்கே அதனால் பல தீமைகள் வரும்.

ஒருவன் தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டுமாயின், கோபம் வாராமல் காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடின், அக்கோபம், கொண்ட அவனையே கொன்றுவிடும்.

'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்'.

'இணர்எரி தோய்வு அன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமைநன்று',

கொழுந்து விட்டு எரியும் தீப்பிழம்புபோல் பொசுக்கும் கொடுமையைப் பிறர் உனக்குச் செய்தாலும் நீ கோபம் கொள்ளாதே; என்றெல்லாம் கோபத்தின் கொடுமைகளைக் கூறியுள்ளாரே!

'கோபத்தை அடியோடு ஒழித்து விட முடியாது' என்றாலும் 'அதனைத் தலைகாட்ட வொட்டாமல் அடக்கிக் கொள்ள வேண்டும்' என்னும் பொருள்படத்தானே, ஆத்திசூடியில் 'ஆறுவது சினம்' என்று சுருக்கமாகக் கூறியுள்ளேன்' என்று மெல்லப் பேசிக் கொள்கிறார்.

பின்னர் அவர், சற்று முன்னர்ச் சிற்பப் பட்டறையருகில் கண்ட ஊனமடைந்த திருமகள் சிலை, பொன்னின் தன்மை. அங்குக் குளத்தில் ஓடிய மீனின் மீது வேடன் எறிந்த அம்பால் பிளந்து உடனே இணைந்து கொண்ட நீர்ப் பகுதி — இவை அவரது மனத்திரையில் நிழலாடின. ஏதோ உண்மையைக் கண்டுணர்ந்தது போலத் தலையை மெல்ல அசைத்துக்கொண்டு தமக்குள் பேசிக் கொள்கிறார்.

'இக்காட்சிகள், கோபம் கொள்பவரை நினைவுபடுத்துகின்றன. நல்ல பொருத்தம். கடுங் கோபம் கொள்பவரை மூன்று வகையாகப் பிரிக்கலாம். சிலர், கடுஞ்சினம் கொண்டு பகைத்துக் கொண்டால் அதனை மறக்க மாட்டார்கள். நாளாக நாளாக அப்பகை உணர்வு பெருகிக் கொண்டே போகும். எவரும் அத்தகையவரின் கோபத்தையும் பகையுணர்வையும் மறக்கச் செய்யவே முடியாது. இவர்கள் முதல் வகையினர். கோபம் கொண்டு பகைத்துக் கொள்ளும் இருவரை, தெரிந்தவர் தலையிட்டுச் சமாதானம் செய்து விடலாம். இத்தகையோர் இரண்டாம் வகையினர். மூன்றாம் வகையினர், கோபம் கொண்டால் அதனை உடனே மறந்து விடுவர்.

பிளந்து போன கற்களை மீண்டும் சேர்க்க முடியாதல்லவா? அப்படித்தான் ஒருவர் மீது கோபம் கொண்டால் அதனை மறந்து விடாமல் பகையினைப் பெருக்கிக் கொள்வர். அந்த முதல் வகையினர், கீழ் மக்கள். பிரிந்து கிடக்கும் பொன் துண்டுகளை உருக்கிச் சேர்த்து விடலாம். அதைப் போல, கோபம் கொண்ட இருவரைப் பிறர்

தலையிட்டுச் சேர்த்து வைத்து விடலாம். அவர்கள் இடைப்பட்ட நிலையினர். சான்றோர், உயர்ந்த பண்பாளர் ஒருவர்க்கொருவர் கோபித்துக் கொண்டால் அடுத்த கணத்திலேயே அதனை மறந்து, ஏதும் நடவாததுபோல இணைந்து கொள்வர். அம்பால் பிளவுபட்ட நீர்ப்பகுதி உடனே கூடிக் கொள்வது போல. இவர்கள் மூன்றாம் வகையினர். இவர்களே உயர்ந்த பண்பாளர்கள்'.

இந்தப் பொருத்தமான உவமைக்கு ஏற்ற உண்மைக் கருத்தினைக் கவிதையாகப் பாடிவிட்டார், உவமைக்கேற்ற உண்மை காணுவதில் நந்நிகரற்ற அவ்வை பிராட்டியார். இதோ அப்பாடல்:

'கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிள வோடு ஒப்பாரும் போல்வரே — விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்' மூதுரை: 23

(விற்பிடித்து - வில்லைக் கையில் கொண்டு; பொற்பிளவு - துண்டான பொன் கட்டி; வடுப்போல - (நீரின்) பிளவு, அதாவது பிரிவு போல; சீர் ஒழுகு சான்றோர் - சிறப்பு மிக்க பெரியோர்)

அடக்கமுடையார் அறிவிலார் ஆகார்

பின்னர், அவ்வையார் தமது வழக்கமான நடைப்பயணத்தைத் தொடர்ந்தார். இடையில் ஒரு சிற்றாறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் - மேட்டில் பரந்து வளர்ந்திருந்த ஒரு மரநிழலில் அமர்ந்து சிறிது ஓய்வெடுத்துக் கொண்டார். ஆற்றங்கரை, நீரருகே பால் வண்ணக் கொக்குகள் தம் நீண்ட அலகுகளால் நீரில் ஓடிச்செல்லும் மீன்களைக் குறிபார்த்துக் கொத்திப் பற்றி விழுங்கிக் கொண்டிருந்தன. இன்னும் சில அசையாது நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தன. அவ்வையார் நீரின் அருகே சென்றார். ஒரு கொக்கு நீண்ட நேரம் ஆடாமல் அசையாமல், கடுந்தவம் செய்யும் முனிவர் போல் நின்று கொண்டிருந்தது. ஆற்றோரம் பல வகையான மீன்கள் பல ஓடிக்கொண்டிருந்தன. சில மீன்கள் அக்கொக்கின் காலருகே ஓடுவதையும் தம் கூரிய கண்களால் உற்றுப் பார்த்தார். அக்கொக்கு எந்த மீனையும் பற்றாமல் வாளா நின்று கொண்டிருந்தது. அம்மையாருக்கு ஐயம்! 'இந்தக் கொக்கு, தன்னை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்து விட்டதோ? நீண்ட நேரம் கழுத்தை நீட்டிக் கொண்டிருந்ததால் கழுத்து அசைவற்றுக் குனிய முடியாமல் மரத்துப் போய்விட்டதோ?' என எண்ணிக் கொண்டே இருந்தபோது, அக்கொக்கு 'வெடுக்'கென ஒரு மீனைக் கொத்திப் பற்றிக் கொண்டு விழுங்கத் தொடங்கியது.

அக்கொக்கு அவ்வளவு நேரம் ஆடாமல் அசையாமல் நின்றிருந்ததன் காரணம் அவ்வையாருக்குப் புரிந்துவிட்டது. எண்ணற்ற மீன்கள் நீரில் தன் கால்களைத் தொடுமளவில் திரிந்து கொண்டிருந்தாலும், தன் கழுத்துத் தாங்கும் வலிமைக்கும், அலகின்

அளவுக்கும் ஏற்ற மீன் வருமளவும் அமைதியாகக் காத்திருந்தது. அத்தகைய மீன் அருகில் வந்ததும் 'லபக்' எனக் குத்திப் பிடித்துக் கொண்டது என்பதை, அவர் உணர்ந்து கொண்டார். அக்கொக்கின் திறமையைக் கண்டு வியந்தார். இந் நிகழ்ச்சியும் அவ்வையாரின் சிந்தனையைத் தூண்டியது. 'இதுவும் ஓர் உண்மையை உணர்த்துகிறது. சிலர் அடக்கமாகவும், அமைதியாகவும் இருப்பர். அவருடைய நிலையினைக்கண்டோ, உருவத்தைக்கண்டோ, அவர் சுறுசுறுப்பற்றவர், மந்த மதியினர், இயங்கிச் செயல்படும் ஆற்றல் அற்றவர் என்று முடிவு செய்துவிடக்கூடாது. அவர் ஏதோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கலாம் - அல்லது தாம் எதனையோ செய்து முடிக்க உரிய காலம், இடம், சூழ்நிலை முதலியவற்றைப் பற்றித் திட்டமிட்டு அமைதியாய்க் காத்திருக்கவும் கூடும். எதனையும் நன்கு புரிந்து கொள்ளாமலும், அறிந்து கொள்ளாமலும் முடிவுக்கு வந்துவிடுதல் முறையற்றது. இந்தக் கருத்தைத்தான், நீண்ட நெடுநேரம் ஆடாமல் அசையாமல் காத்திருந்து, உரிய மீன் வந்ததும் திடும்' எனக் கவ்விக் கொண்ட இந்தக் கொக்கு உணர்த்துகிறது', ஆம். வள்ளுவரும்,

'கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த விடத்து'

என்று இதே கருத்தைத்தானே கூறியுள்ளார்?' என எண்ணினார். பின்னர் அக்கருத்து ஓர் அரிய பாட்டாக வெளிப்பட்டது. அதுதான் பின்வரும் பாடல்:

'அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்க கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு' மூதுரை-16.

(கடக்க - அளவிட; மடைத்தலை - நீர்நிலைக் கரையின் கண்; உறுமீன் - தன் ஆற்றலுக்கு ஏற்ற அளவான மீன்).

இனிய சொல்லே என்றும் வெல்லும்

அவ்வையார், ஒருநாள் காட்டையடுத்த ஓர் ஊரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். அந்தக் காட்டில் சில யானைகள் சஞ்சரிக்கின்றன என்பது அவருக்குத் தெரியும். அவை சில சமயம் அப்பக்கமாக வருமானால், காண்பவரைக் கொன்றுவிடும் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால், அவர் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. வாழ்வையும் சாவையும் பொருட்படுத்தாதவர். எல்லாம் விதியின் படியே நடக்கும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர். இவ்வுலகத்தில் ஒருவர் இவ்வளவு நாள்கள் தான் உயிரோடு வாழ வேண்டும் என்று விதியிருக்குமானால், அந்த நாளைக்குள் அவரை எவரும் அழிக்க முடியாது. அவ்வாறே, இந்த நாளில் ஒருவர் சாக வேண்டும் என்று விதியிருக்குமானால் எவரும் அவரை நீடித்து

வாழுமாறு காப்பாற்ற முடியாது. எல்லாம் விதியின் திருவிளையாடல்; விதிவிட்ட வழியில் தான் உலகம் இயங்குகிறது.

'ஆவாரை யாரே அழிப்பார்? அது அன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பார்?'

என்பது அவர் வாக்கு.

அவர் சென்று கொண்டே இருந்தபோது ஒரு யானை பயங்கரமாகப் பிளிறிக்கொண்டு இரத்தம் சிந்தச் சிந்த ஓடியதையும், ஒரு வேடன் வில்லைக் கையில் பற்றிக் கொண்டு, அந்த யானையைத் துரத்திக் கொண்டு ஓடியதையும் கண்டு திடுக்கிட்டார். அந்த வேடன் தன் கூரிய அம்பை அந்த யானையின் உடலில் எய்திருக்கிறான். அந்த அம்பு யானையின் முரட்டுத் தோலையும் துளைத்து, தன் உடலில் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது! அந்தப் பயங்கரக் காட்சி ஒருகணம் கலங்க வைத்தது. அந்த வேடனின் கொடிய நெஞ்சத்தை எண்ணி 'இரக்கமே இல்லாத அரக்கன்' என அவர் முணுமுணுத்தார். பின்னர் 'அது அவன் குலத் தொழில் என எண்ணி ஒருவாறு ஆறுதலடைந்தார்.

'இரும்புக்கவசம் போன்ற தடித்த யானைத் தோலையும் அல்லவா இந்த வேடனின் அம்பு கிழித்து ஊடுருவிச் சென்றுள்ளது. அதே அம்பை ஒரு பஞ்சுப் பொதி அல்லது மூட்டையில் எய்தால் அதனை இந்த அம்பு ஊடுருவித் துளைக்குமா? ஊஃஉம், 'பொசுக்'கென்று அப்பஞ்சு மூட்டையின் மேல் தொற்றிக் கொள்ளும்' என்று எண்ணிக் கொண்டு அவ்விடத்திலிருந்தும் அகன்றுவிட்டார்.

செல்லும் வழியில் குன்றுகளும், பாறைகளும் காணப்பட்டன. அந்தப் பாறைகளைச் சிலர் கனத்த இரும்புக் கடப்பாரைகளால் பிளந்து கொண்டிருப்பதைக் கண்டார். வீடுகளையும், அடித்தளங்களையும், மதில்களையும் கட்டுவதற்காகப் பாறைகளைப் பிளக்கிறார்கள் என்பதை அவ்வையார் புரிந்து கொண்டார். பாறைகள் மிகவும் கடினமானவை; ஆதலால் அவற்றைப் பிளக்கும்போது கடப்பாரைகளின் முனை அடிக்கடி மழுங்கிவிடுவதையும், அவற்றை அவர்கள் உடனுக்குடன் கூர்மையாக்கிக் கொள்வதையும், வெவ்வேறு கடப்பாரைகளை மாற்றி மாற்றிப் பயன்படுத்துவதையும் கண்டார்.

நெடுந்தூரம் நடந்தமையால் சற்று இளைப்பாறிச் செல்ல, ஒரு குன்றின் அருகே அமர்ந்தார். அந்தக் குன்றின்மீது அவ்வையாரின் பார்வை பட்டது. சிறு சிறு மரங்களும், மெல்லிய செடி கொடிகளும் அக்குன்றின்மீது வளர்ந்திருந்தன.

'குன்றுகள்; கடினமான பாறையால் ஆனவை. இவற்றைப் பிளப்பதும், உடைப்பதும், துளைப்பதும் அவ்வளவு எளிதன்று! பாறையைப் பிளப்பதற்கு அங்கே, அந்த ஆள்கள் எவ்வளவு பாடுபடுகின்றனர்! எத்தனை கடப்பாரைகள் மழுங்கின; வளைந்தன; உடைந்தன!

என்ன ஆச்சரியம்! இந்த மரங்களும், செடிகொடிகளும் இவ்வளவு கடினமான குன்றை—பாறையை எப்படித் துளைத்து, ஊடுருவி வேரூன்றி முளைத்துப் பசுமையாக வளர்ந்துள்ளன! இரும்புக் கடப்பாரைகளால் பிளக்க முடியாது. அவற்றுக்கு அசைந்து கொடுக்காத பாறை—மலை, இத்தாவரங்களின் மென்மையான, நுண்ணிய, சிறுசிறு வேர்கள் ஊடுருவித் துளைத்துப் பிளந்து உட்புகுவதற்கு நெகிழ்ந்து கொடுத்திருக்கின்றனவே! நம்ப முடியவில்லையே!' என்று மெல்லப் பேசிக்கொண்டே வியப்பில் ஆழ்ந்தார். அவர் சிந்தனை செயல்படத் தொடங்கியது.

'அங்கே, முரட்டுத் தோலையுடைய யானையின் உடலைத் துளைத்து உட்புகுந்த அம்பு, மெத்தென்ற பஞ்சுப் பொதியை ஊடுருவாது. அப்படியே அதன்மேல் நின்றுவிடும் என்பதை உணர்ந்தோம். இங்கே, கனமான இரும்புக் கடப்பாரையால் பிளக்க முடியாத கடினமான பாறை, இந்தத் தாவரங்களின் நுண்ணிய சிறுசிறு வேர்களுக்கு நெகிழ்ந்து கொடுத்திருக்கிறது! ஆம். இவையும் ஓர் அரிய கருத்தை உணர்த்துகின்றன.

கடுகடுத்து, வெட்டெனப் பேசும் பேச்சு - கடுமையான சொல் - சுடு சொல் எந்தப் பலனையும் தாராது; காரியத்தையே கெடுத்துவிடும். ஆனால், மென்மையான, நயமான இனிய சொல்லால் - இதமான மொழியால் எதையும் எளிதில் சாதித்து விடலாம். இதைத்தான் நாம் உலக வாழ்வில் கண்டு வருகிறோமே!' என்று மெல்லக் கூறித் தலையை அசைத்து, 'ஆம், வெப்பமான சூரியனைக் கண்டு பொங்காத கடல், குளிர்ந்த நிலவைக் கண்டு, தன் அலைக்கரங்களைக் கொட்டிக் குதித்துக் கூத்தாடிப் பொங்கிப் பூரிப்படைகின்றதே! பிறர் கூறும் இனிய சொல் தமக்கு இன்பம் தருதலை அனுபவித்தவர், எவராவது வன்சொல்லைச் சொல்வாரா? அது எந்தப் பயனையும் தாராதே.

'இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?'

என்று வள்ளுவரும் இந்தக் கருத்தைத்தானே கூறுகிறார். இதே கருத்தை 'வெட்டெனப் பேசேல்' என்று நான் ஒரே வரியில், ஆத்திசூடியில் கூறியிருக்கிறேனே!' என்று பெருமிதத்தோடு கூறிப் பாடுகிறார்:

'வெட்டென்அவை மெத்தேன் அவை வெல்லாவாம்,வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது — நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்' (நல்வழி: 33)

(வெட்டேன் அவை - வெட்டெனப் பேசும் வன்சொற்கள். மெத்தென் அவை - மென்மையான இனிய சொற்கள். வெல்லாவாம் - பயன்தரமாட்டா. வேழம் - யானை. பட்டு உருவும் கோல் - (யானையின்

உடலில்) பட்டுத் துளைத்து ஊடுருவும் அம்பு. நெட்டு இரும்புப்பாரை - நீண்ட இரும்பாலான கடப்பாரை. நெக்குவிடா - பிளக்காத, உடையாத; நெக்குவிடும் - (நெகிழ்ந்து) பிளந்து கொடுக்கும்.)

அரசரிய வாழ்வாரின் அவலம்

வழக்கமான தம் வழிநடைப் பயணத்தின்போது, அவ்வையார் ஒரு நாள் ஓர் ஆற்றங்கரையின் அருகே வந்தார். சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர் அந்தப் பக்கம் சென்றபோது, அவ்வாற்றங்கரையில் ஒரு மரம், பூவும், காயும் கனியுங் குலுங்க, செழித்துக் கொழித்து வளமாக வளர்ந்திருந்ததைக் கண்டு மெய்ம்மறந்து மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்து, சிறிது நேரம் அக் குளிர் நிழலில் தங்கியிருந்து, பின்னர்ச் சென்றிருக்கிறார். அப்போது அந்த ஆற்றில் நீர் நிறைந்திருந்தது.

ஓரிரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து பருவமழை பெய்யாமையால், அந்த ஆற்றில் நீர் அறவே வற்றி, அவ்விடம் வரண்ட மணல் படுகையாய் இப்போது மாறி இருந்தது.

ஆற்றுநீரை நம்பி அதன் கரையில், அவ்வளவு நாள் அம்மரம் வளங் கொழிக்கச் செழித்து ஓங்கி வளர்ந்து விளங்கியது. நீர் வற்றி வறண்டு போனமையால் அதன் வளமும், அழகும் கண்கவர் தோற்றமும் சிதைந்து சீர் குலைந்து காய்ந்து சாய்ந்து கிடந்தது. அந்நிலையைக் கண்ட அவ்வையார் அப்படியே நின்றுவிட்டார். சிறிது நேரத்தில் தெளிவடைந்த அவர் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது. மெல்லப் பேசிக் கொள்கிறார்.

'ஆஃஆ! அரசனையோ, (அருசியல் கட்சியையோ) முழுக்க முழுக்கச் சார்பு என நம்பி, செல்வமும் செல்வாக்கும், பெருமதிப்பும் பேரும் புகழும் பெற்று 'ஓகோ' என்று வாழ்கிறார்களே, சில மனிதர்கள்! அவர்களிடம் - கற்றவர்களும், அறிஞர்களும், அரசியல் ஆதாயமும் பிற சலுகைகளும் தேடுபவர்களும், நாள்தோறும் கூட்டம் கூட்டமாகச் சென்று அவர்கள் தரிசனத்துக்கு மணிக்கணக்கில் காத்துக்கிடக்கிறார்கள்! ஆம், அவர்கள் அரசு அறிய (ஆளும் அரசியல் கட்சி அறிய) ஏக போக வாழ்வு வாழ்கிறார்கள்! அவர்களுடைய தயவும் துணையும், அரசுக்கு (ஆளும் கட்சிக்கு) மிகமிக அவசியமானவை. அரசு ஆட்சி அவர்களது முக்கியத்தை உணருமாறு நடைபெறுகிறது. அவர்கள், அரசு (ஆளும் கட்சி) தங்கள் செல்வாக்கை அறியுமாறு வாழ்கிறார்கள்.

ஆனால், அரசனின் ஆட்சியோ (அரசியல் கட்சியின் ஆட்சியோ) நெடுநாள் நிலைத்து நிற்கக் கூடியது அல்லவே. குடை நிழலின் கீழிருந்து, பட்டத்து யானையின் மீது பவனி வரும் சக்கரவர்த்தியும் மறுநாள் பரதேசியாய் - வறியவனாய் மெலிவுற்று வாழும் நிலைக்கு வந்துவிடக் கூடுமே!

எனவே, இதோ ஆற்றங்கரையில், ஆற்று நீர் வளத்தை நம்பி, அதனைச் சார்ந்து வளம் பெருகச் செழித்தோங்கி வளர்ந்து பின்னர்,

ஆற்றின் நீர் வற்றிப் போனதும் அடிசாய்ந்து வீழ்ந்து கிடக்கும் இந்த மரத்தின் கதிதான், அரசை (ஆளும் அரசியல் கட்சியைச்) சார்ந்து, அதை நிலையானது என நம்பி, ஆணவத்தோடு வாழ்கின்ற பெரும்புள்ளி களுக்கும் ஏற்படும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை' என்று பேசாமல் பேசிக் கொண்டு சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு, மீண்டும் 'இத்தகையோர் வாழ்வும் ஒரு வாழ்வாகுமோ? ஆனால், நிலத்தை உழுது, பயிர் செய்து உலக மக்களுக்கெல்லாம் உணவளித்துக் காக்கும் அந்த உழவர் பெருமக்களின் வாழ்வுதான் உன்னதமான வாழ்வு; உயர்ந்த வாழ்வு!

அவர்கள் உழுது பயிரிடாவிட்டால் உயிர் ஏது? உலகு ஏது? மற்றப் பணிகளுக்கெல்லாம், ஆண்டான் அடிமை. முதலாளி தொழிலாளி, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் வேறுபாடு உண்டு; ஆனால், தங்கள் நிலங்களைத் தாங்களே உழுது விளைத்து உதவி, ஒப்பற்ற தொண்டாற்றும் இந்த உழவர் பெருமக்கள் எவருக்கும் அடிமை அல்லர். தாங்களே அரசர்கள்; தாங்களே குடிமக்கள். அவர்களுக்கு எவருடைய தயவும் தாட்சண்யமும், எவர் முன்னரும் நின்று கைகட்டிக் காத்துக் கிடக்கும் இழிநிலையும் இல்லை. இந்தக் கருத்தைத் தானே,

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'

என்றும்

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என்றும்

'பல குடை நீழலும் தன்குடைக் கீழ் காண்பர்' என்றும், வாழ்வு நெறி வகுத்த வள்ளுவர் அழகாக, ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்தைத்தானே, நான் கொன்றை வேந்தன் என்னும் நூலில் 'சீரைத்தேடின் ஏரைத் தேடு' என்று ஒரே வரியில் சுருங்கக் கூறியிருக்கிறேன்!

இக் கருத்துப் பாட்டு வடிவில் இருந்தால் மக்கள் என்றும் மறக்க மாட்டார்களே. இதோ, என் பாட்டை மக்கள் நினைவில் நிறுத்திக் கொள்ளட்டும்.

'ஆற்றங் கரையின் மரமும் அரசுஅறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே — ஏற்றம்
உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்புஇல்லை கண்டீர்
பழுதுஉண்டு வேறுஓர் பணிக்கு'... (நல்வழி: 12)

என்று கூறி அங்கிருந்து சென்று விட்டார்.

(அரசு அறிய - அரசு (அல்லது) ஆளுங் கட்சி அறிந்து முக்கியமாகக் கருதும் நிலையில் பெருமையாக வாழ்ந்திருந்த; ஏற்றம் - உயர்வு)

முருகனின் வினாக்களும் அவ்வையின் விடைகளும்

நாவல் மரத்தடியில், அவ்வையார் முன் தோன்றிய முருகன், அவருடைய புலமைத் திறனையும், நுண்ணறிவையும் ஆன்மிக ஞானத்தையும் உலகுக்கு உணர்த்த விடுத்த வினாக்களில் ஒன்று 'அரியது எது?' என்பது அவ்வினாக்களுக்குச் சற்றும் தயங்காது அவ்வையார்-

'கூரிய நீண்ட வேலேந்திய முருகா! உலகில் தோன்றியுள்ள எண்ணற்ற பிறவிகளுள் மிகவும் அரியது மானிடப் பிறவியே! அப்பிறவியிலும் கூன் குருடு செவிடு அலித்தன்மை முதலிய உடல் ஊனங்கள் ஏதுமின்றி முழுமையான மனித உருவமாய்ப் பிறத்தல் அரிது. அவ்வாறு உடற்குறையேதுமின்றிப் பிறந்தாலும்கூட, இயல்பாய்ப் பெற்றுள்ள அறிவோடு கல்வி கேள்விகளால் கிடைக்கும் அறிவினைப் பெறுவது மிகவும் அரிதாகும். அவ்வறிவுதான் மனிதர்க்கு முக்கியமாகும். (அத்தகைய அறிவினைப் பெற்றிருப்பவர், உலகில் வேண்டிய அனைத்தையும் பெற்றவராவர். அதனைப் பெறாது, வேறெதனைப் பெற்றிருந்தும் யாதும் பயனில்லை. ஏனெனில், அறிவு அழிவு வராமல் காப்பது, உள்ளும் புறமும் காக்கும் கோட்டை போன்றது.)

அத்தகைய உயர்வான அறிவினை, ஒருவர் விரும்பிப் பெற்றிருந்தாலும் ஈகைக் குணம் உடையவராயும், தவவொழுக்கம் மேற்கொள்பவராயும் இருப்பது மிக மிக அரிதாகும். (ஈத்துவக்கும் இன்பத்திலும் பேரின்பம் வேறில்லை; ஈந்து புகழுடன் வாழ்தலினும் உயிர்களுக்குப் பயன்தரும் செயல் வேறொன்றமில்லை.)

மேலும், தவம் இன்றியமையாதது. (தவம் செய்வார்தம் செயலை ஒழுங்குறச் செய்பவராவர். தமக்கு உற்ற நோயைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே. தவத்தின் முழுமையான உருவமாகும். அத்தகைய தவத்தை மேற்கொண்டு ஒழுகுவார்க்கு விரும்புவனவெல்லாம் விரும்பியவாறே கிடைக்கும்.)

அவ்வாறு தானமும், தவமும் முறையாகச் செய்பவரை விண்ணுலகு வாயிற் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு வரவேற்கக் காத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

'அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதுஅரிது மானிடராதல் அரிது;
மானிடராயினும், கூன், குருடு, செவிடு,
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது;
ஞானமும் கல்வியும் நயத்த காலையும்
தானமும் தவமும் தான் செய்தல் அரிது;

தனமும் தவமும் தான் செய்வர் ஆயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.

என்று விடையளித்தார்.

(பேடு - அலித்தன்மை; ஞானம் - இயற்கை அறிவு; கல்வி நூல்களைக் கற்றும், அனுபவித்தும் பெறும் அறிவு; நயத்தல் விரும்புதல்; வானவர்நாடு - விண்ணுலகம் தெய்வலோகம்)

இவ்விடையைக் கேட்டு மகிழ்ந்த முருகன் மீண்டும் அவ்வையாரை நோக்கி, 'இனியது எது?' எனக் கேட்டான்; உடனே அவ்வையார்

'இனியது கேட்கும் ஒப்புற்ற தலைவனே! தனித்திருத்தலே இனியது; தனித்திருந்து சிந்தையை ஒரு வழி நிறுத்தி, ஆதி முழுமுதலாகிய ப்ரம்பொருளைத் தொழுவது, அதைவிட இனியதாகும். பரம்பொருளையுணர்ந்த ஆன்மிக ஞானிகளோடு, உடனிருந்தல், அதனினும் மிக மிக இனியதாகும். குரு நிலையில் விளங்கும் அம்மெய்ஞ்ஞானிகளைக் கனவிலும், நனவிலும் தரிசித்து உள்ளத்துள்ளே உறையும் பரம்பொருளை உணர்ந்து அப்பரம்பொருளுடன் ஒன்றி இரண்டறக்கலந்திருத்தலே அனைத்திலும் மிகுந்த பேரின்பம் தருவதாகும்.

'இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது;
அதனினும் இனிது; ஆதியைத் தொழுதல்;
அதனினும் இனிது அறிவினர் சேர்தல்;
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.'

என மிக உயர்ந்த இன்ப நிலையை எடுத்துரைத்தார்.

(அறிவினர் - மெய்யறிவு பெற்றோர், மெய்ஞ்ஞானிகள்)'

நாலுகோடிப் பாடல்கள்

அவ்வை அடிகளாரின் மெய்ஞ்ஞானத்தையும், ஆழ்ந்த புலமையையும் அறிந்த முருகன், அவ்வையாரைப் புகழ்ந்து ஆசி கூறி, அடுத்த கணத்திலேயே மறைந்தான். முருகப் பெருமானை இளங்குமர வடிவில் நேரில் தரிசித்த அவ்வை பெருமாட்டியார் பேரானந்தத்தில் திளைத்துச்சிறிது நேரம் மெய்ம்மறந்து நின்றுவிட்டார். பின்னர் 'முருகா! முருகா' என மெல்லக் கூறிக் கொண்டே தம் வழிநடைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அவர் சென்று கொண்டிருந்தபோது வழியில் பாண்டிய மன்னனின் தூதுவர்கள் வந்து அவரை வணங்கி மன்னன் கவியரங்கம்

அமைத்திருப்பதாகவும், அவ்வையாரை அதில் சிறந்த பங்காற்ற அழைத்திருப்பதாகவும் அறிவித்தனர். அவ்வையாரும் மகிழ்வுடன் இணங்கிப் பாண்டிநாடு சென்றார்.

பாண்டிய நாடு விழாக்கோலம் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுற்றார்.

'பாண்டிய மன்னன் தமிழைத் தன் இன்னுயிரினும் மேலாக்க் கருதிப் போற்றியவன். தமிழின் நயத்தை, வளத்தை, எண்ண எண்ண இனிக்கும் அமிர்தச் சுவையை, பொருளாழத்தை, ஆயிரமாயிர மாண்டுகள் பழைமையுளதாயினும் குன்றாத இளமையை, களங்கமற்ற கன்னித் தன்மையை, உள்ளத்தை அள்ளும் கவிதைக் கருவூலத்தைக் கருதிக் களிப்பில் ஆழ்பவன்' என்று அவ்வையார் தமக்குள் பூரிப்புடன் பேசிக் கொண்டார்.

புலவர் பெருமக்களின் கவிதை இன்பத்தை நுகரப் பேரவாக் கொண்டு, மிகச் சிறந்த முறையில் கவியரங்கம் ஒன்றை அமைத்துக் கவிஞர்களை அழைத்திருந்தான்.

வருகை புரிந்த கவிஞர்களுக்கெல்லாம் அரங்க மேடையில், அரியணைக்கு நிகரான தந்த வேலைப்பாடுகள் அமைந்த பொன்னாசனங்களை அமைத்திருந்தான். கவிஞர்கள் தத்தமக்குரிய இருக்கையில் அமர்ந்தனர்.

பாண்டிய மன்னன் தன் தேவியுடன் நடுநாயகமாக அவையில் வீற்றிருந்தான். அவ்வையாரை முதன்மைக் கவிஞராக மதித்து, தேவியுடன் சென்று எதிர்கொண்டழைத்து, அரங்கத்தின் நடுவில் தனக்கு முன்னர் இருந்த சிறப்பாசனத்தில் அமர்த்தினான்.

பின்னர், மன்னன், பல்வேறு கருத்துகளையும், பொருள்களையும் குறிப்பிட்டு, அவற்றை மையமாகக் கொண்டு, பாடுமாறு ஒவ்வொரு கவிஞரையும் வேண்டினான். அவ்வாறே ஒவ்வொருவரும் மன்னன் மனங்குளிரும் வகையில் சிறப்புறப் பாடினர்.

அவற்றைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் கொண்ட மன்னன், கவிஞர்களை நோக்கி, 'கவிஞர் பெருமக்களே! எந்தக் கவிஞரேனும், ஒரே எடுப்பில் நாலு கோடி பாடல்களைப் பாடி முடிக்க முடியுமா?...பாடத்தான் வேண்டும்' என்று பணித்தான். கவிஞர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் செய்வதறியாது தவித்தனர். சற்றுக் கவலை தோய்ந்த முகத்துடன் அவ்வையாரை நோக்கினர். அவ்வை பெருமாட்டியார் உடனே, புன்முறுவலோடு அரசனைப் பார்த்து, 'நான் பாடுகிறேன்' என்று கூறிவிட்டு, 'மன்னா! மனிதன் தன்மானம் உடையவன்; தன் மதிப்போடு வாழ விரும்புவன். பிறரையும் மதித்து, தன்னையும் பிறர் உரியவாறு மதிக்குமாறு வாழ்பவன். நம்மை மதிக்காதவரை நாம் மதித்தல் கூடுமா? அது இழிவன்றோ?

ஆதலின், நம்மை மதிக்காதவரின் முற்றத்தைக் கூட நாம் மிதித்தல் கூடாது. அவ்வாறு நம்மை மதியாதவரின் தலைவாசலைகக்கூட நாம் எப்போதும் மிதியாமல், கௌரவத்துடன் வாழ்வது ஒரு கோடி பொன் பெறும்' என விளக்கம் கூறி அக்கருத்துடைய

'மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.

என்று பாடினார்.

மன்னன் மகிழ்ச்சியோடு தலையசைத்து, மேலும் என்ன கூறப் போகிறார் என்பதில் நோக்கமாய் இருந்தான்.

மீண்டும் அவ்வையார், 'வேந்தே! விருந்தினரை உபசரித்தல் பெருமைக்குரிய பண்பு. 'முதலில் வந்த விருந்தினரை மகிழ்வோடு வரவேற்று, அன்போடு உபசரித்து உணவளித்து, அவர்கள் விடைபெற்ற பின்னர் மேலும், 'விருந்தினர் வருவார்களா என்று ஆவலோடு எதிர்பார்த்துக் காத்து நிற்பவர் தேவர்களுக்கும் நல்ல விருந்தினராவர்.

'செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்திருப்பான்;
நல் விருந்து வானத் தவர்க்கு.'

என்று வள்ளுவரும் கூறுகிறார் அன்றோ?

அவ்வாறு, நம்மை முகமும் அகமும் மலர வரவேற்று, நம் விருப்பத்துக்கேற்ற உணவை உடனிருந்து 'இன்னும் உண்ணுங்கள், இன்னும் உண்ணுங்கள்' என்று கனிவுடன் உபசரித்து உண்ணுமாறு வேண்டாதரின் மனையில் உண்ணாமல் தன்மானத்தோடு வாழ்தல் ஒரு கோடி பொன்னுக்குச் சமம்' என்று விளக்கிப் பின்வரும் பாடலைப் பாடினார்:

'உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.'

மேலும் தொடர்ந்து, 'மன்னா! நற்குடிப் பிறந்தாரைக் கண்டறிந்து அவருடன் நட்பு பூண்டு வாழ்தல் நன்றன்றோ?'

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு
இணங்கி இருப்பதுவும் நன்று' (மூதுரை:8)

எனவே, நல்ல குடிப்பிறந்த பண்பாளரை ஆய்ந்து கண்டறிந்து, அவர்கள் நட்பை என்றும் பெற்று வாழ்தல் கோடி பொன் பெறும்.

'கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மொடு
கூடுதல் கோடி பெறும்.'

என்று பாடினார்.

இதில் ஐயமுண்டோ!

மன்னன் வியப்புற்று, 'இன்னுமொரு கோடி எதைக் கூறப் போகிறார்?' என்று அறியும் நாட்டத்தோடு, ஆர்வமாகக் கவனித்திருந்தான்.

பின்னர், அவ்வையார் மன்னனை நோக்கி, 'பாண்டிய வேந்தே! சொன்ன சொல் தவறாமை கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல் மனிதப் பண்புகளில் தலையாயது. 'நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்' என்று நும் குல முன்னோர்க்குப் புலவர் இரும்பிடர்த் தலையார் அறிவுறுத்தியுள்ளதை நினைவு கூர்தல் வேண்டும் (புறம்-3) கோடி கோடிப் பொன் கொடுப்பதாயினும் சரி. நா பிறழாதிருத்தல் - அதாவது கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல் கோடி பொன் பெறத் தக்கதாகும்.

'கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக்
கோடாமை கோடி பெறும்'

என்று பெருமிதத்தோடு கூறியமர்ந்தார்.

புலவர்களும், அவையினரும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தனர். மன்னன் அவ்வை பெருமாட்டியின் கூர்த்த மதியினையும், ஆழ்ந்த புலமையினையும் ஆசுகவி பாடும் ஆற்றலையும் எண்ணி யெண்ணி வியந்து போற்றினான்.

அவ்வையார்க்கும், பிற புலவர்களுக்கும் உவப்புடன் முகமலர்ந்து உபசரித்து அன்பு கனிய அறுசுவை விருந்தளித்துப் பின்னர், பல கோடிப் பொன், பரிசும் நல்கி வழியனுப்பினான்.

இவ்வாறு அவ்வை பிராட்டியார் தம் வாழ்நாள் முழுவதும், சென்றவிடமெல்லாம் அறிவுரைகளையும், அறவுரைகளையும் எடுத்துக் கூறி மக்களைச் சான்றாண்மையுடையராக வாழச் செய்வதையே தம் பணியாகக் கருதி வாழ்ந்தார்.

அவர் அருளிய அறநெறியைப் பின்பற்றி வாழ்பவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவராவர்; அவர்கள் தெய்வத்துள் வைத்துப் போற்றப்படுவர் என்பது உறுதி.

தமிழ்ச் சுவடிகள்

-மு.கோ. ராமன்

ஓங்கல் இடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஈங்(கு) ஒலிநீர் ஞாலத்(து) இருள்கடியும் - ஆங்(கு) அவற்றுள்
மின்நேர் தனி ஆழி வெங்கதிர் ஒன்(று) ஏனையது
தன்நேர் இலாத தமிழ்.

தமிழ் மொழியின் தொன்மையும் வடிவமும்

என்றும் உள தென்தமிழ் எனப் போற்றி உரைக்கப்பெற்ற மொழி தமிழாகும். வானம் அளந்தது அனைத்தும் அளந்திடு வண்மொழி எனப் பாராட்டப்பெற்றதும் தமிழேயாகும். பண்டிருந்த பல திசை மொழிகளும் அழிவுற் றிறந்தனவேனும் அன்றுபோல இன்றும் என்றும் சிறப்புற மிளிர்வது கன்னித் தமிழே ஆகும். தமிழ் எப்போது தோன்றியது என்று இன்னும் வரையறுத்துக்கூற இயலவில்லை. ஆதிசிவன் படைத்த தாகவும், அகத்தியன் இலக்கணம் வகுத்ததாகவும் பாரதியார் கூறுகின்றார். சிவபெருமான் உடுக்கை ஒலியிலிருந்து மொழி பிறந்ததாகக் கூறுவர். அவ்வொலியை மூலமாகக் கொண்டே வேதங்கள் பிறந்தன. வேதங்களுக்கு வரிவடிவமில்லை. எனவே வேதங்களை மறை எனவும் எழுதாக் கிளவி எனவும் காதினாலே ஒலியாகக் கேட்டுப் பயிலப் பெறுவதால் சுருதி என்றும் கூறுவர். இவ்விதம் வடிவமற்ற வேதங்களை வியாசர் நான்காக சம்ஸ்கிருதத்தில் ரிக், யசுர், சாம, அதர்வணம் எனப் பகுத்தளித்தார். இவ்விதம் வியாசர் வகுத்த வேதங்களே இப்போது வழங்குகின்றன. இவற்றில் இப்படிக் கூறப்பெற்றன, இவ்விதம் கூறுவார்கள் என வாக்கியங்கள் வருவதால் வியாசர் நான்காக வகுப்பதற்கு முன் ஒரு வேதம் இருந்தது என்பது புலனாகும். இதையே தொல்லை (பழைமையான) மறை எனத் தேவார ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர் என மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார். அந்த வேதம் எந்த மொழியில் இருந்தது என்பது இன்னும் புதிராகவே உள்ளது.

சம்ஸ்கிருதம் என்ற சொல்லுக்குச் செம்மையாக்கம் பெற்றது என்பது பொருளாகும். எனவே செம்மையாக்கப் பெறுவதன்முன் செம்மையற்று ஒரு மொழி இருந்திருக்க வேண்டும். அது பிராகிருதம் என வழங்கும். இயற்கையோடு ஒட்டியுள்ளது என்பது இதன் பொருளாகும். பிராகிருத மொழியில் பல சொற்கள் திராவிட மொழிச் சொற்களாம். திராவிட மொழிகளின் தாய்மொழி தமிழ் என்பது வெளிப்படை. பண்டைய தமிழ் நூல்களில் பிற மொழிக் கலப்பு உள்ளதாகத்

தெரியவில்லை. சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும் சம்ஸ்கிருத மொழிச்சொற்கள் மிகக் குறைவான விழுக்காடுகளே உள்ளன. இதனால் தமிழ் மொழி காலத்தால் முற்பட்டது என்பது புலனாகும். இவ்விதம் மிகப் பண்டையதான தமிழ் மொழி நீண்ட காலம் ஒலி வடிவிலேயே இருந்திருக்க வேண்டும். வரிவடிவம் எப்போது தோன்றியது என்பதை இன்னும் ஆராய்ச்சியாளர்களால் தெளிவாகக் கூற இயலவில்லை. பிராம்மி எழுத்தே தமிழுக்குரிய எழுத்தாக இருந்தது எனவும், தமிழ் பிராம்மி எனத் தனியே எழுத்து முறை இருந்தது எனவும் ஆராய்ச்சியாளர்கள் இன்றும் வாதிடுகின்றனர். இவை யாவும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட செய்தியாகும். கி.மு.இரண்டாம் நூற்றாண்டிலிருந்து, தமிழ் மொழி வரிவடிவம் உருப்பெற்றுக் காலந்தோறும் மாறுபட்டுள்ளது என்பதைத் திரு. சா.கணேசன் அவர்கள் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியான கையேட்டில் பட்டியலிட்டுப் படம் போட்டுக் காட்டியுள்ளார். இவ்வெழுத்துக்கள் யாவும் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்தவையாகும்.

தமிழ் மொழி வரையப் பயன்பட்டது பனைஓலைச் சுவடியும் எழுத்தாணியுமே. ஆதிகாலத்தில் மனிதன் தமிழ் மொழியை வரிவடிவில் எப்போது எழுதினான் என்பது தெளிவாக அறியமுடியவில்லை. தமிழில் பழங்காலத்து நூல்களாக வழங்கும் சங்க இலக்கியங்களிலும் இது பற்றிய குறிப்புக்கள் ஏதும் காணப் பெறவில்லை. இதழ், ஏடு, மடல் எனப்பெறும் தாழை, பனைஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதி வந்திருக்க வேண்டும் என்றே கருத வேண்டியுள்ளது.

பல ஏடுகளில் தங்கள் கருத்தின் சுவடாகிய எழுத்துக்கள் பதிக்கப்பெற்றமையால் ஏட்டுச் சுவடி என இத்தொகுப்புக்கள் கூறப்பெற்றன. பல சுவடிகளை ஒருசேரக்கட்டித் தொங்கவிட்டமையால் 'தூக்கு' என்ற பெயரையும் சுவடிகள் பெற்றன. இவற்றைச் சுவடித்தூக்கு என்பர். பலவகைச் செய்திகளை எழுதி வைத்துக்கட்டி முடக்கப்பெற்றமையால் இவை முடங்கல் எனவும் கூறப்பெற்றன. தூக்கு, முடங்கல் என்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப் பெறுமாயினும் இவை நேரிடையாக ஓலைச்சுவடிகளைக் குறிப்பனவாக அமையவில்லை.

பலவகைச்செய்திகளும் ஆணைகளும் பனைஓலையில் வரையப் பெற்றுக் காலக் கோப்புகள் வரிசையாகக் கயிற்றில் கோத்துச் சுருட்டி வைக்கப்பெற்றதால் அவை சுருணை எனவும், பல செய்திகள் திரட்டி வைக்கப்பெற்றமையால் திரட்டு எனவும் கூறப்பெற்றன. இன்றும் இவ்வழக்கைத் திருவனந்தபுரம் ஆவணக் காப்பகத்தில் காணலாம்.

சங்கப் புலவர்களில் ஒருவராகக் கருதப்பெற்றவர் இடைக்காடர். இவர் பாடல்கள் அகநானூற்றிலும், புறநானூற்றிலும் உள்ளன. மகாவித்துவான் மு.இராகவையங்கார் பதிப்பித்த பெருந்தொகை என்ற

நூலில் இடைக்காடர் பாடிய ஊசிமுறிப் பாடல்கள் என மூன்று பாடல்கள் உள்ளன. இப்பெயரைக் கொண்டே இப்பாடல்கள் ஊசி (எழுத்தாணி)யால் வரைய இயலாத ஒலிக் குறிப்புக்களைக் கொண்டவை என்பது அறியலாம். இதனால் சங்கக் காலந்தொட்டே ஏட்டில் எழுத்தாணி கொண்டு எழுதி வந்தமை புலனாகும். ஏட்டில் எழுதிப் பிரதி செய்துவரும் பழக்கம் தொன்றுதொட்டு வழங்கி வந்த போதிலும் ஏடுகளை நீண்ட காலம் பாதுகாத்தல் இயலாமையால் சில முக்கியமான வரலாற்றுச் செய்திகளைச் செப்புத் தகட்டில் பொறித்துப் பாதுகாத்தனர். ஏட்டில் எழுதும் பழக்கமே மிகுதியாக இருந்தமையால், வரலாற்றுச் செய்திகள் பதித்த செப்புத் தகடுகளும் செப்பு ஏடு என வழங்கப் பெற்றன. சின்னமனூர்ச் செப்பேடு, அன்பிற் செப்பேடு போல்வன இதற்குச் சான்றாகும்.

ஏட்டுச் சுவடிகளின் பெருக்கம்

பண்டு முதல் ஏட்டில் செய்திகளும், இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் போன்றவை யாவும் பிரதி செய்துவரல் பழக்கமாக இருந்தாலும் ஏடுகள் எவ்வளவு நல்ல முறையில் பாதுகாக்கப் பெற்றாலும் சுமார் 400 ஆண்டுகளுக்குமேல் இருப்பதில்லை. எனவே அவ்வப்போது அவற்றைப் படி எடுத்துப் பாதுகாத்தனர். மொழியின் வரிவடிவ மாற்றங்களுக்கேற்றவாறு இந்தப் பிரதிகளும் மாறுதல் பெற்ற எழுத்துக்களாலேயே வரையப் பெற்றன.

சங்க இலக்கியங்களும் பண்டைக் காப்பியங்களும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், தொல்காப்பியமும் அவை தோன்றிய காலத்துத் தமிழ் மொழிக்குரிய வடிவில் கிடைக்கப் பெறின் அவற்றைப் படித்தறிதல் மிகவும் அரிதாக இருக்கும். பண்டைய கால எழுத்துக்களை உணர கல்வெட்டுகளே நமக்குச் சான்றாக உள்ளன. 'கல்வெட்டில் திருக்குறள்' என்ற நூலின் ஆசிரியர் திரு கிப்ட்சிரோமணியவர்கள் காலந்தோறும் மாறுபட்டுத் தோன்றிய கல்வெட்டு எழுத்துமுறைகளைக் கொண்டு அவ்வக் காலங்களில் திருக்குறள் இவ்வாறு இருந்திருக்கும் என ஊகித்து வரைந்து வெளியிட்டுள்ளார். தற்கால வரிவடிவையே அறிந்துள்ள நமக்கு அவை ஏதோ சீன, ஜப்பானிய, மங்கோலிய மொழி போன்று தோன்றும். காலந்தோறும் மாறுபடும் வரிவடிவுக்கேற்ற நூல்களை ஏட்டில் பெயர்த்தெழுதிப் பாதுகாதது மக்கள் பயின்று வந்தனர். பக்தி இலக்கியங்கள்பாலுள்ள பக்தியால் அவற்றைக் குடும்பம் விரிவடையும்போது பெயர்த்தெழுதிப் பூசித்தும் வந்தனர். இவ்வாறு படி எடுக்கப் பெற்ற சுவடிகள் காலந்தோறும் இடந்தோறும் உள்ள மாறுதல்களுக்கேற்ப வடிவம் பெற்றுப் பல்கிப் பெருகலாயிற்று.

ஏட்டில் எழுதும் முறை*

ஏட்டில் எழுத்தாணியால் எழுத மக்கள் சில முறைகளை மேற்கொண்டனர். ஏடுகளில் இருபக்கமும் எழுதுவதாற் புள்ளி

யிடுவதைத் தவிர்த்தனர். எழுத்துக்களையும் பிற மொழிகள்போல செங்குத்து வசமாகவோ நேர்கோட்டுவசமாகவோ அமைக்காமல் சாய்வு நிலையிலும் வட்ட நிலையிலும் அமைத்தனர். இது ஏடுகள் முறியாமல் பாதுகாக்க உதவியது. மேலும் எகர, ஒகர உயிர் எழுத்துக்களிலும், உயிர்மெய் எழுத்துக்களிலும் குறிலையும் நெடிலையும் ஒன்றாகவே அமைத்தனர். இடையின 'ர'கரத்துக்கும் 'ா' காலுக்கும் வேறுபாடு அறிய முடியாது. ஏக்கழுத்தம் எக்கழுத்தமாகவும், ஓலை ஒலை எனவும், கோடி கொடி எனவும், சரபம் சாபமாகவும் தோன்றும். வல்லின 'ற'கரத்துக்கும் இடையின 'ர'கரத்துக்கும் பேதம் காணவியலாது. தென்பாண்டி நாட்டார் 'ழ'கர 'ள'கரத்தை ளகரமாகவே கூறுவர். எழுதும்போது மாற்றி எழுதுவர். பழம், பளம் எனவும் வெளுத்து, வெழுத்து எனவும் வாழி, வாளி எனவும் மாற்றி வரைவர். இதனால் பல இடங்களில் பொருள் மயக்கம் ஏற்படும்.

படி எடுப்பதில் பிழை நேரும் வாய்ப்பு

ஏட்டுச் சுவடிகள் காலந்தோறும் ஏற்பட்ட வரிவடிவ மாறுதலுக்கேற்ப, பிரதி செய்யப் பெற்றுப் பரவி வந்தாலும், பல்வேறு நிலையில் பல்வேறு இடங்களில் பிரதி செய்யும்போது வடிவ வேறுபாடுகளும், பாட பேதங்களும் பிழைகளும் மலியலாயின.

15ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஒரு இலக்கியம் தோன்றியபோது எழுதப்பெற்ற சுவடிகள் இப்போது கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. சுவடிகள் 300 ஆண்டுகளுக்குமேல் அழியாமல் இருப்பதில்லை. அப்படி ஏதேனும் இருந்தாலும் அவை தோன்றிய காலத்து எழுத்து வடிவம் மாறுபட்டிருக்கும். எனவே காலந்தோறும் ஏற்பட்ட வரிவடிவ மாறுபாடுகளுக்கேற்ப ஏடுகளிற் பெயர்த் தெழுதியே பாதுகாத்தனர், பயின்று வந்தனர். இப்போதைய அச்சு முறையில் ஒரே தடவையில் ஆயிரக்கணக்கில் பிரதி செய்யும் முறை பண்டு இன்மையால் சுவடிப் பிரதிகள் ஒரு சில கல்வி நிலையங்களிலும், மடாலயங்களிலும்; புலவர்களின் வீடுகளிலுமே இருந்தன. பிரதி செய்தலின் அருமை கருதித் தமிழ் நூல்கள் பலவும் மனனம் செய்து உள்ளக்கிழியில் எழுதி வைப்பதற்கு வாய்ப்பாக செய்யுள்களாலேயே அமைந்தன. உரையாசிரியர்கள் உரைநடையும் கல்வெட்டுச் செய்திகளும், அரசாணைகளும் மெய்க்கீர்த்திகளும் கூட ஒருவகைச் சந்தத்தில் மனப்பாடம் செய்வதற்கேற்ப அமைந்திருந்தன.

16ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட சுவடிகளே இப்போது நமக்குக் கிடைப்பதால் அவற்றின் வரிவடிவத்தில் 'பெரிதும் மாறுபாடுகள் இல்லை. 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவரும்; 20ஆம் நூற்றாண்டில் பெரியார் ஈ.வே.ரா.வை அடியொற்றித் தமிழக அரசும். செய்த சிறிய மாறுபாடுகள்தான் உள்ளன.

குறில், நெடில் வேறுபாடுகளையும், மெய் எழுத்துக்களையும், பிற வேறுபாடுகளையும் உணர யாப்பிலக்கணமும் சந்தமும் மிகவும் இன்றியமையாததாகும். இவை அறியாமல் ஏட்டைப் பிரதி செய்வது பல பிழைகள் தோன்ற ஏதுவாகின்றது.

ஏட்டில் பிரதி செய்து நூற்களைப் பாதுகாக்க மக்கள் பல முறைகளைக் கையாண்டனர். படிக்கும் மாணாக்கர்கள் தங்கள் தேவைககேற்பச் சுவடியில் நூல்களைப் பெயர்த்தெழுதினர். இம்முறையில் ஒருவர் படிக்கப் பலர் அதைக் கேட்டெழுதும் பழக்கமும் இருந்தது. இதனால் ஒரே சமயத்தில் ஒரு நூலின் பல பிரதிகள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது. இந்தக் கேட்டெழுதும் முறையில் எழுதுபவர் கவனக்குறைவாலும், அறியாமையாலும், கேட்கும் சக்திக்கேற்பவும் ஏட்டில் பலவகைப் பிரதிபேதங்களும் பிழைகளும் மலிந்தன. பக்தி இலக்கியங்களைப் பெயர்த்தெழுதுவதற்கு பல ஆலயங்களிலும் மடங்களிலும் மானியம் வழங்கியதாகத் தெரிகின்றது. நாஞ்சில் நாட்டிலும், பாலக் காட்டுப் பகுதிகளிலும் கம்பராமாயணத்தைப் படி எடுக்க மானியங்கள் இருந்தன எனக் கூறப்பெறுகின்றது. எனவே நூல்களின் தன்மைக்கேற்பக் கூலி கொடுத்து எழுதும் முறையும் இருந்ததை உணரலாம். கூலிக்குப் படி எடுப்போர் சிறந்த புலமையற்றவர்களாயும் நாம் பெறும் கூலியே வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமாக உள்ளவராகவும் இருந்தமையால், இவ்வளவு ஏடு படி எடுத்தால் இவ்வளவு கூலி என்ற நினைப்பைக் கொண்டு விரைந்து படி எடுத்தமையால் இம்மாதிரிப் பிரதிகளில் பல வகையான பிழைகள் மலிந்திருந்தன.

பிற்காலத்தில் தமிழ்மொழிப்பயிற்சி குன்றல்

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தமிழகத்தில் நிலையான ஆட்சி இன்மையால் மொழி வளங்குன்றலாயிற்று, பல குறுநில மன்னராட்சியாலும், பிற மொழியாளர் செல்வாக்கினாலும், பின்னர் மேலை நாட்டினர் வருகையாலும், தமிழ் மொழி வளர்ச்சி குறையலாயிற்று. ஆட்சியாளர் விருப்பிற்கேற்பவும், ஆட்சியாளர் களைத் திருப்திப்படுத்தவும் வேண்டிய நூல்களே எழுந்தன. பண்டைத் தமிழ்நூல்கள் பெயரளவிலேயே அறியப் பெற்றிருந்தன. சிலப்பதிகாரம் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியது எனவும் 'சிறப்பதிகாரம்' எனவும் வழங்கப் பெற்றது. எட்டுத் தொகை என்ற தொகை நூல்கள் இருப்பதையே மக்கள் அறியவில்லை. ஏட்டில் நெடில் ஏ, எ, எனவே வரையப் பெறுமாதலால் ஏதோ ஏடுகளின் தொகுதி எனக்கருதி 'எட்டுத் தொகை'யை ஏட்டுத் தொகை எனக் குறிப்பிட்டிருந்தனர்.

பக்தி இலக்கியங்கள் பிற்காலத்தெழுந்த நூற்களுக்கு முற்பட்டவை. அவை பக்தி காரணமாக ஓதியும் பிரதி செய்தும் பாதுகாத்து வரப் பெற்றன. இவ்விதம் தேவாரம் ஓதுபவர்கள்

ஓதுவார் என்றே அழைக்கப் பெற்றனர். நாயன்மார்கள் அருளிய தேவார திருவாசகங்கள், வேதங்களுக்கும் உப நிடத்துக்கும் ஒப்பானதெனக் கருதி, அவற்றுக்குப் பொருள் காண்பது பிழை எனக் கருதி ஏட்டில் உள்ளவாறே ஓதி வருகின்றனர். கி.பி.6ஆம் நூற்றாண்டு முதல் வழிவழியாக ஓதியும், பிரதி செய்தும் வந்த இந்தத் திருப்பாசுரங்களில் பாட பேதமும், பிழைகளும் மலிந்துள்ளன. அவர்கள் அருளிச் செய்த காலத்து வரிவடிவமே வேறானது. அவர்கள் காலத்துச் சுவடிகள் 16ஆம் நூற்றாண்டில் இருப்பதற்குக் கூட வாய்ப்பில்லை. காலங்காலமாக எழுத்து வடிவ மாற்றத்துக்கேற்பப் பெயர்த்தெழுதியவர்களின் கவனக் குறைவாலும் அறியாமையாலும் ஏற்பட்ட பிழைகளையும் பாடங் களையும் அருளாளர் திருவாக்காகக் கருதுவது பிழையாகுமல்லவா? உ.த.ஆ. நிறுவனத்தில் வெளியிட்டுள்ள சுவடிப் பயிற்சிக் கையேட்டில் இவ்விதம் நேர்ந்த பிழைகளில் ஒன்றிரண்டை எடுத்துக் காட்டியுள்ளேன்.

பாதுகாக்கப் பெற்ற சுவடிகளின் நிலை

இந்த நிலையில் பாதுகாக்கப் பெற்ற தமிழ்ச் சுவடிகள் 17ஆம் நூற்றாண்டிலிருந்தே இப்போது கிடைக்கின்றன. இதுவரை கிடைக்கப் பெற்ற தமிழ்ச் சுவடிகளிற் பழமை யானது கி.பி.1611ஆம் ஆண்டைச் சேர்ந்த கம்பராமாயணச் சுவடியாகும். இது கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ளது. பாதுகாக்கப் பெற்ற தமிழ்ச் சுவடிகளை காவியம், புராணம், இலக்கணம், நிகண்டு, மருத்துவம், சோதிடம், சாத்திரம், நாட்டுப்புறக்கதைப் பாடல்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகையாகப் பிரிக்கலாம். இவை உலகெங்கும் பரவலாக உள்ளன. மேலைநாட்டினரின் வாணிபம், ஆட்சி ஆதிக்கவரவால் பல சுவடிகள் மேலை நாட்டிற்குக் கடத்தப் பட்டுள்ளன.

தற்போது நம் நாட்டில் சுவடிகள் உள்ள இடங்கள்

1. சென்னை

அ) பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நிலையம்

ஆ) டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையம்

இ) பிரமஞான சபை நூலகம்

ஈ) தொல்பொருள் ஆய்வுத்துறை

உ) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

ஊ) சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்

எ) ஆசிய இயல் ஆய்வு நிறுவனம்

2. காஞ்சிபுரம்

அ) காமகோடி பீடம், ஸ்ரீ சங்கராசாரியார் மடம்

3. பாண்டிச்சேரி

அ) பிரஞ்சிந்திய கலைக்கழகம்

4. தெ.ஆ.மாவட்டம்

குமார தேவ மடாலயம், விருத்தாசலம்

5. திருச்சி

குமார தேவமடாலயம், துறையூர்

6. தஞ்சை

அ) சரசுவதி மகால் நூல்நிலையம்

ஆ) தமிழ்ப் பல்கலைக் கழகம்

இ) தருமபுர ஆதீர மடாலயம், மயிலாடுதுறை

ஈ) ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்

உ) திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

7. மதுரை

அ) தமிழ்ச் சங்கம், மதுரை

ஆ) மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

8. கோவை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர்

9. பெரியார் மாவட்டம்

கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு

10. கேரள மாநிலம்

அ) கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நிலையம், திருவனந்தபுரம்

ஆ) கள்ளிக்கோட்டை சர்வகலாசாலை, கோழிக்கோடு

இ) சாகித்திய அகாதெமி, திருச்சூர்

11. ஆந்திர மாநிலம்

அ) திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

ஆ) ஆந்திரப் பல்கலைக் கழகம், விசாகப்பட்டினம்

இ) உஸ்மானியா பல்கலைக் கழகம், ஐதராபாத்

12. மேற்கு வங்கம்

தேசிய நூலகம் கல்கத்தா

மேலே குறிப்பிட்ட இடங்களில் சுமார் இருபத்தையாயிரத்துக்கும் மேலாக தமிழ்ச் சுவடிகள் உள்ளன. இவற்றில் பல இடங்களில் உள்ள சுவடிகளுக்கு அட்டவணையே இல்லை. தற்போது சென்னை ஆசிய

இயல் ஆய்வு நிறுவனத்தினர் உலகில் உள்ள தமிழ்ச் சுவடிகளுக்கு விரிவான விளக்க அட்டவணை ஒவ்வொன்றும் 1000 பக்கங்கள் கொண்டவையாக 20 தொகுதிகள் ஆங்கிலத்தில் வெளியிடத் திட்டமிட்டு ஒவ்வொரு தொகுதியும் இரண்டு தொகுதிகளாக்கி இரண்டு தொகுதிகள் அதாவது 4 பகுதிகள் வெளிவந்துள்ளன. மேலும் இப்பணி தொடர்கிறது. இவை தவிர ஆந்திரத்தில் தெலுங்கு வரிவடிவிலும் கேரளத்தில் மலையாள எழுத்திலும், கர்நாடகத்தில் கன்னட எழுத்திலும் தமிழ்ச் சுவடிகள் இருக்கக் கூடும். இது பற்றி சரியான விவரமோ அட்டவணைகளோ இல்லை.

மேலை நாடுகளில் தமிழ்ச் சுவடிகள்

ஐரோப்பியர்கள் இங்கு 16ஆம் நூற்றாண்டில் வாணிபம் செய்ய வந்து ஆட்சியைப் பிடித்து ஆண்ட காலகட்டங்களில் தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்து தங்கள் ஆதிக்கம் இருந்த சமயத்தில் போர்த்துக்கீசியரும், பிரஞ்சுக்காரர்களும், டேனிஷ்காரர்களும், ஆங்கிலேயரும், அவர்களின் நேசநாட்டினரான பிறரும் தமிழ்ச்சுவடிகள் பலவற்றைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்று விட்டனர். அண்மைக்காலம் வரையில் அங்குள்ள சுவடிகள் பற்றி விவரம் ஒன்றும் அறியக் கூட வில்லை. முக்கியமாக பாரிசு தேசிய நூலகம், லண்டனில் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம், இந்தியா ஆபீசு நூலகம் என்ற இடங்களில் ஏராளமான சுவடிகள் உள்ளன். அவற்றுக்கெல்லாம் விளக்கமான அட்டவணை இல்லை வெறும் நூற்பெயர்ப்பட்டியல் மட்டுமே உண்டு. இப்பட்டியலும் முழுமையானதன்று. ஏதோ அவர்களால் அறிய முடிந்ததை மட்டும் பட்டியலிட்டுள்ளனர். பட்டியலிடாமல் Indian language unknown எனக் குறிப்பிடப் பெற்று பல பெட்டிகள் உள்ளனவாம். அவற்றிலும் பல தமிழ்ச் சுவடிகள் இருக்க வேண்டும். இப்போதேனும் சுவடி இயல் வல்லுனர்களைக் கொண்டு அவை அட்டவணை செய்யப் பெறல் வேண்டும்.

1960 ஆம் ஆண்டில் நம் நாட்டிலிருந்து பேராசிரியர், அ.கிருஷ்ண மூர்த்தி என்பவர் மேலை நாட்டில் பல இடங்கட்கும் சென்று அங்குள்ள பட்டியலிற் கண்ட சுவடிகளுக்கெல்லாம் விளக்கமான அட்டவணை தயாரித்துத் தமிழக அரசுக்குச் சமர்ப்பித்தார். அந்த விளக்க அட்டவணையின் தட்டச்சுப் பிரதிகள் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறை நூலகத்திலும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் யாருக்கும் பயனின்றி உறங்குகின்றன.

இந்த அட்ட்வணை மூலம் பிரிட்டனில் பன்னிரண்டு இடங்களிலும் ஐரோப்பிய நாடுகளில் இருபத்திரண்டு இடங்களிலும் உள்ள நூலகங்களில் தமிழ்ச் சுவடிகள் விவரம் தெரிய வந்துள்ளது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அரையாண்டுச் சஞ்சிகை 'தமிழ் இயல்' 18வது இதழில் திரு கிரிகோரி ஜேம்ஸ் என்பார் 'ஐரோப்பிய

நாட்டில் தமிழ்ச் சுவடிகள்' என்ற கட்டுரையில் அங்கு 88 இடங்களில் தமிழ்ச்சுவடிகள் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும் 250 இடங்களில் விவரம் கேட்டுள்ளதாகவும் அவற்றில் பல இடங்களில் தமிழ்ச்சுவடிகள் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்க் கலாசாரம் (Tamil culture) தொகுதி 3-4 (1954 அக்டோபர்) இதழில் பேராசிரியர் தனிநாயக அடிகள் 'ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்ச்சுவடிகள்' என்ற கட்டுரையில் போர்த்துகல், ஸ்பெயின், இத்தாலி நாட்டில் உள்ள தமிழ்ச சுவடிகள் பற்றி எழுதியுள்ளார். பெரும்பாலும் கிறிஸ்துமதம் தொடர்பான ஏட்டுச் சுவடிகளே அவை எனவும் அவற்றுடன் பல சுவடிகள் இன்னதென அறியாத நிலையில் உள்ளன என்றும் தக்கவர்களைக் கொண்டு அட்டவணை செய்ய வேண்டும் எனவும் எழுதியுள்ளார்.

அமெரிக்க நாட்டிலும் தமிழ்ச் சுவடிகள் இருப்பதாக முன்னாள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய். சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

சீவக சிந்தாமணி முதல் புத்தகம் நாமகள் இலம்பகம் என்ற நூலை கி.பி.1868ல் பதிப்பித்த ரெவ.எச்.பாவர் என்பவர் அந்த நூலின் முன்னுரையில் தாம் சீவக சிந்தாமணி முழுவதையும் அச்சிற்பதிப்பிக்க எண்ணி பிரதி செய்து வைத்ததாகவும் பின்னர் அப்பிரதியை அமெரிக்க மிஷனரியைச் சார்ந்த ஸ்கடர் என்ற பாதிரியாரிடம் பதிப்பிக்குமாறு அளித்ததாகவும், அவர் அந்தப் பிரதியுடன் அமெரிக்கா சென்று விட்டதாகவும், ஒருகால் அப்பிரதி அங்குள்ள நூலகங்களில் எங்கேனும் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். 1868ஆம் ஆண்டுக்கு முன்னரே சீவக சிந்தாமணிப் பிரதி ஒன்று அமெரிக்கா சென்றுள்ள செய்தி இதனால் அறிய வருகின்றது. டாக்டர் ஐயரவர்களின் சீவக சிந்தாமணி ஆய்வில் அகப்படாத சுவடி இது.

கீழை நாடுகளில் தமிழ்ச் சுவடிகள்

கீழை நாடுகள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகத்துடன் தொடர்புடையன என்பது வரலாறு. கீழை நாடுகளுக்குப் புத்தமதம் தமிழகத்தின் வழியாகவே சென்றுள்ளது. இன்றும் தாய்லாந்தில் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் பொருள் தெரியாமலேயே அவர்கள் மதச் சடங்குகளில் ஓதப் பெறுகின்றதாம்.

அண்மையில் ஒரு நண்பர் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அளித்த தமிழ்ச் சுவடியின் இறுதியில் 1853ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 02 வெள்ளிக் கிழமை சிங்கப்பூரில் எழுதியது என்ற குறிப்பு காணப் பெறுகின்றது. சில ஆண்டுகட்கு முன்னர் இங்கே பயிற்சி பெற்ற மாணாக்கரில் ஒருவர் இரண்டு சுவடிகளின் நுண் நிழற்படப் பிரதியைப் பிரதி செய்து அவற்றை நுண்நிழற் படப் பிரதியுடன் ஒப்பு நோக்கித் தர

வேண்டும் எனத் தந்தனர். அவை வர்மக்கலை பற்றிய நூல்கள். ஜப்பான் நாட்டில் இருந்த சுவடிகளின் பிரதிகள் இச்செய்திகளால் கீழை நாடுகளிலும் தமிழ்ச் சுவடிகள் இருக்க வேண்டும் என்ற ஊகம் வலுப்பெறுகின்றது.

சுவடிப் பதிப்பு முயற்சி

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் அச்சிற்பதிப்பிக்கும் முறை வரும் வரையில், ஏன் வந்தபின்னர்ச் சில காலமும் ஓலைச் சுவடிகளில் எழுதும் முறையே இருந்து வந்தது. இன்றும்கூட நம் நாட்டில் சில பகுதிகளிலும், கேரளத்திலும், ஜாதகம், திருமண ஓலை முதலியவற்றை ஏட்டில் எழுதுவது புனிதமானது என்ற கருத்தில் எழுதி வருகின்றனர். டாக்டர் ஐயரவர்கள் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பயிலும்போது (1871-1876) அவர் பாடிய புராணங்களைத் தாம் ஏட்டுச்சுவடியில் எழுதி வந்ததாக என் சரித்திரத்தில் வரைந்துள்ளார். வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தாம் பாடிய பாடல்களைத் தம் கையால் எழுதிய சுவடிகள் திருஆமாத்தூர் கௌமார மடாலயத்துள்ளன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்ச் சுவடிகள் அச்சிற்பதிப்பிக்கும் முயற்சியில் ஸ்ரீ இராமாநுசக் கவிராயர், ஸ்ரீ ஆறுமுக நாவலர், ஸ்ரீ விசாகப் பெருமாளையர், திரு.ஸ்ரீ துரை, திருப்பாதுரை, ஸ்ரீ தாமோதரம் பிள்ளை, கோமளேசுவரா பட்டை, திரு ராசகோபால பிள்ளை, எழும்பூர் திரு வேங்கடாசல முதலியார், திரு சபாபதி முதலியார், திரு மழவை மகாலிங்கையர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். பண்டு ஏட்டில் எழுதி இருந்தவற்றை இவர்கள் ஆதியில் முன்னுரை, முகவுரை, பதவுரை, பொழிப்புரை எதுவும் இல்லாமல் ஏட்டில் இருந்தவாறே பதிப்பித்தனர்.

பாடலும் உரையும் பாடல் எது, உரை எது என்பது பிரித்துணர இயலாதபடி பதிப்பாகி இருந்தன. இவற்றை முறைப்படுத்தி முகவுரை ஆய்வுக் குறிப்புக்கள், மேற்கோளகராதி, அரும்பத அகராதிகளுடன் பதிப்பு முறையில் செம்மையைப் புகுத்தியவர்கள் சி.வை.தாமோதரம் பிள்ளையவர்களும் ஐயரவர்களுமே ஆவர்.

19ஆம் நூற்றாண்டில் தமிழின் நிலை

பக்தி இலக்கியங்களும், புராணங்களும், சிற்றிலக்கியங்களும், கம்பராமாயணமும், நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பழைய நூல்களுமே பயிலப் பெற்று வந்தன. இவை அக்காலத்து வழக்கில் இருந்த நூல்கள். சீவக சிந்தாமணியை ஒருசில ஜைனர்கள் மட்டுமே அறிந்திருந்தனர்.

கி.பி.1880இல் டாக்டர் ஐயரவர்கள், சேலம் ராமசாமி முதலியாரைச் சந்திக்கும் வரை இந்நிலையே நீடித்தது. முதலியாரவர்கள் சீவக சிந்தாமணி-நச்சினார்க்கினியர் உரைப் பிரதியைச் சாமிநாதையரிடம் கொடுத்துப் படித்துப் பார்த்துத் தனக்குப் பாடம் சொல்ல வேண்டும் என வேண்டினர். ஐயரவர்கள் சீவக சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் உரையில் காணப்பெற்ற மேற்கோள்களிலிருந்து பழங்காலத் தமிழ் நூல்கள் பல உருவம் அறியாத நிலையில் மறைந்து கிடப்பதை உணர்ந்தார். அவற்றைத் தேடி நாடித் தொகுத்து வெளியிடும் பணியைத் தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டார். தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஏடு தேடும் பணியை மேற்கொண்டு ஐம்பெருங் காப்பியங்களில் மூன்றையும் (மற்றவை இன்னும் வெளியாகவில்லை) பத்துப் பாட்டையும், எட்டுத்தொகையில், புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், குறுந்தொகை ஆகிய நூல்களை வெளியிட்டார். கலித்தொகை, நற்றிணை, அகநானூறு பின்னர் பிறர் வெளியிட்டனர். ஐயரவர்கள் பதிப்பித்த புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய நூல்கள் இன்றும் குறை நூல்களாகவே உள்ளன.

சுவடிப் பயிற்சியில் தளர்ச்சி

டாக்டர் ஐயரவர்கள், ஸ்ரீ வையாபுரிப் பிள்ளையவர்களுக்குப் பிறகு சுவடிப் பதிப்பு முயற்சி பொறுப்புடன் மேற்கொள்ளப் பெறவில்லை.

அச்சுப் பதிப்பில் தெளிவான அமைப்பில் நூல்கள் பல வெளிவந்த பிறகு வாசிப்பதற்குக் கடினமான சிறிய எழுத்துக்களில், புள்ளிகளற்று கொம்பு, சுழி வேறுபாடின்றி ஓலைச் சுவடிகளில் உள்ள நூல்களைப் படிக்க யாரும் அக்கறை கொள்ளவில்லை. சுவடிகளைப் படிப்பதே அரிய கலையாகி விட்டது. ஒரு சிலரே சுவடி படிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் எனக்கூறும் அளவுக்குத் தமிழின் நிலை தாழ்ந்து விட்டது.

இதன் காரணமாக அச்சில் வராத தமிழ்ச் சுவடிகளைத் தற்போது பதிப்பிக்க ஈடுபட்டுள்ள ஒரு சிலரும் சுவடி படிக்கும் ஆற்றல் இன்மையால் நூலின் பொருளை உணராமல் புள்ளிகளையும், கொம்புகளையும் மாற்றியிட்டு பிழைகள் மலியப் பதித்து வெளியிடலாயினர்.

'பச்சை நாமபொடி' என்ற பகுதி பச்சை நரம்போடி என்பதற்கு மாறாகப் பச்சை நாமபொடி எனவும், காதலததான என்ற பகுதி கரதலத்தான் என்பதற்கு மாறாகக் காதலத்தான் எனவும், 'ஸ்ரீ கொளுத கொளவனமன' என்ற பகுதி ஸ்ரீ கோதை கேரளவன்மன் என்பதற்கு மாறாக ஸ்ரீ கொதை கொள்வன்மன் எனவும் பதிப்பில் வந்துள்ளன. ஏட்டில் அப்படியே இருந்தாலாவது நூலின் சரியான பாடத்தை ஊகிக்கலாம். தவறான வடிவில் அச்சுப் பதிப்பில் வந்துவிட்டால் பின்னர் சரியான பாடம் காண்பதே அரிதாகிவிடும்.

ஏட்டுச் சுவடிகளின் சிதைவு

ஏட்டுச் சுவடிகளில் தமிழ் நூல்கள் வழிவழியாகக் காலந்தோறும் ஏற்பட்ட வடிவ மாறுதலுக்கேற்பப் பிரதி செய்து பாதுகாக்கப் பெற்றது ஒருபுறமிருக்க, மேலை நாட்டினர் ஆட்சியைக் கைப்பற்றி மக்களை அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில், நாட்டில் குழப்பங்கள் மிகுந்து, கல்வி வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் மிகவும் சரிந்து விட்டன. அந்நிய ஆட்சியில் ஆளும் வர்க்கத்தினருக்கு வேண்டியவர்களாக அவர் கூறுவனவற்றுக்கெல்லாம் தாளம் போடுபவர்களே அதிகாரத்தில் இருந்து செல்வாக்குப் பெற்றமையால் மக்கள் தமிழ் மொழி பயில்வதையே மறந்தனர். தாய்மொழியில் உரையாடுவது அநாகரிகம் என்றும் கருதினர். இன்றும் அவ்வெண்ணம் கொண்டார் பலர் உள்ளனர்.

ஆட்சியில் இருந்த ஆங்கிலேயரும் தங்கள் கல்வித் திட்டத்தில் ஆங்கிலத்துக்கு முதலிடம் அளித்து நாட்டு மொழிகளைப் புறக்கணித்தனர். எட்டாம் வகுப்புக்குமேல் தாய்மொழிக்கு இடம் இல்லை. இந்த நிலையில் தமிழ் தமிழர் அறியாத மொழியாகித் தமிழர்களே தமிழ்ச் சுவடிகளைச் சுமை எனக் கருதி அழிக்கவும் நேரிட்டது. ஐயரவர்கள் என் சரித்திரத்தில் தமிழர் தமிழ்ச் சுவடிகளை எவ்விதம் அனலிலும் புனலிலும் இட்டு அழித்தனர் என்பதை இரண்டிடங்களிற் கூறியுள்ளார். இவ்விதம் அனலிலும், புனலிலும், காலச்சூழல்களால் அழிவுற்ற சுவடிகள் போக எஞ்சியவையே மேற்கூறிய சுவடி நிலையங்களில் உள்ளனவாம்.

ஐயரவர்கள் தமிழகத்தில் பல பகுதிகளில் தமிழ்ப் புலவர்கள் வீடுகளிலும், மடாலயங்களிலும் ஏடு தேடித் தொகுத்தாராயினும் இன்னும் அவர் ஏடு தேடிச் செல்லாத பகுதிகள் பல உண்டு. வட ஆற்காடு, தென் ஆற்காடு முதலிய தொண்டை நாட்டுப் பகுதிகளும், கொங்குநாட்டுப் பகுதிகளும், பாண்டிநாட்டில் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளும், தமிழகத்தின் மிக நெருங்கிய அண்டைப் பகுதிகளாம் நாஞ்சில் நாடு, பாலக்காடு பகுதிகளும் இவற்றில் அடங்கும்.

அண்மையில் வெளியான தேவாரப் பிரபந்தங்கள் என்ற (கம்பம் பள்ளத்தாக்கைச் சார்ந்த தேவார நகர அரங்கன் பற்றிய) நூலில் அப்பகுதியில் வாழ்ந்த சுமார் 40 புலவர்களின் ஊரும் பேரும் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளது. இப்புலவர்கள் பரம்பரையினர் குடும்பங்களில் பல தமிழ்ச் சுவடிகள் சிறைப்பட்டிருக்கக் கூடுமல்லவா?

நம் நாட்டிலும் வெளிநாட்டிலும் பல நூலகங்களிலும் உள்ள தமிழ்ச் சுவடிகளின் பெயர் மட்டும் அறிய வந்த சுவடிகள் சுமார் இருபத்தைந்தாயிரமாகும். இவற்றை ஒருவாறாக வகைப்படுத்தியதில் இவை சுமாராகக் கீழே குறிப்பிட்ட சதவீதத்தில் இருப்பதாக உணரப்பெற்றது.

மருத்துவம்	60%
சோதிடம்	5%
சமயம் பக்தி	15%
கலை இலக்கியம்	10%
வரலாறு	5%
இலக்கணம்	5%

இன்னமும் கணக்கில் வராத தமிழ்ச் சுவடிகளைத் தேடி எடுத்து ஆராய்ந்தால் இந்தப் புள்ளி விவரம் மாறுபடலாம். இவற்றுள் சுமார் இருபது சதவீதமே அச்சில் வந்துள்ளன. இந்த 20 சதவீதத் தமிழ் அறிவு கொண்டுதான் இப்போது தமிழாய்வு நடைபெற்று வருகின்றது. டாக்டர் ஐயரவர்கள் தம் அறுபதாண்டுப் பதிப்புப் பணியில் சுவடிகளினின்றும் பதிப்பித்த நூல்க்ள் 74 என்பதை அறியும்போது இன்னும் வெளிவர வேண்டிய சுவடிகள் சுமார் இருபதாயிரம் என்பதை நினைக்கையில் டாக்டர் ஐயரவர்கள் போன்ற தமிழ் அறிஞர்கள் எத்தனை பேர் எவ்வளவு காலம் உழைக்க வேண்டும் என்பது மலைப்பைத் தருகின்றன.

தற்போது சுவடி படிக்க அறியாமல் அறிஞர்கள் நூலைப் பதிப்பிக்க ஆர்வங்காரணமாக முன்வரும்போது அவர்களுக்குச் சுவடி பயிற்சி இன்மையால் பிழைபடப் பதித்து விடுகின்றனர். எனவே இப்போதைய தலைமுறையில் தமிழைப் பயில்பவர்களுக்கு சுவடிபடிக்கும் பயிற்சியும், பிரதி செய்யும் பயிற்சியும் அவசியம் சுவடிப் பயிற்சி அளிப்பதற்கு முறையான நெறிமுறைகள் (Methodology) ஒன்றும் உருவாகவில்லை. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் சுவடி இயல் துவங்கியபோது சில நெறிமுறைகள் உருவாக்கப் பெற்றன. இம்முறையே முடிந்த முடிவெனக் கருதலாகாது.

பண்டைத் தமிழ் நூல்கள் எல்லாம் எளிதில் மனனம் செய்யக் கூடிய வகையில் செய்யுள் அமைப்பிலேயே உள்ளன. எனவே ஏட்டைப் பிரதி செய்வதற்கு, யாப்பிலக்கணம் பாட்டியல் நூல்களில் பயிற்சி மிக அவசியமாகும். பாட்டியல் பயிற்சியால் ஒரு நூல் எந்த யாப்பில் அமைந்தது என எளிதில் உணரலாம். யாப்பிலக்கணத்தின் மூலம் பாட்டின் வங்கை எதுகை, மோனை, சீர், தளை முதலியவற்றை அறிந்து ஏட்டில் எழுதப் பெற்ற பாடலின் வடிவத்தைச் செம்மையாகக் காணலாம். எழுதுவோர் கவனக்குறைவால் ஏற்படும் எழுத்து மிகை, எழுத்துக் குறைவு, புள்ளி மயக்கம், குறில்நெடில் மயக்கம், சந்திமயக்கம், ஒருமை பன்மை மயக்கம் ஆகியவற்றை யாப்பியல் பயிற்சியால் பொருளுணர்ந்து பிரதி செய்யலாம்.

சில வட்டாரங்களில் 'ழ'கரம், 'ள'கரமாக ஒலிக்கப்பெறும். மேலும் 'ழ'கரம் 'ள'கரமாகவும், 'ள'கரம் 'ழ'கரமாகவும் எழுதப்பெறும். குளித்து என்பது குழித்து எனவும் காழி என்பது காளி எனவும் சகஜமாக

வழங்கப் பெறும். இஃதறியாமல் பிற வட்டாரத்தினர் அப்படியே பதித்து வேறு பொருள் கொள்வர். எடுத்துக்காட்டாக ஒளவையார் செய்த கொன்றை வேந்தனில் 'வளவனாயினும் அளவறிந் தழித்துண்' என்றுள்ளது. அழித்து எனத் தென்பாண்டி நாட்டினர் எழுதியதை அப்படியே கொண்டு செலவழித்து எனச் செலவு என்ற சொல்லை வருவித்துப் பொருள் கொண்டனர். அழித்தல் என்ற செயல் வரும்போது அளவறிய வேண்டுவதின்று. எனவே இதில் ஏதோ மயக்க உண்டெனக் கருதி ஆய்ந்தபோது அளித்து என்பதே அழித்து எனப் பெயர்த்தெழுதியமை புலனாயிற்று. வளவனாயினும், அளவறிந்து அளித்து உண் என்ற உண்மை உணரலாயிற்று.

'மையார் ஒண்கண்ணார் மாட நெடுவீதி
கையாற் பந்தோச்சும் கழிசூழ் தில்லையுள்'

என்பது திருஞான சம்பந்த சுவாமிகள் பாசுரம். தேவாரம் தில்லைப் பதிக்குரிய பதிகங்களிலும் 'கழி' என்ற சொல்லோ தில்லைப் பதி உப்பங்கழி சூழ்ந்தது என்றோ குறிப்பிடப் பெறவில்லை. எனவே கழி என்பது களியாக இருக்கலாம் எனக் கருதிப் பொருள் கண்டதில் மடவார்கள் மாட நெடுவீதியில் கைகளால் பந்து வீசி களித்தலையுடைய தில்லை என்பது புலனாயிற்று.

ல்', ள்' என்ற மெய்யெழுத்துக்கள் உடன் வல்லினம் புணரும்போது, ல்' என்ற மெய் ற்' எனவும், ள்' என்ற மெய் 'ட' எனவும் மாறுபடும். ஆனால் தென்பாண்டி நாட்டில் அவ்விதம் மாறாமல் இரண்டு ஒற்றுக்கள் போட்டே எழுதுவது பல ஏடுகளிலும் காணப் பெறுகின்றது. கல்+தூண், கற்றூண் என வரையப் பெறாமல் கல்த்தூண் எனவும் நாள்+குறிப்பு, நாட்குறிப்பென்னாது நாள்க் குறிப்பு எனவும் வழங்கப் பெறுகிறது. மலையாளத்திலும் அல்ப்பம், கல்ப்பகம் என்றே இன்றும் வழக்கில் உள்ளது. இஃதன்றி இடச்சிக்கனம் கருதியோ என்னவோ ஏடெழுதுவோர் மூர்த்தி என்பதை மூற்தி எனவும் கார்த்திகை என்பதைக் காற்திகை எனவும் எழுதுவதும் உண்டு. இவற்றைக் கருத்தில் கொண்டு சுவடியைப் பதிக்கும் போது பிரதி செய்ய வேண்டும். இதற்குச்சுவடிப் பயிற்சி மிகவும் அவசியம்.

சுவடிப் பயிற்சியில் ஈடுபடுவோர் சிறந்த புலமை பெற வேண்டும் மொழிவரலாறு, எழுத்து வரலாறு, சுவடியில் எழுத்து முறை, யாப்பியல், பாட்டியல், மொழி இயல் (Linguistics) பிரதி செய்தல் இவற்றில் கடினப் பயிற்சி அவசியமாகும். இவை எல்லாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள சுவடிப் பயிற்சிக் கையேட்டில் காணலாம்.

மொழி இயல் அறிவதால் பல உண்மைகள் உணரலாகும். சங்க இலக்கியங்கள் உள்ளதை உள்ளபடிக் கூறும் சுவ பாவோக்தி (தன்மை நவிற்சி) நடையிலமைந்தது. கற்பனையாகப் பிறிது மொழிதல் (அதிசயோக்தி) அதில் காண இயலாது. தூங்கெயில் எறிந்த தொடித் தோட்செம்பியன் என ஒரு சோழன் சங்ககாலத்தில் கூறப் பெறுகிறான்.

தூங்கு எயில் என்பது தொங்கும் கோட்டை எனப் பொருள் கொள்ளப் பெற்றது. (Hanging Fort) அவ்விதம் தொங்குங் கோட்டை, வரலாற்றில் உள்ளதாக அறிய முடியவில்லை. ஏதோ கற்பனை கோட்டை இது. தன்மை நவிற்சியாக இல்லை. திராவிட மொழிகளின் Etimological அகராதியில் தூங்கு, தொங்கு, தொக்கு களிமண் (Mud) Dravidian language Madhya Pradesh என உள்ளது. தூங்கு எயில் என்பது இதன் மூலம் களிமண் கோட்டை எனப் பொருள் தந்து தன்மை நவிற்சியாகின்றது (கற்கோட்டையைவிடக் களிமண் கோட்டையே வலுவானது.)

நல்ல என்ற சொல் நன்மை என்ற பண்பின் அடிப்படையில் வழங்குகின்றது. மொழியில் ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள் உண்டு. தெலுங்கில் நல்ல என்ற சொல் கருமையைக் குறிக்க இன்றும் வழங்குகின்றது. கிருஷ்ணன் கார்வண்ணன் என்பதைத் தெலுங்கில் நல்ல நிவாகு என்பர். இதில் நல்ல கருமையாகும். இந்த அடிப்படையில் நல்ல என்ற சொல் கருமை என்ற பொருளில், நல்ல பாம்பு, நல்ல துளசி, நல்ல நாயகி, நல் ஆ, நல்லன், நல்ல தம்பி, நல்லண்ணன் என உள்ளது. பிற்காலத்தில் நல்ல என்ற பண்புப் பொருளே நிலைபெற்றமையால் நல்ல என்பது கருமை என்ற பொருள் அறிய இயலாது போயிற்று. மொழி இயலால் ஏற்படும் உண்மைக்கு மேலே கூறியவை சான்றாகும்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்

நாட்டில் 90 சதவீதத்துக்குமதிகமாக எழுத்தறிவின்றிப் பல காலம் இருந்தனர். இலக்கியங்களும், சமய நூல்களும், புராணங்களும் 10 சதவீதம் கல்வியறிவுள்ளவர்களுக்கே அறிய முடிந்தது. எழுத்தறிவில்லா மக்களும் உணரவே நாட்டுப்புறப் பாடல்கள் எழுந்தன. நாட்டுப்புறப் பாடலாசிரியர்கள் கற்பனை வளத்திலும், சொற்பொருள் நயத்திலும், வரலாற்றுச் செய்திகளிலும் பிற ஆசிரியர்களின் புலமைக்கு ஒப்பானவர்களாகவோ, அன்றி அதற்கு மேலாகவோ இருந்தனர். அவர்கள் பாடல்களால் பல உண்மைகள் புலனாகின்றது. அந்தை என்ற சொல் தந்தை என்ற சொல்லின் முதல் மெய் போயதாகவோ, தந்தை என்ற சொல் அத்தை என்ற சொல்லின் முன் த்' என்ற மெய் சேர்ந்ததாகவோ கொள்ளலாம். இந்த அடிப்படையில் கீரந்தை கீரன் தந்தையாகவும் சாத்தந்தை - சாத்தன் தந்தையாகவும், பொற்றந்தை பொன்னன் தந்தையாகவும் பொருள் கூறப் பெற்று இலக்கண நூல்களிலும் சான்று காட்டப் பெற்றுள்ளன. ஆனால் சென்னைக் கீழ்த் திசைச் சுவடி நிலையத்துள்ள ஒரு நாட்டுப்புறக் கதைப்பாடலில் ஒரு குழந்தை சாத்தந்தை பேரா என விளிக்கப் பெறுகின்றது. சாத்தன் தந்தையின் பேரன் என்பதே இலக்கணப்படிப் பொருளாகும். சாத்தன் மகனே என்னாது சாத்தனுக்கு முக்கியம் கொடுத்து விட்டு அவன் தந்தை பேரன் என்பது விசித்திரமாகவன்றோ உள்ளது. சாத்தந்தை என்பதை அப்படியே ஒரே பேராகக் கொள்ளலாமல்லவா?

இன்றும் நம் நாட்டில் சாத்தப்பன், சாத்தையன், பொன்னப்பன், பொன்னையன், முத்தப்பன், முத்தையன் என்ற பெயர்கள் உள்ளனவே. அப்பன், அய்யன் என்ற அடைமொழி போலவே அதேபொருள் தரும் அந்தை அடைமொழியாகலாம் அன்றோ?

சங்கப்பாடல்களும், ஆழ்வார்களும் நப்பின்னை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இந்த நம்பின்னை யார்? இது பற்றி வடமொழி நூல்களிற் செய்தி ஏதும் இல்லை. திவ்வியப்பிரபந்த வியாக்யானத்தில் கும்பன் மகளே என்னாது நந்த கோபன் மருமகளே என்பதால் புகுந்த வீட்டுக்குச் சிறப்பு கூறப் பெற்றது என்று ஒரு குறிப்பு மட்டும் உள்ளது. இந்தக் கும்பன் யார் என்பது புலனாகவில்லை. திருவனந்தபுரத்துச் சுவடி ஒன்றில் கும்பன் யசோதையின் சகோதரன் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. இதனால் தான் திருப்பாவையில் ஸ்ரீ ஆண்டாள் மாமன் மகளே என விளிப்பது நப்பின்னையை என்பது விளங்கலாயிற்று. இது போலப் பல செய்திகள் தமிழ்ச் சுவடிகள் மூலம் அறியலாம்.

இதுகாறும் தமிழ்ச் சுவடிகள் பற்றிய பழைய செய்திகளும் அவற்றாலுணர்ந்த புதுமைகளும் அவற்றின் நிலையும், அளவுமே கூறப்பெற்றது. இறுதியாகச் சுவடிகளைப் பாதுகாக்கவும் அவற்றைச் சீரிய முறையில் பதிப்பிக்கவும் ஆராயவும் சில கருத்துகள்:

1) சுவடி இயல் பயிற்சி விரிவாக்கப் படவேண்டும். முதுகலைப்பட்ட மேற்படிப்பு மாணாக்கர்களுக்குச் சுவடி இயல் பயிற்சியும் பாடதிட்டத்தில் கட்டாய மாக்கப் பெற வேண்டும்.

2) மருத்துவச் சுவடிகளை இந்திய (சித்த-ஆயுர்வேத) மருத்துவத் துறையும், சுவடி இயல் துறையும் இணைந்து ஆய்வு செய்து மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிக்க வேண்டும். இது பற்றி இந்திரகாந்தி பிரதமராக இருந்த போதும், ஸ்ரீ ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோதும் அவர்களுக்கு எழுதினேன். ஸ்ரீ ராஜீவ் காந்தி என் கோரிக்கையை மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பியதாகவும் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் பதில் தந்தார். பின்னர் ஏதும் நடக்கவில்லை.

3) அயல் நாட்டுச் சுவடிகளைச் சுவடி இயல் பயிற்சி பெற்றவர்களை அனுப்பி நேரில் கண்டு விளக்க அட்டவணை செய்து பதிப்பிக்க வேண்டும். (இப்பணி குறித்து 5 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் ஒன்று. திரு.ராஜவேலு இயக்குநராக இருந்தபோது தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைக்கு அனுப்பினேன். அவரும் திட்டத்தைப் பரிந்துரை செய்ய அரசு முதல் தவணையாக ஒரு லட்சம் ரூபாய் அனுமதியளித்தனர். அனுமதி வரும்போது ஸ்ரீ ராஜவேலு ஓய்வு பெற்றமையால் புதிதாக வந்த இயக்குநர் இப்பணி தேவை இல்லை எனக் கருதி இத்தொகையை வேறு பணிக்கு மாற்றிச் செலவு செய்து விட்டார்)

நாட்டுப்புறப் பாடல்களின் சுவடிகள் அனைத்தும் பதிப்புறல் வேண்டும். இவை நம்நாட்டு வரலாறு பண்பாடுகள் அடங்கிய அரங்கமாகும்.

தமிழ்ச் சுவடிகள் உள்ள நிறுவனங்களில் எல்லாம், சுவடி இயல் பயிற்சி பெற்றவர்களை உ.த.ஆ. நிறுவனமோ, தமிழ்ப் பல்கலைக் கழகமோ அதன் பொறுப்பில் நிறுவனத்துக்கு இருவர் வீதம் நியமித்துச் சுவடிகளை அட்டவணை செய்தல், பதிப்பித்தல், ஆகிய பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். இது சுவடி இயல் மாணாக்கர்களுக்கு ஒரு ஊக்கத்தை அளிக்கும்.

விஞ்ஞான உதவிகொண்டு உலகில் உள்ள சுவடிகளை எல்லாம் நுண்ணிழற் படச்சுருள்களாகவோ, கணிப்பொறிமூலம் Diskலோ பதிவு செய்து ஒரு சேர உ.த.ஆ. நிறுவனம், தமிழ்ப் பல்கலைக் கழகம், பிற தமிழகப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைகளில் வைத்துப் பாதுகாத்து ஆராய வேண்டும்.

உலகில் உள்ள திருக்குறள், கம்பராமாயணச் சுவடிகளின் நுண்ணிழற்படப் பிரதிகள் முறையே வள்ளுவர் கோட்டத்திலும் கம்பன் கழகத்திலும் பாதுகாக்கப் பெறவேண்டும். புதிதாக ஏடுதேடும் முயற்சிஎடுக்கவேண்டும். இதற்கு வாய்ப்பாக மாவட்டங்கள் தோறும் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு கோடைகாலப் பயிற்சி முகாம் சுவடி இயலில் நடத்தி அவர்களைக் கொண்டு அவர்கள் பிராந்தியத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகளைப் பெற்றோ அல்லது படி எடுத்தோ உ.த.ஆ. நிறுவனத்துக்கோ தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கோ அளிக்கச் செய்து அப்படி அளிப்பவர்களுக்கு அவர்கள் உழைப்புக்கேற்ப ஊக்கத்தொகை (incentive) அளிக்க வேண்டும்.

இப்பணிகளை தமிழக அரசு ஏற்று நடத்தற்குரிய மானியங்கள் வழங்க வேண்டும். 'தமிழ் எங்கள் உயிர்' என்று கோஷமிட்டால் போதாது. நாளும் இறந்து வரும் தமிழ்ச் சுவடிகளைக் காத்து தமிழ் அன்னை மெல்ல இறவாமல் சிரஞ்ஜீவியாக வாழ வழிவகுத்தல் வேண்டும்.

இப்பணிகளுக்குரிய செலவுத் தொகைக்கு தமிழ் வாக்காளப் பெருமக்களிடம் ஆண்டுக்கு தலைக்கு ஒரு ரூபாய் வீதம் நன்கொடையாகவோ அல்லது வரியாகவோ வசூலித்தல் சுலபமாக இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய்கள் திரட்டலாம். தமிழுக்காகத் தமிழர் இத்தொகை நல்க மறுக்கமாட்டார்கள்.

'எதுவும் நல்கி இங்கெவ்வகையாகவும்' இப்பெரும் பணி நாட்டுவம் வாரீர்' எனக் கூறி அமைகிறேன்.

பெரும்பொருள் விளக்கம்

இரா. இளங்குமரன்

1. முகவாய்

'பெரும் பொருள் விளக்கம்' என்பது 'மறைந்து போன தமிழ்நூல்கள்' என்னும் பட்டியலில் அடங்கிய நூல்களுள் ஒன்றாகும். சீவக சிந்தாமணி, நாமகள் இலம்பகம், 'மருமகன் வலந்தது' என்னும் பாடல் விளக்கத்தில், உரையாசிரியர் நச்சினார்க்கினியர்'' **பெரும் பொருள்'** என்று குறிப்பிடுகிறார் (187),

'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே' (தொல். களவு 14) என்பதனான் ஒப்பும் பெருந்திணைப் பாற்படுங் கந்தருவமாமாறு **பெரும் பொருளான்** உணர்க' என்பது அது.

பெரும் பொருள் என்பதற்குக் குறிப்பு வரையும் பெரும் பேராசிரியர் உ.வே. சாமிநாதர், 'பெரும் பொருள் என்பது, **பெரும் பொருள் விளக்கம்** என்னும் நூலாக இருத்தல் கூடுமோ வென்று ஊகிக்கப்படுகின்றது' என்கிறார்.

'ஊகித்தல்' என்பது உறுதி செய்ய முடியாத கருதுகோள் ஆகும். அதனை உறுதிசெய்ய உதவியது **புறத்திரட்டு** என்னும் அரிய தொகை நூலாகும். உ.வே.சா. அவர்களின் சிந்தாமணிப் பதிப்பு, 1887 இல் வெளிவந்தது. அப்பொழுது அவர்க்குப் புறத்திரட்டுப் படி கிடைக்கவில்லை. பின்னர்த் திருச்சிராப்பள்ளி **அண்ணாசாமி** என்பாரிடமிருந்து புறத்திரட்டு ஏட்டுப்படி பெற்றுக் கொண்டதை 'என் சரித்திரத்தில்' குறிப்பிடுகிறார். (921) புறநானூற்றுப் பதிப்புக்குப் புறத்திரட்டிலுள்ள புறநானூற்றுப் பாடல்கள் உதவியதையும் உரைக்கிறார் (என்சரித்திரம் 986C), இவையெல்லாம் சிந்தாமணிப் பதிப்பின் பின் நிகழ்ந்தவை.

1938-இல் பேராசிரியர் **ச.வையாபுரியாரால்** புறத்திரட்டுப் பதிப்பு வெளிப்பட்டது. அப்பதிப்பே **'பெரும் பொருள் விளக்கம்'** என்பதைத் தெளிவு படுத்திற்று.

ஒரு தொகை நூல் எத்தகு கட்டொழுங்குடன் விளங்கவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது புறத்திரட்டு நூலாகும். திருக்குறளைப் போலவே அறம், பொருள் என்னும் பால் முறை வைப்புடையது அது. அதன் அதிகாரப் பகுப்புகளும் பெரும்பாலும் திருக்குறளை அடியொற்றியே செல்கிறது. தொகைப் படுத்தப்படும் நூல்களையும்; அதன் பாவகையையும் ஒரு நெறிப்படக் கொண்டு

செல்கிறது. இவ்வகையில் வெண்பாயாப்பினதாம் புறப்பொருள் வெண்பா மாலையை அடுத்து, அதே வெண்பா யாப்பால் அமைந்த பெரும் பொருள் விளக்க வெண்பாக்களை அடைவு செய்கின்றது.

புறத்திரட்டுத் தொகையின் தனிப்பெருஞ்சிறப்பு, தொகுக்கப் பட்ட பாடலைச் சார்ந்து அப் பாடல் **அமைந்துள்ள நூலைக்** குறிப்பிடுவதாகும்.

தொல்காப்பியம் புறத்திணையியல் உரை விளக்கத்தில் நச்சினார்க்கினியர், புறத்திரட்டு வழியாக அறியப்படும் பெரும் பொருள் விளக்க வெண்பாக்கள் முப்பத்து ஒன்பதனை எடுத்துக் காட்டியிருந்தும், ஓரிடத்தில் தானும் அவர், 'பெரும் பொருள்' என்றோ, 'பெரும் பொருள் விளக்கம்' என்றோ காட்டினார் அல்லர் என்பது அறியத் தக்கதாம். **புறத்திரட்டு என்னும் தொகைநூல் வாய்க்கப் பெற்றதும், அந்நூல் பாடல்கள் இன்ன நூலைச் சார்ந்தன என்பது குறிக்கப் பெற்றதும் ஆகியவையே நாம் 'பெரும் பொருள் விளக்கம்' என்றொரு நூலை அறிந்து கொள்ள வாய்ப்பாயிற்றாம்.**

புறத்திரட்டுப் பதிப்பாசிரியர் வையாபுரியார், அந்நூல் முகத்தில் தொகை நூல் பற்றி விரிவாக ஆய்கின்றார். புறத்திரட்டில் இடம் பெற்றுள்ள நூல்களைப் பற்றியும் ஆய்வு நிகழ்த்துகின்றார். அவர் பெரும் பொருள் விளக்கம் குறித்து வரையும் செய்திகள் வருமாறு:

'புறத்திரட்டினாலன்றிப் பிறவாறு அறியலாகாத நூல்களுள் கடைசியாகக் கூற நிற்பது பெரும் பொருள் விளக்கமாம். இந்நூலினின்றும் 41 செய்யுள்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் புறப்பொருள் பற்றியன வாதலின் **இந்நூல் புறப்பொருளை உதாரணங்களால் விளக்கும் ஓர் நூலாதல் வேண்டும்.** நச்சினார்க்கினியர், சிந்தாமணி உரையில் (187) 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே' என்பதனால் ஒப்பும் பெருந்திணைப்பாற்படும் கந்தருவமாமாறு பெரும் பொருளான் உணர்க' என்று கூறியுள்ளார். இவ்வாக்கியத்தை நோக்கிய அளவில், **பெரும் பொருள் என்பது ஓர் பொருளிலக்கண நூலாக இருத்தல் கூடுமென** ஊகிக்கலாம். இவ்வூகம் பொருத்த முடைத்தாயின், இவ்விலக்கண நூலினை மேற்கோளுடன் விளக்கிய ஒரு நூலாகப் **பெரும் பொருள் விளக்கம்** இயற்றப் பெற்றதாகலாம். பெரும் பொருள் விளக்கச் செய்யுட்கள் ஒரு சில நச்சினார்க்கினியரால் புறத்திணையுரையில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. இது தோன்றிய காலம் முதலியன ஒன்றும் இப்போது அறிதற்கில்லை' என்பவை அவை. இங்கேயும் 'ஊகிக்கலாம்' என்ற குறிப்பு இருப்பினும், இரண்டு ஊகித்தல்களுக்கும் வேறுபாடு உண்டாம்.

சாமிநாதர் ஊகிப்பு, 'பெரும் பொருள் என்பது பெரும் பொருள் விளக்கம் என்னும் நூலாக இருத்தல் கூடும்' என்பது.

வையாபுரியார் ஊகிப்பு, 'பெரும் பொருள் என்பது, ஒரு பொருளிலக்கண நூலாக இருத்தல் கூடும் என்பதுடன், அவ்விலக்கண நூலினை மேற்கோளுடன் விளக்கிய ஒரு நூல் பெரும் பொருள் விளக்கமாக இருக்கலாம் என்பதாம்.

பெரும் பொருளும், பெரும் பொருள் விள்க்கமும் ஒரு நூலாகலாம் என்பது முன்னவர் ஊகம்.

'பெரும் பொருள்' இலக்கண நூல் என்றும், அதற்கு விளக்கமாக அமைந்த நூல் பெரும் பொருள் விளக்கம் என்றும் இருநூலாகக் கருதியது பின்னவர் ஊகம்.

ஆனால் புறத்திரட்டின் வழியாலோ, நச்சினார்க்கினியர் வழியாலோ இரண்டு நூல்களும் தனித்தனி நூல்கள் என்றோ, ஒரே நூல் என்றோ உறுதி செய்யும் வாய்ப்பு இல்லை.

தமிழ் இலக்கண இலக்கியப் பரப்புகளில் 'விளக்கப் பெயர் நூல்கள் பலவாதல் எவரும் அறிந்ததே. (நாற்கவிராச நம்பி இயற்றிய) **அகப்பொருள் விளக்கம், தமிழ் நெறி விளக்கம், இலக்கண விளக்கம்** என்பனவும், **நீதிநெறி விளக்கம்** என்பதும் சான்றுகளாம். **'அரும் பொருள் விளக்க நிகண்டு'** என்பதால் நிகண்டு நூல்களும் அப்பெயர் பெற்றமை புலப்படும். இவற்றால் விளக்கமாக அமைந்த நூலும், அதன் பெற்றமை புலப்படும், இவற்றால் விளக்கமாக அமைந்த நூலும், அதன் உரையும் ஆகியவையோ, இரண்டும் கொண்டவையோ 'விளக்கம்' என்னும் பெயர் பெறுவதை அறிய வாய்த்தலால், தெளிவாக வேறு சான்று கிட்டும்வரை இவ்வூகங்களைத் தீர்த்துக் கொண்டு உறுதி செய்ய வாய்ப்பு இல்லையாம்.

'பெரும் பொருள் விளக்கம்' என எடுத்துக்காட்டும் புறத்திரட்டுப் பாடல்கள் அனைத்தும் **'வெண்பா'** வாகவே உள்ளன. புறப்பொருள் வெண்பா மாலை வெண்பாக்களை ஒப்ப நடையிட்டும், ஒத்த பாவமைப்புற்றும் திகழ்வதாலேயே அவ்வெண்பாக்களை அடுத்தே இவ்வெண்பாக்களைக் கொண்டு நடையிடத் தொகையாளர் அமைத்துள்ளார். **எந்தவோர் இலக்கண நூலும் இலக்கணம் கூறும் நூற்பாக்களைக் கொள்ளாமல் எடுத்துக்காட்டை மட்டும் காட்டுவதாக அமைவதில்லை. இப்பெரிய பொது நெறிப்படி எண்ணினால் 'பெரும் பொருள்' என்பது இலக்கண நூலாகவும், அந்நூலுக்கு உரையும், காட்டும் அமைந்த நூல்** பெரும் பொருள் விள்க்கமாகவும் பெயர் பெற்றிருத்தல் இயல்பாகும். கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தும் புறத்துறைப் பாடல்கள் ஆதலால், பெரும் பொருள் விளக்கம் புறப்பொருள் நூலாதல் வேண்டும் எனப் பேராசிரியார் வையாபுரியார் கருதுகிறார்.

புறத்திரட்டுத் தொகுப்பு, புறப்பொருள் பாடல்களின் தொகுப்பே ஆதலால் அப்பாடல்களைக் கொண்டே அந்நூல் அப்பொருள் பற்றியது

என உறுதி செய்து விட முடியாது. புறத் திரட்டில் காமத்துப்பால் பற்றிய செய்யுள் 'எனக்குக் கிடைத்துள்ள பிரதிகளுள் ஒன்றிலேனும் இல்லை' என்கிறார் வையாபுரியார். புறத்திரட்டுச் சுருக்கம் என்னும் நூலின் படிகளில் ஒன்றொழிய மற்றவற்றில் கைக்கிளைப் பாடல்கள் 65 இருந்தன என்றும் அவையனைத்தும் முத்தொள்ளாயிரம் சார்ந்தன என்றும் சுட்டுகிறார். இனிப் புறத்திரட்டின் இறுதியான 131 ஆம் அதிகாரம் வாழ்த்து என்னும் பெயரொடு முடிவதும் எண்ணத்தக்கது.

'புறத்திரட்டுச் சுருக்கத்தில் உள்ள காமத்துப் பால் பகுதி விரிந்த நூலாகிய புறத்திரட்டின் கண்ணும் உளதாயிருத்தல் வேண்டும். இப்பொழுது காணப்படாத தன் காரணம் ஒருவாற்றானும் புலப்படவில்லை. புறப்பொருட் பகுதி வாழ்த்து என்னும் அதிகாரத்தோடு முடிதல்கண்டு அதனையே நூல் இறுதியென மயங்கிப் பின்னுள்ள பகுதி வேறொரு நூலென எண்ணி நாளடைவில் இப்பகுதியை நம் முன்னோர் இழந்து விட்டதாகக் கருதுதலும் கூடும்' என்கிறார் வையாபுரியார்.

தமிழ் என்பதே அகப்பொருள் என்பதைக் குறிஞ்சிப் பாட்டே காட்டும். சங்க நூற்பரப்பில் அகப்பாடற் பரப்பே மிக்கது என்பதும் வெளிப்படை. அவ்வாறாகவும் வாழ்த்தின் பின் காமத்துப்பால் என்பதொரு பால் இடம் பெறவும், அதில் ஒரு நூலில் இருந்த கைக்கிளைப் பாடல்களையே இணைத்தனர் என்பதும் பொருந்தாச் செய்தியாம். புறத்திரட்டுச் சுருக்கத்தார் கைக்கிளையைப் பின்னூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையார் 'அகப்புறம்' என்றதற்கு ஏற்பப் புறத்திரட்டின் சுருக்க நூலில் இணைத்துக் கொண்டார் என்பதுதகும்.

ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வாழ்த்துப்பாடும் மரபினைத் தொகையாசிரியர் மேற்கொண்டிருந்தார். என்னின் அறத்துப்பால் முடிவிலும் வாழ்த்துக் கூறியிருப்பார். அவர் நோக்கு புறப்பொருள், அகப்பொருள் எனப் பாகுபாடு கொண்டிருப்பின் அவ்விரு பால்களையே பகுப்பாக்கி இருப்பார். பெயர்தானும் புறத்திரட்டு என்று பெயர் சூட்டியிரார். ஆதலால், புறத்திரட்டில் இடம் பெற்றுள்ள பெரும் பொருள் விளக்கப்பாடல்களைக் கொண்டு அது புறப்பொருளே கூறும் நூல் என முடிவு செய்ய முடியாது. ஆயினும் நச்சினார்க் கினியர் குறிப்பை நோக்கிய அளவில் பெரும் பொருள் விளக்கம் அகப்பொருளும் உடையதே என்பது வெளிப்படும்.

அது தொல்காப்பியக் களவியல் நூற்பாவாகிய 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே' என்னும் நூற்பாவுக்கு எடுத்துக்காட்டும் பெரும் பொருளில் உள்ளதாகக் கூறியமையால் அறியவரும். மேலும் புறத்திணையியல் துறைகளுக்குப் பெரும் பொருள் விளக்க வெண்பாக்களைச் சான்றாகக் காட்டுவது போலவே, அகத்திணையியல் துறைகளுக்கும் வெண்பாக்களைச் சான்றாகக் காட்டுகிறார்

நச்சினார்க்கினியர். வழக்கம் போலவே, அவை எந்நூலைச் சேர்ந்தவை எனச் சுட்டிச் சென்றார் அல்லர். அவ்வெண்பாக்கள் பெரும்பொருள் விளக்கம் சார்ந்தவையாக இருத்தலும் கூடும். அவ்வாறாயின், **பெரும் பொருள் விளக்கம் அகம், புறம் ஆகிய பொருள் இலக்கணம் இரண்டனையும் உடையதாகக் கொள்ள வாய்க்கும்.**

புறத்திரட்டு, புறநானூறு, புறப் பொருள் வெண்பா என்பன போன்ற பெயரீடு இன்றியும், அகப்பொருள், களவியல் என்பன போன்ற பெயரீடு இன்றியும் தொல்காப்பியம், **பொருளதிகாரம்** என இரு திணைகளுக்கும் பொதுப்பெயர் கொண்டு வழங்கியமை போல, இரு திணைகளின் விளக்கமும் இருந்தமையால்தான் பெரும் பொருள் விளக்கம் என்னும் பெயரீடு பெற்றிருக்கக் கூடும். **ஒரு பொருள் பற்றிக் கூறாமல், இருபொருள் பற்றிக் கூறுதலும், பெருமை என்பது இருமை என்னும் பொருளில் வழங்கப்படுதலும் அறிய இக்கருத்து வலியுறுவதாம்.**

இனிப் பெருங்கதை, பெருந்தொகை, என்பன போலப் பாடல் பெருக்கம் பற்றிப் பெருமை சேர்க்கப்பட்டிருத்தலும் கூடுவதே. என்னெனின், ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பாடலேயன்றிப் பல பாடல்கள் கூறுதலும், புறத்தோன் குடை நாட்கோள், அகத்தோன் குடைநாட்கோள், புறத்தோன் நாட்கோள், அகத்தோன் வாள் நாட்கோள், புறத்தோன் வீழ்ந்த புதுமை, அகத்தோன் வீழ்ந்த புதுமை என்றாற்போலப் பெரும் பொருளில் வருவன நூல் விரிநிலையையும் விளக்கத்தையும் காட்ட வல்லனவாம்.

மேலும், படையியங்கரவம் என்னும் புறத்திணையியல் நூற்பா(3) விளக்கத்தில் 'இது முன் ஈரேழாம் என்ற துறை இருவகைப்பட்டு இருபத்தெட்டாம் என்கிறது' என்கிறார் நச்சினார்க்கினியர். இதற்கு ஏற்ப,

'நிரை கோடற்கு எழுந்தோர் இயங்குபடை யரவம்'
'நிரைமீட்டற்கு எழுந்தோர் இயங்குபடை யரவம்'
'நிரை கோடற்கு எழுந்தோர் புகைகெடப் போகிய செலவு'
'நிரை மீட்டற்கு எழுந்தோர் புடைகெடப் போகிய செலவு'

என இருபாற்பட இயலும். எடுத்துக் காட்டுகளை விரித்துச் செல்லுதல் எண்ணத் தக்கதாம். இனியர் காட்டும் இரண்டிரண்டு வெண்பாக்களில் ஒவ்வொன்று புறத்திரட்டினால் பெரும் பொருள் விளக்கத்தைச் சார்ந்ததென அறிய வருதலும் ஏனை ஒன்று இன்ன நூலைச் சார்ந்ததென அறிய வாரா திருத்தலும் அறியின் அவ்வேனை வெண்பாவும் பெரும் பொருள் விளக்கம் சார்ந்ததே என்னும் முடிவு செய்ய வாய்க்கின்றதாம்.

புறத்திரட்டில் அவ்வெண்பாக்கள் இடம் பெற்றிலவே எனின் தேர்ந்து திரட்டி வைக்கப்படும் திரட்டு நூலிலே நூல் முழுமையும் இடம் பெற்றிருக்கும் என நோக்குதல் கூடாதென்று அமைக. நூல் திரட்டு எனின் நூன் முழுமையும் இடம் பெற்றிருக்கும் என்றும் பாடல் திரட்டு எனின்

தொகுப்பார் குறிப்புக்கு ஏற்ப அமைந்த பாடல்களே இடம் பெறும் என்றும் கருதுக.

இவ்விடத்தே குறிஞ்சிப் பொருள் கொண்ட பாட்டு குறிஞ்சிப் பாட்டு. அது பெருங்குறிஞ்சி எனப் பரிமேலழகராலும் (பரிபா. 1977) நச்சினார்க்கினியராலும் (தொல். அகத்.19) சுட்டப்படுதல் எண்ணத் தக்கதாம். எந்நூலும் கூறாத எண்ணிக்கையில் குறிஞ்சிப் பூக்கள் தொண்ணூற்று ஒன்பதனைத் திரட்டித் தந்த பாங்குதானே அதனைப் பெருங்குறிஞ்சி என்னும் பெருமைக்கு ஆக்கிற்று என்பதும் எண்ணத்தக்கதாம்.

உரையாசிரியர் இளம் பூரணர் புறத்திணையியல் நூற்பாக்களுக்கு எடுத்துக் காட்டுகளைப் புறப்பொருள் வெண்பா மாலையில் இருந்தே காட்டுகிறார். அவர்க்குப் பின்னுரைகாரராகிய நச்சினார்க்கினியர் புறப்பொருள் வெண்பாமாலையை எடுத்துக் காட்டுவதுடன், பெரும் பொருள் விளக்க வெண்பாக்களையும் அதனை அடுத்தே எடுத்துக் காட்டுகிறார். மூன்றாம் நூற்பா ஒன்றில் மட்டும் பெரும்பொருள் விளக்க வெண்பாக்கள் பதினொன்றனை நச்சினார்க் கினியர் காட்டினாராகவும் இளம்பூரணர் அவற்றுள் ஒன்றனைக் கூடக்காட்டாது செல்வதால் அவர் பார்வைக்கு வாராத சுவடியாகவோ, அவர்காலத்திற்குப்பின் தோன்றிய சுவடியாகவோ பெரும்பொருள்விளக்கம் இருந்திருத்தல் வேண்டும் என்று கொள்ள நேர்கின்றது.

இக் குறிப்பு, வேறு எவ்வுரையாசிரியராலும் நூலாசிரியராலும் சொல்லப் பெற்ற வாய்ப்பு இல்லாத நிலையில், இது தெளிவுறும் காலம் வரை, நச்சினார்க்கினியர் காலத்திற்கு முற்பட்டவராகப் பெரும் பொருள் விளக்கம் நூலாசிரியர் இருந்திருத்தல் வேண்டும் என்றே கூற முடியும். இனிப் புறத்திரட்டைத் தொகுத்த காலம் அறியப் பெறினும் அதற்கு முன்னெல்லைப்படுத்த வாய்த்தல் கூடும். அத்தொகை செய்தார் எவர் என்றோ, அவர்காலம் இன்ன தென்றோ அறியக் கூடா நிலையில் புறத்திரட்டில் இடம்பெற்ற நூல்களில் பின்னை நூலுக்குப் பின்னவர் அத்தொகையாசிரியர் என்னும் பின்னெல்லை ஒன்றே காண முடியுமாம்.

புறத்திரட்டின் முதற்பதிப்பாசிரியர் வையாபுரியார், 'புறத்திரட்டிலே வந்துள்ள நூல்களில் **காலத்தாற் பிற்பட்டது கம்பராமாயணமா**கும். கம்பர் தமது அரும்பெரும் காப்பியத்தை 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றினரென அறுதியிடப்படுகின்றது. எனவே இத்தொகை நூல் 13ஆம் நூற்றாண்டிற்கும் 16ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அதாவது சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு தொகுக்கப் பெற்றிருக்கலாம் எனக் கொள்ளுதல் தகும்' என்கிறார் (நூன்முகம் பக்.38)

'மேருமந்தர புராணப் பாடல் ஒன்று புறத்திரட்டில் இடம் பெற்றுள்ளது. இப்புராணத்தின் காலம் கி.பி. 1388க்கு முன்னாக

இருக்கலாம் என்று ஆய்ந்து தெளிகின்றார் 'அறிஞர் மு. அருணாசலம். மேலும் அவர்,

'14ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சிவாலய முனிவர், பொதிகையில் வாழ்ந்த முனிவர் ஒருவரால் 25 பதிகங்களைத் திரட்டி 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்னும் பெயரால் வழங்கவிட்டார். அடுத்த 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த தத்துவராய சுவாமிகள் பெருந்திரட்டு குறுந்திரட்டு எனச் சாத்திரங்களில் இருந்தும் தேவாரத்தில் இருந்தும் தொகுத்தார். இத்தொகைகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றிய தொகையாகப் புறத்திரட்டு இருக்கலாம் என்கிறார். (தமிழ் இலக்கிய வரலாறு, 15ஆம் நூற்றாண்டு 85-87)

இவை புறத்திரட்டின் தொகைக் காலமாகக் கருதப்பட்டவை, இவற்றைக் கொண்டு பெரும்பொருள் விளக்கக்காலத்தை அறுதியிட்டுச் சொல்ல இயலாதாம். அதன் திணை துறை வகுப்புகளையும் வெண்பாக்களின் நடை பொருளியல் என்பவற்றையும் நோக்க, புறப்பொருள் வெண்பாமாலையை அடுத்தே தோன்றிய நூலாகலாம் எனக் கொள்ளலாம். வெண்பாமாலையை அடுத்தே புறத்திரட்டில் ஓரொழுங்காய் வைக்கப்பட்டுள்ள வைப்பு முறை அதற்குச் சான்றாகலாம். மேலும் முத்தொள்ளாயிர வெண்பாக்களுக்கு முற்பட அமைக்கப்பட்டமையும் கருதத் தக்கதாம்.

புறத்திரட்டில் வரும் பெரும் பொருள் விளக்கப் பாடல்கள் நாற்பத்து ஒன்றில் முப்பத் தொன்பது பாடல்களை நச்சினார்க்கினியர் மேற்கோளாகக் காட்டியுள்ளார் என்பதை அறிந்தோம். யானை மறம் பற்றிய பெரும் பொருள் விளக்கப் பாடல்கள் மூன்றனுள் ஒன்றை மட்டுமே இனியர் காட்டுதலால் இரண்டு பாடல்கள் அவர்தம் உரையில் இடம் பெற வில்லையாம். நாம் புறத் திரட்டினால் பெரும் பொருள் விளக்கப் பாடல்கள் என்பதை அறிந்து கொள்ள வாய்த்தமையாலேயே, நச்சினார்க்கினியர் காட்டியவை அப்பெரும் பொருள் விளக்கம் சார்ந்தவை எனக் காண வாய்த்துள்ள பேற்றை உணர்ந்து போற்ற வேண்டியுள்ளது. இல்லையேல், இன்னநூல் என அறிய இயலா மேற் கோள்களாகவே அவை இருந்திருக்கும். பெரும் பொருள் விளக்கம் என நூற் பெயர் மாத்திரையே அறியப் பெற்று, மறைந்து போன நூல்கள் என்னும் பெயர்ப் பட்டியலுள் ஒடுங்கியிருக்கும் என்பதுண்மையாம்.

இனிப் புறத்திணை இயலில் பெரும் பொருள் விளக்கம் என அறியப் பட்ட வெண்பாக்களையன்றி, வெண்பா மேற்கோள்கள் மேலும் பல உளவாம். அவை புறத்திரட்டுத் தொகையில் இடம் பெறாத பெரும் பொருள் விளக்க வெண்பாக்களாக இருத்தல் கூடும். புறப்பொருள் வெண்பாமாலை வெண்பா, தகடூர்யாத்திரை வெண்பா, முத்தொள் ளாயிர வெண்பா என வரும் வெண்பாக்களை நீங்கிய வெண்பாக்கள் 82 இடம் பெற்றுள. இவை வேறு எந்நூலைச் சார்ந்தவை என அறியப் படாதவை. பெரும் பொருள் விளக்க வெண்பாக்களை மேற்கோள்

காட்டிய நச்சினார்க்கினியராலேயே காட்டப்படுபவை. ஆதலின், அவ்வெண்பாக்களும் பெரும் பொருள் விளக்க வெண்பாக் களாக இருத்தல் கூடும் என எண்ணலாம். பா நடை, பொருள் நிலை, வைப்பு முறை, பிறர் மேற்கோள் காட்டாத் தன்மை என்பவை இம்முடிவுக்கு வரத் தூண்டுவனவாக உள்ளன.

இனி, அகத்துறை தொடர்பான வெண்பாக்கள் முப்பத் தொன்று நச்சினார்க்கினியர் வழியே கிட்டுகின்றன. அகப்பொருள் சுட்டும் வெண்பாக்களைக் கிளவித் தெளிவு, கிளவி விளக்கம் என்னும் நூல்கள் கொண்டிருப்பினும், அவ் வெண்பாக்கள் களவியல் காரிகை உரையில் இடம் பெற்றிருப்பினும், அவ்வெண்பாக்களாக இவற்றுள் ஒன்று தானும் இடம் பெறாமையால் இவ் வெண்பாக்கள் பெரும் பொருள் விளக்கம் சார்ந்தனவாக இருந்து ஆசிரியர் நச்சினார்க்கினியரால் காட்டப் பெற்றிருக்கக் கூடும் எனக் கருதலாம்.

இவ்வாறு ஓர் உரைகாரர் மட்டுமே எடுத்துக் காட்டும் அளவில் ஒரு நூல் இருத்தல் கூடுமோ என ஐயம் உண்டாக வேண்டுவதில்லை. **கிளவித் தெளிவு, கிளவி விளக்கம்** என்பவை **களவியல் காரிகை** உரையால் அன்றி வேறுவகையால் அறியுமாறு இல்லையே! அவர் தாமும் பாடல்களைக் காட்டி அப்பாடல் இடம்பெற்ற நூற்பெயரையும் காட்டிச் செல்லும் மரபினைக் கொண்டமையால் தானே அவற்றை அறிய வாய்த்தது.

இனிப் பாண்டிக் கோவை என்றொரு நூல் மீட்டுயிர்ப்புப் பெற்றுள்ளது. பெரும்பாலும் முழுதுறு நூலாகவே கிட்டியுள்ளது. எதனால்? ஒரோ ஒரு களவியல் உரையால் தானே 250 பாடல்கள் கிடைத்தன! அதன் பெயர் தானும் களவியற் காரிகை தந்ததுதானே! இவற்றை நோக்கப் பெரும் பொருள் விளக்கம் நச்சினார்க்கினியர் உரையால் கிடைக்கும் கொடையாகக் கொள்ளலாம்.

குறள் நெறியில் பெரும் பிரிவும் சிறு பிரிவும் அமைத்துக் கொண்ட புறத்திரட்டுத் தொகையாளர், தொல்காப்பியப் புறத்திணை இயலைத் தழுவியும் சில சிறு பிரிவுகளை மேற்கொண்டுள்ளார். அவை **நிரைகோடல், நிரைமீட்சி, பகைவயிற் சேறல், பாசறை, எயில்கோடல், எயில்காத்தல், அமர், தானை மறம், யானைமறம், களம், வாழ்த்து** என்பனவாம். இப்பிரிவுகளிலேதான் பெரும் பொருள் விளக்கப் பாடல்களை இயைத்துள்ளார். இவற்றுடன் **ஈகை, அறிவுடைமை, குடிமரபு** என்னும் பிரிவுகளிலும் சில பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

புறத்திரட்டார் பெரும் பொருள் விளக்கப் பாடல்களை இத் தலைப்புகளில் வைத்தாராக, இப்பாடல்களை மேற்கோள் காட்டும் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத் துறை நெறிப்படுத்திக் கூற்றும் குறிப்பும் விளக்கமும் சேர்த்துச் சிறக்கச் செய்கின்றார்.

சான்றாக எயில் கோடல் என்னும் பகுதியில் (அதி.119) பெரும் பொருள் விளக்கப் பாடல்கள் 6 புறத்திரட்டில் இடம் பெற்றுள. அவை புறத்திணையியல் 12, 13ஆம் நூற்பாக்களின் உரையில் நச்சினார்க்கினியரால் காட்டப்பட்டுள்ள வகை வருமாறு.

புறத்திரட்டு -	பாடல் -	நச். காட்டும் புறத்துறை
1325	- பகலெறிப்ப தென்கொலோ	- இது புறத்தோன் குடைநாட்கோள்
1326	- தொழுது விழாக் குறைக்கு	- இது புறத்தோன் வாணாட்கோள்
1327	- இற்றைப்பகலுள்	- இது தொல்லெயிற்கு இவர்தல்
1328	- தாய்வாங்கு கின்ற	- இது புறத்தோன் மானங் காத்த நொச்சி
1329	- வெஞ்சின வேந்தன்	- இது புறத்தோன் வீழ்ந்த புதுமை
1340	- தாக்கற்குப் பேரும்	- இஃது தகத்தோன் வீழ்ந்த புதுமை

இன்னவாறு துறை கூறுவதுடன், கண்டோர் கூற்று, மறவர் கூற்று (புறத்திணை.3) எனக் கூற்றுவகையும் குறிக்கிறார்.

இவ்வாறு நச்சினார்க் கினியர் புறப்பொருள் பற்றி மிகுதியாகவும் அகப்பொருள் பற்றி மிகக் குறைந்த அளவாகவும் வெண்பாக்களைக் காட்டியுள்ளார். அவற்றுள் புறப்பொருள் வெண்பாக்களையேனும் தொகையாக்கி வைப்பின் முற்றாக வாய்க்கவில்லை எனினும் ஒரு பாதியாம் பொருள் நூலைப் பெறும் பேறு தமிழுலகுக்கு வாய்க்குமே என்று அரும்பிய எண்ணமே இப் பெரும் பொருள் விளக்க நூலாக்கமாம்.

இனி, நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டிய அளவடி வெண்பாக்களையே தொகுக்க வேண்டிய தென்னை எனின், பெரும் பொருள் விளக்கமாகப் புறத்திரட்டுக்காட்டியுள்ள பாடல்கள் எல்லாமும் அளவடி வெண்பாக்களேயாகலின், அப்பாடல் வகையே பெரும் பொருள் விளக்கம் மேற்கொண்ட பாடல் வகை என்னும் உறுதிப் பாட்டாலேயே அவை தொகுக்கப்பட்டனவாம். புறப்பொருள் வெண்பா மாலை அதே அளவடி வெண்பாவைத் தானே மேற்கோளாகக் கொண்டது என்பது ஒப்பிடத் தக்கதாம்.

என்றேனும் எங்கேனும் பெரும் பொருள் விளக்கம் முற்றாகக் கிடைக்க வாய்ப்பினும், அதனாலும் இத்தொகை முயற்சி, ஒரு திரட்டாக அமையுமேயன்றி அதற்கு முரணாக அமையாது எனக் கொள்க.

இனிச் சில வெண்பாக்கள் வேறு நூலைச் சேர்ந்தன எனப் பின்னை வாய்ப்பாலும் ஆய்வாலும் அறிய வருமெனினும், அதனாலும் இத்தொகைக்குக் குறைநேர்ந்து விடாது. என்னெனின் மலரை மாலையாக்கி வைத்த கட்டமைதிதானே இது.

2. பா நயம்

பா:

கட்டொழுங்கில் அமைவது பா: அதனால் யாப்பு, கட்டு, தொடை என்னும் பெயர்களையும் கொண்டது. அதன் இன்னோசைச் சிறப்பாலும் வயப்படுத்தும் திறத்தாலும் 'பா' என்னும் பெயரைப் பெற்றது. பா என்பது பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை; அது தொலைவில் நின்று கேட்பார் செவியையும் உள்ளகத்தையும் ஈர்த்து வயப்படுத்துவதோடு அஃது இன்ன பாவகையினது என உணர்த்தும் ஓசைச் சிறப்பும் உடையது என விளக்கம் புரிவார் பேராசிரியர்.

பாட்டின் செம்மை நலச் சீர்மையும் பயன் விளைவும் கண்டோர் அதனைச் செய்யுள் என வழங்கினர். ஆய்வார் ஆய்வு நலங்களுக் கெல்லாம் வைப்பகமாக அஃதிருத்தலின் 'தூக்கு' எனவும், எதுகை, மோனை, இயைபு என இன்னவாறாம் தொடர்புறுத்தங்களைக் கொண்டிருப்பதால் 'தொடர்பு' எனவும் பாட்டைப் பண்டையோர் வழங்கினர்.

பா; பாட்டு என்னும் பெயர்களோடு 'பனுவல்' என்பதும் ஒருபெயராயிற்று; அது நூற் பெயரும் ஆயிற்று. பண்டு பாவின் வடிவே நூல்வடிவாக இருந்தமையால் பாட்டின் பனுவற் பெயரே, நூற்பெயரும் ஆயிற்றாம். பஞ்சு நூலுக்கும் பா நூலுக்கும் உள்ள தொடர்பை,

'பஞ்சிதன் சொல்லா, பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடிவு மாறு'

என்றது நன்னூல்.

இனிய பாக்களால் அமைந்த 'நூல் நயம்' தேர்தல் பண்டே வழக்கில் இருந்தமை,

'நவில் தொறும் நூல்நயம்' போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு'

என்னும் குறள் மணியால் இனிது விளங்கும்.

பாக்களுள் வேற்றுத்தளை விரவாத் தனிப்பெருஞ்சிறப்பினது வெண்பா ஆகும். அதன் ஓசையோ செப்பல் ஓசை. வினாவுதலும் விடை கூறுதலும் என்னும் உரையாடலுக்கு ஏற்ற அமைப்புடையது செப்பல் ஓசை, இவ்வகையால் வெண்பா யாப்புத் தனிச்சிறப்புடையதாய், பா வகைகளில் முதன்மை பெறுவதாயிற்று.

வெண்பா மனப்பாடம் செய்வதற்கு எளிமையும், வரப்படுத்திக் கொண்டு வெளியிடும் எளிமையும் உள்ளமையால், வெண்பா இரு

காலில் (இருண்டு முறைகேட்ட அளவில்) **கல்லானை** '(மனப்பாடமாக வரப்படுத்திக் கொள்ளாதவனை) ஔவையார் இகழ்ந்து பாடினார். அவ்வெண்பா யாப்பே பெரும்பாலான அறநூல்களுக்கு இடமாயிற்று. நாலடி, பழமொழி முதலிய கீழ்க்கணக்கு நூல்களும் குறுவெண் பாட்டாம் திருக்குறளும் கருதுக.

முதற்பாவும் முதன்மைப் பாவும் வெண்பா ஆதலால் தான் வெண்பாவில் குறிய குறள் வெண்பாவால் நூலியற்றிய திருவள்ளுவர் **முதற்பாவலர்** எனப்பட்டார் என்பதையும் எண்ணுக.

இவ்வகைச் சிறப்புடைய வெண்பாவை மேற் கொண்டமையே நூல்நயம் ஓங்குதற்கு அமைந்த இயற்கை நிலையாகும். இனி, 'எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்' என்னும் களவியல் வரலாற்றுக் குறிப்பால், பொருளிலக்கணச் சிறப்புப் புலப்படும். மேலும் அகநூல்கள் விரிந்து பரந்த அளவையும், புறநூல்கள் தேய்ந்து சுருங்கியமையையும் எண்ணின் புறப்பொருள் புகலும் நூல்களைப் பேணிக்காக்க வேண்டிய காவல் கடமையும் விளங்கும்.

புறத்திரட்டு வழியாகப் பெரும் பொருள் விளக்கம் பெறும் திணை துறைப் பகுப்புக்கும், புறத்திணையியல் நச்சினார்க்கினியர் உரை விளக்கத்தின் வழியே அறியப்படும் திணை துறை விளக்கங்களுக்கும் உள்ள வேறுபாட்டை அவ்வவ் வெண்பா உரைவிளக்கத்திலும், குறிப்புகளிலும் கண்டு கொள்க. இப் பெரும் பொருள் விளக்கப் பாடல்களைப் பெருந்தொகை எனப்படும் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு (1935 - 36) போற்றிக் காத்துப் பாட வேறுபாடும், அரிதாக அருங்குறிப்பும் தந்துள்ளது. பெருந்தொகைப் பாடல் பாடங்களை உரைவிளக்கத்தில் காணலாம்.

திட்ட வட்டமாக அறியப் பட்ட பெரும் பொருள் விளக்க வெண்பாக்கள் மட்டுமே உரைவிளக்கம் பெற்றுள்ளமையால், அவற்றின் நயம் மட்டுமே இவண் குறிக்கப்படுகின்றதாம்.

உந்தும் உணர்வு:

உந்தும் உணர்வில் வெளிப்படும் பாடலே உலகோர், உள்ளத்திலும் உரையிலும் உலாக் கொள்ளும் உவப்புடையதாகத் திகழும். ஏனையவை தடம் பதியாமலும் இடம் பதியாமலும் அமைந்துவிடும். பெரும்பொருள் விளக்க வெண்பாக்களின் சீர்மை முன் வகையைச் சார்ந்தனவாம்.

வீறு மிக்கவன் வேந்தன்.

மாறுபடு மறப்போரை மதியாத அறப்போராளி அவன்.

அவனிடம் அமைந்த வீரர்களோ, அவன் இயல்பே இயல்பாகிவிட்ட பெருமையர்!

மானம்வரின் மண்ணுலகுமுழுதும் கிடைப்பினும் கொள்ளாராய் மானம் கெடாரின் உயிரையும் மதியாத உரவோராய்த் திகழ்பவர்.

தம் வீறு தமக்கேயன்றித் தம் வேந்தனுக்கும் நாட்டுக்கும் எள்ளத்தனை அளவும் தாழ்வு தந்து விடா வகையில் பெருமை போற்றிக் காப்பவர்.

அவர் செயல்கண்டு விம்மித முறுபவன் வேந்தன்.

பகைப்படை வெள்ளமெனப் பெருகி வந்தது.

உள்ளஞ் சோரா வீரர்கள் உவகைப் பேறாகித் தாக்கினர்.

உயிரச்சம் ஆட்ட ஆட்ட எதிரிட மாட்டாராய் ஓட்டமெடுத்தனர் பகைவருள் பலர். உரனிழந்து வீழ்ந்தவர் பலர்; உயிர் ஒடுங்கியவர் பலர்

ஆயினும், ஒரோ ஒரு வீரன் மட்டும் நிலை குலையாது நின்று போரிட்டான்!

அச்சம் அறியானாக அமர்புரிந்தான்!

கடைசி மூச்சு மட்டும் கலக்கம் இல்லானாய்க் களிப்புடன் போரிட்டு அமரன் ஆனான்!

அவனொடு வந்தோர் அவனுக்கு அருகில் எவரும் இலர்!

தனியொருவனாக விழுப்புண் உடலுடன் வீழ்ந்து கிடக்க விட்டுவைத்தல் வீரர்க்கு விழுப்பமாமோ?

வீரனுக்கு வீரன் தானே உறவு! வீரன் வீழ்ந்த பின்னே பகையென்னும் வீம்பும் வெறுப்பும் தலைகாட்டின் அவன் வீரன் ஆவானா?

இறந்த வீரனை இருந்த வீரர்கள் பகைப்படையன் எனப்பாராமல், அவனைக் கொன்றாரே உறவாக நின்றார்.

வீரவழிபாடு செய்வாராய், வாளைச் சுழற்றிச் சுழற்றி ஆடினார்.

இறந்தவன் புகழையெல்லாம் சொல்லிச் சொல்லி முழங்கினார்.

அவன் வீழ்ந்த களத்தில் அவன் காலடி மண்ணை அள்ளி எடுத்துத் தம் தலைக்குப் பூவெனச் சூடினார்.

இவற்றையெல்லாம் வேந்தன் கண்குளிரக் கண்டான். வீரர்களினும் விஞ்ச உவகை பூத்தான்.

இக் காட்சியைப் பெரும் பொருள் விளக்கம் பாடுகின்றது:

'ஆளும் குரிசில் உவகைக்(கு) அளவென்னாம்
கேளின்றிக் கொன்றாரே கேளாகி - வாள் வீசி

ஆடினார் ஆர்த்தார் அடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து' (23)

என்பது அது

'பேராண்மை என்ப தறுகண் ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு'

என்பார் திருவள்ளுவர். இப் படைச் செருக்குக் குறளின் மெய்ப்பிப்பு எனஇப்பெரும் பொருள் விளக்க வெண்பா அமைந்துள்ளது.

ஆளுங் குரிசில் என்னும் வெண்பா புறத்திரட்டில் அமர் (121) என்னும் துறையில் இடம் பெற்றது (1348). இதனைப் புறத்திணை இயலில்

'களிற்றொடு பட்ட வேந்தனை அட்டவேந்தன் வாளோர் ஆடும்
அமலை'

என்னும் தும்பைத் திணைத் துறைக்கு எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார். நச்.

பகையால் கொன்றார், கொன்றபின்னரும் பகையாய் நின்றாரா?
இல்லை; அவர் கேளிராகி விட்டார்!
கேளிர் எவரும் இல்லாமலே கேளிராகி விட்டார்!
எவர் பகைவராக இருந்தாரோ அவரே உறவினராகி விட்டார்!
உறவினர் செய்யாச் சிறப்பெல்லாம் செய்து வீரவழிபாடு புரிந்தார்.
மெய்ம்மை வீரர் எப்படி இருப்பர்?
இவ்வீரர்கள் போல் இருப்பர்!
மெய்யாம் தலைவர் எப்படி இருப்பர்?
இக் குரிசில் போலவே உவந்து பாராட்டி மதிப்பவராக இருப்பர்! படைஞரும் தலைவரும் கொள்ளும் உரிமைத் தொடர்பு எப்படியிருக்கும்?
பகையைத் தாக்குதலிலும், வென்று வீறு காட்டும் நிலையிலும் அறமும் அருளும் பேணுநராய்த் தலைமைக்குப் பெருமையும் பேருவகையும் சேர்ப்பர்!

வள்ளுவர் வாய்மொழி வாய்மொழியாய்க் காட்டும் இப்பாட்டு, தமிழர் அறப்போர்ப் பண்பாட்டுச் சான்றாம்!

'யான் என்கண்ணால் ஈழவிடுதலைகாண விழைந்தேன். அது கூட வில்லை. என் கண்கள் பறியுண்ணப் போகின்ற நிலையில் ஒன்று வேண்டுகின்றேன். அது என் கண்களைப் பார்வை இழந்தாக்குக் கொடையாகக் கொடுத்தால், அவர் என்கண்ணால் விடுதலை ஈழத்தைக் காணும் பேறாவது வாய்க்கும்' என்ற பெருவீரன் குட்டி மணியின் கண்களை அவன் விருப்பப்படி செய்திருப்பின் பேராண்மையும் ஊராண்மையுமாகச் சிறந்திருக்கும்! அப்பேற்றைப் பெற வீரமுடையார்க்கு எத்தகைய அருளறப் பண்பாடு வேண்டும். அஃதில்லாக் கோழையர், மணியின் விழிமணிகளைத் தோண்டிக் கீழே

வீசிச் செருப்புக்காலால் மிதித்தனர் என்னும் செய்தியை அறியும் போது கம்பர் உரைக்குமாறு 'செருப்படியில் பொடி யொவ்வா மானுடராக' அவர் இழிவுறுதலே வெளிப்படுகின்றதாம்.

'ஆடினார் ஆர்த்தார் அடிதோய்ந்த மண்டாங்கிச்
சூடினார் வீய்ந்தானைச் சூழ்ந்து'

இதனை மனப்பொருளாக்க இரண்டுமுறை ஓதிய அளவு போதும்தானே! பாட்டு என்பது சொல்லாலும் அமைப்பாலும், பொருளாலும் 'என்னை மனப்பாடம் செய்' எனத் தானே ஏவுவதாக இருக்க வேண்டும். அத்தகையதொரு பாட்டு இதுவாம்.

காட்டுக்கு மேயச் சென்ற பசு வீட்டுக்குத் திரும்புதலை நோக்கிய எதிர்பார்ப்பில், தவிக்கும் கன்றை நோக்கிய ஆயச்சிறுமியின் தவிப்பினை

'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள்; கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்'

ஆகக் காட்சி வழங்குதலை, *முல்லைப்பாட்டு* உளவியல் தேர்ந்து உரைக்கும் (12 - 16). இதோ பெரும் பொருள் விளக்கம் ஓர் அரிய காட்சியை வழங்குகின்றது.

பகைவர், பசுக்களைக் கவர்ந்து சென்று விட்டனர்!
'போருக்கு வா' என்பதன் அழைப்புத்தானே அது?
பொருள் இழப்பு என்ற அளவில் இப்பசுவைக் கவர்தல் ஆகாதே!
அதனை மீட்டுக் கொண்டு செல்ல வில்லை என்றால், பெரிய மான
இழப்பும் அல்லவோ ஆகும்!

அதனால் வெட்சி மாலை சூடிக் கவர்ந்து கொண்டு சென்ற பகைவரைத் தொடர்ந்து, கரந்தை மாலை சூடிக் கொண்டு பசுவை மீட்டச் சென்றனர். மீட்டும் திரும்பினர்! திரும்பிய பசுவையும் மீட்டித்திரும்பிய மகனையும் காண்கிறாள் அன்னை! அவள் உணர்வினைப் படமாக்கிக் காட்டுகிறது பெரும் பொருள் விளக்கம்.

'காட்டகம் சென்றுயிர் போற்றான் கடுஞ்சுரையான்
மீட்ட மகனை வினவுறாள் - ஓட்டந்து
தனனெதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக் கலுழும்
என்னெதிர்ப் பட்டாயோ என்று' (8)

இப்பாடலை, **நிரைமீட்சி** என்னும் அதிகாரவைப்பில் தருகிறது புறத்திரட்டு (1249) **'நுவலுழித் தோற்றம்'** என்னும் வெட்சிப் புறத்துறையில் இப்பாடலை வைக்கிறார் நச்சினார்க்கினியர். 'நுவலுழித் தோற்றமாவது, பாடிவீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்ததற்குக் காரணமான

நிரை கொண்டோர் வரவும், ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைமீட்டோர் வரவும்' என்று உரை விரித்துப் பின்னதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார் இனியர் (3).

பள்ளமே மேடே, ஓடையே உடைப்பே, முள்ளே முடுக்கே என்றுள்ள இடத்திற்குத் தன்னுயிரைப் பெரிதெனக் கருதாமல் சென்றவன்மைந்தன். தப்பிப்போன - தவறிப்போன - ஆன் அன்று அது! பகைவரால் கவரப்பட்ட ஆன் அதனை மீட்டு வரல் அருமை பெரிது. பகையை வென்றால் அன்றி, மீட்டற்கு இயலாது. பகைவரும் எளியர் அல்லர். எளியராயின் ஆன் கவர்ந்து போர்க்கு நாள் செய்திருக்கமாட்டார். அவரை வென்று வந்த மகனைப் 'புண்படாது வந்தாயோ', 'அல்லல் இன்றி வந்தாயோ' என்று ஒரு சொல்தானும் கேளாதவளாய் - அவன் செயற்கருஞ் செயல் செய்த சீர்மையையும் பாராட்டாளாய் - ஆவைத் தழுவிக் கொள்கிறாள். கட்டிப் பிடித்து வழிய வழியக் கண்ணீர் சொரிகின்றாள். என்ன துயரெல்லாம் எதிர்ப்பட்டாயோ, இப்படி யாயிற்றே' என்று புலம்புகின்றாள். எவள்? தாய்? தான் பெற்ற மகன் மீட்சியைப் பற்றி மகிழாமல், உரையாடாமல் ஆன்மீட்சிக்கே ஆய் இன்பக் கண்ணீர் வடிக்கின்றாள். மறுமொழி சொல்ல அறியா ஆனொடு உரையாடுகின்றாள்! என்ன விந்தை இது!

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் சான்றோன் எனக் கண்ட தாயாக அவள் இருந்தும், அவனைக் கண்டும் காணாதவளாக அணித்தே கன்றீன்ற ஆனின் வரவுக்கே மகிழ்ந்தாளாகிய மையல் என்ன? எனத் தோன்றலாம்!

தாயைப் பிரிந்த கன்றின் தத்தளிப்பை அத்தாயுள்ளம் அறியாதா? கன்றைப்பிரிந்த தாயின் உள்ளத்தின் உருக்கத்தையும் உலைவையும் அத்தாயுள்ளம் அறியாதா?

தன் இனிய மகன்றன் ஆற்றலையும் தன் குடிச்சிறப்பையும் அறியாளா அத்தாய்?

தன் ஆன் மட்டுமோ கவரப்பட்டது. மந்தை மாடுகள் எல்லாமும் அல்லவோ கவர்ந்து கொள்ளப்பட்டன! ஒவ்வொருவர் வீடும், ஆன்மீட்சி மகிழ்வாகலே தளிர்க்கும் என்பதன் சான்றுதானே இவ்வொருதாயின் உவகைக் கண்ணீர்!

தன் ஆனையே அன்றி அயலார் ஆன்களையும் கவரவல்லவன்! தன் வயிற்றகத்துத் தவழ்ந்து குடிப்பெருஞ்சார்பில் திகழ்ந்து புலிப்போத்தெனப் புறப்பட்ட தன்மகனுக்கு வெற்றியன்றி வேறொன்று எய்தாது என்பதை அறிவாளே!

அடுக்கி வரும் அல்லல்களை யெல்லாம் அல்லலுக்கு ஆட்படச் செய்ய வல்ல அரியேறாம் தன்மகனைப் பற்றிய மீட்சி என்ன அரிதேயோ?

தானே மீண்டுவர ஆற்றலும் அறிதிறமும் இல்லாத ஆனின் மீட்சி அல்லவோ மீட்சிப் பேறு!

தாயின் அவலமும் சேயின் கவலையும் ஒருங்கே ஒழிந்த பேறு அல்லவோ ஆனின் மீட்சி!

'ஆன் மீட்ட மகனை வினவுறாள்'
'ஆத் தழீஇக் கலுழ்ந்து என் எதிர்ப்பட்டாயோ என்று' (வினவுவாள்)
என்னும் இயற்கை முரண் எத்தகைய நயமானது!

மகனை எனவாளா கூறாமல், மீட்டமகனை, கடுஞ்சுரையான் மீட்டமகனை, உயிர்போற்றான் மீட்டமகனை, காட்டகஞ்சென்று மீட்டமகனை என அடைபல காட்டி நடை நயம் தீட்டிய இப்பாட்டு தமிழ்ப் பெரும் பொருளே அல்லவோ!

ஓட்டத்தைத்தந்து என்னும் பொருள் சிறக்க 'ஓட்டந்து' என்றொரு புத்தாட்சியைத் தந்த சீர்மைதான் என்ன!

'தன்னெதிர் தோன்றும்' ஆனியிடம் 'என் எதிர்ப்பட்டாயோ?' என்னும் எதுகைச்சீர்மை வினாவெழில்தான் என்ன!

பெரும் பொருளார் 'பெரும் பொருளாரேயாம்!

கொற்றவை வழிபாடு பழமை மிக்கது. வெற்றியையே அன்னையாக்கி வழிபடும் வழிபாடு அது. கொற்ற + அவ்வை = கொற்றவை! கொற்றம். வெற்றி. 'கொற்றக்குடை' வேந்தர் குடை அல்லவோ! கொற்றவன், அரசன் அல்லனோ!

துடிப்பறை கொட்டலும் துடிப்பாக வினையாற்றலும் மிக்கது கொற்றவை நிலைப்புறத்துறையாகும். அது வெட்சித்துறை சார்ந்தது. அதனை,

'மறங்கடைக் கூட்டிய துடிநிலை
சிறந்த கொற்றவை நிலை'

என்று கூறும் தொல்காப்பியம் (புறத்.4). இத்துறையைத் துடி நிலை, கொற்றவை நிலை என இரண்டாக்கிக் கொள்ளும் புறப்பொருள் வெண்பா மாலை. அது

'ஒளியின் நீங்கா விறற்படையோள்
அளியின் நீங்கா அருளுரைத் தன்று'

எனக் கொற்றவை நிலையின் இலக்கணம் கூறும். மேலும் வஞ்சித்திணையிலும் கொற்றவை நிலையைக் குறிக்கும் புறப் பொருள் வெண்பாமாலை, இருவகை நெறியதாய் அதனைக் காட்டும்.

நீடோளாள் வென்றி கொள்கென
நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங்காணும்
கொற்றவை நிலை உரைத்தன்று'

எனவும்,

மைந்துடை யாடவர் செய்தொழில் கூறலும் அந்தமில் புலவர் அதுவென மொழிப' எனவும் அதன் இலக்கணம் கூறப்படும். (வஞ்சி.5,6) அது கொற்றவஞ்சி கொற்ற வள்ளை என்பவற்றையும் விரித்துரைக்கும். இவற்றுக்கு அடியாக வஞ்சித் திணையில் கொற்றவள்ளை என்ப தொன்றைச் சுட்டும் தொல்காப்பியம். அது 'குன்றாச்சிறப்பின் கொற்ற வள்ளை' என்பது (புறத்.8)

'வெற்றிவேற்றடக்கைக் கொற்றவை' எனப்படும் தாய்த் தெய்வ வழிபாடு, வீரர்கள் வழிபாடாகவே பெரிதும் இருந்துள்ளது. புறத்திணையில் பூரிக்க வழிபடும் இறையாகத் திகழ்ந்துள்ளார் கொற்றவை.

'வந்த நிரையின் இருப்பு மணியுடன்
எந்தலை நின்றலை யான் தருவன் - முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றம் கொடு'

என்பது பெரும் பொருள் விளக்கம். இவ்வெண்பா 'புறத்திரட்டில் நிரைகோடல் பகுதியில் இடம் பெறுகின்றது (1238). வெட்சித் திணையில் கொற்றவைக்குப் பரவுக்கடன் பூண்டது (தெய்வம் பராயது) என்று வருவித்துக் கொள்ளும் துறைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்;

பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்டு வெற்றியோடு திரும்பிய வீரன் ஒருவன், கொற்றவை திருமுன் நின்று கூறுவதாக அமைந்தது இப்பாட்டு.

'கொற்றவை' என்று விளித்துத் தன் வேண்டுகையைத் தெரிவிக்கிறான். நிரையின் கழுத்தில் அணியப்படுவது மணி. மீட்ட நிரையின் மணியை எடுத்துக் கொண்டு வந்த வீரன், 'அம்மையே, ஆன் கழுத்து மணியோடு, என் கழுத்தை அரிந்து யான் என் தலையையும் படையலாக வழங்குவேன்: இவ்விரண்டையும் பெற்றுக் கொண்டு ஒன்றே ஒன்று வழங்குதல் வேண்டும். அது வீறு மிக்களம் வேந்தன் செங்கோல் சிறக்கும் வகையில் போரில் அவனுக்கு வெற்றியைத் தருவாயாக' எனவேண்டுகின்றான்.

கொற்றவை கொற்றம் கொடு' என்னும் முடிநிலை, முச்சீரில் முற்று மோனையாய் முடிகின்றது.

நீவறிதே வழங்க வேண்டும் என்று கூறானாய், மற்றவை பெற்றுக் கொற்றம் கொடு என்கிறான்.

அக்கொடையும் நீ கொடுத்த பின்னர் யான் வழங்குவேன் என்பது இல்லாமல், முன்னாகவே நீ ஒன்றுக்கு இரண்டாகப் பெற்றுக் கொண்டு வழங்கு' என்கிறான்.

கேட்பதும் என் நலம் குறித்தது அன்று நாட்டு நலம் குறித்தது என்பானாய்' வேந்தன் கோலோங்க' என்கிறான்,

வேந்தனும் எளியனும் அஞ்சும் இயல்பினனும் அல்லன் என்பானாய், 'வயவேந்தன்' என்றான். அவன் நின் அருள் இன்றியும் வெல்ல வல்லவன் தான்; எனினும் நின்னருள் பாலிப்புத்தானே நிறை பாலிப்பு என்பானாய் 'வய' (வெற்றி) என்று வேந்தனுக்கு அடைதந்தான்.

என்றலை நின்றலை யான்தருவேன் என்னும் சொல்லழகும் தொடையழகும் பாவலர் தொடுக்கும் தொடைத்திறம் காட்டுவதாம்.

நிரை மீட்சியின் பின்னே என்ன போர், போரிட்டுத்தானே ஆனிரை மீட்சியாயது என்னின், போர் தொடங்கும் என்பதன் அறிகுறிதானே ஆவைக் கவர்தல்; அதன் பின்னர்ப் போராட்டம் உண்டு என்பது வெளிப்படைதானே! ஆதலால் கொற்றம் கொடு' என்றானாம்.

தன் தலையை அரிந்து தானே கொடுப்பனோ எனப் பரணிநூல் பயின்றாரும், வீரரியல் அறிந்தாரும் ஐயுற்று வினவார்!

'அடிக் கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ'

என்பது கலிங்கத்துப்பரணிக் கோயில் பாடியது (111)

பாசறை என்பது பழஞ்சொல்; இன்றும் பெருவழக்காக வழங்கும் சொல் அதன் பொருள் அந்நாளில் காரணத்தொடும் அமைந்திருந்தது. பாசறை என்பது போர்ப் படைஞர் தங்குதற்காக அமைக்கப்பட்ட குடியிருக்கை. பசுமையான இலை, தழை, கிளை ஆகியவற்றைக் கொண்டு இலைவீடுகளாக அமைக்கப்பட்டவை பாசறை எனப்பட்டன. பாசடை என்பது பச்சை இலை; பாசறை என்பது பசுமை இல்லம் என்பதாம். பச்சைக்காய்களில் ஆக்கப்படுவன பச்சி, பச்சணி, பச்சடி எனவழக்கப்படுதல் அறிக; பச்சை பாசம், பாசி என நீளலும் அறிக.

பாசறைக்குப் 'பாடி' என்பதும் ஒருபெயர். பாடியாவது கண்மூடித்துயிலுமிடம் என்பதாம் கண்பாடு என்பது உறக்கம். நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள், யாதொன்றும் கண்பாடரிது' என்பது திருக்குறள். கண்பாடு - கண்ணுறக்கம்; அவ்விடம் பாடுறும் இடம்; பாடு; பாடி ஆயிற்று.

'பாசறை பற்றிய பெரும் பொருள் விளக்க வெண்பாக்கள் புறத்திரட்டில் மூன்றுள. அவற்றுள் ஒன்று வருமாறு (1273)

'தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சிய சீர்ப் பாசறை வேந்தன் - விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்... (14)

வஞ்சித்திணைத் துறைகளுள் ஒன்றாய தழிஞ்சித்துறைக்கு இவ்வெண்பாவைக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர் (புறத்திணை. 7).

தழிஞ்சி இன்னது என்பதை 'அழிபடை தட்டோர் தழிஞ்சி' என்பார் தொல்காப்பியர்'. வென்றும் தோற்றும் மீண்டவேந்தர், தம்படையாளர் முன்பு போர் செய்துழிக் கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக் கொண்டழிந்தவர்களைத் தாம் சென்றும் பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக்கோடல்' என்று விளக்கி, தழிச்சுதல் தழிஞ்சி யாயிற்று என்று சொல்லமைதியும் காட்டுவார் நச்சினார்க்கினியர்.

தழிஞ்சிக்கு எடுத்துக் காட்டுக் கூறுவார்போல் 'தழிச்சிய வாட்புண்ணோர்' என்றே பாடலைத் தொடங்குதல் நூலியல் இயம்பத் தக்கது. திணைதுறை கூறப்பட்ட இலக்கணமாம் பெரும் பொருளுக்கு விளக்கமாம் வெண்பாக்கூறுவது என்பதை வெளிப்படுப்பது. புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சித் தழிஞ்சி, காஞ்சித் தழிஞ்சி என இரண்டும் கூறும். தொல்காப்பியமோ வஞ்சித் ழிலுசி கூறிற்று. பாசறைச் செய்தி யுண்மையால் புறத்திரட்டு பாசறை அதிகாரத்தில் (113) வைத்தது.

தழுவுதல் தழிஞ்சியாம். குடிதழீஇ; அடிதழீஇ (544) என்பன குறள். 'சந்தம் கமழும் தோளாய் தழுவிக் கொளவா' என்பது கம்பர்; 'தழூஉப் பிணையூஉ நின்ற' குரவையைக் குறிக்கும் பத்துப்பாட்டு (மதுரைக்.614 - 5)

புண்ணோன் இல்லம் என்றது பாசறைக் குடிலை. ஒருவர் அல்லராய்ப் புண்ணோர் பலர் ஆகலின் புண்ணோர் தம் இல்லம்' எனப் பன்மையுறப் பகர்ந்தார். பழித்தலுக்கு ஆட்படாமல் பரவுதலுக்குரிய சீர்மையுடைய மன்னன் ஆகலின், 'பழிச்சிய சீர் வேந்தன்' என்றார்.

வீரர் இளந்தாடியர் ஆகலின் 'புல்லணலார்' எனப்பட்டார். 'புல்'லின் சிற்றளவு, 'புன்கணீர்' ஒப்பதாம். புண் கடுமைமிக்கது என்பாராய் 'வெய்துயிர்க்கும் புண்' என்றார். கனிவினும் கனிவாய் அமைந்த சொல் காவலன் சொல் ஆகலின், 'சொல்லிய சொல்லே மருந்தாய்' என்றார். 'பரிவினும் சிறந்த மருந்து பாரில் இல்லை' என்னும் மனவியல் மாண்புக் குறிப்பு இஃதாம். ஆறியது என்பது வலி தீர்ந்த அளவிலா நிற்கும். தூர்தலோ குழிப்புண்ணாக இருந்தது ஆறி மேடிட்ட நிலையைக் குறிப்பதாம். ஆறிய சிறப்புரைக்கத்தூர்ந்தன என்றார்.

'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு...
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரு வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே'

என நெடுநல்வாடை இப்பாசறை நிலையை விரித்துக்கூறுதல் ஒப்பிட்டுக் காணத்தக்கதாம். எஞ்சிய நயங்களை இப்பாடல் விளக்கத்தில் கண்டு கொள்க.

உவமை:

ஓதுதலில் சிறந்த ஓதுதல் பொருளுணர்ந்து ஓதுதல். அப் பொருளுணர்ந்து ஓதுதலுக்கு உலகவரும் சிறப்பாகத் தமிழரும் கண்ட

ஒருவழி உவமைப்படுத்திக் கூறுதலாகும். உவமைச் சிறப்பே 'அணியெனக் பாராட்டும் உயர் அழகுக்குப் பாக்களை ஆட்படுத்திற்று. உவமை உருபுகள் ஐம்பதிற்கு மேலும் விரிந்துள்ள பான்மையை அறிவார் அதன் சிறப்பினைத் தெளிவார். உவமை, பொருள், ஒப்புச் சொல், ஒப்புமை என்பவற்றாலும், அவற்றை ஆளும் முறையாலும், பல்வேறு அணி நயங்களாய்க் கிளைத்தமை தொல் உவமையியலாலும், பிற அணிநூல்களாலும், விரிந்த இலக்கியப் படைப்புகளாலும் இனிது விளங்கும்.

இப்பெரும் பொருள் விளக்கமோ தன் பாடல்களுள் செம்பாதிக்கு மேல் உவமை நயங் கொண்டு திகழ்கின்றது. ஒரு பாடலில் ஒன்றற்கு மேலும் உவமை கொண்டும் சிறக்கின்றது.

கால், தலை, கை யுடையாரை யெல்லாம் மாந்தர் என்னும் பொதுப் பெயரால் வழங்கி விடுகிறோம். இவ்வாறு உறுப்புப் பொதுமை மாந்தப் பொதுமையாகுமா? பண்பு நலம் ஒத்திருத்தல் அல்லவோ மாந்தப் பொதுமை என்னும் திருக்குறள். பெரும் பொருளோ, மின்னும் பொன்னும் பொன்தான்! இரும்பும் பொன்தான்! பொன் என்னும் பொதுப் பெயரையன்றித் தன்மையாலும் சிறப்பாலும் பொதுமை யுண்டோ? என்கிறது.

இயன்றதையெல்லாம் இல்லை என்னாமல் ஈபவரும் மாந்தர் தாம்! இருப்பதையும் இல்லை என்று மறைந்து கொள்பவரும் மாந்தர் தாம்! இவர், மாந்தப் பொது நிலையர் ஆவரோ, என்கிறது பெரும் பொருள் விளக்கம் 'கொடுப்போர் ஏத்திக் கொடா அர்ப்பழித்தலுக்கு எடுத்துக் காட்டுகிறார் இனியர் இப்பாடலை.

'மின்னும் தமனியமும் வெற்றிரும்பும் ஓரினமாய்ப்
பொன்னின் பெயர் படைத்தாற் போலாதே - கொன்னே
ஒளிப்பாரு மக்களாய் ஒல்லுவ தாங்கே
அளிப்பாரு மக்களா மாறு' (40)

என்பது அது

தமனியம் - தங்கம்: பைம்பொன் என்பது அது. இரும்பு - கரும் பொன் என்பது பெயரால் ஒன்றாயினும் இயலால் எத்தகு வேற்றுமை என்று கூறி ஒளிப்பாரும் மக்கள், அளிப்பாரும் மக்கள் என மக்களொருமையை எய்தார் என்றார்.

கொன்னே என்பது பயன் செய்யாப் பதர் என்பதைக் காட்டும் இடைச்சொல்.

'அச்சம் பயமிலி காலம் பெருமையென்'
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே'

என்பது தொல்காப்பியம் (இடை.)

ஊக்கமிக்கவன் பகைக்கு அஞ்சினான் போலப் பின் வாங்குதலும், பின்னர்ப் பகைவன் ஒருங்கு அழிய முன்னேறித் தாக்குதலும் போரியல். இதனை

'ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து'

எனப் பேசும் திருக்குறள்.

ஆட்டுக்கடா ஒன்றொடு ஒன்று தாக்குங்கால் பின் சென்று விரைந்து முன்னோடி மின்னெனப் பாய்ந்து இடியென இடித்தல் காணக் கூடியதே. இதனை உவமைப்படுத்தியது திருக்குறள்.

போர் வீரர் தம் வீரப்பேற்றைக் குன்றாமல் குறையாமல் குலையாமல் காத்து வளர்த்தற்குச் செம்மறிக் கடாக்களை மோதவிட்டுக் காணல் வழக்கம். அந்நிலையில் பயின்ற வீரர் பின்வாங்கி முன்னேறி முட்டுதலைப் பெரும்பொருள் அரும்பொருளாகக் கூறுகின்றது.

'தாக்கற்குப் பேரும் தகர்போல் மதிலகத்து
ஊக்க முடையார் ஒதுங்கியும் -கார்க்கீண்டு
இடிபுறப் பட்டாங் கெதிரேற்றார்; மாற்றார்
அடிபுறத் தீடும் அரிது'

என்பது அது.

தகர் - ஆட்டுக்கடா. அகத்தோன் வீழ்ந்த புதுமைக்கு இதனை எடுத்துக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர்.

பாகித்தானிய இந்தியப் போரில் பாகித்தானியப்படை இந்திய மண்ணுள் புகுங்காலைத் தடுக்காது இந்தியப்படை பின்வாங்கி ஒதுங்கியதும், பகைப்படைகளும் ஊர்திகளும் பல்க வந்த பின்னர் அவை வந்த வழியாய் இருந்த ஒரே ஒரு பாலத்தைத் தகர்த்துச் சுற்றி வளைத்து ஒட்டு மொத்தமாகப் பற்றிக் கொண்டதுமாகிய வரலாற்றுச் செய்தி இவண் எண்ணத் தக்கதாம்.

கார்க்கு ஈண்டு எனவும், கார்க் கீண்டு எனவும் இரட்டுறல்பட நின்றது கார்க்கீண்டு. கீண்டு-கிழித்து. ஈண்டு-நெருங்கி.

மல்கும் உவமை:

'வெட்சிப்பூவைச் சூடிகொண்டு வீரர்கள் கூடிச் செல்லுதல்
செவ்வானம் பரவிச் செல்வது போன்றது என்றும், (1)
கப்பிய காரிருளில் காட்டுள் செல்லும் வீரர்
முகபடாம் அணிந்த களிறு போல்வார் என்றும் (4)
புது வெள்ளப் பாய்வு போல வீரர் வழிகளில்
ஆரவாரித்துச் சென்றார் என்றும் (5)
அன்று பிறந்த கன்றும் ஆவை அறிதல்போல்
ஆன் அவ்வவ் வில்லம் சேர்ந்தன என்றும் (9)

போரியல்மாறாப்புலியுறையும்மலைபோல்அஞ்சத்தக்கது மதில்என்றும் (18)
குன்றின் மேல் விளங்கும் திங்கள் போன்றது கொற்றக் குடை என்றும் (20)
மற்றைக் குடைகள் விண்மீன்கள் போன்றன என்றும் (20)
வானளாவிய அரணம் முகிலை ஒப்பது என்றும், ஆங்கிருந்து எழுந்த பகைவர் ஊர் அழிவு, தாய் வாங்கு பிள்ளையைப் பேய் வாங்கிய தன்மையது என்றும் (24)
தலையற்ற குறையுடலம் துள்ளல் வீரர்கள் விண்ணகம் விரும்பிச் செல்லுதல் போன்றது (27) என்றும்,
மலையும் மலையும் தாக்கல்போல் களிறும் களிறும் தாக்கின என்றும்
களிற்றின் மேல் தோன்றிய தோலா வீரர், மலையுறை தெய்வம் போல்வார் என்றும் (28)
வெண்குடையைப் பற்றும் களிற்றின் கை, மதியைப் பற்றும் கருநிழல் (கிரகணம்) என்றும் (29)
நெய்விடப்பட்ட தீ விளக்க முறுவது போல் அந்தணர் ஒளிமிகும் செயல்களே புரிவர் என்றும் (34) உவமைப் படுத்துகிறார்.

அடக்கம் என்றதும் நினைவில் எழுவது 'உறுப்படக்கி' என்னும் ஆமையாம்.

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.'

என்பது வாய்மொழி. இவ்வுவமையைப் பலப்பரும் ஆண்டுளர். பெரும் பொருள் விளக்கத்தார் அரியவோர் உவமையைக் கூறுகிறார். வேந்தன் அரணைப் பற்ற எண்ணிய அளவில் அஞ்சி ஒதுங்காதார் எவரும் இலர். தானே செயலாற்றும் கோட்டைப் பொறிகளும் கூட, அறிவறிந்த ஆன்றோர் அடக்கம் போல் அடங்கி விட்டன என்கிறார். (25)

'வெஞ்சின வேந்தன் எயில்கோள் விரும்பியக்கால்
அஞ்சி ஒதுங்காதார் யாவரவர் - மஞ்சசூழ்
வான்தோய் புரிசைப் பொறியும் அடங்கினவால்
ஆன்றோர் அடக்கம்போல் ஆங்கு'

என்பது அது.

உருவகம்

சீற்றத்தையும் பசியையும் தீயாக உருவகப் படுத்தியும் பெரும்பொருள் பாடுகின்றது.

'மட்டவிழ் கண்ணி மறவேந்தன் ***சீற்றத்தீ***
விட்டெரிய விட்ட வகை'

என்றும் (16)

ஆறாத வெம்***பசித் தீ***யால் உயிர்பருகி
மாறா மறலி வயிறு.'

என்றும் (17) வருவன அவை.

உயர்வு நவிற்சி:

உயர்வு நவிற்சியணியையும் பெரும் பொருள் விளக்கம் கொண்டுள்ளது. வேந்தன் ஏவலால் வீரர் ஆகோளுக்குச் சென்றால், நாளை அவ்வாக்கள் தம் கன்றினை நினைத்துச் சுரந்தொழுகும் பாலால் ஊரே நனையும் என ஊரவர் கூற்றாகக் கூறுகிறார்.

'வாள்வலம் பெற்ற வயவேந்தன் ஏவலால்
தாள்வல் இளையவர் தாம் சொல்லின்-நாளைக்
கனைகுரல் நல்லாவின் தன்றுள்ளப் பாலின்
நனைவது போலுமிவ் வூர்'

என்பது அது.

ஆவின் பாலால் ஊரே நனையும் என்றது உயர்வு நவிற்சியாம்.

இயல்பு நவிற்சி

உள்ளது உள்ளவாறே கூறும் இயல்பு நவிற்சி யழகும் பெரும் பொருள் விளக்கம் கொண்டுள்ளது.

முதியோன் ஒருவனைக் குறிக்கும்போது,

'திரைகவுள் வெள்வாய்த் திரிந்து வீழ் தாடி
நரை முதியோன்'

என்கிறது (3) சுருக்கம் விழுந்த கன்னம், வெளிறியவாய், சுருண்டு தொங்கும் தாடி, நரை, முதுமை ஆகியவற்றைச் செறிந்த அமைவால் சிறந்த சொல்லால் உள்ளது உள்ளவாறே கூறும் அழகு உவகைப் பெருக்காம்.

முரண்:

முரண் என்பது நயத்தகும் அழகுகளுள் ஒன்றாம்.

வசை, இசை என்பவற்றை,

'வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.'

என்னும் குறளில் முரண் தொடையாக்கி முட்டாச் சிறப்பை எட்டச் செய்தாரல்லரோ திருவள்ளுவர். இப்படி எத்தனை எத்தனை முரண்களைத் தொகுத்து வாழ்க்கை அரண்களை அமைத்துள்ளார் அவர்!

இதோ பெரும் பொருளார், ஒரு வெண்பா இரு முரண்களை இனிதின் இயைத்து எழிலூட்டுகிறார்:

'விண்ணசைஇச் செல்கின்ற வேலிளையர் ஆர்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்றான் வாள்வேந்தன் - எண்ணம்
ஒருபாற் படர்தரக்கண் டொன்னார்தம் உள்ளம்
இருபாற் படுவ தெவன்'

என்பது அது.

முதல் முரண்:

இளையர், 'விண்ணசைஇச் செல்கின்றார்'

வேந்தன் 'மண்ணசைஇச் செல்கின்றான்'

என்பது. நசைஇ - விரும்பி விண் விருப்பும் மண் விருப்பும் முரண்கள் அல்லவோ!

இரண்டாம் முரண்:

இளையரும் வேந்தரும், 'ஒருபாற் படர்தரும் உள்ளத்தராதல்

பகைவரோ 'இருபாற்படும்' உள்ளத்தராதல்.

தாக்கவரும் தலைவனும் வீரரும் ஒன்றுபட்ட உள்ளத்தராக வந்த வரவே, பகைவரை அஞ்சச் செய்து ஒரு நிலைப்படாத உள்ளத்தராக்கி உலைந்தோட வைத்தது என்பதாம்.

கேளின்றிக் கேளாராய் இருந்தவரே கேளாகிய பெற்றிமையின் முரணை முன்னரே கண்டுள்ளோம்.(33) வெங்கண் வேந்தன் முன் வேனிலான் ஐங்கணை தோற்றமை சுட்டலும் அழகிய முரணாம்(36)

தொன்மம்:

தொன்ம (புராணச் செய்திகளையும்) பெரும் பொருள் விளக்கம் கொண்டமை அறிய வருகின்றது.

பகைவர் ஆற்றலை அழித்து ஆனை மீட்டதோள்,
கடற்பகை அழித்து மண்ணுலகை மீட்ட கரிய ஏனத்தின் (பன்றியின்)
கொம்பினை ஒப்பதாம் என ஒப்புக் கூறுதல் வழியாக ஒரு தொன்மச் செய்தியை உரைக்கிறது. அது,

'கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல் பெரி தெய்தின மாதோ - தொடலைக்
கர்ந்தை மறவர் கருதாதார் உள்ளத்
துர்ந்து நிரைமீட்ட தோள்

என்பது(6). இது வராகத் திருப்பிறப்புக் கதையாம்.

அறிவுடைமை இளையர்க்கு உண்டாகும்: முதியர்க்கு உண்டாகும் என்பது இல்லை, தன் தந்தை பாலின்பம் துய்ப்பதற்காகத் தன் பாலுணர்வையே ஒடுக்கிக் கொண்ட இளையனும் உளன் அல்லவோ என்கிறது பெரும் பொருள் விளக்கம். 'வீடுமன், நோன்பைக் குறிப்பது அது.

'இளையர் முதியர் எனவிருபால் பற்றி
விளையும் அறிவென்ன வேண்டா- இளையனாய்த்
தன்தாதை காமம் நுகர்தற்குத் தன்காமம்
ஒன்றாது நீத்தான் உளன்'

என்பது அவ்வெண்பா(39)

சொல்லாட்சி:

பெரிதும் செஞ்சொல்லாலேயே அமைந்த அருமையது பெரும் பொருள் விளக்கம். வேற்றுச்சொல் விரவா நடையில் வியன்சுவை சுரப்ப அமைந்த சொல்லாட்சியுடையது இது. இவ்வியல் இதன் காலப் பழமையைக் காட்டுவதாம்.

புகார் வணிகர் சிறப்பை,

'ஈட்டிய எல்லாம் இதன்பொருட் டென்பது
காட்டிய கைவண்மை காட்டினார்'

என்பது தனிப்பெரும் சொல்லாட்சியும் பொருளாட்சியும் உடையதாம்.

உழவர் மாண்பை,

'யானை நிரையுடைய தேரோ ரினும் சிறந்தார்
ஏனை நிரையுடைய ஏர்வாழ்நர் - யானைப்
படையோர்க்கும் வென்றி பயக்கும் பகட்டோர்
உடையோர்க் கரசரோ ஒப்பு'

என்பது ஒப்பிலாச் சிறப்பினதாம்.

*புரத்தலாம் காத்தலைப் **'புரவு'** என்கிறார்(13) பொருந்தாராம் பகைவரைப் **புல்லார்** என்கிறார்(13). புகை மண்டுதல், புகழ் மண்டுதல் என்பவை போலத் **'தேர் மண்டுத'**லைக் குறிப்பிடுகிறார்(15). கூற்றுவனை **'மறலி'** என்பதுடன் 'மாறாமறலி' என்று அடைதந்து வழங்குகிறார்(17). அகன்று விரிதலை **'அகலிய'** என ஆள்கிறார்(19). அச்சத்தால் கண்களை மூடிமூடித் திறத்தலைச் **'சும்பிளித்தல்'** எனப் புத்தாட்சி புரிகிறார்(19). மகிழ்வு தரும் கொழுநரை **'மகிழ்நர்'** என வழங்குகிறார்(21). நெடுநாள் வாழும் வாழ்வைக் கவர்தலை **'நீணாட்கோள்'** எனப்படைத்து மொழிகிறார்(21). அழித்தலை **'வீட்டல்'** என்கிறார்(24). புறமிட்டு ஓடுதல் அல்லது புறங்காட்டுதலைப் **புறத்தீடு** எனப் புகல்கிறார்(25).*

காயம் என்பது புண்பொருள் தந்து பின்னே வடுவுக்கு ஆகி, அது நிலைபேறாம் இயலில் காயம் - நிலைபேறு எனப்பொருள் தரும். அதற்கு 'உடல்' என்னும் பொருளும் போர்ப் புகழ்நிலைப் பேற்றால் உண்டாம். அதனால்,

'போர்க்குறிக் காயமே புகழின் காயம்'

*என்றார் பேராசிரியர் சுந்தரனார். இவர் **'காயத்து ஊறு அஞ்சாக் களிற்றை'** உரைக்கிறார்(28). புறத்தே புலப்பட உயர்த்திப் பிடித்தலைப் 'புறங்கணித்தல்' என்கிறார்(29). படர்ந்த முக படாத்தைப் **'படம்'** என்கிறார்(30). கதிரோனுக்கு **'வெய்யோன்'** எனவும், **'செய்யோன்'** எனவும் பெயர் வழக்குண்மையைக் கொண்டு இவர், வேந்தன் இயல்புக்கு அவ்விரண்டு நிலைகளையும் சுட்டுதல் நனி சிறப்பினதாம். **'செம்மல்'** என்னும் நிரம்பிய தன்மை விளங்க ஆட்சி புரிதலும் அருமையாம்(31). இடியால் இடிமுகிலும் இடியுண்ணும் என்பதை,*

'இடியால் இடிமுகிலும் ஏறுண்ணும்' என அழகொழுகக் கூறுகின்றார்(32).

'மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி, விண்ணொடு சார்த்தி விடும்'

என ஏணிமயக்கம்(23). கூறுதல், சொற்பொருட்பின்வருநிலை அழகாம். வீடு திரும்பும் ஆண் மெல்ல நடவாமல் விரைந்த விரைவை, தெள்ளறல் கான்யாற்றுத் தீ நீரைக் கடக்கும் வீரர், கீழே கிடக்கும் நீரைக் குடிக்கவும் விடாமல் ஓடவைத்தலால் விரைவுக் குறிப்பை உணர்த்தும் அழகு எண்ணி எண்ணி மகிழத் தக்கதாம்(7).

வாழ்த்து:

வெண்பாவால் இயலும் இவ்விளக்கத்தில் வரும் வாழ்த்துப்பா, மருட்பாவால் அமைந்துள்ளது. வாழ்த்து என்னும் அதிகாரத்தில் புறத்திரட்டில் புறப்பொருள் விளக்கப் பாட்டொன்று இடம் பெற்றுள்ளது. அதே பாடல் நச்சினார்க்கினியரால் புறநிலை வாழ்த்துக்கு எடுத்துக்காட்டாகப் புகலப்படுகின்றது.

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ'

என்பது அதன் இலக்கணம் (தொல் செய்.109)

தொல்காப்பியம்,

'கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே'

எனக் கைக்கிளைப் பாட்டின் இலக்கணம் கூறுகின்றது. மேலும்,

'புறநிலை வாயுறை செவியறி வுறூஉ எனத்
திறநிலை மூன்றும் திண்ணிதில் தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப'

என்றும் கூறுகிறது (செய் 118: 159)

ஆகலான், வஞ்சியும் கலியும் வாழ்த்து வகைக்கு ஆகாதென ஓதுக்கப்பட்டமையும் வெண்பாவும் அகவலும் ஆகுமெனக் கொள்ளப்பட்டமையும் அறியலாம். வெண்பா, அகவல் என்பவை தனிநிலைப்பாவாய் வாழ்த்துக்கு ஆயதுடன், வெண்பாவில் தொடங்கி அகவலில் முடியும் மருட்பா வாழ்த்துக்கு இயையும் எனக் கொண்டனர். மற்றும் இறையாம் நிறை தலைமையை உயிராம் தலைவி ஒன்ற வாழ்த்தும் வாழ்த்தியல் கைக்கிளை போல்வது எனக் கருதிய கருத்தால், அதற்குரியதாய் ஆசிரியர் ஓதிய வெண்பா வாகி ஆசிரிய இயலான்

முடியும் மருட்பாவைப் புறநிலை வாழ்த்துக்கு மேற் கொண்டனர் என அறிய வாய்க்கின்றது.

கைக்கிளையை மருட்பாவில் பாடிய புறப்பொருள் வெண்பா மாலையும், புறநிலை வாழ்த்து முதலியவற்றை அவ்வாறு பாடாமல் வெண்பா யாப்பில் பாடியமை எண்ணத் தக்கதாம்.

'கண்ணுதலோன் காக்க கடிநேமி யோன்காக்க
எண்ணிருதோள் ஏந்திழையாள் தான்காக்க - பண்ணியநூற்
சென்னியர்க் களிக்கும் செல்வனீ மன்னுக
நாளுமிம் மண்மிசை யானே'

என்பது பெரும் பொருள் விளக்கத்தால் அறியப்படும் வாழ்த்துப்பா இவ்வாழ்த்துடன் நூல் நிறைந்ததாகலாம். புறத்திரட்டு வாழ்த்து அதிகாரத்துடன்(131) பொருட்பால் நிறைகின்றது. அதில் இடம் பெற்ற பாட்டு இது.

இப்பாடலால் நெற்றிக் கண்ணன், சக்கரப் படையான், கொற்றவை ஆய மூவரையும் குறித்தலால். இவர் சமயச் சால்பு விளங்கும்.

இந்நூலை இயற்றியவனும், சென்னியாகிய சோழவேந்தர்க்குப் படையலாய் வழங்கியவனுமாகிய நூலாசிரியனை, அவன் நலத்திலே இன்பங் காண்பான் ஒருவன் வாழ்த்திய வாழ்த்தாக இருத்தல் வேண்டுமெனக் கருதலாம். 'பண்ணியநூல், சென்னியர்க்கு அளிக்கும் செல்வன்நீ மன்னுக' என்பதனால் இப்பொருள் கொள்ளவாய்க்கின்றது. இனிவேறு பாடல்களில் இக்குறிப்பினை உறுதி செய்யும் வாய்ப்பு வாயாமையால் இது கருதுகோளாகவே அமைவதாம்.

3. நூலும் உரைவிளக்கமும்

வெட்சித் திணை

நிரைகோடல்

(பகைவரின் பசுக்களைக் கவர்ந்து கொள்ளுதல்)

க) வெவ்வாய் மறவர் மிலைச்சிய வெட்சியால்
செவ்வானம் செல்வதுபோல் செல்கின்றார்-எவ்வாயும்
ஆர்க்கும் கழலொலி ஆங்கண் படாலியரோ
போர்க்கும் துடியொடு புக்கு. - பு.தி.1246.

மேற்கோள்: இது 'நிரைகோடற்கு எழுந்தோர் படையியங்கு அரவம்' கண்டோர் கூற்று. (தொல். புறத்.3. நச்.மேற்.)

பொருள் : கொதிக்கும் வாய்மொழியுடைய மறவர் சூடிய வெட்சிப் பூவால் செவ்வானம் பரவிச்செல்வதுபோல் செல்கின்றார். போர்விம்ம ஒலிக்கும் துடிப்பறையின் முழக்கத்துடன் சேர்ந்து எவ்விடத்தும் அவர்கள் கட்டிய கழலொலி அவியாதிருப்பதாக.

விளக்கம் : **'வெவ்வாள்' என்பதும் பாடம்.** ஆநிரை கவர்தற்குச் சினந்து செல்கின்றாராகலின் அவர்கள் கொதிப்பை வெளிக் காட்டலே சிறப்பாகலின் 'வெவ்வாய்' என்றல் பொருந்தும். வாய்சினந்துரைத்தல் கூறவே அகச்சினம் உண்மை பெறப்படும். ஆகோள் மறவர் வெட்சிப் பூச் சூடுவராகலின் 'மிலைச்சிய வெட்சி' என்றார். பறையொலியினும் விஞ்சக் கழலொலியே மறவர்க்கு இன்பமும் வீறும் ஊட்டுமாகலின், 'துடியொடு புக்கு ஆர்க்கும் கழலொலி படாலியரோ' என்றார். படாமை - ஒலியவிந்து பாடின்மை. ஆகோளுக்கு எழுங்கால் எழுந்தார் ஊர்க்கண் அறைந்தபறை இஃதாம். வீரரை ஒருக்கணித்துத் திரட்ட அறைந்த பறை என்க.

இயைப்பு :'மறவர் செவ்வானம் செல்வதுபோல் செல்கின்றார்; துடியொடு புக்குக் கழல் ஒலி படாலியரோ' என இயைக்க

(1)

நிரைகோடல்

(பகைவர் கவர்ந்து கொண்ட பசுக்களை மீளக் கொள்ளுதல்)

உ) அடியதிர் ஆர்ப்பினர் ஆபெயர்த்தற் கன்னாய்
கடிய மறவர் கதழ்ந்தார்- மடிநிரை

மீளாது மீளான் விறல் வெய்யோன் யாதாம்கொல்
வாளார் துடியார் வலம். - பு.தி. 1245.

மேற்கோள் : 'இது மீட்டற்கு எழுந்தோர் படையியங்கு அரவம்.
கண்டோர் கூற்று' (தொல். புறத். 3 நச்.)

பொருள் : அந்தோ! கடிய நடையால் அடி அதிரும் ஆரவார மிக்க கடுங்கண் மறவர், வெட்சியார் கவர்ந்த ஆநிரைகளைப் பெயர்த்தற்குச் சினந்தெழுந்தார். வலிமையால் பகைவரும் விரும்பும் அவர்கள் மடிவளம் பெருகிய ஆநிரைகளை மீட்டாமல் தாம் மீளார்; வாள் நெருங்க நின்று துடிகொட்டுவோர் பெறும் வளம் எத்துணைத்தாமோ? யாம் அறியேம்.

விளக்கம் : அடியதிர்தல் - நிலம் நடுங்க நடையிடல். வெட்சியார் ஆநிரை கவர்ந்தமை ஊர்க்கு உரைத்து ஒருங்குடன் செல்ல வேண்டிற்றாகலின் துடியொடும் ஆர்ப்பொடும் புறப்பட்டார் என்க. கதழ்தல் - எரியெனச் சினத்தல். ஈன்றணிய ஆக்களை நினைந்து 'மடிநிரை' என்றார். வாங்குநர் கைவருந்தும் அல்லது தான் குறையாத் தன்மையது என வளப் பெருக்குக் காட்டுவாராய் 'துடியர் வளம்யாதாம்?' என்றார். ஆபெயர்த்தோர் துடியர் முதலோர்க்கு எண்ணிப்பாராது ஈதல் வழக்கு ஆதலின்.

அன்னாய் என்பது அம்மா, ஐயோ, அந்தோ என்பனபோல இரங்கற் குறிப்பாம். விளியன்று.

இயைப்பு : 'ஆபெயர்த்தற்கு மறவர் கதழ்ந்தார்: நிரைமீளாது மீளார்; துடியர் வளம் யாதாம்?' என இயைக்க. (2)

பாக்கத்து விரிச்சி

(ஊர்ப்புறத்துக் கேட்ட நற்சொல்)

ங) திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோன் ஏற்றுரைத்த நற்சொல் - நிரையன்றி
எல்லைநீர் வையம் இறையோர்க் களிக்குமால்
வல்லையே சென்மின் வழி. பு.தி.1239.

மேற்கோள் : இது நிரைகோட்கு எழுந்தோர் கேட்ட விரிச்சி
(தொல். புறத்.3.நச்).

பொருள் : சுருக்கேறிய கன்னத்தையும் வெளிறிய வாயையும் கற்றையாய் வீழ்ந்து தொங்கும் மீசையையும் உடைய நரைமூத்தாளன் இப்பொழுது உரைத்த சொகினம் (சகுனம்), பகைவர் ஆநிரையை அன்றிக் கடல் சூழ்ந்த

நிலப்பரப்பை யெல்லாம் வேந்தர்க்குத் தரும்; ஆகலின் விரைந்து ஆகோளுக்குத் தக்க வழியிற் செல்க.

விளக்கம் : தாடி-மீசை: 'இரலை, மருப்பிற் றிரிந்து மிறந்து வீழ்தாடி' (கலி.15) என்பதால் இப்பொருளதாதல் அறிக. நற்சொல்லாவது விரிச்சி. இதனைச் சொகினம், பறவாப்புள், நல்வாய்ப்புள் எனவும் கூறுவர். செல்வார் செல்லும் வினை செவ்விதின் நிறைவேறச் சொல்லும் சொல்லும் (உருவிலிச்சொல் அல்லது அசரீரி) பறவை முதலியவற்றின் ஒலியும் விரிச்சி என்க. விரிச்சி கண்டும் கேட்டும் கூறுவோன் முதுமை விளங்கத் 'திரைகவுள்... முதியோன்' என்றார்.

'இன்று' என்பது இந்நாள் எனச் சுட்டாமல் இப்பொழுது எனக் குறித்து நின்றது. செல்வது நிரைகோடற்கே எனினும் பின் விளைவையும் எண்ணி 'நிரையன்றி' என்றான். இது முதியோன் உரையைக் கொண்டு கூறியது. நற்சொல்லின் நனிசிறப்பை ஓர்ந்து, 'எல்லைநீர்வையம் இறையோர்க்களிக்குமால்' என்றான். உலகம் பொது என்னும் சொல்லை வேந்தர் பொறார் என்பது வழக்காதலின் இவ்வாறுரைத்தான்.

வாய்க்குங்கால் வினையை விரைந்தாற்றல் முறைமையாகலின் 'குத்தொக்க சீர்த்த இடத்து' என்பதுபோல் (திருக்.490) 'வல்லை' என்றான். வல்லை-விரைந்து.

இயைப்பு : முதியோன் உரைத்த சொல் நிரையன்றி வையம் இறையோர்க்கு அளிக்கும்; வல்லைநீர் சென்மின்' என இயைக்க. (3)

செலவு

(செல்லுதல்)

௪) பிறப்புலம் என்னார் தமர்புலம் என்னார்
விறல் வெய்யோர் வீங்கிருட்கண் சென்றார் - நிறையும்
கடாஅம் செருக்கும் கடுங்களி யானை
படாஅ முகம்படுத் தாங்கு. - பு.தி.1240

மேற்கோள்: 'நிரைகோடற்கு எழுந்தோர் ஆண்டு நின்று மீண்டும் போய்ப்பற்றார் புலத்து ஒற்றர் உணராமல் பிற்றை ஞான்று சேறல்' - கண்டோர் கூற்று. தொல்.புறத்.3.நச்.

பொருள் : வலிய ஆகோள் மறவர் தாம் செல்லுமிடம் பிறர் நாட்டகத்தது என்று எண்ணாராகவும், தம் நாட்டகத்தது

என்றும் எண்ணாராகவும் நிறைந்த மதத்தால் செருக்குற்ற களிப்பில் திரியும் பரிய யானைக்கு முகபடாத்தை வைத்தாற் போலக் கப்பிக் கிடக்கும் காரிருள் இடையே சென்றார்.

விளக்கம் : இருள்கிடக்க வீரர் செல்லுதல் யானையின் முகபடாம் முற்படவும், யானையின் கருநிறம் பிற்படவும் காணும் காட்சியைக் காட்டுவதாம். வீரர் முகபடாமும், இருள் களிறுமாம்.

பிறர்புலம் எனின் அச்சம் மீதூரலும், தம் புலம் எனின் உரிமை மீதூரலும் ஏற்படும் ஆகலின் அவ்விரண்டும் இலராகச் சென்றார் வீரர் என்றற்குப், 'பிறர் புலம் என்னார் தம்புலம் என்னார்' என்றார். ஆங்கு - உவமை உருபு. 'ஆயிருட்கண் - 'அ' சுட்டு நீண்டது.

வீறு தோன்றுமிடத்து வெய்யோராதலேயன்றிப் பிறிதிடத்து விரும்பத் தக்கோராம் என்றற்கு 'விறல் வெய்யோர்' என்றார். யானையை, 'நிறையும் கடாஅம் செருக்கும் கடுங்களியானை' என்றது, அந்நிலையில் தறிகெட்டுப்பாகர் ஆணையையும் கடந்து எங்கும் மதர்த்துக் திரிதலைக் குறிக்கு முகத்தான் எங்கும் காரிருள் கப்பியுள்ளமை காட்டினார்.

இயைப்பு : 'விறல் வெவ்யோர், யானைப் படாஅம் முகம்படுத்தாங்கு, ஆயிருட்கண் சென்றார்' என இயைக். (4)

செலவு

(செல்லுதல்)

(ரு) கங்கை பரந்தாங்குக் கானப் பெருங்கவலை
எங்கும் மறவர் இரைத்தெழுந்தார் - நும் கிளைகள் மன்றுகாண்
வேட்கை மடிசுரப்பத் தோன்றுவ கன்றுகாண்
மெய்குளிப்பீர் கண்டு. பு.தி. 1246.

மேற்கோள்: இஃது ஆ பெயர்க்கச் செல்வோர் போகிய செலவு. கண்டோர் கூற்று. (தொல். புறத்.3.நச்.)

பொருள் : கங்கையாறு பரவிச் செல்வது போலக் காட்டில் அமைந்த பெரிய கவர்த்த வழிகளில் எல்லாம் வீரர் நிறைந்து எழுந்தனர். ஆதலால், கன்றுகளே நும் தாயராம் ஆக்கள் நீங்கள் உறையும் தொழுவினைக் காணும் ஆர்வத்தால் மடியில்பால் சுரந்து ஒழுக விரைந்தெய்தும். நீங்கள் மெய்யாகவே அவற்றைக் கண்டு மகிழ்வீர்.

விளக்கம் : ஆ மீட்டற்குச் செல்லும் படையின் பெருக்கத்தையும் அதன் விரைந்த செலவையும் குறிப்பாராய்க் 'கங்கை பரந்தாங்கு' என்றார். இது நச்சினார்க்கினியர் பாடம். கங்கை கவர்ந்தாங்கு என்பது புறத்திரட்டுப் பாடம். வீரர் செலவு குறித்ததாகலின் கவர்ந்து வருதலாம். பின்னிலையினும் பரந்து செல்லுதலாம். முன்னிலையே தகுமெனக் கொள்ளப்பட்டதாம்.

காட்டை ஊடறுத்துக் கொண்டு செல்லும் யாற்றைப் போல இவரும் காடும் இருளும் ஊடறுத்துச் சென்றார் எனக் கொள்க. கவலை-கவுர்த்த வழி. கன்றுள்ளிக் கனைப்பச் சோர்தல் 'ஈன்றணிய மாடுகளுக்கு இயல்பாகலின் 'மன்றுகாண் வேட்கை மடிசுரப்ப' என்றார்.

எழுந்த எழுச்சி கண்டே இவர் 'மெய்குளிப்பீர் கண்டு' என்றார், வீரர் மாட்டுக் கொண்ட உறுதிப்பாடும் அவர்காட்டிய எழுச்சிப்பாடும் ஊட்டிய தெளிவு பாட்டால் என்க.

இயைப்பு : கன்றுகாள்! மறவர் இரைத் தெழுந்தார்: நும்கிளைகள் தோன்றுவ: மெய் குளிப்பீர்' என இயைக்க. (5)

ஆகோள்

(ஆநிரைகளைக் கவர்தல்)

சா) கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரி தெய்தின மாதோ - தொடலைக்
கரந்தை மறவர் கருதாதார் உள்ளத்
துரந்து நிரைமீட்ட தோள். பு.தி.1247.

மேற்கோள் : 'தொடலைக் கரந்தை எனக் கரந்தை சூடினமை கூறினார்; தன்னுறு தொழிலான் நிரைமீட்டலின்' இது கண்டோர் கூற்று. (தொல். புறத். 3.நச்.)

பொருள் : கரந்தை மாலை சூடிப் பகைவர் கூட்டம் நினையுமாறு வென்று தம் ஆநிரைகளை மீட்டு வந்த தோளாற்றல், கடலின்கண் புகுந்து நிலத்தை மீட்டு வந்த கரிய வராகத்தின் கொம்புகளினும் மிகுந்த வலிமை பெற்றதாகும்.

விளக்கம் : இரணியாக்கன் என்பான் நிலத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டு கடலுள் புகுந்தானாகத் திருமால் பன்றியுருக் கொண்டு தன் கொம்பால் நிலத்தை மீட்டு வந்ததாகக் கூறப்படும் தொன்மத்தை (புராணத்தை) உட் கொண்ட

உவமை இது. வராகத்தின் கொம்பின் ஆற்றலைக் கரந்தையார் தோளாற்றலுக்கு உவமைப்படுத்தினார், இவர் வெட்சியார் கொண்டு சென்ற ஆக்களை மீட்டுவந்த வலியர் என்பதால். மிடல் - வலிமை. மாதோ - வியப்புப் பொருள் தருவதோர் இடைச் சொல்.

தொடலை - மாலை, தொடுக்கப்படுவது ஆகலின். இது பூவும் தளிரும் இலையும் கொண்டு தொடுக்கப் படுவது என்ப. கருதார் - பகைவர். கருதாதார் என்பவரும் அவர். **'கருதார் குழாஅம்'** என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் 'கருதாதார் உள்ள' என்றது ஈடு இணையிலாப் பீடுறுபெருமிதம் கருதி என்க. துரந்து - துளைத்து. துரப்பணம் என்னும் குடைகருவி யுண்மை அறிக. இனித் துரந்து என்பது எறிந்து (கொன்று) என்னும் பொருட்டதுமாம்.

இயைப்பு : 'கரந்தை மறவர் தோள் ஏனக் கோட்டின் மிடல் பெரிது எய்தின' என இயைக்க (6)

நோயின்றுய்த்தல்

(ஆநிரைகளுக்குத் துன்பம் இல்லாமல் பேணிக் கொண்டுவருதல்)

எ) கல்கெழு சீறூர்க் கடைகாண விருப்பினான் மெல்ல
நடவா விரையும் நிரையென்னோ
தெள்ளறற் கான்யாற்றுத் தீநீர் பருகவும்
மள்ளர் நடவா வகை. பு.தி.1248.

மேற்கோள் : 'இது கரந்தையார் (ஆநிரையை) நோயின்றுய்த்தது. கண்டோர் கூற்று' (தொல். புறத். 3. நச்.)

பொருள் : தெளிவுடையதும் கற்கள் பரவிக் கிடப்பதுமாம் காட்டாற்று இனிய நீரைக் கரந்தைவீரர் பருகுதற்கும் செல்லா வகையில், கரடுகள் அமைந்த சிற்றூர்த் தொழுவங்களைக் காணும் ஆர்வத்தால் ஆநிரைகள் மெல்ல நடவாவாய் விரைந்து வரும்! கன்றின்மேல் ஆநிரை கொண்ட அன்பு எத்தகைத்து!

விளக்கம் : 'மெல்ல நடவா விரையுநிரை - ஒல்லென' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம். ஒல் என்பது ஒலிக்குறிப்பு. காட்டாற்று நீர் சலசலத்துச் செல்லுதலைக் குறித்தது. அறல்-தேய்ந்துபட்ட கல்லும் மணலும். தீநீர்-இனிய நீர். மள்ளர் - மறவர். கடை என்றது தொழுவத்தை. ஆங்குக் கன்று நிற்றலால் ஆர்வமுந்த விரைந்தன. ஆநிரை என்க. அவை விரைந்து வருதலைக்

'கடுவரை நீரில் கடுத்துவர'

என்பார் வெண்பாமாலை யுடையார் (வெட்சி.11).

ஆநிரைகளோடு மள்ளர் விரைந்து வந்ததையன்றி வேறு வகையில் அவற்றை ஓம்பி இன்புறுத்தியமை இப்பாடலில் இல்லையே எனின், ஆநிரையின் விருப்புணர்ந்து தம் விருப்பை வீரர் ஒடுக்கிக் கொண்டதே அவற்றை 'ஓம்புதலாம்' என்க. அன்றியும், அவற்றை மடக்கி நிறுத்தித் தம் வேட்கையை நிறைவித்துக் கொள்வர் மள்ளர் எனின், அவை துன்புற்று நோயின்று வெதும்ப இடனாக்கினார் அவரென்க ஆகலின்இது உய்த்தல் என்பதற்குப் பொருந்துவதாம்.

இயைப்பு : 'மன்னர் நீர் பருகவும் நடவா வகை நிரை விரையும்' என இயைக்க. (7)

நுவலுழித் தோற்றம்

(மீட்டு வந்த ஆநிரை கண்ட தாய், அதனை வினவிய சிறப்பு)

அ) காட்டகம் சென்றுயிர் போற்றான் கடுஞ்சுரையான்
மீட்ட மகனை வினவுறாள் - ஓட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக் கலுழும்
என்னெதிர்ப் பட்டாயோ என்று. பு.தி. 1249.

மேற்கோள் : 'இது கரந்தை நுவலுழித் தோற்றம் : கண்டோர் கூற்று' (தொல்.புறத். 3.நச்.)

பொருள் : காட்டிற்குச் சென்று தன் உயிரைப் பொருட்டாக எண்ணாமல் பெரிய மடி ததும்பப் பால் சுரந்து நிற்கும் ஆவினை மீட்டு வந்த மகனைத் தாய் எதுவும் வினவினாள் அல்லள். ஓடிவந்து தன் எதிரே தோன்றிய ஈன்றணிய ஆவினைத் தழுவி நீ என்ன துன்பப் பட்டாயோ என்று வினவிக் கண்ணீர் சொரிந்தாள்.

விளக்கம் : காட்டகம் - காடு: காட்டின் ஊடறுத்துச் சேறலின் 'காட்டகம் சென்று' என்றார். சுரை-மடி; புனிற்று ஆ-ஈன்றணிய ஆ. ஈன்றணிய ஆ ஆகலின் 'கடுஞ் சுரையது' ஆயிற்று: என்னது பட்டாயோ என்றது என்னென்ன துன்பங்களெல்லாம் பட்டாயோ என்று வினாவியது. அவள்தன் அன்பு மீதூர்தலைக் கூறுவாராய்த்' தழீஇக் கலுழும்' என்றரார் 'என்னதுய ருற்றாயோ?' 'என்னது பட்டாயோ?' என்பனவும் பாடங்கள். முன் அடி நோக்கின்' 'என்னெதிர்' என்பதன் பொருக்கம் - விளங்கும்.

மகன் உயிர் போற்றாது சென்ற அருமை நோக்கி அவன் மீண்டதற்கு உவகையுற்றதை வெளிப்படக் காட்டாளாய் ஆவினை அவள் தழுவியது அதன் பிரிவு தாங்காத பேரன்பு வெளிப்படுத்துவது. 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ' என்பது உயிர்ப் பொதுவாகக் கண்ட குறிப்பு இது. அன்றியும் தன் மைந்தன் வீரமாண்பை அவள் வெளிப்பட அறிவாள் ஆகலின் அவன் செயலும் மீட்சியும் அவளுக்கு வியப்புத்தந்தில. பிரியாப் பசு தன் கன்றைப் பிரிந்து மீண்ட இன்ப அன்பே பெரிதாயிற்றென்க. வாய்மொழி அறியா அதன் தாயன்பு மாண்பைத் தாயறிந்து போற்றிய தகவு ஈதென்க. மேய்த்தற்கு ஓட்டிச் செல்லும் போழ்தும் தாயும் சேயும் படும் பாட்டை அறிந்தவள் தழுவிக் கலுழ்தல் நிகழாதவை அல்லவாம்!

இயைப்பு : 'வினவுறாள்; கலுழும்' என இயைக்க. (8)

பாதீடு

(பகுத்துத் தருதல்)

கூ) யாமே பகர்ந்திட வேண்டா இனநிரை
தாமே தமரை அறிந்தனகொல் - ஏமுற
அன்றீன்ற தம்மை அறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீயும் ஆங்கவர்பாற் சேர்ந்து. பு.தி.1250.

மேற்கோள் : 'இது கரந்தைப் பாதீடு. இது மறவர் கூற்று. ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்றாதலின் பாதீடு ஆயிற்று' (தொல்.புறத்.3.நச்.)

பொருள் : யாம் முன்னின்று அவரவர் ஆ நிரையை அவர்களுக்கு உரிமை சொல்லித் தருதல் வேண்டா. அவ்வர்நிரைதாமே தமக்குரியாரை அறிந்து கொண்டன போலும் விருப்பம் முந்துதலால், அன்று ஈன்ற ஆவே எனினும் அதனை அறிந்து கொள்ளும் கன்றினைப் போல ஆநிரை அவரவரைச் சென்றடைவனவாம்.

விளக்கம் : ஆவை உரியாரைத் தேடித் தரவேண்டும் என்று இருந்தவர்க்கு அவ்வா தானே உரியாரைச் சேர்தலால் 'யாமே பகர்ந்திட வேண்டா' என்றார். 'யாமே பகுத்திடல் வேண்டா' என்பதும் பாடம்.

ஏம் உற - ஏமுற: விருப்பம் பொருந்த. விருப்பமுடைமை மறவாமைக்கும், அடையாளம் காண்டற்கும் அடிப்படை ஆகலின் ஏமுற என்றார். அன்றீன்ற கன்றும் என்பதில் உள்ள உம்மை ஏனைக் கன்றுகளையுமுரைக்க

வேண்டுவதில்லை என்பது குறித்து நின்றது. தம்மை என்றது தமக்குரிய தாய்ப்பசுக்களை. இளங்கன்று தாயை நாடுதல்,

'பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடல்'

என்பதால் (நாலடி.101) விளங்கும். 'தாம்தம், கன்றுகுரல் கேட்டன போல, நின்று செவி ஏற்றன சென்றுபடு நிரையே' என்பது தகடூர் யாத்திரை.

இயைப்பு : இனநிரை தாமே அறிந்தன: யாமே பகர்ந்திட வேண்டா: ஆங்கவர்பால் சென்றீண்டும்' என இயைக்க. (9)

படைச் செருக்கு

(படைஞரின் பெருமிதம்)

க0) வாள்வலம் பெற்ற வயவேந்தன் ஏவலால்
தாள்வல் இளையவர் தாம் செல்லின் - நாளைக்
கனைகுரல் நல்லாவின் கன்றுள்ளப் பாலின்
நனைவது போலுமிவ் வூர். - பு.தி.1237.

மேற்கோள் : இப்பாடலைப் படைச்செருக்கில் காட்டினார் நச். (புறத்.3) நிரைகோடல் என்னும் அதிகாரத்தில் தொகுத்தார் புறத்திரட்டார். இது நிரைகவர்தலைப் பற்றியது ஆதலால் வெட்சித் திணையினதாம். 'வயவேந்தன் ஏவல்' என்பதால் 'மன்னுறு தொழில்' இது கண்டோர் கூற்று.

பொருள் : வாட்போரில் தேர்ச்சி மிக்க வலிய வேந்தனின் ஏவலால் முயற்சி நிரம்பிய இளைய வீரர் ஆகோள் கருதிச் சென்றால் நாளைப் பொழுதில், ஆர்வமீதூரக் கனைக்கும் ஆநிரைகள் தம் கன்றுகளை நினைந்த அளவால் பொழியும் பாலால் இவ்வூர் நனையும் போலும்.

விளக்கம் : வேந்தன் சிறப்பை 'வாள்வலம் பெற்ற வயவேந்தன்' என்பதாலும், வீரர் சிறப்பை, 'தாள்வல் இளையர்' என்பதாலும் குறித்தார். இளையவர் செல்லின் ஊர் பாலால் நனையும் என்றது வீரர்தம் ஆற்றலறிந்த உறுதியாம். 'இவ்வழிச் சென்றான் திருடு கொடுத்தான்' என்பது போலக் கொள்க.

கன்றுள்ளக் கறவை பொழிதல் அதன் வளத்தையும் உளத்தையும் உரைப்பதாம். வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் என்னும் கோதையார் வாக்கையும், 'இன்னம் பசும்புல் கறிக்கல்லா

இளங்கன்றுள்ளி மடித்தலம் நின்றிழிபால் அருவி' என்னும் குமர குருபரர் வாக்கையும் நோக்குக. இச்செய்தி மேலும் வரும். இஃது உயர்வு நவிற்சியணி

இயைப்பு : 'இளையவர் செல்லின் ஊர் பாலின் நனைவது போலும்' என இயைக்க. (10)

தெய்வம் பராயது

(தெய்வத்தை வாழ்த்தி வழிபட்டது)

கக. வந்த நிரையின் இருப்பு மணியுடன்
எந்தலை நின்தலை யான்தருவன் - முந்து நீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு. - பு.தி. 1238.

மேற்கோள் : இது தெய்வத்திற்குப் பராயது என்பார் நச். (தொல்.புறத்.3). நிரைகோடலில் தொகுத்தார் புறத்திரட்டார். மறவர், முன்னிலைப் பராவல் பொருளது இது.

பொருள் : யாம் கவர்ந்து கொண்டு வந்த ஆநிரையின் இரும்பு மணியுடன் எம் தலைகளையும் நின்னிடத்து யாமே தருதும். ஆகலின், கொற்றவையே, முதற்கண் எம்கொடையைப் பெற்றுக் கொண்டு விறுமிக்க எம்வேந்தன் செங்கோல் சிறக்கும் வண்ணம் வெற்றி தருவாயாக.

விளக்கம் : ஆகோள் மள்ளர், ஆகோள் சான்றாக இருப்புமணியுடன் தம் தலையும் தருவதாக 'வந்த...தருதும்' என்றார். வந்த என்ற காலமயக்கம் உறுதிபற்றியது. 'நின்றலை எம்தலை தருதும்' என்றது தம் தலையைத் தாமே கொய்து கொற்றவை கையில் கொடுத்தலைக் குறித்ததாம்.

'அடிக்கழுத்தினுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ'

என்னும் கலிங்கத்துப்பரணி (கோயில்.15) கருதத்தக்கது.

தலைதராத முன்னரே 'முந்து நீ மற்றவை பெற்று' என்றது வினைவேறு சொல்வேறு படாத ஆண்டகையர் ஆகலான் 'கொடுப்பேம்' என்று குறித்ததே கொடுத்தது ஆயிற்றாம் என்க.

வேந்தன் போர்வெற்றியினும் அவன் செங்கோல் வெற்றியே மக்கட்கு நலம் பயப்ப தாகலின் 'கோலோங்கக் கொற்றம் கொடு' என்றார்.

யாம் தருவன ஆநிரை மணியும் எம்தலையும் என இரண்டாக்கிக் கொற்றவையிடம் வேண்டுவது கொற்றம் ஒன்றுமே என்பாராய்க் குறித்தநயம்.

'பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா'

என்பது போன்றதாம்.

இயைப்பு : 'கொற்றவை, யான்தருவன் கொற்றங்கொடு' என இயைக்க
(11)

வஞ்சித்திணை

இயங்குபடை அரவம்

கஉ) விண்ணசைஇச் செல்கின்ற வேலிளையர் ஆர்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்றான் வாள்வேந்தன் - எண்ணம்
ஒருபாற் படர்தரக்கண் டொன்னார்தம் உள்ளம்
இருபாற் படுவ தெவன். - பு.தி.1255.

மேற்கோள் : 'இயங்கு படை அரவம்' என்பதற்கு எடுத்துக் காட்டு (தொல்.புறத்.8.நச்.).

பொருள் : விண்ணுலகு எமக்கு எய்தட்டும் எனப் போரை விரும்பிச் செல்கின்ற வேற்படை வீரர் ஆரவாரிக்க, மாற்றார் மண்ணை விரும்பிச் செல்கின்றான் வாட்படை வேந்தன். வேந்தனும் வீரரும் இவ்வாறு ஒருப்பட்டுச் செல்வதைக் கண்ட பகைவர் தம் உள்ளத்தில் ஒருபாற்படுதல் இலராய் இருபாற்பட்டனர்! ஈதென்னே!

விளக்கம் : ஒருபாற்படர்தர இருபாற்படுவது எவன் என்றது முரண் வழிவந்த நயம். விண்ணசையினர் வேலிளையர்: மண்ணசையினன் வாள்வேந்தன். இருவர் 'நசை'யும் ஒருபாற்படுதல் போர்க்களத்தில் ஒருமைச் செயலாற்று தலாம். ஒன்னார் - ஒன்றார் - பகைவர். அவர்கள் வீரரும் வேந்தரும் ஒருப்பட்டுப் பொருவான் நிற்றலைப் பார்த்த அளவால் உய்வோமோ உய்யோமோ எனத் தோன்றிய ஐயம். இருபாற்பட்டுச்சேறல் 'கவலை' எனப்படும். ஐயம் கிளர்ந்த அளவான் இனி வெல்லார் என்பது தெளிவாம். அவர்தம் ஐயமே அவர்க்கு அழிவாக முந்து நிற்கும் என்க.

விண்ணுல காள்வை நோக்கிச் செல்லும் துணிவு மிக்க வீரர் அச்சம் என்னும் பெயர்தானும் அறிவரோ? எண்ணம்

ஒருபாற்படர்தல் என்பது ஊக்கம், உரன் என்பவற்றின் விரியாம்.

'உடையர் எனப்படுவது ஊக்கம்'
'உள்ளம் உடைமை உடைமை'
'ஊரமொருவற் குள்ள வெறுக்கை' (ஊக்கமுடைமை)

இம்முக்குறள்களின் முச்சீர்களின் முடிபுகளையறிக.

இயைப்பு : 'இளையர் ஆர்ப்பெடுப்ப: வேந்தன் செல்கின்றான்: ஒன்னார் உள்ளம் இருபாற் படுவது எவன்?' என்றியைக்க.

இயங்குபடை அரவம்

(படை செல்லும் போதுண்டாம் ஒலி)

கங) போர்ப்படை ஆர்ப்பப் பொடியாய் எழுமரோ
பார்ப்புர(வு) எண்ணான்கொல் பார்வேந்தன் - ஊர்ப்புறத்து
நில்லாத தானை நிலனெளிப்ப நீளிடைப்
புல்லார்மேற் செல்லும் பொழுது. - பு.தி.1256.

மேற்கோள் : 'இஃது எதிர் செல்வோன் படையரவம்' (தொல்.புறத். 8.நச்)

பொருள் : தன் ஊர்ப்புறத்தின்கண் நிற்றலை விரும்பாத படைகள் நிலம் நெளிந்துபட நெடிய இடங்கடந்து பகைவர்மேற் செல்லும் பொழுதில், போர்வேட்ட படையினர் ஆர்த்தெழும் அவ்வளவாலேயே நிலத்தில் இருந்து பூழ்தி எழும்! வேந்தன் பார்காத்தல் கடனாளன் தான் என்பதைப் போரின்கண் எண்ணான் போலும்!

விளக்கம் : காத்தல் கடனுடையானாம் காவலன் அதனைக் கருதான் போலும் என்றது சுவைமிக்கது. தன்னாட்டவர்க்குத் தண்ணியனாம் காவல் குடையுடைய வேந்தன், பகை நாட்டவர்க்கு வெங்கொடும் கொலைப்படையுடைய னாதலைக்குறித்தார்.

போர்ப்படை ஆர்த்த அளவால் பொடியாம் என்றது 'கண்சிவக்க வாள்சிவக்கும்' என்பது போன்றது! அவன் படைஓர் வீறு உரைத்தது.

பார்ப்புரவு-புவிகாத்தல். புல்லார்-பொருந்தார்; பகைவர். புல்லுதல் பொருந்துதல். நிலத்தைப் புல்லிக் கிடக்கும் புல்லின் தன்மையும், 'புல்லிக்கிடந்தேன்' எனவரும் குறளின் சொன்மையும் அறிக.

இயைப்பு : 'புல்லார்மேற் செல்லும்பொழுது ஆர்ப்பப் பொடியாய் எழும்' வேந்தன் பார்ப்புரவு எண்ணான்கொல்' என இயைக்க. (13)

தழிஞ்சி

(புண்ணுற்ற வீரரைத் தழுவுதல்)

கச) தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சிய சீர்ப் பாசறை வேந்தன் - விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண். - பு.தி.1273.

மேற்கோள் : அழிபடை தட்டோர் தழிஞ்சி என்பதற்கு (தொல். புறத்.8.நச்.) எடுத்துக்காட்டு. 'வென்றும் தோற்றும் மீண்ட வேந்தர் தம்படையாளர் முன்பு போர் செய்துழிக் கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக் கொண்டழிந்தவர்களைத் தாம் சென்றும் பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக்கோடல்.' 'தழிச்சுதல் தழிஞ்சியாயிற்று' என விளக்குவார் அவர்.

பொருள் : பலரும் பாராட்டும் புகழமைந்த போர்வேந்தன், களத்தில் படைக்கலங்கள் தாக்குதலால் புண்ணுற்ற வீரர்தம் வீடுகள் தோறும் சென்று, அவர்கள் திறங்களைப் பாராட்டியும் உரிமையால் பரிந்தும் சொல்லிய சொற்களே மருந்தாக அரும்பிய தாடியுடைய வீரர்கள் வெதும்பிப் பெருமூச்சு விடுதற்கு அமைந்த புண் மேடிட்டு ஆறின.

விளக்கம் : பாசறை வேந்தன் என்றது, படைவீரர் பட்டபாடுகளை உடனாகி இருந்து பொருத காலை அன்றிப் பாசறைக்கண் உடனாகித் தங்கியிருந்த சிறப்புக் குறித்து நின்றது. 'வாள்' என்றது படை என்னும் பொதுமை குறிப்பது. கணையும் வேலும் பிறவும் குறித்தலின். பழிச்சிய சீர் என்றது வேந்தன்பாடு புகழ் சுட்டியது. அவன் சொல்லிய சொல்லின் அருமையும் பெருமையும் குறிப்பாராய், 'விழுச்சிறப்பிற்.... மருந்தாக' என்றார். தூர்தல்- மேடிடுதல். இவண் ஆறுதல். புல்லணல்-'புல்லிய தாடி' என்றார் புறநானூற்று உரைகாரர்.

புண்ணின் கடுமை காட்டுவது 'வெய்துயிர்க்கும்' என்பது. அன்பு மீதூர்ந்த சொல்லும் அருமருந்தாம் என்பது உலகறிந்த உண்மைச் செய்தி. 'மருந்துவத்தினும் சிறந்தது மருத்துவர் சொல்லும் சொல்' என்பது கொள்ளத் தக்கது. 'பரிவிற் சிறந்த மருந்து பாரில் இல்லை' என்க. அப்பரிவும் தாம் மதித்துப் போற்றும் தலைவன் வழியே வருவதாயின் ஈடும் இணையும் இல்லது என்பது தெளிவாம். 'புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா, டிரந்துகோள் தக்க துடைத்து' என்னும் குறள் எண்ணத்தக்கது'.

இயைப்பு : 'வேந்தன் சொல் மருந்தாகப் புண் தீர்ந்தன' என்று இயைக்க.
(14)

உழிஞைத் திணை

கொள்ளார்தேஎம்குறித்த கொற்றம்
(பகைவர் நாட்டைக் கொண்ட வெற்றி)

கரு) மாற்றுப் புலந்தொறுந்தேர் மண்டி அமர்க்களங்கொள்
வேற்றுப் புலவேந்தர் வெல்வேந்தர்க்(கு) – ஏற்ற
படையொலியில் பாணொலி பல்கின்றால் ஒன்னார்
உடையன தாம்பெற் றுவந்து. - பு.தி.1272

மேற்கோள் : 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்' என்பதற்கு (தொல். புறத்.12.நச்.) எடுத்துக்காட்டு. 'தன்னை இகழ்ந்தோரையும் தான் இகழ்தோரையும் கொள்ளார் என்ப' என்றும் விளக்குவார் அவர்.

பொருள் : தமக்கு மாறான மன்னர் நாடுதொறும் தேர்கள் நெருங்க அவர்தம் போர்க்களங்களைக் கொண்ட வலிய பகைநாட்டு வேந்தர் நம் வெற்றி வேந்தர்க்கு எதிரிட்டு நின்றக்கால் எழுந்த படைவீரர்தம் ஆர்ப்பொலியினும் பாடிப் பெறுதற்குவந்த பாணர் ஒலிமிகுதியாயிற்று: பகைவர்தம் உடைமையாக இருந்தன எல்லாமும் தாம் கொளப்பெற்று மகிழ்ந்து.

விளக்கம் : பகைவர் எளியரல்லர்: வலியர் என்று தெளிவித்தற்கு 'மாற்றுப்... வேந்தர்' என்றார். அவரையும் இவர் வென்றார் என்பதைத் தெளிவிக்க 'வெல்வேந்தர்' என்றார்.

படை செல்லுங்காலும் பொருங்காலும் ஒலிமல்குதல் இயற்கை. அவ்வொலியினும் பாணொலி மிக்க தென்பது பகைவரிடத்துப் பெற்ற வளங்கள் தாம் பெற வாய்க்கும் மகிழ்வால் என்க.

சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்பானை ஊன் பொதி பசுங்குடையார் என்பார்,

'ஒன்னார், ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப்
பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்
பூண்கடன் எந்தைநீ இரவலர் புரவே'

எனப்பாடுதல் அறியத்தக்கது. பகைவர் மதிலைப் பற்று முன்னரே அதனைப் பாணர்க்குக் கொடையாக்கும் சிறப்பை வெளிப்படுத்திக் கூறினார்.

'பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான் போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றி'

என்னும் நச்சினார்க்கினியர் உரையும் கருதத் தக்கது (புறத்.12).

இயைப்பு : 'வெல்வேந்தர்க்கு, உடையன பெற்றுவந்து பாணொலி பல்கின்று' என இயைக்க. (15)

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு

(நினைத்ததை நிறைவேற்றும் தலைவன் சிறப்பு)

கசா) மழுவான் மிளைபோய் மதிலான் அகழ்தூர்ந்(து)
எழுவாளோன் ஏற்றுண்ட தெல்லாம் - இழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சீற்றத்தீ
விட்டெரிய விட்ட வகை. பு.தி.1339.

மேற்கோள் : 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு' என்பதற்கு (தொல்.புறத்.12.நச்.) எடுத்துக்காட்டு. 'குறித்த குறிப்பினை முடிக்கின்ற வேந்தனது சிறப்பினை அவன் படைத்தலைவன் முதலியோரும், வேற்று வேந்தன்பால் தூதுசெல்வோரும் எடுத்துரைத்தல்' என இதனை விளக்குவார் அவர்.

பொருள் : கட்டவிழ்ந்த மலர்க்கண்ணிசூடிய பகைவேந்தன், சீற்றத்தைப் பெருக்கி நெய்விட்டதைப் போல் பொங்கி எரிய விட்டமையால் தான் மழுவால் காவல்காட்டை அழித்து உள்ளே புகவும், மதிலை இடித்துத் தகர்த்தலால் அகழியை மேடுபடுத்தவும், ஓங்கி எழும்பும் வாட்படையுடைய வேந்தன் ஏற்றுச்செய்யுமாறு செய்ததாம்.

விளக்கம் : மறவேந்தன் என்பது பகை வேந்தனையும், எழுவாளோன் என்பது பாடு புகழ் வேந்தனையும் குறிப்பன. காடு அழிவுக்கும், மதில் தூர்வுக்கும் தூண்டியவன் பகைவேந்தனே என்பாராய் 'சீற்றத்தீ விட்டெரிய விட்ட வகை' என்றார். 'விட்ட மிகை' என்பது தொல்காப்பியத்துப் பாடம். இழுமென என்றது அருவி முழக்கத்தையும் இசை முழக்கத்தையும் சுட்டுவது. இவண் சினத்தீ பொங்கி எரிதற்கு வந்தது. இழுது-நெய். 'எரியும் நெருப்பில் எண்ணெயும் வார்த்தாற்போல' என்னும் உவமை வழக்கு எண்ணத்தக்கது. மழு-கோடரி: வெட்டுபடை. மிளை-காவற்காடு

ஏற்றுண்டது-ஏறிட்டு நின்று அழிவுறுத்தக் கொண்டது.

இயைப்பு : 'மறவேந்தன் தீ எரிய விட்ட வகை, எழுவாளோன் போய், தூர்ந்து, ஏற்றுண்ட தெல்லாம்' எனஇயைக்க. (16)

தொல் எயிற்கு இவர்தல்

(பழமையான மதிலைப் பற்றல்)

களஎ) இற்றைப் பகலுள் எயிலகம் புக்கன்றிப்
பொற்றேரான் போனகம் கைக்கொளான் - எற்றாங்கொல்
ஆறாத வெம்பசித் தீயால் உயிர்பருகி
மாறா மறலி வயிறு. - பு.தி.1327.

மேற்கோள் : தொல் எயிற்கு இவர்தல் (தொல்.புறத்.12.நச்.) என்பதற்கு எடுத்துக்காட்டு. இதன் பொருளை 'ஒரு காலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப் பகலுள் அழித்தும் என்று கூறி அஃது அழித்தற்கு விருப்பஞ் செய்தல்' என்பார் அவர்.

பொருள் : இற்றைப் பகற் பொழுதுள் பகைவர் கோட்டையுள் புகுந்தன்றி அழகிய தேரையுடைய வேந்தன் உணவைக் கையால் தொடவும் மாட்டான். ஆதலால், ஆறுதல் இல்லாத கொடிய பசித் தீயினால் உயிர்களையுண்டு பசியிலாத கூற்றுவனின் வயிறு என்னாமோ?

விளக்கம் : 'பகல்' என்பது பொழுது விழுதற்கு முன்னாம் பொழுதைக் குறித்தது. பொற்றாரான் என்பது நச்சினார்க்கினியர் பாடம். போனகம்-உணவு. கைக்கொள்ளான் என்றமையால் உண்ணாமை வெளிப்படை. 'என்னாங்கொல்' என்பது 'எற்றாங்கொல்' என எதுகை நோக்கி வலித்தது. உயிர்பருகுமுன் ஆறாத வெம்பசியாக இருந்த வயிறு, பெருக உண்டலின் மாறாத தாயிற்று. மாறாமை உண்டது அறாமை (செரியாமை).

மறம் மறல் மறலி. மறலி-கூற்றுவன். மறம் - வீரம். அவன்அழிவு செய்யும் மறலி எனினும் ஒருபாற் கோடாத உள்ளத்தனாகலின் 'அறவோன்' எனவும்படுவான்.

உட்புகுந்தன்றி உண்ணேம் என்பதற்குக் குறியாக அகப்பையும் துடுப்பும் மதிலுள் எறிந்து விடுதலும், பின்னர் மதிலுள் புகுந்து அட்டுண்ணலும் முந்தையோர் வழக்கு.

இயைப்பு : 'தேரான் போனகம் புக்கன்றிக் கொள்ளான்: மறலி வயிறு எற்றாங்கொல்' என இயைக்க. (17)

அகத்தோன் செல்வம்

(மதிலின் அகத்துள்ளான் வளப்பம் கூறல்)

கஅ) பொருசின மாறாப் புலிப்போத் துறையும்
அருவரை கண்டார்போல் அஞ்சி - ஒருவரும்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் தேர்வேந்தன்
எல்லார்க்கும் எல்லாம் கொடுத்து. - பு.தி.1338.

மேற்கோள் : அகத்தோன் செல்வம் என்பதற்கு எடுத்துக்காட்டு (தொல்.புறத்.12.நச்.) 'அகத்து உழிஞையோன் குறைவில்லாத பெருஞ்செல்வங் கூறுதலும்: அவை படைகுடி கூழ் அமைச்சு நட்பும் நீர்நிலையும் ஏமப்பொருள் மேம்படு பண்டங்களும் முதலியவாம்' என்பது அவர் விளக்கம்.

பொருள் : போரிட்டு வந்து அப்போர்த் தன்மை மாறாத ஆண்புலி உறையும் கிட்டுதற்கு அரிய மலையைக் கண்டார்போல், பகைவர் எவரும் அச்சத்தால் அணுகுதற்குஇல்லாத மதிலுள்ளே தேர்ப்படைச் சிறப்புவாய்ந்த வேந்தன், தன்னை வேண்டிவந்தார் அனைவருக்கும் அவர் வேண்டுவன எல்லாம் கொடுத்துச் செம்மாந்திருத்தான்.

விளக்கம் : 'புலியடித்தது பாதி கிலியடித்தது பாதி' என்பது பழமொழி. வேந்தனைப் பொருசின மாறாப் புலிப்போத்துக்கு உவமை கூறினார். பகைவர் நினைக்கவே அஞ்சுவர்; நேரிற் காண நேர்வரோ என்றற்கு. அருவரை - அணுகுதற்கு அரிய மலை; மலைமுழை; வேந்தன் வீற்றிருக்கும் அரண்மனைக்கும், ஓலக்கத்திற்கும் ஆகியது.

படையாற்றல் கூறியவர் கொடையாற்றல் கூறுவாராய் 'எல்லார்க்கும் எல்லாம் கொடுத்து' என்றார். ஈட்டிய வெல்லாம் ஈதற்கே என்பதற்கே என்று காட்டுவார் போல ஈந்தார் என்று இவர் கூறியதும் இவண் எண்ணத் தக்கது (35) வீரமும் கொடையும் சேரவே அமைதல் பண்டை வேந்த ரியல் என்பதைச் சங்க நூல்கள் பலபடக் கூறுதல் அறிக.

இயைப்பு : 'அஞ்சி ஒருவரும் செல்லா மதிலகத்து எல்லார்க்கும் எல்லாம் கொடுத்துத் தேர்வேந்தன் வீற்றிருந்தான்' என்று இயைக்க (18)

குடைநாட்கோள்

(கொற்றக்குடையை உரிய பொழுதில் எடுத்துச் செல்லுதல்)

கக) பகலெறிப்ப தென்கொலோ பால்மதியென் றஞ்சி
இகலரணத் துள்ளவர் எல்லாம் - அகலிய
விண்தஞ்ச மென்ன விரிந்த குடைநாட்கோள்
கண்டஞ்சிச் சும்பிளித்தார் கண். - பு.தி. 1325.

மேற்கோள் : 'குடையும் வாளும் நாள்கோள்' என்பதற்கு (தொல்.புறத்.13.நச்.) எடுத்துக்காட்டு. 'இது புறத்தோன் குடைநாட்கோள்' என்பார் அவர். மேலும் 'நாள் கொளலாவது நாளும் ஓரையும் தனக்கேற்பக் கொண்டு செல்வுழி அக்காலத்திற்கு ஓர் இடையூறு தோன்றியவழித்

தனக்கு இன்றியமையாதனவற்றை அத்திசை நோக்கி அக்காலத்தே முன்னே செல்லவிடுதல்' என்பார்.

பொருள் : பால்போன்ற வெண்மதியும் பகற்கொழுதிலேயே வெதுப்புவது என்னை என்று அச்சமுற்று வலிய மதிலின் அகத்தே உள்ளார் அனைவரும் உள்ளம் நைய, விண்ணளாவ விரிந்த குடைநாட் கோளினைக் கண்டு அஞ்சிக் கண்ணை மூடிமூடி விழித்தனர்.

விளக்கம் : எறித்தல் - உறைப்பாக வெதுப்புதல். 'நாடுசுடு கமழ்புகை எறித்தலானே' என்பது புறப்பாடல்(6). பால் போலும் நிறமும் தண்மையும் உடையமதி, அது தோன்றுதல் இல்லாத பகற் போதிலே தோன்றி, அது தனக்கியல்பெனக் கொள்ளாத வெதுப்புதலைக் கொண்டிருத்தல் என்னோ என்றார். இது, குடையை மதியாகக்கூறியது. 'மதிக்குடை' என்பார் புகழேந்தியார். இகல்-வலிமை. அரணம்-காவற் கோட்டை. அகலிய - அகன்ற. விண்தஞ்சமென்ன விரிந்த குடை என்றது அதன் அகலமும் தூக்கும் பற்றிய உயர்வு நவிற்சி. தஞ்சமாதல் - தழுவிநிற்றல்.

சும்பிளித்தல் என்பது அச்ச மெய்ப்பாடுகளுள் ஒன்று. அது கண்ணைப் பொட்டுப் பொட்டென மூடி விழித்தலாம். போர்ப் பகுதியில் சும்பிளித்தலைச் சுட்டுவார் கம்பர்.

இயைப்பு: 'அரணத் துள்ளவர் குடைநாட் கோள் கண்டு கண் சும்பிளித்தார் என்று இயைக்க. (19)

குடைநாட் கோள்

20) குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று
நின்றுயர் வாயிற் புறநிவப்ப - ஒன்றார்
விளங்குருவப் பல்குடைகள் வெண்மீன்போல் தோன்றித்
துளங்கினவே தோற்றந் தொலைந்து. பு.தி. 1336.

மேற்கோள் : 'அகத்தோன் குடைநாட்கோளுக்கு' எடுத்துக்காட்டு இது (தொல்.புறத்.13. நச்.)

பொருள் : மலைமேல் தோன்றும் முழுமதியைப்போல் வேந்தன் கொற்றக் குடை ஒப்பற்ற வகையில் எழுந்து. உயர்ந்த வாயிற் புறத்தே ஓங்கிநிற்கப், பகைவர்தம் விளக்கமிக்க பல குடைகளும் வெள்ளியாம் விண்மீன்போல் தோன்றித் தன் பொலிவெலாம் தொலைந்து நடுக்கம் கொண்டன.

விளக்கம் : குன்றின்மேல் உயர்ந்து விளங்கும் திங்கள் என்றமையால், குடை வாயின்மாடத்தினும் உயர்ந்து நின்றமை

குறிக்கப்பட்டதாம். நிவத்தல்-உயர்தல். ஒன்றார் - பகைவார்; கூடார் என்பதும் அது. உள்ளத்தால் ஒன்றுபடாதவர். பகைவர் குடைகளும் விளங்குருவம் உடையனவேனும், வேந்தன் கொற்றக் குடைமுன் தம்மொளி குன்றியதுடன் நடுக்கமும் கொண்டன என்பதை வெண்மீன் போல் என்பதால் குறித்தார். 'விண்மீன்' என்பது நச்சினார்க்கினியர் பாடம். விண்மீனுக்குப் பொதுவான மின்னி ஒளிவிடல் நடுக்கமாயிற்றாம். தோற்றம் தமக்குரியவாம் பெருமைத்தன்மை.

இயைப்பு : 'குடை வாயிற்புற நிவப்ப ஒன்றார் குடைகள் தொலைந்து துளங்கின' என இயைக்க. (20)

வாணாட் கோள்

(வாளை உரிய பொழுதில் புறப்படச் செய்தல்)

உக) தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
அழுது விழாக்கொள்வர் அன்னோ-முழுதளிப்போன்
வாணாட்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீணாட்கோள் என்று நினைத்து - பு.தி.1326.

மேற்கோள் : வாள் நாட்கோளுக்கு எடுத்துக்காட்டு (தொல்.புறத்.13.நச்.) இதனைப் புறத்தோன் வாணாட்கோள் என்பார் அவர்.

பொருள் : தன்னடைந்தார்க்கு முழுமையாக வழங்கும் கொடையாளனாம் வேந்தன் வாள்நாள் கொண்டான் என்பதைக் கேட்ட அளவில் மகளிர் தம்கணவர்தம் நெடிய வாழ்நாளைக் கொள்ளுவான் வந்ததாக நினைந்து, இதுகாறும் அவனையன்றித் தொழுது வணங்காத குற்றத்தை உணர்ந்தவராய்த் தொன்மையான முழுமுதற் கடவுளை வழிபட்டு அழுதலுடையவராய் விழாக் கொள்வாராயினர்! அந்தோ! இஃதிருந்தவாறு என்னே!

விளக்கம் : முழுதளிப்போன் என்பது முழுதுல காள்வோன் என்பது மாம். அவன் கொடை நலம் குறித்தது, படைஞர் தம் செய்ந்தன்றியறிதலால் உயிர்க் கொடை தருதற்கும் முந்துவர் என்பதால் என்க. 'நினதென இலைநீ' என்பதால் வேந்தர் தம்மை அடைந்தார்க்கு முழுதுற வழங்குதல் புலனாம் (புறம்.122). இம்முழுதுறு கொடையை 'அருகாதுஈதல்' என்பது முந்தையோர் வழக்கு (புறம்.320).

கோள்-கொள்ளுதல். மகிழ்நர் நீள் நாள் கோள் என்றது கணவர் நீண்ட வாழ்நாளைக் கொள்ளுதல். நெடுநாள்

இடைப்படுத்தல் என்பது பொருந்தாதாம். 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என்பது கொண்டு, தொழுது விழாக் குறை என்றார்.

நாட்டளவில் விழாக்கோலம் கொள்வதாகவும் வீட்டளவில் இரங்கல் உண்மையால் 'அழுது விழாக் கொள்வர்' என்றார். இரண்டும் இடையறவு படாமல் நிகழ்தலைச் சொற்புணர்வும் காட்டுமாறு 'அழுது விழா' என்றார். அன்னோ-இரக்கக்குறிப்பு.

இயைப்பு : 'மடந்தையர் நினைந்து, பேணி, விழாக் கொள்வர்' என இயைக்க. (21)

வாணாட் கோள்

உஉ) முற்றரணம் என்னும் முகிலுருமுப் போற்றோன்றக்
கொற்றவன் கொற்றவாள் நாட்கொண்டான் - புற்றழிந்த
நாகக் குழாம்போல் நடுங்கின என்னாங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து. - பு.தி.1337.

மேற்கோள் : இஃது அகத்தோன் வாள் நாட்கோள் (தொல்.புறத்.13.நச்.).

பொருள் : பொறிச் சிறப்பாலும் வன்மையாலும் காவற்சிறப்பாலும் முழு முதல் அரணம் என்னும் முகிலில் இடியெழுந்தாற்போல் தோன்றுமாறு வேந்தன் மாறா வெற்றிதரும். வாள் நாட்கோள் கொண்டான். தம் புற்றுகள் அழிபட்ட பாம்புக் கூட்டம் போல் பகைவர் படை நடுக்கங்கொண்டன. விரைந்த செலவுடைய களிற்றுக் கூட்டத்தையுடைய வேந்தன் நிலை இனி என்னாமோ?

விளக்கம் : அரணத்தின் சிறப்பறிய முற்றரணம் என்றார். அரணத்தை முகில் என்றார். ஆகலின் வாள்நாட்கோள் முழக்கத்தை இடி என்றார். உருமு-இடி. 'முகிற்கு உருமு' என்பதும் பாடம்.

தம் புற்று அழிந்து விட்டநாகம் பாதுகாப்பை இழந்துவிட்டமை போல வீரரும் பாதுகாப்பிழந்தனர் என்பதாம். 'புற்றிழந்த நாகம்' என்பதும் பாடம். புற்றிழத்தல், இடிபாடுறலாம். 'அதனை விட்டுவந்த' எனின் பொருள் சிறவாதாம். வேகம் விரைவுடன், சினத்தால் உண்டாம் எழுச்சியையும் குறிக்கும். நாகக் குழாம்போல் நடுங்கின என்பதற்குப் படை என்பது வருவித்துரைக்கப்பட்டது.

இயைப்பு : 'கொற்றவன் நாட்கொண்டான்: வேந்து என்னாங்கொல்' என இயைக்க. (22)

ஏணிமயக்கம்

(ஏணிமேல் ஏறிப் போரிடல்)

உங) பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவர் உடன்றெழுந்தா ராகில் - இருவரும்
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும். - பு.தி.1330

மேற்கோள் : 'ஏணிமயக்கம்' என்பதற்கு (தொல்.புறத்.13.நச்.) மேற்கோள். அதில் புறத்தோர் ஏணிமயக்கமும் அகத்தோர் ஏணிமயக்கமுமாகிய இரண்டும் ஒருங்கு வருதலுக்கு இது மேற்கோள். ஏணி மயக்கமாவது புறத்தோரும் அகத்தோரும் ஏணிமிசை நின்று போர் செய்தல்.

பொருள் : ஒன்றொடும் ஒப்பில்லாத உயர்ந்த பழமையான ஊரில் போர் செய்தலை விரும்பி ஒருவருக்கு ஒருவர் பகைத்துப் போரிட எழுந்தனரானால், எதிரிடும் இருவரும் மண்ணில் நிறுத்தி, மதிலில் சார்த்திவைக்கப் பட்ட ஏணி விண்ணுல குக்குச் செல்லச் சார்த்தி வைக்கப்பட்டதாகி விடும்.

விளக்கம் : பொருவரு-ஒப்பற்ற. மூதூர் ஊரின் பழமையோடு; குடியினர் பழமையும் ஒருங்கு சுட்டுவதாம். உடலுதல் - எதிரிடுதல், பகைத்தல். விண்ணொடு சார்த்தல் என்பது போரில் உயிர் நீத்தார் விண்ணுலகு புகுவார் என்னும் கொள்கையைக் குறிப்பதாம். மதிலில் சார்த்தப்பட்ட ஏணியில் நின்று பொரும் வீரர் எஞ்சாமல் பொருது வீடுபேறுறுதலைக் குறிப்பதாய் 'விண்ணொடு சார்த்திவிடும்' என்றார்.

இயைப்பு : 'உடன்றெழுந்தாராகில், ஏணி விண்ணொடு சார்த்தி விடும்' என இயைக்க. (23).

நொச்சி

உச) தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே - வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதார் ஊர்முற்றிக்
கொல்படை வீட்டும் குறிப்பு. - பு.தி.1328.

மேற்கோள்: 'இது புறத்தோன் மனங்காத்த நொச்சி' என்பார் நச். (தொல்.புறத்.13). நொச்சியாவது காவல். அது மதிலைக் காத்தலும் உள்ளத்தைக் காத்தலும் என்பார் அவர்.

பொருள் : வாய்மையைத் தன்னிடத்தே வாங்கிக் கொண்ட வெற்றி கொள்ளும் படையுடைய வேந்தன் பகைவர் ஊரைச்

சூழ்ந்து கொல்லும் வலிய பகைப்படையை அழிக்கும் உட்கோள் எத்தகைத்தோ எனின், தாய் தன் கையில் வாங்குகின்ற மகனைத் தனக்கே உரிமையாகப் பேயொன்று வாங்கிக் கொண்டதோர் தகைத்தாகும் என்க.

விளக்கம் : வாய் வாங்கு வேந்தன் என்றது, போருக்குப் புறப்படுமுன் வஞ்சினமாக இது செய்வேன் என்று எது கூறினானோ அதனை அப்படியே மெய்ப்பித்துக் கொள்ளுதல். விரும்பாதார்-பகைவர். வீட்டுதல் - அழித்தல். பகைப் படையும் வலியதே என்பார் 'கொல்படை' என்றார். குறிப்பு - குறிக்கொண்டதை நிறைவேற்றும் தன்மை. பெற்றி - தன்மை.

தாய்வாங்குகின்றமை அருளிப்பாடு. பேய் வாங்குகின்றமை கொடுமைப்பாடு. தாய் வாங்குகின்றாள் என்று எண்ணிக் கொண்டு தர, அதனைப் பேய் வாங்குகின்றது என்றால் அந்நிலைமை எத்தகைத்து? சாந்தகத்து உண்டென்று செப்பினைத் திறக்கப் பாம்பகத்து உண்டென்று கண்டமை போன்ற எதிரிடைப் பட்டதாம்.

தாய் கையில் இருந்த மகவை இடாகினிப் பேய் வாங்கித்தன் மடியகத் திட்ட செய்தியைச் சிலம்பு கூறும். அதனை இவ்வுவமையொடு எண்ணத்தகும்.

தாய்வாங்குகின்ற மகவு என்னாமல் 'மகன்' என்றது போர்க்களங்கருதியென்க. மகளிர் பெயருடையாரையும் போரில் தாக்கக் கூடாது என்பது நச்சினார்க்கினியம் (தொல்.புறத்.10).

இயைப்பு : 'விரும்பாதார் கொல்படை வீட்டும் குறிப்பு, பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்து' என்று இயைக்க. (24)

புறத்தோன் வீழ்ந்த புதுமை

(மதிற் புறத்தோன் மதிலைப் பற்ற விரும்புதல்)

உரு) வெஞ்சின வேந்தன் எயில்கோள் விரும்பியக்கால்
அஞ்சி ஒதுங்காதார் யாவரவர் - மஞ்சுசூழ்
வான்தோய் புரிசைப் பொறியும் அடங்கினவால்
ஆன்றோர் அடக்கம்போல் ஆங்கு. - பு.தி.1329.

மேற்கோள் : 'இது புறத்தோன் வீழ்ந்த புதுமை' (தொல் புறத்.13.நச்.). 'இடைமதிலைக் காக்கின்ற அகத் துழிஞையோன் நின்ற இடத்தினைப் பின்னை அம்மதிலின் புறத்திருந்தோன் விரும்பிக் கொண்ட புதுக்கோள்' எனப் பொருள் விரிப்பார் அவர்.

பொருள் : முகில் சூழ்ந்து வானளாவி நிற்கும் மதிலின் பல்வகைப் பொறிகளும் ஆன்றவிந்து அடங்கிய சான்றோர் அடக்கம் போல் அங்கே அடங்கின. ஆகலின் கொடிய சினம் கொண்டு வந்த வேந்தன் மதிலைக் கொள்ளுதலை விரும்பும்போது, அஞ்சி அகலாதவர் எவரும் உளரோ? இலர்.

விளக்கம் : புரிசை - மதில். அதன்கண் பல்வேறுவகைப் பொறிகள் உண்மை சங்க நூல்களால் அறியப் பெறும். வளைவிற்பொறி, கருவிரல் ஊகம், கல்லுமிழ்கவண், பரிவுறுவெந்நெய், பாகடுகுழிசி, காய்பொன்னுலை, கல்லிடு கூடை, தூண்டில், தொடக்கு, ஆண்டலை அடுப்பு, கவை, கழு, புதை, புழை, ஐயவித்துலாம், கைபெயரூசி, சென்றெறிசிரல், பன்றி, பணை, எழு, சீப்பு, கணையம், கோல், குந்தம், வேல் என்பன சிலம்பாலும் (15.207-216), சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி என்பன அடியார்க்கு நல்லார் உரையாலும் அறியப்பெறும் மதிற்பொறிகளாம்.

புரிசை (கோட்டை) உயரம், 'மஞ்சுசூழ் வான்தோய்' என்பதால் விளங்கும். ஆன்றோர் அடக்கம், 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்' என்னும் குறளால் விளங்கும்.'

இயைப்பு : 'ஆன்றோர் அடக்கம் போல் புரிசைப் பொறி அடங்கின; அஞ்சி ஒதுங்காதார் யாவரவர்' என இயைக்க. (25)

அகத்தோன் வீழ்ந்த புதுமை

(அகமதிலோன் புறத்துத் தாக்குவாரை வெல்ல விரும்புதல்)

உசா) தாக்கற்குப் பேரும் தகர்போல் மதிலகத்(து)
ஊக்க முடையார் ஒதுங்கியும்-கார்க்கீண்(டு)
இடிபுறப் பட்டாங் கெதிரேற்றார் மாற்றார்
அடிபுறத் தீடும் அரிது. - பு.தி.1340.

மேற்கோள் : இஃது அகத்தோன் வீழ்ந்த புதுமை

(தொல்.புறத்.13.நச்.).

பொருள் : முன்னேறி முட்டுதற்காகப் பின்னே பெயர்ந்து செல்லும் கடாவைப் போல், மதிற்கண் ஊக்கமிக்குடைய வீரர் பின்வாங்கி மறையவும் முகிற்கூட்டம் நெருங்குதலால் இடியெழுந்தாற்போல் எதிர்முட்டி வந்தனர்; ஆதலால்

பகைவர் தம் அடியைப் பின்வாங்கித் தப்பிச் செல்லுதலும் இயலாதாம்.

விளக்கம் : 'ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர் தாக்கற்குப் பேருந் தகைத்து' என்னும் குறளாட்சி எண்ணத்தக்கது. தகர் - ஆட்டுக்கடா; அதிலும் செம்மறியாட்டுக்கடா. கடாப் பின்வாங்குவதுபோல் பின்வாங்கி முன்னேறக் கருதினார் என்க. கார்-முகில். அவை நெருங்க இடிபுறப்படல் போல் இருவரும் முட்டினார் என்க. மாற்றார்-பகைவர். இவண் அகத்துழிஞையான். அடிபுறத்திடு-அடியைப் பிறக்கிட்டுச் செல்லும் செலவு; பின்வாங்குதல். அன்றி, அடி பெயர்த்து வைத்தலும் என்றுமாம். அரிது இன்மைப் பொருள் தந்தது. கார்க்கண் என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இயைப்பு : 'ஒதுங்கியும், எதிரேற்றார்; மாற்றார் அடிபுறத்திடும் அரிது' என இயைக்க. (26)

தும்பைத் திணை

இருநிலந் தீண்டாவகை

(தலை துண்டிக்கப்பட்ட உடல் துள்ளல்)

உஎ) வான்துறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவர் என்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தம்குறை - மான்தேர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட உயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேற் பல. -பு.தி.1349.

மேற்கோள் : 'இது வஞ்சிப் புறத்துத் தும்பையாய் இருநிலந்தீண்டா வகை' என்பார் நச். (தொல். புறம். 16.). 'வஞ்சியுள் விழுப்புண்பட்ட வீரரை நோக்கி வேந்தற்குப் பொறாமை நிகழ்ந்து துறக்கம் வேண்டுழி நிகழ்ந்த தும்பை வஞ்சிப்புறத்தும்பை' என மேலும் விளக்குவார் அவர்.

பொருள் : குதிரைபூட்டப்பட்ட தேர்மேல் வந்த வேந்தன் தலைநடுக்கம் கொள்ளுமாறு வீரர்களின் வெட்டுண்ட உடற்குறை தம் உயிர் விடாமல் மேலே மேலேயே எழுந்து பாய்ந்தன. இவை வாள்வீரர்கள் உயர்ந்த வீட்டின்பத்தை விரும்பிப்போருக்கு வந்தனர் என்பதற்குச்சான்றுரைப்பன போன்றன.

விளக்கம் : மான்-குதிரை. பனித்தல்-நடுங்குதல். உயிர்க்கு இயல்பான உயிரிரக்கம் உண்மையால், வெட்டுண்டு வீழ்ந்த உடற்குறைகளின் துள்ளலைக் காண வெட்டியவனுக்கே அல்லது வெட்டப்படுதற்குக்காரணமாக இருந்தவனுக்கே தலையாட்டம் உண்டாயிற்று என்க. தம் குறை-வீரர்கள் உடல் துண்டங்கள். வெட்டுண்ட உடலகத்திருந்த உயிர் உடனே போகாமல் சிறிது பொழுது இருந்து துள்ளுதல் உண்மையால் அதனைத் தற்குறிப்பேற்றமாக, 'வான்மறவர் 'வான்துறக்கம் வேட்டெழுந்தார்' என்பதற்குச் சான்றுரைப்பதாகக் குறித்தார். துறக்கம்-வீட்டுலகம். 'விட்ட உயிர் விடாப் பாய்ந்தன' என்பது முரண்நயம்.

இயைப்பு : 'குறை, வேந்து, பனிப்ப, மேன்மேல் பாய்ந்தன; மறவர் துறக்கம் வேட்டெழுந்தார் என்பதற்குச் சான்றுரைப்ப போன்றன' என இயைக்க. (27)

யானை நிலை

(யானையின் விறு)

உஅ) மாயத்தால் தாக்கும் மலையும் மலையும் போல்
காயத்தூ றஞ்சாக் களிற்றொடும்போய்ச்-சாயும்
தொலைவறியா ஆடவரும் தோன்றினார் வான்மேல்
மலையுறையும் தெய்வம்போல் வந்து. - பு.தி.1400.

மேற்கோள் : இது யானை நிலைக்கு எடுத்துக்காட்டு (தொல். புறத்.17.நச்.). இவ்வியானை நிலையின் துறைப்பகுதியாக 'அரசர் மேலும் படைத்தலைவர் மேலும் ஏனையோர் மேலும் யானை சேறலும் களிற்றின்மேலும் தேரின் மேலும் குதிரை சேறலும் தன்மேல் இருந்து பட்டோர் உடலை மோந்து நிற்றலும் பிறவுமாம் என்று கூறி 'யானை நிலைக்கு' இதனைக் காட்டுவார் அவர்.

பொருள் : கண்டறியாதன காட்டிமயக்கும் காட்சியென மலையும் மலையும் தாக்குவதுபோல் தங்கண் பட்ட புண்ணுக்குச் சிறிதும் அஞ்சாத யானையொடும், போயழியும் தோல்வி என்பதை அறியாத வீரரும் வானளாவும் மலைமேல் உறையும் தெய்வம் போல் வந்து தோற்றந் தந்தார்.

விளக்கம் : மலையும் மலையும் தாக்குதல் போல் யானையும் யானையும் தாக்குதலைக் குறித்தார். இல்பொருள் உவமை. மாயத்தால் தாக்குதல், கண்டவர் வியப்புற்று மயங்குமாறு தாக்குதல். காயம்-உடல், ஊறு-புண்பாடு. இனிக் 'காயத்தூறு' புண்ணின் துயர் என்றுமாம். தொலைவு-அழிவு; போய்ச் சாயும் தொலைவு-புகழ் அழிந்துபடும் தோல்வி. அதனை அறியாமை, வீரர் தனிச் சிறப்பாம். வான்மேல் மலை என்றது மலையின் உயரம் குறித்த உயர்வு நவிற்சி. மனையுறை தெய்வம் போல், மலையுறையும் தெய்வம் என்றார். மலையுறையும் தெய்வம் முருகன் (சேயோன்) என்பது தொல்லோர் வழக்கு. 'சேயோன் மேய மைவரை உலகம்' என்பது தொல்காப்பியம்.

இயைப்பு : 'மலையுறையும் தெய்வம்போல் வந்து களிற்றொடும் ஆடவரும் வந்து தோன்றினார்' என இயைக்க. (28)

யானைமறம்

(யானைப்போர்)

உகூ) மம்மர் விசும்பின் மதியும் மதிப்பகையும்
தம்மில் தடுமாற்றம் போன்றதே-வெம்முனையிற்

போர்யானை மன்னர் புறங்கணித்த வெண்குடையைக்
கார்யானை அன்றடர்த்த கை. - பு.தி.1398.

மேற்கோள் : 'யானைமறம்' என்னும் பகுதியில் வரும்பாட்டு இது பு.தி.

பொருள் : கொடிய போர்க் களத்தின்கண் பொருதல் வல்ல யானைப் படையுடைய மன்னர் உயர்த்தெடுத்த வெண் கொற்றக் குடையைக் கரிய யானையின் கை பற்றிப்பிடித்த அப்பொழுதில், அத்தோற்றம் மயக்கமிக்க வானத்தில் மதியும் மதியைப் பற்றும் பாம்புப் பகையும் தம்முள் கலப்புற்று நிற்பது போன்றதாம்.

விளக்கம் : வெம்முனை-கொடிய போர்க்களம். புறங்கணித்தல்-புறத்தே உயர்த்திப் பிடித்தல். அடர்த்தல்-பற்றுதல். குடை மதிக்கும், களிற்றின் கை மதியைப் பற்றும் பாம்புக்கும் உவமை: தடுமாற்றம் ஒன்றன்மேல் ஒன்று வீழ்தல். மம்மர்-மயக்கம். மதிப்பகை-கரும்பாம்பு(இராகு). வெண்குடை கார்யானைக் கை என்பன முரண் நயம் உடையன. வண்ணமும் வடிவும் வினையும் ஒத்த உவமை இது.

இயைப்பு : 'யானை குடையை அடர்த்தகை, மதியும் மதிப்பகையும் தடுமாற்றம் போன்றதே' என இயைக்க. (29)

யானைமறம்

ஙo) வான்தோய் கழுகினமும் வள்ளுகிர்ப் பேய்க்கணமும்
ஊன்தோய் நரியும் உடன்தொக்க-மூன்றும்
கடமா நிலம் நனைக்கும் கார்யானைக் கிட்ட
படமாறு நீப்பதனைப் பார்த்து. -பு.தி.1399.

மேற்கோள் : 'யானைமறம்' என்னும் பகுதியில் வரும்பாட்டு இது. பு.தி.

பொருள் : அகன்ற நிலத்தை மறைக்குமாறு ஊறும் மதநீரைக் கொண்ட யானைக்கு அணியப்பட்ட முகபடாம், அரத்த ஆற்றில் இழுபட்டுச்செல்வதைப் பார்த்து விண்ணளாவப் பறக்கும் கழுகுக் கூட்டமும், வளமான நகத்தைக் கொண்ட பேய்க் கூட்டமும், ஊனில் பெருவிருப்புடைய நரிக்கூட்டமும் ஆகிய மூன்றும் ஒன்று கூடி உவந்தன.

விளக்கம் : 'மாநிலம் நனைக்கும் கடம்' என மாற்றி அமைக்க. நீப்பது-நீந்திச்செல்வது. படம்-முகபடாம். குருதி ஆற்றில் படம் படகென மிதக்கும் என்க. இனம், கணம் என்பவற்றுக் கேற்ப நரியும் கூட்டமாம் எனக் கொள்க. மூன்றும் உடன் தொக்க என இணைக்க. முற்கண் உள்ள 'தோய்' தழுவுதல் பொருளும் பிற்கண் உள்ள தோய்

விருப்பு என்னும் பொருளும் தந்தன. தமக்கு வேண்டு மளவு உணவு கிடைத்ததென உவந்து கூடின என்க. படமாறு நீப்பது கொண்டு அழிபாட்டின் பெருக்கத்தை அறியவைத்தார்.

இயைப்பு : 'படமாறு நீப்பதனைப் பார்த்துக் கழுகினமும் பேய்க் கணமும் நரியும் தொக்க' என இயைக்க. (30)

தார்நிலை

(தலைவனைக் காக்கும் தறுகண் வீரன் நிலை)

ஙக) வெய்யோன் எழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோன் ஒளி வழங்கும் செம்மற்றே-கையகன்று
போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
தார்தாங்கி நின்ற தகை. - பு.தி.1362.

மேற்கோள்: 'வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான் மீண்டெறிந்த தார்நிலை' என்பதற்கு இதனை எடுத்துக் காட்டுவார் நச். இதனைத், 'தன்படை போர் செய்கின் றமை கண்டு தானும் படையாளர்க்கு முன்னே சென்று வேலாற் போர் செய்து வென்றி மிகுகின்ற வேந்தனை மாற்றோர் சூழ்ந்துழி அதுகண்டு வேறோரிடத்தே பொருகின்ற தன் தானைத் தலைவன் ஆயினும் தனக்குத் துணைவந்த அரசன் ஆயினும் போரைக் கைவிட்டு வந்து வேந்தனொடு பொருகின்றாரை எறிந்த தார்நிலை' என்று விளக்குவார்.

பொருள் : இடமகல விரிந்து வந்த பகைவர் போரைத் தானொருவ னாக நின்று எதிரிடும் மன்னன் முன்னே புகழ்விருப்புடை யோனாம் வீரன் தான் புகுந்து அப்படையை எதிரிட்டு நின்ற தன்மை, கதிரோன் தோன்றுதற்கு முன்னர்க் கப்பிக் கிடந்த இருள் இடமறச் செல்லுமாறு செந்தண்மையால் ஒளிதரும் எழுஞாயிறு கிளர்ந்த சீர்மை போல்வதாம்.

விளக்கம் : கை-இடம்: பக்கம். தார்-முற்படச் செல்லும் படை; வெய்யோன்-விருப்புடையன். புகழெனின் உயிரும் கொடுக்குவர் ஆகலின் புகழுக்கு வாய்ப்பாம் போரின் முந்து நின்றான் என்க. தகை-தன்மை. வெய்யோன் - கதிரோன்; செய்யோன் - செந்தண்மையுடையனாம் எழுஞாயிறு. வெய்யோன் போல், முழுதிருள் அகலச் செய்யாது எனினும் செங்கதிர் எழும்போதே, காரிருள் படிப்படியே அகலுதல் காண்பார்க்கு இவ்வுவமை நன்கு விளக்கமாம். வேந்தன் வெய்யோன்; இப்புகழ் வெய்யோன், செய்யோன் என்க. வேந்தனையும்

வீரனையும் தக்கவகையில் உவமைப்படுத்திய உவமை வியப்பு மிக்கது. செய்யோன், வெய்யோன் என்னும் ஆட்சிகள் ஒன்றற்கே இருவேறு பொழுதுகளில் உள்ள பெயர்கள். வேந்தனும் வீரனும் அவ்வாறே ஒத்ததகையர் எனல் உள்ளீடு.

இயைப்பு : 'புக்குத் தாங்கி நின்ற நிலை.. எழாமுன்னம்... ஒளிவழங்கும் செம்மற்றே' என இயைக்க. (31)

களிறெறிந்த தெதிர்ந்தோர்பாடு

ஙஉ) இடியான், இடிமுகிலும் ஏறுண்ணும் என்னும்
படியாற் பகடொன்று மீட்டு - வடிவேல்
எறிந்தார்த்தார் மள்ளர் இமையாத கண்கண்
டறிந்தார்த்தார் வானோரும் ஆங்கு. - பு.தி.1347.

மேற்கோள்: 'களிறெறிந்தெதிர்ந்தோர் பாடு' என்பதற்கு மேற்கோள் (தொல்.புறத்.17.நச்.) 'மாற்று வேந்தன் ஊர்ந்து வந்த களிற்றைக் கையெறிந்தானும் கடுக்கொண்டெதிர்ந்தானும் விலக்கியவனையும் அக்களிற்றையும் போர் செய்தோர் பெருமைக் கண்ணும்' என இதற்குப் பொருள் விரிப்பார் நச்சினார்க்கினியர்.

பொருள் : வீரர் கூர்மையான வேலை எறிந்து, தன் இடிபோலும் முழக்கத்தால் இடிக்கின்ற முகிலும் இடிபடும் என்னும்படி களிறு ஒன்றனை மேல்வராமல் திருப்பி ஆரவாரித்தனர்; வானவர்களும் தம் இமைத்தலில்லாத கண்ணால் அதனைக் கண்டு ஆரவாரித்தனர்.

விளக்கம் : ஏறு-இடி; பகடு-யானை; வடி-கூர்மை; மள்ளர்-வீரர்; மன்னர் என்பது புறத்திரட்டுப்பாடம். இடிமுகிலும் என்பதற்கு இருண் முகிலும் என்றும், கண்கண்டு என்பதற்குக் கண்கொண்டு என்றும் நச்சினார்க்கினியர் பாடம் கொண்டார்.

யானையின் முழக்கத்தால் இடியும் இடித்து நடுங்கும் என்றது யானையின் வலிமை கூறியது. மீட்டு-மேலே செல்ல விடாமல் திருப்பி. எறிதல்-வீழ்த்துதல்.

கருவியின்றிக் களிற்றை எதிர்த்து வீழ்த்துதலைக் கையெறிந்தானும் என்றும் கருவி கொண்டு எதிர்த்து வீழ்த்துதலைக் கடுக்கொண்டெதிர்ந்தானும் விலக்குதல் என்றார் நச்சினார்க்கினியர். கடுக்கொண்டு என்பதால் 'கடுமுள்கருவி' கொண்டு விலக்குதல் குறிப்பாகவாம்.

இயைப்பு : 'மள்ளர் பகடு மீட்டு, ஆர்த்தார்; வானோரும் ஆர்த்தார்' என இயைக்க. (32)

வாளோர் ஆடும் அமலை

அமரனைத் தூக்கி வாள்வீசி ஆடல்

ஙங) ஆளுங் குரிசில் உவகைக் களவென்னாம் கேளின்றிக்
கொன்றாரே கேளாகி-வாள்வீசி
ஆடினார் ஆர்த்தார் அடிதோய்ந்த மண்வரங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து. - பு.தி.1348.

மேற்கோள்: 'களிற்றொடு பட்ட வேந்தனை அட்டவேந்தன் வாளோர் ஆடும் அமலை' என்பதற்கு மேற்கோள். (தொல். புறத்.17.நச்.) 'களிற்றொடுபட்ட வேந்தனைக் கொன்ற வேந்தன் படையாளர் வியந்து பட்டோனைச் சூழ்ந்து நின்று ஆடும் திரட்சி' என்று பொருள் விரிப்பார் அவர்.

பொருள் : விழ்ந்து பட்ட வீரனுக்கு உறவினர் எவரும் இலராய், அவனைக் கொன்றவரே அவனுக்கு உறவினராய்ச் சூழ்ந்து மகிழ்விலே வாளெடுத்து வீசி ஆடினர்; ஆர்த்தனர்; அவன் காலடிபட்ட இடத்தின் மண்ணை எடுத்து அணிந்தனர். ஆதலால் என்றும் வெற்றி பெறும் வேந்தன் மகிழ்வுக்கு அளவில்லை.

விளக்கம் : போர்க்களத்தில் இரக்கம் காட்டாமல் வீறுகாட்டிப் போரிடுதலும், அக்களத்தில் வீழ்ந்து பட்ட வீரனை மதித்துப் போற்றிக் கொண்டாடித் தம் உறவென்று கொண்டு செய்யும் சிறப்பெல்லாம் செய்தலும் வீரர் இயல்பாகலின், 'கேளின்றிக் கொன்றாரே கேளாகி' என்றார். 'பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால், ஊராண்மை மற்றதன் எஃகு' என்னும் குறள் எண்ணத் தக்கது. காலடி மண்ணை எடுத்துத்தெய்வப் பொருளெனப் பூசிக் கொள்ளலாம். இது மண்வழிபாடாம். வீரர் பிறந்த மண்ணை மதித்துப் போற்றுதல் பண்டு தொட்ட வழக்காகும். 'உவகைக் களவென்னா' 'கேளன்றி' என்பவை நச்.பாடம்.

இயைப்பு : 'வீழ்ந்தானைச் சூழ்ந்து கொன்றாரே கேளாகி, ஆடினார், ஆர்த்தார், ஓடினார், குரிசில் உவகைக் களவென்னாம்' என இயைக்க. (33)

வாகைத்திணை

ஏற்றல்

(தகுகொடை பெறுதல்)

ஙச) நிலம்பொறை யாற்றா நிதிபல கொண்டும்
குலம்பெறுதீங் கந்தணர் கொள்ளார்-நலங்கிளர்
தீவாய் அவிசொரியத் தீவிளங்கு மாறுபோல்
தாவா தொளிசிறந்த தாம். - பு.தி.1160.

மேற்கோள் : இஃது ஏற்றல் (தொல்.புறத்.20)நச்.

பொருள் : நிலமும் சுமக்க முடியாத செல்வங்கள் பல கொள்வ தெனினும் தம்குடிக்குத் தீமை வருவதாம் செயலினை அந்தணர் செய்யார். அவர் தகைமை நலமேோங்கி விளங்கும் தீயிடத்து நெய் சொரிதலால் தீமேலும் விளங்குவதுபோல் குறையாப் புகழ்ச் செய்கைகளே சிறந்து விளங்கும் வண்ணம் அமைவதாம்.

விளக்கம் : நிலம் பொறை யாற்றா நிதி என்றது நிதியின் அளவுப் பெருக்கம் உரைப்பது. மலைபோன்றவற்றையும் தாங்க வல்ல நிலம் தாங்க மாட்டாத செல்வம் என்றது அதன் மிகுதியை உயர்வு நவிற்சி வகையால் கூறியதாகும். காசுக்காகக் கயமை புரியும் குடியினர் அல்லர் அந்தணர் என்றும் அவர் மலையெனப் பொன்னைக் குவிப்பினும் தம்குடிப் பெருமை குன்றும் செயல்புரியார் என்றும் தெளிவாக்கினார். அவர் செய்யும் வேள்வித்தீ நெய் சொரியச் சொரிய உயர்ந்து விளங்குமாறு போல் அவரும் ஒளியுடன் விளங்குவார் என்றது குடிப்புகழொடு கூடிய உவமையாம்.

அவி சொரியச் சொரியத் தீ விளங்குமேயன்றி அணையாது. அதுபோல் எத்தகைய பெருநிதியம் எய்தினும் அந்நிதியத்திற்காகத் தம் குடியியல் மாறி விடார் என விளக்கம் காண்க.

'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்'

என்னும் குறள் அந்தணர் தன்மைக்கு அளவு கோலாதல் அறிக.

இயைப்பு : தீங்கு அந்தணர் கொள்ளார்; தீவிளங்குமாறுபோல் ஒளிசிறந்தது' என இயைக்க. (34)

வாணிகரீகை

(வாணிகர் கொடைச் சிறப்பு)

நரு) ஈட்டிய எல்லாம் இதன்பொருட் டென்பது
காட்டிய கைவண்மை காட்டினார் - வேட்டொறும்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையும் சங்கும் போல் தந்து. - பு.தி.1161.

மேற்கோள் : இது வாணிகர் ஈகை (தொல்.புறத்.20) நச்.

பொருள் : விரும்பத்தக்க மாலை அணிந்த சோழனது கடல்சூழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்துப் பெருவணிகர், வேண்டுவார் வேண்டும் போதெல்லாம் தாமரை என்றும் சங்கம் என்றும் சொல்லப்படும் பெருஞ் செல்வத்தைத் தந்து, தாம் தேடிய செல்வம் அனைத்தும் இவ்வாறு தருதற்கே என்பதைக் காட்டுவார்போல் தகவான கொடை நலத்தைக் காட்டினார்.

விளக்கம் : தாமரை சங்கு என்பன சிறப்பாகப் போற்றப்பட்ட நிதியங்கள். இவற்றைச், 'சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து, தரணியோடு வானாளத் தருவ ரேனும்; மங்குவார் அவர்செல்வம் மதிப்பே மல்லேம்' என்பது தேவாரம். பதுமம்-தாமரை. சங்கின் வடிவத்திலும், தாமரையின் வடிவத்திலும் அமைந்தவை என்பதைப் பெயரான் அறியலாம். இவற்றை இந்திரன் நிதியம் எனவும் அளகையோன் (குபேரன்) நிதியம் எனவும் கூறுவர். ஐ.அம்.பல் என்னும் ஈற்று எண் எனல் தொல்காப்பியம்.

புகார் வணிகர் சிறப்பியல் இதனால் விளங்குவதுடன் புகார் வணிகச் சிறப்பும் சோழவேந்தன் செழிப்பும் அறநிலையும் புலப்படுப்பது இப்பாடல். சென்னி - சோழன். அவன் சீர்த்தி வாழ்த்தில் காண்க. (41)

சமுதாயத்தில் இருந்து ஈட்டப்படும் செல்வம், அச் சமுதாயத்திற்குப் பயன்படுமாறு கொடுத்தலே முறைமை என்பதைத் தெளிவிப்பார்போல், 'ஈட்டிய வெல்லாம் இதன் பொருட் டென்பது காட்டிய கைவண்மை காட்டினார்' என்றார். வேட்டொறும்-விரும்பும்தோறும். காமர் - விருப்பம், அழகு.

விண்ணகக் கொடையும் மண்ணகத்துக் கிட்டும் என்பதால் வணிகர் குடிச் சிறப்புரைத்தது இது.

இயைப்பு : வணிகர் தந்து இதன் பொருட்டென்பது காட்டினார் என இயைக்க (35)

பாசறை முல்லை

(பாசறை வேந்தன் பேராண்மைக் காவல்)

(௯௪௫) மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடை
மாதர்பாற் பெற்ற வலியுளவோ - கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலான்
ஐங்கணை தோற்ற அழிவு. - பு.தி.1271.

மேற்கோள்: 'கூதிர்வேனில் என்றிரு பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணியமரபு' என்பதற்கு மேற்கோள் (தொல்.புறத். 21.நச்.) 'இருத்தற்பொருள் முல்லை என்பதே பற்றிப் பாசறைக்கண் இருத்தலால் பாசறைமுல்லை எனப் பெயர் கூறுவாரும் உளர்' என்றும் கூறினார் அவர்.

பொருள் : குளிர்வாட்டும் கூதிர் காலப் பொழுதிலும், பகைவர் மாட்டுச் சிவந்த கண்ணையுடைய வலிய வேந்தன், பாசறையின் கண் இருக்குங்கால், மன்மதவேளின் மலர்க்கணைகள் ஐந்தும் செயலற்று அழிந்தன; தம் பழமையான குடிவரவுடைய இல்லத்தின்கண் உள்ள திண்ணிய கற்பமைந்த, மாதரிடத்துப் பெற்றுக் கொண்டு வந்த வலிமையும் உளதே போலும்! இல்லாக்கால் இத்திண்மை அமையாது என்பதாம்.

விளக்கம் : மூதில்-வழிவழியாக அமைந்த மறக்குடி; கற்பின் அடையாளப் பூ முல்லை. 'இல்லிருத்தல் முல்லை' என்பது முல்லைத் திணையின் இலக்கணம். ஆதலின் முல்லைசால் கற்பு என்றார்.

'கற்பெனும் திண்மை' என்பது திருக்குறள். மனத்துக்கண் நிறுத்துக் காக்கும் நிறையே கற்பாமாகலின் அதனை 'வலி' என்றார். போர் வலிமையுடைய வேந்தனுக்கு இக்கற்பின் வலிமையமைந்தமை தம் மாதரிடத்துக் கொண்ட அன்பு தரப்பெற்ற தாகலின் 'பெற்ற வலி' என்றார்.

வெங்கண் கொடுமைக் குறியாம் சிவந்தகண். தன் மகவைக் கண்ட அதியமான் போர்க்களத்திலிருந்து நேரே வந்தவன் ஆகலின் அவன் கண்ணின் சினம் இன்னும் ஆறிற்றில்லை என்றார் ஔவையார். அத்தகு கண் 'வெங்கண்' என்க. வேனிலான்-மன்மதன். ஐங்கணை-ஐந்து மலரம்புகள். அவை: தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன.

அக்கணைகள் செயலற்றுப் போனமையின் 'தோற்ற அழிவு' என்றார்.

இயைப்பு: 'பாசறையுள் வேந்தன், வேனிலான் கணை தோற்ற அழிவு, மாதர்பாற் பெற்ற வலி' என இயைக்க. (36)

பின்தேர்க்குரவை

(வெற்றி கொண்ட தேரின்பின் நிகழும் குரவைக் கூத்து)

௩எ) வென்று களங்கொண்ட வேந்தன்தேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ் கொற்றவை-நின்றளிப்ப
உண்டாடு பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
கொண்டா டினகுரவைக் கூத்து. - பு.தி.1429.

மேற்கோள்: ஒன்றிய மரபிற் பின்றேர்க் குரவை என்பதற்கு எடுத்துக் காட்டு இது. (தொல்.புறத்.21.நச்.) இதன் பொருளைத், 'தேரோரை வென்ற கோமாற்கே பொருந்திய இலக்கணத் தானே தேரின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச் சுற்றம் ஆடும் குரவை' என்று கூறுவார் அவர்.

பொருள் : பகைவென்று போர்க்களத்தைத் தனதாக்கிக் கொண்ட வேந்தனது தேர்க்களத்தை விட்டுச் சென்றதற்குப் பின்னர், ஆங்குக் கொல்லப்பட்ட பிணமாகிய ஊன் கூழைக் கொற்றவை முன்னின்று அளித்தலால் அதனை ஏற்றுண்ட பேய்கள் உவந்து ஆடின; போர்க்களம் தந்த பரிசிலாகிய அதற்கு மகிழ்ந்து குரவைக் கூத்து ஆடின.

விளக்கம் : பகற் போர் முடித்து வேந்தன் செல்லுதலால், 'வேந்தன் சென்றபின்' என்றார்; பேயாட்சி இரவுப் போழ்தாகலின் என்க. நிணம்-ஊனும், குருதியும் பிறவும் கூழ் அடுதலும், கொடுத்தலும் பரணி நூல்களில் விரிவாகக் கூறப்படுவன. ஆங்குக் கண்டு கொள்க. நின்றளிப்ப என்றதுநெடும் பொழுது வேண்டுமளவு தருதலைக் குறித்து நின்றது. 'எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்ம ரேனும் கை கோத்தாடும் கூத்து... குரவைக் கூத்து (சிலப். 3:24). வாயால் ஒலி எழுப்புதல் 'குலவை' என இந்நாள் வழங்கப்படுதல் அறியத்தக்கது. குரவைகள் பல ஆதல் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்பவற்றால் விளங்கும்(சிலப்.).

இயைப்பு : 'சென்றதற்பின் கொற்றவை கூழ் அளிப்ப, பேய்கண் டுவந்தன, கூத்து கொண்டாடின' என இயைக்க. (37)

சான்றோர் பக்கம்

(சான்றோர் சால்பியல் சாற்றல்)

௩அ) யானை நிரையுடைய தேரோ ரினும்சிறந்தார்
ஏனை நிரையடைய ஏர்வாழ்நர்-யானைப்

பசடையோர்க்கும் வென்றி பயக்கும் பகட்டேர்
உடையோர்க் கரசரோ ஒப்பு. பு.தி.1159.

மேற்கோள் : *'பகட்டினானும் மாவினானும் துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்' (தொல்.புறத்.21) நச்.*

பொருள் : *யானைக் கூட்டத்தையுடைய அரசரினும் சிறந்தவர் ஆநிரைகளைத் தம்மதாகக் கொண்ட வேளாண்குடியினர். யானைப் படையுடைய வேந்தர்க்கும் வெற்றிதரும் காளை பூட்டப்பட்டு இழுக்கும் ஏரையுடைய உழவர்க்கு அவ்வேந்தர் ஒப்பாகார்.*

விளக்கம் : *இருவரும் நிரையுடைய (கூட்டமுடைய) ராயினும், ஆநிரையுடைய உழவர்க்கு யானை நிரையுடையவர் ஒப்பாகார் என்றார். ஒப்பாகாமை விளக்குவாராய், யானைப் படைக்கும் ஏர் உடையவர் விளைக்கும் உணவின்றிக் கூடாமையால் ஏர் உடையோர்க்கு அரசரோ ஒப்பு என்றார். 'தேரோர்', யானைப் படையோர்' 'அரசர்' என்பன அரசர் குடியுரைத்தன. 'ஏர்வாழ்நர்' 'பகட்டேர் உடையோர்' என்பன உழவர் குடியுரைத்தன. பகடு-காளை.*

> 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'; அஃதாற்றா(து)
> எழுவாரை எல்லாம் பொறுத்து'
>
> 'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
> விட்டேம்என் பார்க்கு நிலை'

என்னும் குறள்கள் கருதத்தக்கன.

> *'ஏர் எழுபது' என்பதும் 'திருக்கை வழக்கம்'*

என்பதும் இதனை விரித்துரைக்கும் நூல்கள்.

இயைப்பு : 'தேரோரினும் ஏர்வாழ்நர் சிறந்தார்: *அரசரோ ஒப்பு' என* இயைக்க. *(38).*

காமம் நீத்தபால்

(பாலியல் வேட்கையை ஒடுக்கிய திறம்)

௩௯.) இளையர் முதியர் எனவிருபால் பற்றி
விளையும் அறிவென்ன வேண்டா - இளையனாய்த்
தன்தாதை காமம் நுகர்தற்குத் தன்காமம்
ஒன்றாது நீத்தான் உளன். - பு.தி.542.

மேற்கோள்: *'காமம் நீத்த பாலுக்கு (தொல்.புறத்.21.) நச்.*

பொருள் : அறிவுச் சிறப்பு இளமையிலே உண்டாகும் என்றோ முதுமையிலே உண்டாகும் என்றோ இரு வகையாகப் பகுத்துக் கூறவேண்டுவதில்லை. இளம்பருவத்தனாக இருக்கும்போதே, தன் முதிய தந்தை திருமணம் கொண்டு இன்புறுதற்காகத் தான் மணத்தலையும் துறந்து விட்டவனும் ஒருவன் உளன் என்பது உலகறிந்த செய்தி. ஆதலால் இளமையிலும் அறிவு சிறப்பாக வெளிப் படுதலும் கூடும் என்றும், அது முதுமைக்கே சிறப்பாக உரியது என்று கொள்ளற்க என்றும் கூறினார்.

விளக்கம் : இளையனாக இருக்கும்போதே தன் தந்தை 'இன்பம் நுகர்தற்காகத் தான் மணத்தலைத் துறந்தவன் வீடுமன். இது பாரதப் பெரு நூலால் அறியவரும் செய்தி. உலகறிந்த செய்தி என உட்கொண்டமையால் சிறப்புப் பெயரைச் சுட்டாமலே 'இளையனாய் நீத்தான் உளன்' என்றார். தாதை - தந்தை. அவன் சந்தனு என்பான் இளையனாய் இன்பம் நீத்தான். புரூரவா என்பவனுமாம் என்பர் (பெருந்தொகை).

அறிவு என்பது அறிந்து கொள்வதை மட்டும் குறிப்பதன்று. பண்புடைமை, சான்றாண்மை, ஒப்புரவறிதல், அருளுடைமை முதலாயவற்றையும் குறிக்கும்.

'சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு'

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போல் போற்றாக் கடை'

என வரும் குறள்களைக் கருதுக.

இயைப்பு : 'நீத்தான் உளன்; இளையர் முதியர் என வேண்டா என இயைக்க. (39)

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்

(கொடுப்பவரைப் புகழ்ந்து கொடாதவரை இகழ்வது)

௪0) மின்னும் தமனியமும் வெற்றிரும்பும் ஓரினமாப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே-கொன்னே
ஒளிப்பாரு மக்களாய் ஒல்லுவ தாங்கே
அளிப்பாரு மக்களா மாறு. - புறத்திரட்டு 228.

மேற்கோள்: 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலுக்கு
(தொல்.புறத்.35) நச்.

பொருள் : ஒளிவிடும் தங்கமும் கருநிற இரும்பும் 'பொன்' என்னும் பொதுப் பெயரால் வழங்கப்படும். அதுபோல் பொருந்தாதது வாய்ப்பிருந்தும் ஒன்றைக் கொடுக்கத் தக்கார்க்கும் கொடாமல் ஒளிப்பவரையும், தம்மால் இயன்றதையெல்லாம் உடனே அளிப்பவரையும் மக்கள் என்னும் பொதுப் பெயரால் வழங்குவது.

விளக்கம் : வெண்பொன், செம்பொன், பைம்பொன், கரும்பொன் அல்லது இரும்பொன் என்பவை வெள்ளி, செம்பு, தங்கம், இரும்பு ஆகியவற்றைக் குறிக்கும். இவற்றுள் 'பொன்' என்பது பொதுப் பெயர். போலாதே-போன்றது ஆகாதே. கொன்னே-வீணே. ஒல்லுவது-இயன்றது.

'உறுப்பொத்தல் மக்களொப் பன்றால்'

'மக்களே போல்வர் கயவர்'

என்னும் குறள்களைக் கருதலாம்.

வெற்றிரும்பு என்பதில் 'வெறுமை' பயனின்மை கருதிய தன்று. ஒளியின்மை குறித்தது. தங்கமும் இரும்பும் பொலிவில் வேறுபடினும் மாறுபடுதல் இல்லை. ஒளிப்பாரும், அளிப்பாருள் எவற்றானும் ஒப்பானவர் அல்லர்: மறுதலையானவர். ஆதலால் 'போலாதே' என்றார்.

இயைப்பு : 'பெயர்படைத்தாற் போலதே; மக்களாமாறு.' என இயைக்க (40)

புறநிலைவாழ்த்து

(தலைவனைத் தெய்வம் காக்க வாழ்த்துதல்)

சக) கண்ணுதலோன் காக்கக் கடிநேமி யோன்காக்க
எண்ணிருதோள் ஏந்திழையாள் தான்காக்கப்-பண்ணியநூற்
சென்னியர்க் களிக்கும் செல்வனீ மன்னுக
நாளுமிம் மண்மிசை யானே. - பு.தி.1500.

மேற்கோள்: 'புறநிலை வாழ்த்து' என்பதற்கு எடுத்துக்காட்டு இது. (தொல்.புறத்.35.நச்.) பாட்டுடைத் தலைவன் முன்னிலையாகத் தெய்வம் படர்க்கையாக வாழ்த்தும் வாழ்த்து என்பது அவர் கூறும் பொருள்.

பொருள் : நெற்றிக் கண்ணையுடைய இறைவன் காப்பானாக: காவல்கடன் பூண்ட ஆழிப்படையோனாம் திருமால் காப்பானாக; பதினாறு கைகளையுடைய கொற்றவை

காப்பாளாக; தேடிய புகழைத் தன்குடியாம் சோழர்குடிக்கு அளிக்கும் செல்வனே நீ நாளும் நாளும் இம்மண்ணுலகில் புகழால் நிலைபெறுவாயாக.

விளக்கம் : கண்ணுதல், நுதற்கண் எனமாற்றியமைக்க. நுதல்-நெற்றி. கடி-காவல்; நேமி-சக்கரம். ஏந்திழை-உயர்ந்த அணிகலம் அணிந்தவள்; இவண் வீரமடந்தையாம் கொற்றவை. நூல்-நூலான் வரும் பாடுபுகழ். சென்னியர்-சோழர். ஒருவன் பெருமை, குடிப்பெருமையாதலால், 'சென்னியர்க்களிக்கும் செல்வன்' என்றார். மண்மிசை-உலகில். செல்வனீ என்பது 'தெய்வநீ' என நச்சினார்க்கினியரால் பாடம் கொள்ளப்படும்.

இயைப்பு : 'காக்க, காக்க, காக்க, நீ மன்னுக' என இயைக்க. காக்க என்பது **'காப்ப'** எனப் பாடமாகக் காட்டும் பெருந்தொகை. (41)

பாடல் முதனினைபபு

அடியதிர்	2
ஆளுங்குரிசில்	33
இடியான்	32
இளையர்	39
இற்றைப்	17
ஈட்டிய	35
கங்கைபரந்	5
கடல்புக்கு	6
கண்ணுதலான்	41
கல்கெழு	7
காட்டகம்	8
குன்றுயர்	20
தழிச்சிய	14
தாக்கற்கு	26
தாய்வாங்கு	24
திரைகவுள்	3
தொழுதுவிழா	21
நிலம்பொறை	34
பகலெறிப்ப	19
பிறர்புலம்	4
பொருசின	18
பொருவரு	23
போர்ப்படை	13
மம்மர்	29
மழுவான்	16
மாயத்தால்	28
மாற்றுப்	15
மின்னும்	40
முற்றரணம்	22
மூதில்வாய்	36
யாமோ பகர்ந்	9
யானை நிரை	38
வந்த நிரை	11
வாள் வலம்	10
வான் துறக்கம்	27
வான் தோய்	30
விண்ணசைஇ	12
வெஞ்சின	25
வெய்யோன்	31
வெவ்வாய்	1
வென்றுகளங்	37

4. இணைப்புப் பாடல்கள்
1-82

குறிப்பு

1. இப்பாடல்களுள் ஒன்றானும் இளம்பூரணரால் புறத்திணையியலில் மேற்கோளாக ஆளப்பெற்றில என்பது கொள்ளத்தக்கது.

2. புறத்திரட்டின் 1438ஆம் பாடலாகிய 'உலகுபொதியுருவம்' என்னும் பாடல் பெரும்பொருள் விளக்கம் சார்ந்ததாகப் பொருள்.புறத்.நச். உரைப்பதிப்பில் (கழகவெளியீடு 1947) காணப்படினும், புறத்திரட்டில் அக்குறிப்பு இல்லை. ஆதலால் இதனை முற்பகுதியில் சேர்க்காமல், இப்பகுதியில் சேர்க்கப்பட்டது (72)

வெட்சித் திணை
பாக்கத்து விரிச்சி

1. வந்தநீர் காண்மினென் றாபெயர்ப்போன் மாட்டிசைத்த
பைந்தொடியார் கூறும் பறவாப்புள்-உய்ந்த
நிரையளவைத் தன்றியும் நீர்சூழ் கிடக்கை
வரையளவைத் தாவதா மண்

-விரிச்சியை வியந்தது - தொல்.புறத்திணையியல்.
3. நச்சினார்க்கினியர் மேற்கோள்.

ஒற்றின் ஆகியவேய்

2. ஒருவர் ஒருவர் உணராமற் சென்றாங்கு
இருவரும் ஒப்ப இசைந்தார்-வெருவர
வீக்கும் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்கும் சரந்தெரிந்து கொண்டு

3. நெடுநிலையா யத்து நிரைசுவ டொற்றிப்
படுமணி யாயம் பகர்ந்தோய்-நெடிது
மனக்குரிய காதல் வயவேந்த னென்றும்
நினக்குரிய வாக நிரை -புறத். 3

-இவை கண்டோர் கூற்று.

புறத்திறை

4. கரந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பரந்துசென் மள்ளர் பதிந்தார்-அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந்தவியும் போலுமிவ் வூர் புறத்.3

-இது கண்டோர் கூற்று.

ஊர் கொலை

5. அரவூர் மதியிற் கரிதூர வீம
விரலூ ரெரிகொளீஇக் கொன்று-நிரைநின்ற
பல்லான் தொழுவும் பகற்காண்மார் போர்கண்டோர்
கொல்வார்ப் பெறாஅர் கொதித்து.

6. சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்-கொன்றாண்டு
இகலிழந்த வல்வில் இளையோர்புண் தீரத்
துகளெழுங்கொல் பல்லான் தொழு. புறத்.3

-இவை கண்டோர் கூற்று

பூசன் மாற்று

7. ஒத்த வயவர் ஒருங்கவிய நாணபடரத்
தத்தம் ஒலியும் தவிர்ந்தன-வைத்தகன்றார்
தம்பூசன் மாற்றி நிரைகொள்வான் தாக்கினார்
வெம்பூசன் மாற்றிய வில்.

-கண்டோர் கூற்று

தந்துநிறை

8. குளிறுகுரல்முரசஞ் கொட்டின் வெரூஉம்
களிறொடுதேர் காண்டலு மாற்றா-நளிமணி
நல்லா னின்நிரை நம்மூர்ப் புறங்கானம்
எல்லாம் பெறுக இடம்

9. கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழுவிடை யாயந் தொகுமின்-எழுவொழித்தாற்
போமே இவையிவற்றைப் போற்றுமின் புல்லொடுநீர்
தாமேய் புலம்போலத் தந்து.

-இவை கண்டோர் கூற்று.

கொடை

10. கொடைத் தொழி லெல்லாம் குறைவின்றிப் பண்டே
முடிடத்தனன் என்றிருந்த மூத்தோன் -கொடைக்கு
வரம்பிலன் என்றே மருண்டான் நிரைகோட்
கரந்தையங் கண்ணியாற் கண்டு.

-கண்டோர் கூற்று.

11. கடிமனைச் சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவில் வேலோன் மறுத்தோம்ப லொட்டான்
அடிபுனை தோலின் அரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை.

-இது படைத்தலைவர் படையாளரைக் கூயினது.

வேய் கூறினார்க்குச் சிறப்புச் செய்தல்

12. மாற்றருந் துப்பின் வயவேந்த னல்லனே
ஏற்ற பெருஞ்சிறப் பின்றீதும்-வேற்றூரிற்
புல்வேய் குரம்பைப் புறஞ்சிறைவாய் நின்றொற்றி
நல்வேய் உரைத்தார்க்கு நாம். புறத்.3

துடிநிலை

13. நித்திலம்செய் பட்டமு நெற்றித் திலதமும்
ஒத்திலங்க மெய்பூசி ஓர்ந்துடீசித்-தத்தம்
துடியரோ டூர்ப்புறஞ் சூழந்தார் மறவர்
குடி நிரை பாராட்டக் கொண்டு

கொற்றவை நிலை

14. அருமைத் தலைத்தரும் ஆநிரையுள் ஐயை
எருமைப் பலிகோள் இயைந்தாள்-அரசனும்
வேந்தன்மேற் செல்வான் விறல்வஞ்சி சூடானென்று
யார்ந்தன்மேற் சீறாமல் இன்று.

உயிர்ப்பலி

15. நச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலையும் நல்கும்யாம் காணேம்கொல்-மிச்சில்கூர்
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின் வாய் வீழ்ந்தான் தலை

குருதிப்பலி

16. ஆடினி பாடி யளவின்றிக் கொற்றவை
பாடினி பாடற் படுத்துவந்தாள்-நாடிய்
தோளுழலை யாடுவோன் தோளினும் தூக்கமைந்த
தாறுழலை யாடுவோன் தான். புறத்.4

-பொதுவகையான் இருவகை வெட்சிக்கும் வஞ்சிக்கும் பொது.

பொதுவியல்திணை

வேலன் வெறியாட்டு

17. அமரகத்துத் தன்னை மறந்தாடி யாங்குத்
தமரகத்துத் தன்மறந் தாடும்-குமரன்முன்
கார்க்காடு நாறும் களனிழைத்துக் காரிகையார்
ஏர்க்காடும் காளை இவன்.

இது சிறப்பரியா மகளிர் ஆடுதலிற் புறனாயிற்று. வேலனாடுதல் அகத்திணைக்குச் சிறந்தது.

போந்தை மலைந்தாடியது

18. ஏழக மேற்கொண் டிளையோன் இகல்வென்றான்
வேழ மிவனேற வேந்துளவோ-ஏழுலகுந்
தாந்தயங்கு நாகம் தலைதயங்க ஆடாமோ
போந்தையங் கண்ணி புனைந்து.

வேம்பு மலைந்தாடியது

19. குரும்பூழ்ப்போர் கையெறிந்து கொற்றம் பெறுதல்
இறும்பூதென் றியாமாடல் வேண்டா-செறுங்கோன்
குலமதிக்கு மாற்றியிற் கொற்றவன் வேம்பு
தலைமலையற் பாலதூஉ மன்று.

ஆர்மலைந்தாடியது

20. ஆர்வேய்ந்த கோலத்தோ டாடுவர் பாடுவர்
போர்வேந்தர் பெற்றநாள் போன்றுவப்பர்-சீர்சால்
பறைகெழு வாரணப் போர் பண்டிகழ்ந்தோ ரின்று
சிறை கெழு வாரணப்போர் செய்து.

இவை(18-20) தன்னுறு தொழில்.

வாடாவள்ளி

21. மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்-பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமகள் நோற்றாள் பெரிது.

கழல்நிலை

22. மீளாது பெற்ற விறற்கழலோன் வாளாட்டின்
வாளாடு கூத்திவந்தாடினாள்-வாளாட்டின்
மண்ணாளு மன்னரே பெண்ணாவார் வண்மைக்குப்
பெண்ணாடின் யாதாம் பிற.

உன்னநிலை

23. முன்னங் குழையவும் கோடெலாம் மொய்தளிரீன்
றுன்னங் குழையொலிதத் தோங்குவாய்-மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து.

-தன்னுறு தொழில்

பூவை நிலை

24. குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய்-மரம்பெறாப்

போரிற் குருகுறங்கும் பூம்புனனீர் நாட
மார்பிற் கிடந்த மறு.

-இது சோழனை மாயோனாகக் கூறிற்று.

25. ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்வினையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்

-இது சேரனை அரனாகக் கூறிற்று.

26. இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
சுந்தரத்தான் என்னிற் பிறையில்லை-அந்தரத்துக்
கோழியான் என்னின் முகன்ஒன்றே; கோதையை
ஆழியான் என்றுரைற் பாற்று.

-இது சேரனைப் பலதேவராகக் கூறிற்று.

நெடுமொழி

27. தானால் விலங்கால் தனித்தால் பிறன்வரைத்தால்
யானை எறிதல் இளிவரவில்-யானை
ஒருகை யுடைய தெறிவலோ-யானும்
இருகை சுமந்துவாழ் வேன்.

வருதார் தாங்கல்

28. ஏற்றெதிர்ந்தார் தார்தாங்கி வெல்லவருகென் றேவினான்
கூற்றினுந்தாயே கொடியளே-போர்க்களிறு
காணா இளமையாற் கண்டிவனோ நின்றிலனேன்
மாணாருள் யார்பபிழைப்பார் மற்று.

வாள்வாய்த்துக் கவிழ்தல்

29. ஆடும் பொழுதின் அறுகயிற்றுப் பாவைபோல்
வீடும் சிறுவன்தாய் மெய்ம்மகிழ்ந்தாள்-வீடுவோன்
வாள்வாயின் வீழ்ந்த மறவர்தந் தாயரே
கேளா அழுதார் கிடந்து

-இவை (28,29) தன்னுறு தொழில்.

பிள்ளையாட்டு

30. வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்றலை ஒள்வாட் புதல்வன்கண்-டன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வர.

-இதனைப் பிள்ளைத் தன்மையினின்று பெயர்த்தலிற் பிள்ளைப் பெயர்ச்சியும் என்ப.

காட்சி

31. தாழி கவிப்பத் தவஞ்செய்வர் மண்ணாக
வாழிய நோற்றனை மால்வரை-ஆழிசூழ்
மண்டில மாற்றா மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனென் நின்மாட்டோர் கல்.

-இது கல் ஆராய்கின்றார் காட்சி.

32. கல்லாயும் எற்றெறிந்து காண்டற் கெளிவந்த
வல்லாண் படலைக்கு வம்மினோ- வெல்புகழாற்
சீரியல் பாடல் சிதையாமல் யாம்பாடத்
தூரிய மெல்லாம் தொட.

-இது கடவுளாகிய பின் கண்டது.

கால்கோள்

33. வரையறை சூழ்கிடக்கை மாத்தாட் பெருங்கல்
வரையறை செய்யிய வம்மோ-வரையறை
வாராப் பெரும்புகழ் வல்வேல் விடலைக்கும்
ஓராற்றாற் செய்வ துடைத்து.

நட்டுக் கால் கொண்டது

34. காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி பெய்து புகைகொளீஇ-மீப்படர்ந்த
காளை நடுகற் சிறப்பயர்ந்து கால்கொண்மின்
நாளை வரக்கடவ நாள்

நீர்ப்படை

35. வாளமர் வீழ்ந்த மறவோன்கல் ஈர்த்தொகுக்கிக்
கேளிர் அடையக் கிளர்ந்தெழுந்து-நீர்விசும்பிற்
கார்ப்படுத்த வல்லேறு போலக் கழலோன்கல்
நீர்ப்படுத்தார் கண்ணீரி னின்று.

நடுகல்

36. சீர்த்த துகளிற்றாய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப்-போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் பெயர் பொறித்துக்
கன்னட்டாற் கல்சூழ் கடத்து.

-இது கல் நாட்டியது.

37. கோள்வாய்த்த சீயம்போற் கொற்றவர்தம் மாவெறிந்து
வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலாய்-நாள்வாய்த்
திடைகொளலின்றி எழுத்துடைக் கல்வாய்
மடைகொளல் வேண்டும் மகிழ்ந்து.

-இது மறவனை நாட்டியது.

பெயர் முதலியன பொறித்தது

38. கைவினை மாக்கள் கலுழக்கண் நோக்கிழந்து
செய்வினை வாய்ப்பவே செய்தமைத்தார்-மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேற் பெரிது.

சிறப்புப் படைத்தது

39. அன்றுகொள் ஆபெயர்த் தாரமரில் வீழ்ந்தோன்கற்
கின்று கொள் பல்லான் இனமெல்லாம்-குன்றாமற்
செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மினோ கோட்டம் வகுத்து.

கல்வாழ்த்து

40. ஆவாழ் குழக்கன்றுய் வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுகல்-ஓவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் புலிபொறித்த
பொற்கோட் டிமயமே போன்று. புறத். 5

வஞ்சித் திணை

வயங்கல் எய்திய பெருமை

41. மேற்செல்லுங் காலைத் துணைவந்த வேந்தர்தம்
பாற்செல்லச் செல்லும் பரிசினால்-நாற்கடல்சூழ
மண்மகிழும் காட்சியான் மீன்பூத்த வானத்து
வெண்மதிபோன் கேம்பட்டான் வேந்து.

நெடுமொழி

42. போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றோ-போர்க்கெல்லாம்
தானர்தி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
ஏனாதிப் பட்டத் திவன்.

-இது பிறர் கூறிய நெடுமொழி. *புறத்.8*

உழிஞைத் திணை

ஏணிமயக்கம்

43. சேணுயர் ஞாயிற் றிணிதோளான் ஏற்றவும்
ஏணி தவிரப்பாய்ந் தேறவும்-பாணியாப்
புள்ளிற் பரந்து புகல்வேட்டார் போர்த்தொழிலோர்
கொள்ளற் கரிய குறும்பு.

-இது புறத்தோர் ஏணி மயக்கம்.

44. இடையெழுவிற் போர்விலங்கும் யானையோர் போலு
மடையமை யேணி மயக்கிற்-படையமைந்த
ஞாயில் பிணம்பிறக்கித் தூர்த்தார் நகரோற்க்கு
வாயில் எவனாங் கொல் மற்று.

-இஃது அகத்தோர் ஏணிமயக்கம்.

முற்றிய முதிர்வு

45. கடல்பரந்து மேருச்சூழ் காலம்போற் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்-கடலெதிர்
தோன்றாப் புலிபோல் அரண்மறவர் தொக்கடைந்தார்
மான்றேரான் மூதூர் வரைப்பு.

-இது புறத்தான் முற்றிய முதிர்வு.

46. ஊர்சூழ் புரிசை யுடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து-போர்மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
றாகஞ்சேர் தோள் கொட்டி யார்த்து.

-இஃது அகத்தோன் முற்றிய முதிர்வு.

நொச்சி

47. இருகன்றின் ஒன்றிழந்த ஈற்றாப்போற் சீறி
ஒருதன் பதிசுற் றொழியப்-புரிசையின்
வேற்றரணங் காத்தான் விறல்வெய்யோன் வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று.

இஃது அகத்துழிஞையோன் எயில்காத்த நொச்சி.

பாசி

48. பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணாய்
நிலந்திடர் பட்டதின் றாயிற்-கலங்கமர்மேல்
வேத்தமர் செய்யும் விரகென்னாம் வேன்மறவர்
நீத்துநீர்ப் பாய்புலிபோல் நின்று.

-இஃது அகத்தோர் புறத்தோர் இருவர்க்கும் ஒக்கும்.

பாசிமறம்

49. மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார்-எறிதொறும்போய்
நீர்ச்செறி பாசிபோல் நீங்காது தங்கோமான்
ஊர்ச்செரு வுற்றாரைக் கண்டு.

-இது புறத்தோன் பாசிமறம்.

50. தாந்தங் கடைதொறும் சாய்ப்பவும் மேல்விழுந்த
வேந்தன் படைப்பிணத்து வீழ்தலான்-ஆங்கு

மதுக்கமழும் தார்மன்னர்க் குள்ளூர் மறுகிற்
பதுக்கையும் வேண்டாதாம் பற்று
-இஃது அகத்தோன் பாசிமறம்.

அகமிசைக்கிவர்தல்

51. வாயிற் கிடங்கொடுக்கி மாற்றினார் தம்பிணத்தாற்
கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர்-ஞாயிற்
கொடுமுடிமேற் குப்புற்றார் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாங் கோடல் நினைந்து.
-இஃது புறத்தோன் அகமிசைக் கிவர்தல்.

52. புற்றுறை பாம்பின் விடநோக்கம் போல்நோக்கிக்
கொற்றுறை வாய்த்த கொலைவேலோர்-கொற்றவன்
ஆரெயின்மேற் றோன்றினார் அந்தரத்துக் கூடாத
போரெயின்மேல் வாழவுணர்போன்று.
-இஃது அகத்தோன் அகமிசைக்கிவர்தல்.

மண்ணுமங்கலம்

53. மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போற்
பொழிலேழுங் கைக்கொண்ட போழ்தில்-எழில்முடி
சூடாச்சீர்க் கொற்றவனுஞ் சூடினான் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாங் கொடுத்து.
-இது புறத்தோன் மண்ணுமங்கலம்.

54. வென்றி பெறவந்த வேந்தை இகன்மதில்வாய்க்
கொன்று குடுமி கொளக்கண்டு-தன்பால்
விருந்தினர் வந்தார்க்கு விண்விருந்து செய்தான்
பெருந்தகையென் றார்த்தார் பிறர்.
-இஃது அகத்தோன் மண்ணுமங்கலம்.

வாள்மங்கலம்

55. செற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொல்-முற்றியோன்
பூவொடு சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு.
-இது புறத்தோன் வாண்மங்கலம்.

56. வருபெரு வேந்தற்கு வான்கொடுத்து மற்றை
யொருபெரு வேந்தற்கூர் ஈந்தாள்-ஒருவன்வாள்
இவ்வுலகிற் பெற்ற இகற்கலையேற் றூர்தியாள்
அவ்வுலகிற் போய்ப்பெறுங்கொல் ஆங்கு.
-இஃது அகத்தோன் வாண்மங்கலம்.

தொகைநிலை

57. கதிர்சுருக்கி அப்புறம்போங் காய்கதிர்போல் வேந்தை
எதிர்சுருக்கி ஏந்தெயில்பா ழாக்கிப்-பதியிற்
பெயர்வான் தொகுத்த படைத்துகளாற் பின்னும்
உயர்வான் குறித்த துலகு.

-இது புறத்தோன் தொகைநிலை.

58. தலைவன் மதில்சூழ்ந்த தார்வேந்தர்க் கொன்று
வலைவன் வலைசுருக்கி யாங்கு-நிலையிருந்த
தண்டத் தலைவர் தலைக்கூட வீற்றிருந்தான்
உண்டற்ற சோற்றார் ஒழிந்து.

-இஃது அகத்தோன் தொகைநிலை.

உடன்வீழ்தல்

59. அறத்துறைபோல் ஆரெயில் வேட்ட அரசர்
மறத்துறையு மின்னாது மன்னோ-நிறைச்சுடர்கள்
ஒன்றி வரப்பகல்வாய் ஒத்த ஒளிதேய்ந்தாங்
கின்றிவர் வீழ்ந்தார் எதிர்ந்து. புறத் 13

தும்பைத்திணை

இருநிலந்தீண்டாவகை

60. பருதிவேன் மன்னர் பலர்காணப் பற்றார்
குருதிவாள் கூறிரண்டு செய்ய-ஒருதுணி
கண்ணிமையா முன்னங் கடிமதிலுள் வீழ்ந்ததே
மண்ணதே மண்ணதே என்று. புறத் 16

-இஃது உழிஞைப் புறத்துத் தும்பையாம் இருநிலம் தீண்டாவகை.

தானை நிலை

61. சென்ற உயிர்போலத் தோன்றா உடல்சிதைந்தோன்
நின்ற அடிபெயரா நின்றவை-மன்றல்
அரமகளிர் மங்கலத்திற் காங்காங்கு வைத்த
மரவடியே போன்றன வந்து.

குதிரை நிலை

62. பல்லுருவக் காலின் பரியுருவத் தாக்கித்தன்
தொல்லை உருவிழந்த.தோற்றம்போல்-எல்லாம்
ஒருகணத்துத் தாக்கி உருவிழந்த பாய்மாப்
பொருகளத்து வீழ்ந்து புரண்டு.

எருமை

63. சீற்றங் கனற்றச் சீறக்கணித்துச் செல்லுங்கால்
ஏற்றெருமை போன்றான் இகல்வெய்யோன் - மாற்றான்
படைவரவு காத்துத்தன் பல்படையைப் பின்காத்
திடைவருங்காற் பின்வருவார் யார்?

நூழில்

64. அறத்திற் பிறழ அரசெறியுந் தானை
மறத்திற் புறங்கண்டு மாறான்-குறைத்தடுக்கிச
செல்லுங்கால் காட்டுத்தீச் சென்றாங்குத் தோன்றுமே
பல்படையார் பட்ட படி. புறத்.17

வாகைத் திணை

ஓதல்

65. முறையோதின் அன்றி முளரியேன் அல்லேன்
மறையோதி னானிதுவே வாய்மை-அறிமினோ
ஈன்றாள் பயிற்றிருந்தே எம்மறையும் ஓதினான்
சான்றான் மகனொருவன் தான்.

ஓதுவித்தல்

66. ஒத்த முயற்சியான் ஒத்து வெளிப்படினும்
நித்திய மாக நிரம்பிற்றே-எத்திசையும்
தாவாத அந்தணர் தாம்பயிற்றிக் காவிரிநாட
டோவாத ஒத்தின் ஒலி. புறத்.20

வேட்டல்

67. ஒருமழுவோள் வேந்தன் ஒருமூ வெழுகால்
அரசடு வென்றி யளவோ-உரைசான்ற
ஈட்டமாம் பல்பெருந்தூண் எங்கும் பசுப்படுத்து
வேட்டநாள் பெற்ற மிகை.

ஈதல்

68. போர்வாகை வாய்த்த புரவலரின் மேதக்கார்
ஏர்வாழ்நர் என்பதற் கேதுவாம்-சீர்சால்
உரைகாக்கு மன்னர்க் கொளிபெருகத் தாந்தம்
நிரைகாத்துத் தந்த நிதி.

இது வேளாளர் நிரை காத்தது. *புறத்.21.*

காஞ்சித் திணை

பேய்ப்பக்கம்

69. புண்ணனந்த ருற்றானைப் போற்றுநர் இன்மையிற்
கண்ணனந்த ரில்லாப்பேய் காத்தனவே-உண்ணும்
முளையோரி உட்க உணர்வொடு சா யாத
இளையோன் கிடந்த இடத்து.

தலையொடு முடிதல்

70. நிலையில் உயிரிழத்தற் கஞ்சிக் கணவன்
தலையொழிய மெய்பெறாள் சாய்ந்தாள்-தலையினால்
வண்ணம் படைத்தான் முழுமெய்யு மற்றதன்
உண்ணின்ற தன்றோ உயிர்.

கையறுநிலை

71. தேரோன் மகன்பட்ட செங்களத்துள் இவ்வுடம்பிற்
றீராத பண்பிற் றிருமடந்தை-வாரா
வுலகத் துடம்பிற் கொழிந்தனள் கொல்லோ
அலகற்ற கற்பி னவள்.

காடு வாழ்த்து

72. உலகு பொதியுருவந் தன்னுருவ மாகப்
பலர்பரவத் தக்க பறந்தலைநன் காடு
புலவுங்கொல் என்போல் புலவுக் களத்தோ
டிலை நெடுவே லோனை இழந்து. புறத்.24.

பாடாண்டிணை

வெட்சி வாகைப் பாடாண்

73. முனைப்புலத்துக் கஃதுடை முன்னிரைபோல் வேந்தூர்
முனைப்புலம்பு முன்னிரையும் வீசி-எனைப்புலத்துச்
சென்றது நின்சீர்த்தி தேர்வளவ தெவ்வர்போல்
நன்றுமுண் டாக நமக்கு. புறத்.25

கொடிநிலை வாழ்த்து

74. மேகத்தான் வெற்பான் இமையான் விழுப்பனியான்
ஆகத்தான் நீமறைய நாட்கதிரே-யோகத்தாற்
காணாதார் நின்னை யலையாமை கட்டுரைப்பர்
நாணாத கண்ணெனக்கு நல்கு.

கந்தழி வாழ்த்து

75. சார்பினால் தோன்றாது தானருவாய் எப்பொருட்கும்
சார்பெனநின் றெஞ்ஞான்றும் இன்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்.

வள்ளி வாழ்த்து

76. பிறைகாணும் காலைத்தன் பேருருவ மெல்லாம்
குறை காணா தியாங்கண்டு கொண்டு-மறைகாணா
தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
றாய்ந்தது நன்மாயை யாம்.

வள்ளிப்பாற்பட்ட பெண்பாற்கடவுள் வாழ்த்து

77. தனிக்கணிற் பாகமும் தானொறா மானம்
பனிக்கண்ணி சாவு படுத்துப்-பனிக்கணந்
தாமுறையா நிற்குமத் தண்மதிக்குத் தாயிலளென்று
யாமுறையா நிற்கும் இடத்து. புறத் 33

கடைநிலை

78. வேற்றுச் சுரத்தொடு வேந்தர்கண் வெம்மையு
மாற்றற்கு வந்தேனெம் வாயிலோய்-வேற்றார்
திறைமயக்கு முற்றத்துச் சேணோங்கு கோயில்
இறைமகற்கெம் மாற்றம் இசை.

வேள்விநிலை

79. பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் கற்றாதந்
தின்மகிழான் அந்தணரை யின்புறுப்பச்-சென்னிதன்
மாநிலமே வானுலகம் போன்றது வான்துகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்று.

விளக்குநிலை

80. மைமிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை-தெம்முனையுள்
வேலியுங் கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினும் கோடா கொழுந்து. புறத்.35.

மண்ணுமங்கலம்

81. அளிமுடியாக் கண்குடையான் ஆகுதிநாள் வேய்ந்த
ஒளிமுடி பொன்மலையே ஒக்கும்-ஒளிமுடிமேல்
மந்திரத்தால் அந்தணர் வாக்கியநீர் அம்மலைமேல்
அந்தரத்துக் கங்கை அனைத்து.

வாள்மங்கலம்

82. ஆளிமதுகை அடல்வெய்யோன் வாள்பாடிக்
கூளிகள் வம்மினோ கூத்தாடக் - காளிக்குத்
தீராத வெம்பசி தீர்த்துநாம் செங்குருதி
நீராட்டி யுண்ட நிணம். புறத் 36

பாடல் முதனினைப்பு

அமரகத்து	17
அரவூர்	5
அருமைத்	14
அளிமுடியா	81
அறத்திற்	64
அறத்துறை	59
அன்றுகொள்	39
ஆடினிபாடி	16
ஆடும்பொழு	29
ஆர்வேய்ந்த	20
ஆவாழ்	40
ஆளிமதுகை	82
இடையெழு	44
இந்திரன்	26
இருகன்றி	47
உலகுபொதி	72
ஊர்சூழ்	46
ஏழகமேற்	18
ஏற்றூர்தி	25
ஏற்றெதிர்	28
ஒத்தமுயற்சி	66
ஒத்தவய	7
ஒருமழு	67
ஒருவர்	2
கடல்பரந்து	45
கடிமனை	11
கதிர்சுருக்கி	57
கரந்தியல்	4
கல்லாயும்	32
கழுவொடு	9
காப்புநூல்	34
குருந்தமொசித்	24
குளிறுகுரல்	8
குறும்பூழ்ப்	19
கைவினை	38
கொடைத்தொழில	10
கோள்வாய்த்த	37
சார்பினால்	75
சீர்த்த	36
சீற்றங்	63
செற்றவர்	55
சென்றநிரை	6
சேணுயர்	43
தலைவன்	58
தனிக்கணிற்	77
தாந்தங்	50
தாழிகவிப்	31
தானால்	27
தேரோன்	71
நச்சிலை	15
நித்திலம்	13
நிலையில்	70
நெடுநிலை	3
பருதிவேல்	60
பல்லுருவ	62
பிறைகாணும்	76
புண்ணனந்த	69
புற்றுறை	52
பொலஞ்செய்	48
பொன்னிறைந்த	79
போர்க்கடல்	42
போர்வாகை	68
மண்டம்	21
மழுவாளான்	53
மறநாட்டு	49
மாற்றரும்	12
மீளாது	22
முறையோதின்	65
முன்னங்	23
முனைப்புல	73
மைமிசை	80
மேகத்தான்	74
மேற்செல்லும்	41
வந்தநீர்	1
வருபெரு	56
வரையறை	33
வன்கண்	30
வாயிற்	51
வாளமர்	35
வென்றி	54
வேற்றுச்	78

சங்ககாலச் சமுதாயப் பழக்கவழக்கம்*

பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை

பகுதி-1

தமிழகத்தில் பல்வேறு இனத்தார்

தமிழகத்து வாழ்ந்த தமிழ் மக்களுடன் வடவர்களும் வேற்றுநாட்டவரும் இருந்தனர். பல்வேறு மொழி பேசும் மக்களும் கலந்து வாழ்ந்தனர். சமுதாயத்தில் தொழிலாளர் முதல் செல்வர்கள், மன்னர்கள் ஈறாகப் பலதிறப்பட்ட நிலையில் உள்ளவர்களும் பேசப்பட்டுள்ளனர். பற்பல தொழிலை மேற்கொண்ட தொழில் வினைஞர்களும் காணப்படுகின்றனர். தெய்வக் கொள்கையையும் வழிபாட்டையும் பரப்பிய அந்தணர்,முனிவர் முதலியோர்களைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. வேதநெறிக்கு மாறுபட்ட கொள்கையை உடைய சமண-பௌத்தக் கோட்பாடுகளைத் தமிழகத்தில் பரப்பவந்த மதபோதகர்களும் வாழ்ந்தனர். அம் மதக் கோட்பாடுகளைத் தழுவிய மாந்தரும் இருந்தனர். இவற்றையெல்லாம் நோக்கும்போது, தமிழகம் பல்வேறு இனத்தார் சேர்ந்து வாழ்ந்த பெருநிலமாகச் சங்ககாலம் திகழ்ந்தமை புலப்படும்.

மேற்குலம் கீழ்க்குலம்

சமுதாயத்தில் அந்தணர்,அரசர், வணிகர், வேளாளர் என நாற்பெருங்குலத்தாரைச் சிறப்பாகத் தொல்காப்பியரும் சங்கப் புலவர்களும் குறித்துள்ளனர். இந் நால்வரும் மேற்குலத்தார் என்று கருதப்பட்டனர். இவர்களிலும் வேறாகச் சமுதாயத்திற்கு அடிப்படையான தொழில்களைச் செய்த கொல்லன், தச்சன், குயவன் முதலிய தொழில்மாந்தர் கீழ்க்குலத்தார் எனக் கருதப்பட்டனர். கல்வி யாவருக்கும் பொதுவாதலின் அக் கல்வியையுடையார் கீழ்க்குலத்தவ ராயிருந்தாலும் அவரையடுத்து மேற்குலத்தார் பயனடைந்தனர்.

'வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே' (புறம். 183:8-10)

★ இந்த ஆய்வுரை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என வழங்கும் சங்க இலக்கியங்களையும், அவற்றிற்குரிய இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றதாகும். இக் கட்டுரையில் மேற்கோளாகத் தரப்பெற்ற பகுதிகள் மர்ரே எஸ்.ராஜம் பதிப்புகளிலிருந்து எடுத்தாளப்பெற்றன.

இங்கே, 'வேற்றுமை தெரிந்த நாற்பால்'., 'கீழ்ப்பால்', 'மேற்பால்' என்னும் தொடர்கள் அன்றைய தமிழகத்தில் மக்களிடையே இனவேற்றுமை நிலவியதை வெளிப்படுத்தும்.

கடைக்குலத்தார்

வயலில் களை பறிக்கும் மகளிரைக் 'கடைசியர்' எனக் குறித்திருப்பதால் (புறம் 61:1) தமிழக மக்களிடையே கடைக்குலத்தார் எனச் சிலரை ஒதுக்கியிருப்பதையும் காண்கிறோம். இவர்கள் எல்லாரும் வாழ்க்கை நிலையில் அவரவர் தகுதிக்கேற்ற வசதிகளோடு வாழ்ந் திருந்தனர். இவர்களுடைய நடையுடை பாவனைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், குடியிருப்புகள், இவர் வாழ்ந்த வாழ்க்கை நிலைகள் எல்லாமே பல்வேறு வகையில் அமைந்திருந்தன. நகரங்களிலும் ஊர்ப்பகுதிகளிலும் மேற்குலத்தார் அகநகரிலும், ஏனையோர் ஊர்ப்புறமாகிய புறஞ்சேரிகளிலும் வாழ்ந்து வந்தனர் என்று தெரிய வருகிறது.

தொழில் வேற்றுமையுடன், பிறப்பு வேற்றுமையும் அக்காலத்தில் இருந்துவந்தது என்பதை ஒருசிலரை, 'இழிபிறப்பாளன்' (புறம். 170,5) 'இழிசினன்' (புறம் .82:3; 287:2),'புலையன்'(புறம். 287:1) என்று குறிக்கப்பட்டிருப்பதால் அறியலாம். இவர்கள் புழங்கிவந்த இடங்கள், பொருள்கள் முதலியனகூட அவ்வச் சமுதாயத்தாருக்கும் தனித்து இருந்தன.

'ஓர் ஊர் வாழினும் சேரி வாரார்;
சேரி வரினும் ஆர முயங்கார்;
ஏதிலாளர் சுடலை போலக்
காணாக் கழிப மன்னே' (குறுந். 231:1-4)

என ஓர் ஊரின்கண் பல இன மக்கள் வாழ்வதற்குரிய சேரிகள் பல இருந்தன என்பதையும், அம் மக்களில் சிறந்தவர்களைக் கொளுத்தும் சுடுகாடுகளும் வெவ்வேறாக இருந்தன என்பதையும் அறியலாம்.

இனம் பிரித்து உணர இயலாமை

பல்வேறு மக்களின் தினசரி வாழ்க்கையிலும், அவரவர்கள் சமுதாயத்தில் நிகழும் பிறப்பு, கல்வி, தொழில் முயற்சிகள், திருமணம், வாழ்க்கை நிலை, இறுதிச் சடங்குகள் முதலியவற்றிலும் அந்தந்த மக்களின் தன்மைக்கேற்ப வேறுபட அமைந்திருந்தன என்று கொள்ளலாம். ஆனால், இலக்கியச் செய்திகளைக் கொண்டு பழக்க வழக்கங்களைப் பொதுவாக உணரலாமே யன்றி இனம் பிரித்து உணர்வது மிக அருமையாக உள்ளது.

மகப்பேறு வாய்க்கக் கடவுளைப் பேணுதல்

குழந்தைச் செல்வத்தை அடைவதற்கு ஆடவரும் பெண்டிரும் தெய்வம் தொழுது, தெய்வத்தின் அருளால் மகப்பேறு அடைய

முயன்றனர். இதற்காகத் தெய்வத்திற்குக் காணிக்கையும் செலுத்தினர். 'கரு வயிறு உறுக எனக் கடம்படுவோரும்' (பரி. 8:106) எனவும், 'குன்றக் குறவன் கடவுட் பேணி, இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்' (ஐங். 257:1-2) எனவும் வருவன மகப்பேற்றின் பொருட்டுத் தெய்வத்தைப் போற்றியதற்குச் சான்றாகும். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் தன் கோப்பெருந்தேவியுடன் அமர்ந்து பெருவேள்வி செய்தமையால் அரசருக்குரிய உத்தம குணங்களையுடைய புதல்வனைப் பெற்றெடுத்தானாம்.

'ஒடுங்கு ஈர் ஓதி ஒண்ணுதல் கருவில்
எண் இயல் முற்றி, ஈர் அறிவு புரிந்து
சால்பும் செம்மையும் உளப்பட பிறவும்
காவற்கு அமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை'

என்று பதிற்றுப்பத்து (74:17-21) கூறுகிறது.

மகப்பெறுகை

மகளிர் பன்னிரண்டு திங்கள் கருப்பத்தைத் தாங்கித் தளர்ந்து மகவு ஈன்றனர் (குறுந். 287:3-5). இம் மகளிர் கருக்கொண்ட காலத்திலும், மகவைப் பெற்றபின்னரும் சில சடங்குகள் நிகழ்த்துதல் வழக்கம். கருக்கொண்ட மகளிர் தேவராட்டி வழிகாட்டத் தெய்வத்திற்கு மடை கொடுப்பர் (மதுரை.604-610). சூல் கொண்ட பெண்கள் மண் போன்ற பொருள்களை அச் சூல் கொண்ட காலங்களில் உண்பர் என்றும் (புறம். 20:13-15), புளிங்காய்கள்ளப் பெரிதும் விரும்புவர் என்றும் (ஐங்.51:3-4; குறுந்.287:4-5) தெரியவருகிறது.

மறக்குடியைச் சேர்ந்த சூல்மகள் ஒருத்தி தன் எதிரே யானை வரினும், தன்மேலே பாம்பு உராய்ந்து செல்லினும் அஞ்சாது இருந்தாள். மேகத்தின் இடிக்குரலைக் கேட்டும் அவள் நடுங்கவில்லை. இதனால் அக் குடிப்பிறந்தார்க்கு அஞ்சாமையுடன் கூடிய வீரத்தன்மை இயற்கையில் அமைந்திருந்தனவாம்(பெரும்.134-138).

'தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்
அந்தம்இல் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்'

(தொல்.பொருள்.கற்பு.6)

எனத் தொல்காப்பியர், தந்தையரை ஒத்து மக்களும் இருப்பர் என்பதைக் குறிப்பிடுகின்றார். இதனால் தாய் தந்தையரின் இயல்பினை ஒத்து மகவும் அமைதல் பெறப்படும்.

மகப்பெற்ற மகளிர்

மகப்பெற்ற மகளிர் அணங்கு முதலிய சிறுதெய்வங்கள் நெருங்கித் துன்புறுத்தாவண்ணம் நெய்யோடு வெண்சிறுகடுகை

மாளிகை வாயிலில் பூசி வைப்பர். நறும்புகை புகைத்தலும் உண்டு. ஈன்றணிமை நீங்கியதும் அம்மகளிர் குளத்தில் சென்று நீராடுவது வழக்கம்.

> 'கணவர் உவப்ப, புதல்வர்ப் பயந்து,
> பணைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊற,
> புலவுப் புனிறு தீர்ந்து, பொலிந்த சுற்றமொடு,
> வளமனை மகளிர் குளநீர் அயர' (மதுரை.600-603).

என்பதனான் பெறப்படும்.

இதனைத் தொல்காப்பியர் 'நெய்யணி மயக்கம்' என்பர் (தொல்.பொருள்.கற்பு.5). பிறந்த மகவிற்குத் தாய் பாலூட்ட, செவிலிப் பெண்டிர் அத் தாய்க்குத் துணையாயிருந்து குழந்தையைப் போற்றினர். குழந்தைக்குத் துணியால் ஆன மெல்லிய அணையையும் அமைத்திருந்தனர் (நற்.40:5-6).

குழந்தை பிறக்கத் தந்தை மகிழ்தல்

புதல்வன் பிறந்ததும் தந்தை சென்று அக் குழந்தையைப் பார்த்து மகிழ்தல் மரபாயிருந்தது. இவ் வழக்கம் அதியமான் அஞ்சியின் வரலாற்றால் தெரியவருகிறது. அதியமானுக்குத் தவமகன் பிறந்தான்; அவனைச் சென்று கண்டான் அதியமான். குழந்தை முகம் கண்டு மலர வேண்டிய அவன் முகம் மலர்ந்து நோக்கவில்லையாம். அவன் கண்களிலே பகைவரை வெகுண்டு பார்த்ததினால் உளதாகிய சிவப்பு சிறிதும் நீங்கவில்லையாம். இதனை அருகிருந்த ஔவையார் கண்டார். அதியமானின் மறத்தன்மையை எண்ணி உவந்தவராய்

> 'செறுவர் நோக்கிய கண், தன்
> சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனாவே' (புறம்.100:10-11)

என்று மொழிகின்றார். இதனால், பிறந்த புதல்வனை நோக்கித் தந்தை மகிழ்தலே நாட்டு மரபு என்பது தெற்றெனப் புலப்படுகிறது. குடிதழையும் வாய்ப்பு நேர்ந்ததே என்பதுதான் தந்தையின் உவகைக்குக் காரணம் (நற்.370:3-9; மதுரை.600).

> 'கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய
> புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
> நன்னராட்டி' (அக.184:1-3)

என்று ஒரு பெண் புகழ்ந்துரைக்கப்படுகின்றாள்.

பெயரிடல் மரபு

குழந்தைக்குத் தம் தந்தையின் பெயரை இடுவது மரபு.

'அகன் பெருஞ்சிறப்பின் தந்தை பெயரன்' (ஐங்.403:3)

'முதல்வன் பெரும்பெயர் முறையுளில் பெற்ற புதல்வன்'
(கலி.75:24-25)

பாட்டனுடைய பெயரைப் பெறும் குழந்தை அக் குடும்பத்திற்கு உரிய உரிமையைப் பெறுகிறது. இவ்வுரிமை 'தாயம்' எனப்படும் (பொருந.132; புறம்.213:10-11)

குழந்தைக்குக் காப்பு

பச்சிளங்குழந்தைகளின் பாதுகாப்புக் கருதி அவர்களுக்குப் 'புலிப்பல்தாலி', 'ஐம்படைத்தாலி' என்பவற்றை மார்பில் அணிவர். புலிப்பல்தாலியுடன் ஒலிக்கும் மணிகளும் கோத்து அணிவது உண்டு(அகம்.7:17-18). கால்களில் கிண்கிணியும், கையில் சிறுவளையலும் அணிவதுண்டு (குறுந்.161:3-4; 77:1-8; புறம்.374:9). அரையில் இடபப்பூண் ஈசலின் நிறம் போன்று பவழத்தால் செய்யப்பட்டிருக்கும். இதன் இருபுறத்தும் வெட்டாத வாளும் மழுவும் கோக்கப்பட்டிருக்கும்(கலி.85:8-11).

பிறந்தநாள் விழா

பிறந்தநாள் விழாவைத் தமிழ்மக்கள் பெரிதாகக் கொண்டாடி வந்துள்ளனர். நன்னனது பிறந்தநாளை நகரமக்கள் குதுகலமாகக் கொண்டாடிய செய்தியை,

> 'பேர் இசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
> சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு'' (மதுரை.618-619)

எனவரும் அடிகளால் அறியலாம். இதனைத் தொல்காப்பியர், 'பெருமங்கலம்' என்பர். இந்த நாளில் அரசன் தான் நாடோறும் செய்யும் செருச்செய்தல், பகைவரைப் பகைத்தல் முதலியவற்றைத் தவிர்த்து, செருஒழிந்து, யாவருக்கும் பொருள் முதலியன வழங்கி, இன்பமாகப் பொழுதுபோக்குவான். இந்த நாளில் மன்னன் மங்கலமாகிய வெள்ளணி அணிந்து எல்லாருக்கும் வேண்டுவன செய்தலின், இதனை 'வெள்ளணிநாள்' என உரைப்பதும் உண்டு.

> 'சிறந்த நாளினில் செற்றம் நீங்கிப்
> பிறந்த நாள்வயின் பெருமங்கலம்' (தொல்.பொருள்.புறத்.30)

எனக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர்.

குழந்தைக்குப் பராக்குக் காட்டல்

குழந்தைகளுக்கு அழுகை இயற்கையானது. அதனை மாற்றுவதற்கு தாய்மார் நாய் முதலிய பிராணிகளைப் பராக்குக் காட்டியும், சந்திரனைக் காட்டியும் அழுகையை மாற்ற முயன்றனர். அச்சுறுத்தியும் குழந்தைகளை அடக்குவதும் உண்டு. ஒரு தாய் தன் குழந்தையின் அழுகையை மாற்றுவதற்குக் கையாளும் உபாயங்களை,

> 'மறப்புலி உரைத்தும், மதியம் காட்டியும்,
> நொந்தன ளாகி, 'நுந்தையை உள்ளி
> பொடிந்த நின் செவ்வி காட்டு' எனப் பலவும்

வினவல் ஆனாளாகி, நனவின்
அல்லல் உழப்போள்' (புறம்.160:22-26)

எனவரும் புறநானூற்றடிகளில் காணலாம். கோல் கொண்டு அடித்து அச்சுறுத்தலும் உண்டு(கலி. 82:24-25; நற்.110:3-5).

குழந்தையின் தளர்நடை

தளர்நடை பயிலும் சிறுவர்கள் மூன்று உருளையுடைய சிறு தேர்களை மனைமுற்றங்களில் உருட்டித் திரிவர். இது ஏறிச் செலுத்தும் தேருக்கு மாறான இயல்புடைமையால் இதை, 'ஊராநல்தேர்' என்றும், 'புரவி இன்று உருட்டும் முக்கால் சிறுதேர்' என்றும் சிறப்பித்து உரைப்பர் (பெரும்.248-250; பட்டினப். 24-25).இவ்வகைச் சிறுதேரினை உருட்டிவரும் ஒரு குழந்தையின் அழகினைக் கண்ட தாய் ஒருத்தியின் மகிழ்ச்சியினை,

'மைஅற விளங்கிய மணிமருள் அவ்வாய்தன்
மெய்பெறா மழலையின் விளங்குபூண் நனைத்தர,
பொலம் பிறையுள் தாழ்ந்த புனை வினை உருள்கலன்
நலம்பெறு கமழ்சென்னி, நகையொடு துயில்வர,
உரு எஞ்சாது இடைகாட்டும் உடைகழல் அம்துகில்
அரிபொலி கிண்கிணி ஆர்ப்பு ஒவரஅடிதட்ப,
பாலோடு அமர்ந்த முலை மறந்து முற்றத்துக்
கால்வல்தேர் கையின் இயக்கி, நடைபயிற்றா
ஆல்அமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும் என் உயிர்'

எனவரும் கலித்தொகைப் பாடற் பகுதியில் (81:1-10) காணலாம்.

வழிபாட்டுப் பழக்கம்

சிறுகுழந்தைகளைத் தெய்வம் உறையும் திருக்கோவிலுக்கு உடன் அழைத்துச் சென்று வலஞ்செய்து வழிபட்டமை தெரியவருகிறது.(கலி 82:4-5; 84:5-7). இதனால் குழந்தைகளுக்குத் தெய்வபக்தி இளமையிலே ஏற்பட வழி செய்தனர்.

குழந்தை விளையாட்டு

சிறு குழந்தைகள் விளையாடிய பலவகை விளையாட்டுகளும் தெரியவருகின்றன. சிறுவர்கள் கிலுகிலுப்பை கொண்டு ஆடுவதும் (சிறுபாண்.61), பெண்கள் பந்து, பாவை முதலியன வைத்து விளையாடுவதும் இயல்பு. சிறுபெண்கள் தங்கள் தோழிப் பெண்களோடு கூடி வண்டல் மண்ணை அளைந்து சிற்றில் இழைத்தும், சிறு சோறாக்கியும் விளையாடுவர். சிறு சோறு சமைப்பதற்கு மணலாகிய அரிசியைப் பாடிக்கொண்டு குற்றுதலும் செய்வர் (அகம்.286:1-5). வண்டல் விளையாடும் மகளிரை 'ஆயம்', 'ஓரை' என்று அழைப்பர் (பொருந.187; நற்.9:8;அகம். 60:9-11; 275:16-19). குறுமகளிர்

சிற்றில் இழைத்து விளையாடும்போது, சிறுவர் அங்கு வந்து, அவருடன் உரையாடி, அவர்தம் சிற்றிலை அழித்துவிடுவதும் உண்டு. இம் மகளிர் அங்கு ஆக்கும் சிறு சோற்றைச் சிறுவர்க்கு வழங்குதலும் உண்டு(நற்.123;8; அகம்.110:6-7;19-20; கலி. 59:20-21). இவர்கள் பொம்மைகளை வைத்தும் விளையாடுவர். அதில் தங்களது குலமகனுக்கு வேறு ஒருத்தியின் பெண்மகளை மணம் செய்து விருந்து வைத்தும் விளையாடுவர் (நற்.155:1;ஐங்.128:2-3; கலி.59:20-21). மலர் பறித்து, அதனை மாலையாகக் கட்டி அணிவதும் ஒரு விளையாட்டே.

கடற்கரையிலுள்ள இளம்பெண்கள் நண்டினுடைய வளையைத் தோண்டி அதை வருத்தியும் (அகம்.280:3) தம் ஆயமொடு கடலில் குளித்தும் (அகம்.110:6:7) ஆம்பல் தழையைத் தொடுத்து உடுத்தியும் (அகம்.275:16-19) பொழுது போக்கினர். மேலும் இவர்கள் குரவையாடியும், தாழை நாரினால் கட்டப்பட்ட ஊஞ்சல் ஆடியும் பொழுதைப் போக்கினராம் (அகம். 20:4-9). கானவர் மகளிர் மழைபெய்த காலத்துப் புதர்களில் பறக்கும் இந்திரகோபப் பூச்சிகளைப் பார்த்தும் பிடித்தும் விளையாடுவதுண்டு(நற்.362:3-5).

வீடுகளில் விளையாட்டு

வீடுகளில் உள்ள திண்ணைகளில் மகளிர் கூடி விளையாடுவதும் வழக்கம் (புறம்.53:1-3). இம் மகளிர் பந்து உருட்டி விளையாடுவதும் வீடுகளில்தான் (நற்.324:6-7; குறுந்.396:1-2; அகம்.153:2-3). கழங்கு ஆடுவதும் இவர் விரும்பும் விளையாட்டுக்களில் ஒன்றாம் (அகம். 17:1-2; 66:24-25). வீடுகளில் கிளிகளை வளர்ப்பதும் அவைகளோடு உரையாடுவதும் இவர்தம் பொழுதுபோக்கே (அகம்.49:1; 34:14-18).

நீர்நிலைகளில் ஆடல்

மருதம் முதலிய மரங்கள் சூழ்ந்த நீர்நிலைகளில் சிறுவர்களும் சிறுமிகளும் அம் மரக் கோடுகளில் ஏறி, கரையவர் மருள, திரையகம் பிதிர, துடுமெனப் பாய்ந்து விளையாடுவதும், நீரின் அடியில் சென்று மணல்கொண்டு வருவதும் பொழுதுபோக்காக இருந்தது. தண்கயம் ஆடும் மகளிரொடு சிறுவர்கள் கைபிணைந்து, அவர்கள் தழுவியபோது தழுவியும் அவர்கள் அசைவுக்கேற்பத் தாங்களும் அசைந்தும் நீரில் ஆடினர். இவர்களிடம் வஞ்சனை என்பது ஒரு சிறிதும் இல்லை (புறம்.243; ஐங்.74).

சிறுவர் விளையாட்டு

ஊரிலுள்ள சிறுவர்கள் நீர்த்துறையில் படியும் களிறுகளின் அருகில் அச்சமில்லாமல் சென்று அவைகளின் கோடுகளைத் தழுவி விளையாடும் தன்மையைப் புறநானூற்றில் காணலாம்(94:1-2; 104:2-3). மாடு மேய்க்கும் சிறுவர் எருமை மாட்டின்மீது ஏறிக்கொண்டு மேய்ச்சல் இடம் நோக்கி மாடுகளை ஓட்டிச் செல்வர். இக் காட்சியைத் தூரத்தில்

இருந்து காண்பார்க்குப் பாறைமேல் இருக்கும் மந்தியைப்போலக் காட்சியளிக்குமாம் (நற்.80:1-3; அகம்.206:1-7). கல்லாத சிறுவர்கள் மரத்தின் நிழல்களில் வட்டுக்கொண்டு ஆடும் அரங்கம் கீறி, நெல்லிக்காயினால் வட்டு ஆடும் பழக்கமும் உண்டு(நற்.3:1-4)

கல்வி பயிலுதல்

கல்லாத சிறுவர்கள் மாடு மேய்த்தல் போன்ற குறுந்தொழில் களைச் செய்தபோதிலும் பெரும்பான்மைச் சிறுவர்களும் இளமையில் கற்றலை மேற்கொண்டிருந்தனர். எழுத்து எழுதி மை தடவிய ஓலைச் சுவடி இவர்கள் கற்பதற்குப் பயன்பட்டது.'மையாடல் ஆடல் மழபுலவர்' என்னும் பரிபாட்டு அடி (11:88) மை தடவிய ஓலை கொண்டு படிக்கும் சிறுவர் குழாத்தைக் குறிப்பிடுகிறது. ஆசிரியரையடுத்து, அவருக்குரிய குற்றேவல்களைச் செய்வதும், அவர்க்குப் பொருள் உதவியும், வழிபாட்டு முறையில் சிறிதும் தவறாது கல்வி பயின்றனர்.

'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'

என்று புறநானூறு (183:1-2) குறிப்பதால், அக்காலத்தில் கல்வி கற்ற முறையை அறியலாம்.

அன்னாய் இவன் ஓர் இளமாணாக்கன் (குறுந்.33) என்று தலைவி தோழியை நோக்கிப் பாணனைப் பற்றிக் கூறுவதால், கல்வி வல்லாரை மாணாக்கர் என்று அக்காலத்தில் அழைத்த செயலைக் காணலாம். மாணாக்கர் ஆசிரியருக்கு உரிய காணிக்கை செலுத்தாவிடின், அவர்கள் வாழ்வில் பொருளையிழந்து வறுமையில் வாடுவர் (கலி.149:4-5) என்னும் நம்பிக்கை மக்களிடையே பரவியிருந்தது. இதனால் ஆசிரியரை மிகவும் மதித்துப் போற்றிக் கல்வி கற்றமை புலப்படும்.

குலத்தொழில் கற்றல்

ஒருவகை இன மக்களின் குழந்தைகள் அவ்வவ் இனத்துக்குரிய தொழில்களை இளமையிலே விளையாட்டாகச் செய்து வந்தனர். எயினச் சிறுவர்கள் வளார் வில்லை வளைத்து, உடை முள்ளை ஊகம் புல்லிற் கோத்த அம்பினால், வீட்டு வேலிகளில் எலி வேட்டை ஆடுவதைப் புறநூனூறு (322,324) விளக்குகிறது. தச்சச் சிறார் விரும்பிச் செய்த சிறு தேரைப் பற்றிய செய்தியைப் பெரும்பானாற்றுப் படையில் (247-249) காணலாம். 'குலவிச்சை கல்லாமற் பாகம்படும் (பழ.21) என்னும் பழமொழி பிறந்தது இதனால்தான்.

எழுத்துக்கலை

செய்தி தெரிவிக்க ஓலை எழுதுதல், அவ்வோலைக்குக் காப்பாக உறையிட்டு முத்திரையிடுதல் போன்ற பழக்கங்கள் தெரியவருகின்றன. மறைந்த வீரர்களின் பெயரையும் செயலையும் சிறப்பினையும் கல்லில் பொறித்து வைக்கும் வழக்கமும் இருந்தமைக்குப் பல குறிப்புகள் சங்க

இலக்கியங்களிலே உள்ளன (கலி.94:41-43; ஐங்.352:2). ஓவியத்தையும் எழுத்து என வழங்கினர். திருப்பரங்குன்றத்திலே ஓவியம் வரையப்பெற்ற ஒரு மண்டபத்தை 'இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்' எனப் பரிபாடல் கூறுகிறது. (19:53)

வாய்மொழிக் கல்வி

அந்தணர்கள் ஓதிவரும் வேதம் எழுதாமல் வாய்மொழியாகவே கற்கப்பட்டு வந்தது.

'படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின்சொல்'

என்னும் குறுந்தொகையின் மூலம் (156:4-5) இதனை உணரலாம்.

கன்னியர் தைந்நீராடல்

கன்னிப் பெண்கள் நோற்கும் நோன்புகளில் முக்கியமானது 'அம்பாவாடல்' என்னும் தைந்நீராடல். இந் நீராட்டம் மார்கழி நிறைமதி நாளில் தொடங்கப்பட்டது. இந் நோன்பு நோற்கும் முறையை முதுபார்பபனிமார் காட்ட, மகளிர் அதிகாலையில் நீராடி நோன்பு கொள்ளுகின்றனர் (பரி.11:74-92). மகளிர் தம் ஆயத்தாருடன் கூடி, நோன்பு நிகழ்த்தினர் (ஐங்.84:3-5). இந் நோன்பின் பொருட்டு புகை, பூ, அவி, ஆராதனை, அழல் முதலியன கொண்டு சென்றனர் (பரி 6:11-13). நீர்த்துறையில் பாவை அமைத்து, இயம் ஒலிக்கக் குரவைக் கூத்து ஆடி வழிபட்டமையால் இது 'பாவை நோன்பு', என்று, வழங்கப் பட்டதுபோலும் (அகம்.269:14-29; நற்.272:2-3). நோன்பு இயற்றுவார் தெய்வப்படையலை உண்பர் (நற்.22: 1-7). இந்நோன்பில் உலகம் மழைவளத்தால் சிறக்க வேண்டும் என்றும், தமக்கேற்ற கணவர் கிடைத்து இன்ப வாழ்வு அமைய வேண்டும் என்றும் மகளிர் முன்பு நிகழ்த்திய தைந்நீராடலும் பாவை நோன்பும் பிற்காலத்தில் பக்திக்குரிய ஒரு சாதனமாக வளர்ச்சி பெற்றன.

கன்னியர் யானையைப் பூசித்தல்

கன்னிப் பெண்கள் யானையைப் பூசிக்கும் வழக்கம் இருந்து வந்தது. திருப்பரங்குன்றத்தில் இளமகளிர் நிகழ்த்திய யானைப் பூசையைப் பரிபாடல் விளக்குகிறது. இப் பூசையில் யானைக்குப் படைக்கும் கவள மிச்சிலை மகளிர் உண்பர். கன்னியர்கள் தமக்கு ஏற்ற குற்றமற்ற கணவர்களை அடைவதற்கும், அக் காதலர்களின் முறுவலோடு கூடிய தலையளியைப் பெறுவதற்கும் இப் பூசை முக்கியமானதாகக் கருதப்பட்டது. (பரி.19:85-94).

பெற்றோர்க்கு உதவுதல்

கல்வி மிகமிகப் பருவத்திற்கேற்ப ஒழுக்கங்களும் மாறி வந்தன. காளையரும் கன்னியரும் பெற்றோர்க்கு உதவியாக அவர்கள் புரியும் தொழிலுக்கு உதவிவந்தனர். செல்வர் வீட்டுக் குழந்தைகள்

மாடமாளிகைகளில் செவிலியர் வளர்க்கவும் தோழியர் பணிபுரியவும் இன்பமாக வாழ்ந்தனர். ஆனால் தொழிலாளர் வீட்டுக் குழந்தைகள் பெற்றோர்க்கு உறுதுணையாக உதவித் தம் குலத்தொழிலையும் கற்றுக்கொண்டனர்.

ஆயர் குடும்பம் ஒன்று தொழிலில் ஈடுபட்டிருந்த தன்மையையும், குடும்பத் தலைவருக்கு உதவியாக அக் குடும்பத்தின் இளமகள் உணவு முதலியன கொண்டு கொடுத்து உதவியதனையும் கலித்தொகை 108ஆம் பாட்டினால் உணரலாம். அந்த ஆயர்மகள் புனத்தில் உழைக்கும் தமையனுக்கு உணவு கொண்டு போய்க் கொடுத்தலையும், ஆனிரை மேய்க்கும் தன் தந்தைக்குக் கறவைக்கலம் கொண்டு செல்லுதலையும், தினையறுத்த புனத்தில் கன்று மேய்க்கும் தாய்க்கு உதவியாகத் தான் கன்று மேய்த்தலையும் குறிப்பிடுகின்றாள்:

'புனத்துளான் என்னைக்குப் புகா உய்த்துக் கொடுப்பதோ?
இனத்துளான் எந்தைக்குக் கலத்தொடு செல்வதோ?
தினைக் காலுள்யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ?
(கலி. 108: 31-33)

இது ஆயமகளின் வாக்கு.

பரதவர் கன்னியர் உணக்கும் மீனைக் கவரவரும் பறவையோட்டிக் காத்தலையும், குறவர் மகளிர் தினைப் புனத்தில் பறவையோட்டிக் காத்தலையும் பலபாடல்கள் குறிப்பிடுகினறன (நற்.45:6-7; 102:8-9; மலைபடு.328-329).

மகளிரும் மைந்தரும் கூடி ஆடல்

சேரி விழாவிலும் புதுப்புனல் ஆடலிலும் மகளிரும் மைந்தரும் உடன்கூடிக் காட்சிகள் கண்டு, மகிழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றைப் பரிபாடல், கலித்தொகை அகநானூறு முதலிய நூல்களில் காணலாம். துணங்கை, குரவை நிகழ்ச்சிகளில் மகளிர் கூடி ஆடும்பொழுது மைந்தர் முதற்கை கொடுத்து உடன் ஆடும் வழக்கமும் உண்டு.

'மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து'

என்பது புறநானூறு(24:8-9).

தைந்நீராடி நோன்பு நோற்கும் இளமங்கையைப் பார்த்துக்காளை ஒருவன்,

'கண்டாரக்குத் தாக்கு அணங்கு, இக்காரிகை காண்மின்;
பண்டாரம், காமன்படை, உவள்கண் காண்மின்'

எனக் கூறியதாகப் பரிபாடலில் வந்துள்ளது (11:122-123). வையாற்றிலுள்ள திருமருத முன்றுறையிலும், காவிரி சங்கம முகத்தில்

அமைந்த கழார்த் துறையிலும் நிகழ்ந்த நீராடல் நிகழ்ச்சிகள் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சிகளில் அரசனும் உடன் கலந்துகொண்டான் என்பதையும் அறியலாம். இவ்வகையான பல்வேறு சமூக நிகழ்ச்சிகளும் பருவம் வந்த காளையர்-கன்னியர் உடன் பழகுவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தி வந்தன.

இளமகளிரை இற்செறித்தல் அறனன்று

அலர் காரணமாக இளமகளிர் இல்லத்திலே காவலில் வைக்கப்பட்டனர் என்பதன்றிக் கன்னியரை வீட்டகத்தே சிறை வைப்பது அக்கால வழக்கமன்று. இளமகளிரை இல்லத்தில் காவலுக்குள்ளாக்குதல் பாவச் செயல் என்று கருதப்பட்டது.

'விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது
இளையோர் இல்லிடத்து இற்செறிந்திருத்தல்
அறனும் அன்றே; ஆக்கமும் தேய்ம்'

என நற்றிணையில் வருவதால் (68:1-3) தெரியவரும்.

காதல் அரும்பும் சூழ்நிலை

காளையரும் கன்னியரும் கொடுப்போரும் அடுப்போரும் இன்றித் தனியே கலந்து உறவுகொள்ளும் வாய்ப்பு அதிகமாக இருந்தது. அடியோர், வினைவலர் இவர்களுக்கிடையே இது இயல்பாக மிகுந்து காணப்பெற்றது. கோயிலில்கூடக் குறளன் ஒருவனும் கூனி ஒருத்தியும் காதல் மொழிகளைக் கூறி உரையாடித் தனியே கூடிய நிகழ்ச்சி ஒன்று கலித்தொகை 94-ஆம் பாட்டால் தெரியவருகிறது.

'ஆங்குஆக! சாயல் இன்மார்ப! அடங்கினேன்; 'ஏஎ!
பேயும் பேயும் துள்ளல் உறும் எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்;
தண்டாத் ததகடு உருவ! வேறாகக் காவின்கீழ்ப்
போதர்; அகடு ஆரப் புல்லி முயங்குவேம்-
துகள் தபு காட்சி அவையகத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட்டாங்கு' (கலி.94:37-43)

என்பது கூனி குறளனை நோக்கி உடம்பட்டுக் கூறிய வாக்காகும்.

காதல் திருமணம்

காதல் திருமணம் அந்நாளில் கடியப்படவில்லை. பெரியோர்கள் இவ்வகை மணத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்.

'புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி,
அலர் அரும்பு ஊழ்ப்பவும், வாராதோரே' (அகம். 273:15-17)

என்னும் அடிகளால் இதன் சிறப்புப் புலப்படும்.

இத்தகைய கூட்டம் பிறப்புத்தோறும் தொடர்ந்து வருகிற அன்பின் வயப்பட்டது என்று கருதினர்.

'ஒன்றுதும் என்ற தொன்றுபடு நட்பின் காதலர்' (நற்.109:1-2)

'தொல்கேள்' (ஐங்.167:4;271:4)

என்றும் போற்றினர்.

ஆண்-பெண் இருவரும் ஒருமனப்பட்டுத் தனித்து நிகழும் காதல் மணம் இருவரும் துணிந்து மேற்கொள்வது.

'இருவேல் ஆய்ந்த மறைல் இதுஎன
நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ?' (குறிஞ்சிப். 21-22)

என்கிறாள் ஒரு தலைவி.

காதலர் இருவரின் அன்பு நெஞ்சங்கள் கலந்த ஒன்றிய தன்மையைத் தலைவன் கூற்றாக வரும்,

'யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே!'

எனவரும் குறுந்தொகைப் பாட்டால் (40) அறியலாம். இவ்வகை அன்புடையார் இருவரைப் பெற்றோரும் ஒப்பி, உலகமறியத் திருமணத்தை நடத்தி வைத்தனர்.

களவில் மூன்று முக்கிய நிகழ்ச்சிகள்

களவு மணத்தில் அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, மடலேறுதல் என்னும் மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தகும். ஆடவரும் மகளிரும் தாம் கொண்டுள்ள காதல் ஒழுக்கத்தைத் தமது பாங்கன் பாங்கியர்க்கு வெளியிடலும், அவர்கள் தலைவியின் பெற்றோர்க்கு உண்மையை வெளிப்படுத்தலும் ஆகிய நிகழ்ச்சி ஒன்று. இதனை, 'அறத்தொடு நிற்றல்' என்பர். இந்த நிலையில் தானே உண்மையை உணர்ந்த பெற்றோர் களவு மணம்கொண்ட தம் குழந்தைகளுக்கு உலகம் அறிய மணம் முடித்து வைத்திடுவர்.

இது நேராதவிடத்து, தலைவி தனது பெற்றோரும் மற்றோரும் அறியாது, தான் விரும்பிய ஆடவனுடன் தனித்துத் தலைவன் இருப்பிடத்திற்கே அவனுடன் சென்று விடுதலும் உண்டு. இதனை 'உடன்போக்கு' என்பர்.

தோழி ஒருத்தி ஒரு தலைவனை நோக்கி, 'இத் தலைவியின் கொங்கை தளர்ந்தும், கூந்தல் நரைத்தும் மூப்படைந்த காலத்தும்

இவளைக் கைவிடாது நீ பாதுகாக்க வேண்டும்' என்று கூறி அவனோடு உடன்போக அனுப்பிவைத்தாள்.

'அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன் நேர் மேனி மணியின் தாழ்ந்த
நல்நெடுங்கூந்தல் நரையொடு முடிப்பினும்,
நீத்தல் ஓம்புமதி-பூக்கேழ் ஊரே!'

என்பது நற்றிணையில் வரும் (10:1-4) ஒரு காட்சி.

இவ்விருவகை நிலையும் வாய்க்காது தலைவியின் பெற்றோர் மணம் மறுத்து அவள் இற்செறிக்கப்பட்ட காலத்தில், தலைவன் தன் காதலை மூத்தோர்க்கு வெளியிடும் வண்ணம் 'மடலேறுதலை' நிகழ்த்துவான்.

மடல் என்பது பனைமட்டையாலான குதிரை வடிவான ஒரு பொருளாம். குதிரை வடிவான இதனை 'மடன்மா' என்பர். மடலால் ஆன குதிரைக்கு மணி, ஆவிரை மாலை முதலியவற்றைச் சூட்டிவைப்பான். தான் காதலித்த பெண்ணின் உருவத்தையும் தன் உருவத்தையும் துணியில் வரைந்து கையில் பிடித்திருப்பான். மடலேறுவோன் எருக்கமாலை, ஆவிரைமாலை, எலும்புமாலை முதலியவற்றைப் பூண்டு, பித்தன்போல் காட்சியளிப்பான். இந்த மடலேற்றத்தின் முக்கிய நோக்கம் தங்கள் காதலை உலகத்திற்கு வெளிப்படுத்துவதாம். உண்மையை அறிந்த பெரியோர் முன்னின்று அக் காதலர்கள் மணம்புரிந்து ஒன்றுகூடி வாழப் பெற்றோரை அடுத்து வேண்டும் வகையில் உதவுவர். மடல் நிகழ்ச்சி ஊராரின் பழிப்புக்கு இடனாகுமாதலின் தலைவனது மடலேறும் உள்ளநிலையை உணர்ந்து சுற்றத்தார் மணம் முடித்து வைப்பதும் உண்டு.

'மா என மடலும் ஊர்ப; பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப - காமம் காழ்க்கொளினே!' (குறுந்.17)

'ஒறுப்பின், யான் ஒறுப்பது நுமரை;
யான் மற்று இந்நோய்
பொறுக்கலாம் வரைத்து அன்றிப்
பெரிதாயின், பொலங்குழாய்;
மறுத்து இவ்வூர் மன்றத்து
மடல்ஏறி,
நிறுக்குவன் போல்வன்யான்
நீ படு பழியே' (கலி.58:20-23)

என வரும் அடிகளால் பொறுக்கமுடியாத நிலையில் தலைவன் மடலேறும் நிகழ்ச்சி நடைபெற்றதை அறியலாம்.

காதலர் வரைபாய்தல்

மடலேறுதலேயன்றிக் கற்புமணம் கைகூடாத நிலையில் காதலர்கள் தம் உயிரை மாய்த்துக் கொள்ளுதலும் உண்டு. இத் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோர் மலைமீது ஏறிக் கீழே விழுந்து உயிர் நீத்தனர் என்று தெரியவருகிறது. இதனை 'வரைபாய்தல்' என்பர்.

'ஆராக் காமம் அடூஉநின்று அலைப்ப,
இறுவரை வீழ்நரின் நடுங்கி' (அகம்.322:3-4)

என்பதால் காமத்தால் நலிவுற்றார் வரைபாய்தலை அறியலாம்.

மகளிரை வலிதிற் கோடல்

அன்பொத்த காதல்மணம் இவ்வாறாக, மகளிரை வலிந்து பற்றிச்சென்று மணந்துகொள்ளும் இராக்கத மணம் என்னும் பொருந்தா மணமும் இல்லாமல் இல்லை.

'மைஇல் மதியின் விளங்கும் முகத்தாரை
வெளவிக் கொளலும் அறன் எனக் கண்டன்று' (கலி.62:14-15)

என்று ஒரு தலைவன் கூறுவதைக் கலித்தொகையில் காணலாம். இவ்வகைப் பொருந்தா நிகழ்ச்சிகள் மணவாழ்க்கையில் உள்ளமை கருதிப் பெருந்திணை என நூலோர் இதனை ஒதுக்கி உரைப்பர்.

மணமுறை வகுத்தல்

களவு ஒழுக்கத்தில் பொய்யும் வழுவும் வரவரப் பெருகின. இந்த நிலையில் ஒருசில சமூகக் கட்டுப்பாடுகளும் தோன்றியிருத்தல் வேண்டும். திருமண முறைகளைப் பெரியோர்கள் வகுத்துக்கொடுக்க, சடங்குத் திருமணமும் காலப்போக்கில் பெருகியது. இந்தச் சடங்குகள் அந்தந்த இனத்தாருக்கேற்ற வகையில் சிற்சில வேறுபாடுகளுடன் அமைந்திருந்தன.

'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே'

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

எனவரும் தொல்காப்பிய நூற்பாக்கள் (பொருள்.கற்பு.3,4) இதற்குச் சான்றாம்.

மகட்பேசி மணம்முடித்தல்

ஊரறிய மகட்பேசி மணம் முடிக்கும் முறை பெருவழக்காய் இருந்தது. திருமண நிகழ்ச்சி வாழ்க்கையில் மாற்றமுடியாத ஒன்று என்னும் கருத்தினால் பலவகை ஒத்த நிலைகளை நோக்கி மணத்திற்கு உடன்பட்டனர். பின்னர் அதை மறுத்தல் இல்லை என்பதை,

'கண்டல் வேலிய ஊர், 'அவன்
பெண்டு' என அறிந்தன்று; பெயர்த்தலோ அரிதே'

எனவரும் நற்றிணைப் பாடற்பகுதி (74:10-11) இதனைத் தெளிவிக்கும்.

பெண்ணினது தந்தையிடமே மணத்தைப் பற்றிப் பேசி, மண உறுதி செய்வது மரபாக இருந்தது. மகளுடைய விருப்பத்தையும் தெரிந்து, தாய்-தந்தையர் மணத்துக்கு உடன்பட்டனர்.

'துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென்; யாயும்நனி வெய்யள்;
எந்தையும் கொடீஇயர் வேண்டும்;
அம்பல் ஊரும் அவனொடு மொழிநமே' (குறுந்.51:3-6)

'வேங்கைக் கண்ணியன் இழிதரு நாடற்கு
இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன் கொடையே; அலர்வாய்
அம்பல் ஊரும் அவனொடு மொழியும்' (அகம்.282:10-13)

எனவரும் பாடற்பகுதிகள் மகட்பேசி மணம் முடித்தலை வெளிப்படுத்து கின்றன.தலைவனொடு தலைவியைப் பிணைத்து ஊர்அலர் தூற்றுவதாக இப்பாடல்களில் குறிப்பிடுவதினால் இவர்கள் களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டவர் என்பது தெரியவரும்.

பொதுவாகப் பெண்ணை வேண்டி மைந்தரைப் பெற்றோர் மணம் பேசிவருவதலும், பெண்ணின் சுற்றத்தார் வந்தவர் தகுதிகளை ஆராய்ந்து அதற்கு உடன்படுதலும் இயல்பு. தலைவனே மகள் வேண்டி வருதலும் உண்டு என்பது,

'கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அம்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்
வந்தனன்; எதிர்ந்தனர் கொடையே;
அம்தீம் கிளவி! பொலிக, நின் சிறப்பே'

எனவரும் ஐங்குறுநூற்றுப் பாடலால் (300) அறியவரும்.

மகள் மறுத்தல்

பெண் பேசி வந்தபோது, குறித்த தலைவன் தங்கள் தகுதிக்கு ஏற்றவன் அல்லனாயின் பெண் கொடுக்க மறுத்துவிடுவர். மகளை மறுத்தல் ஏதுவாகப் போர் நிகழ்தலும் உண்டு. இவற்றை முறையே 'மகள் மறுத்து மொழிதல்' (புறம்.109-111). 'மகட்பாற்காஞ்சி' (புறம்.336-354) என்பர்.

'புரையர் அல்லோர் வரையவள், இவள் எனத்
தந்தையும் கொடாஅன்' (புறம்.343:12-13)

'நிரல் அல்லோர்க்குத் தரலோ இல்' (புறம்.345:14)

என வருவன ஒவ்வாதார்க்கு மகள் மறுத்தலுக்குரிய சான்றுகளாம்.

ஆடவரை மணம் குறித்துப் பார்த்தல்

ஆடவர்க்காகப் பெண்பேசி மணம் முடித்தலைப் போலவே, பெண்கள் பொருட்டு ஆடவரை மணம் குறித்துப் பேசுதலும் உண்டு. பாரி மகளிருக்கு மணம் முடிக்கும் பொருட்டுக் கபிலர் அவர்களைத் தம்முடன் அழைத்துச்சென்று, விச்சிக்கோன், இருங்கோவேள் என்னும் இருவரையும் அம் மகளிரை மணந்துகொள்ளுமாறு வேண்டினார். அவர்கள் இருவரும் மறுத்துவிட்டனர். எனவே கபிலர் அம் மகளிரைப் பார்ப்பாரிடம் பாதுகாப்பாக ஒப்படைத்து வடக்கிருந்தனர் என்பது தெரியவருகின்றது. (புறம். 200-202)

திறமை கண்டு கணவனைத் தேர்தல்

ஆடவருடைய திறமையை நேரில் அறிந்து, அவர்களுக்கு வெற்றிப் பரிசாக மகளிரைக் கொடுக்கும் வழக்கமும் இருந்தது. ஆயர்கள் எருது தழுவும் விழாவை நிகழ்த்தி, எருதை அடக்கி, வெற்றிகாணும் ஆடவனுக்கு மகளை மணம் முடித்து வைத்தனர். ஆயர் தம் மகளிர் பொருட்டு ஏறு தழுவும் நிகழ்ச்சியைப் பறை அறைந்து ஒரு விழாப்போலக் கொண்டாடினர் என்பதை,

''அறைக' என்றார், பாரித்தார்
மாணிழை ஆறாகச் சாறு'

எனவரும் கலித்தொகைப் பாடல் அடியால் (கலி.102:13-14) அறியலாம்.

இந்த விழாவை ஆயர்மகளிர் பரணின்மேல் இருந்து கண்டு களித்தனர் (கணலி.103:5-7). ஏறு தழுவ அஞ்சி ஒதுங்கும் ஆடவரை ஆயமகளிர் புறக்கணித்துவிடுவர். ஏறு தழுவி வெற்றிபெறுவராயின் தம் பொருட்டு அத் தலைவர் தரும் பரிசத்தைக் கூடத் தலைவி விரும்பாள்.

'கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே, ஆயமகள்' (கலி.103:63-64)

'விலை வேண்டார், எம் இனத்து ஆயர் மகளிர்
கொலை ஏற்றுக் கோட்டிடை, தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்' (கலி.103 71-73)

என வருவன ஆய மங்கையரின் மன உறுதியையும் அவர்தம் சமூகத்திலுள்ள பழக்கவழக்கத்தையும் புலப்படுத்தும்.

பரிசம் கொடுத்தல்

திருமணத்திற்கு முன்பாக நிகழும் இரண்டு நிகழ்ச்சிகள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. அவற்றுள் ஒன்று மணப்பெண்ணுக்காக மணமகன் கொடுக்கும் பரிசம். மற்றொன்று தலைவிக்குச் செய்யப்படும் சிலம்புகழி நோன்பு. இப் பரிசப் பொருளின் பொருட்டு மணமகன் பிரிந்து சென்று பொருள் தேடி வருதலும் உண்டு. இப் பரிசத்தை 'தழைவிலை', 'முலைவிலை' என அழைப்பர். பரிசமாகப் பெண்ணைப் பெற்றோர் பெரும்பொருள் விரும்பினர்.

'அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்,
நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறல் அருங்குரையள்' (அகம்.280:4-6)

'முழங்கு கடல் முழவின் முசிறி அன்ன
நலம்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரையர் அல்லோர் வரையலள், இவள்' (புறம்.343:10-12)

இவற்றால் ஆடவர் தரும் பரிசப் பொருளின் உயர்வும், பொருள் நோக்காது தகுதி அறிந்து மணம் செய்வித்தலும் தெரியவரும்.

சிலம்புகழி நோன்பு

சிலம்புகழி நோன்பானது தலைவியின் காலில் இளமையில் அணிந்திருந்த சிலம்பினைக் கழற்றிவிட்டுப் புதுச் சிலம்பு ஒன்றை அணிவதாகும். திருமணத்துக்கு முன்பு இச் சடங்கு நிகழ்த்தப்பெறும். ஒருகால், தலைவன் தரும் பரிசப் பொருள்களில் இச் சிலம்பும் முக்கிய இடம் பெற்றிருக்கலாம். இச் சடங்கைப் பெண்ணைப் பெற்ற தாய்மார் தங்கள் இல்லங்களிலே நிகழ்த்தப் பெருவிருப்பமுடையர். உடன்போக்கில் செல்லும் தலைவியர்க்கு சிலம்பு நீக்கும் சடங்கும் மணவினையும், தலைவன் இல்லத்தில் நிகழ்ந்துவிடும்.

'அதர்உழந்து அசையின கொல்லோ - ததர்வாய்ச்
சிலம்பு கழீஇய செல்வம்
பிறருழைக் கழிந்த என் ஆயிழை அடியே' (நற்.279:9:11)

'நும்மனைச் சிலம்பு கழீஇ யரினும்
எம் மனை வதுவை நன்மணம் கழிக எனச்
சொல்லின் எவனே மற்றே' (ஐங்.399:1-3)

என மகட்போக்கிய தாய்மார் பேசுவதிலிருந்து அவர்களின் விருப்பம் புலனாகும்.

மணநாள் உறுதிசெய்தல்

திருமண நாளை அறிவித்து, உறவினருடன் உண்டு மகிழும் மணவுறுதிச் சடங்கு பற்றியும் தெரியவருகிறது. வீட்டை அலங்கரித்து, கள்ளுண்டு மகிழ்ந்து, மணலைக் குவித்து, 'எமது மகளுக்கு மணம் செய்ய நிச்சயித்துள்ளோம்' என்னும் செய்தியைக் கூறுவர். மணம் நடக்கப்போகும் நாளையும் அறிவிப்பர்.

'நனை வினை நறவின் தேறல் மாந்தி,
புனை வினை நல் இல் தருமணல் குவைஇ,
'பொம்மல் ஓதி எம்மகள் மணன்' என,
வதுவை அயர்ந்தனர் நமரே' (அகம். 221:1-4)

எனவரும் அடிகள் மேலைச் செய்திகளைத் தெரிவிக்கின்றன.

இல் உறை தெய்வம் போற்றுதல்

மணநாள் உறுதி செய்தபின், 'இல்லுறை தெய்வத்திற்கு மடை முதலியன கொடுத்து வழிபடுவர்.

'வல்லே வருக, வரைந்த நாள்!, என,
நல்இறை மெல்விரல் கூப்பி,
இல்லுறை கடவுட்கு ஆக்குவதும், பலியே!' (அகம்.282:16-18)

எனவரும் தலைவி கூற்றால் மணநாள் குறித்து இல் உறை தெய்வ வழிபாடு புரிந்தமை புலனாகிறது.

ஆயர் மணமுறை

ஆயர்கள் திருமணத்தின் பொருட்டு வீட்டின்முன் மணல் பரப்புவர். தம் இல்லத்தைச் செம்மண் கொண்டு பூசுதலும், எருமை மாடு அளித்தலும் செய்வார்கள் என்று தெரியவருகிறது.

'தருமணல் தாழப்பெய்து, இல் பூவல் ஊட்டி
எருமைப் பெடையொடு, எமர் ஈங்கு அயரும்
பெருமணம்' (கலி.114:12-14)

என்கிறாள் ஓர் ஆயமகள். இதனால் திருமணத்தையொட்டி நிகழ்த்தப்பெறும் சடங்குகள் அவ்வச் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பச் சிற்சில மாறுபாடுகளோடு அமைந்திருந்தன என்று கருதலாம். திருமண நிகழ்ச்சிகளை விரிவாகத் தருவது அகநானூற்றில் வரும் 86, 136ஆம் பாடல்களாகும். இவற்றில் காணும் செய்திகளையும் பிற சங்க நூல்களில் வரும் குறிப்புக்களையும் இனிக் காண்போம்.

திருமணப்பந்தல்

திருமணப்பந்தல் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. முற்றத்திலே நல்ல வெண்மணல் பரப்பியிருந்தனர். மாலைகள் அங்கங்கே தொங்கவிடப்பட்டிருந்தன. நறுமணப் பொருள்களின் இனிய நாற்றம் எங்கும் பரந்திருந்தது. எங்கும் விளக்குகளை ஏற்றி வைத்திருந்தனர். (அகம்.86:3-4).

திருமணம் காண வருவார்

மணத்தின் பொருட்டுச் சுற்றத்தார்களும் நல்ல ஆடைகள் அணிந்து மலர் புனைந்து வந்து கூடுகின்றனர். இனிய இசைகள் முழங்குகின்றன. மணமனைக்கு வருவார் நறுமலர் சூடி நல்ல ஆடை அணிந்து வந்தனர் என்பதை,

'சுடுபொன் அன்ன கொன்றை சூடி,
கடிபுகுவளர்போல் மள்ளரும் உடைத்தே'

எனவரும் ஐங்குறுநூற்று அடிகளால் (432:2-3) அறியலாம்.

மணவிருந்து

மணத்திற்கு வருவோர்க்கு உணவு முதலியன அளிக்கப் படுகின்றன. உளுந்து கலந்து ஆக்கிய சோற்றை மணநாளில் வழங்குவதாக அகநானூற்றின் 86ஆம் பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூல் 136ஆம் பாடலில் இறைச்சியோடு கலந்து ஆக்கிய வெண் சோற்றைக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வுணவு வேறு பாடும் சமூகங்களுக்குள் நில்விய பழக்க வேறுபாடுகளைக் காட்டும்.

திருமண நிகழ்ச்சிகள்

திருமண நிகழ்ச்சியில் முதலில் கடவுளை வழிபட்டு, பின்னர் மணமக்களுக்கு நீராட்டு புரிகின்றனர். இந் நீராட்டு 'வதுவை நன் மணம்' என்றும் சுட்டப்படுகிறது. நீராட்டுவதற்கு உரிய மஞ்சன நீரையும் வேறு மங்கலப் பொருள்களையும் சுமங்கலிகளான முதுபெண்டிர் தந்து உதவினர். மணமக்களை ஆட்டுவதற்குரிய நீரில் பூவும் நெல்லும் கலந்து காணப்பட்டன. மகப்பேறு வாய்க்கப்பெற்ற நான்கு மகளிர் முன்வந்து, 'கற்பில் வழுவாதபடி கணவனைப் பேணும் சிறந்த மனைவியாக விளங்குக' என்று வாழ்த்தி, மணமக்களை நீராட்டினர். அறுகம்புல்லின் கிழங்கும் நறுமணப்பூவும் கலந்து கட்டிய மாலையை அவர்களுக்கு அணிவித்தனர். மணப்பெண்ணின் கூந்தல் நறுமண மலர் மாலையில் அழகு செய்யப்பட்டிருந்தது. மணப்பெண் கணவனுடன் மணவறையில் நாணம் மேலிட வீற்றிருந்தாள். மணமகளின் பெற்றோர், 'பெருமனைக்கு உரிமையுடையவளாகுக' என்று வாழ்த்தி மணமகனுக்கு அவளை அளித்தனர். மணநாளன்று இரவில் மணமக்கள் ஒரு தனியறையில் உடன் உறைந்து இன்புற்றனர். (அகம் 86;136).

கைப்பிடித்துக் கொடுத்தல்

'நேர் இறை முன்கை பற்றி; நுமர்தர,
நாடு அறி நன்மணம் அயர்கம்' (குறிஞ்சி.231-232)

எனத் தலைவன் ஒருவன் கூறுதலின், நாடு அறிய நடைபெறும் திருமண விழாவில் பெண்ணின் சுற்றத்தார் தலைவியின் கையைப் பிடித்துத் தலைவனிடம் ஒப்படைத்தனர் என்பது விளங்கும். இக் காலத்தில் நிகழும் 'கைப்பிடித்துக்கொடுத்தல்' என்னும் வழக்கத்தை ஒத்ததே இச் சடங்கு.

தீவலம் செய்தல்

தீவலம் செய்தல், தாலியணிவித்தல் முதலியனவாக நிகழும் இக் காலத்துச் சடங்கு போன்ற நிகழ்ச்சிகளை மேற்குறித்த அகப்பாடல் தெரிவிக்கவில்லை. வேறு இடங்களில் வரும் ஒருசில குறிப்புக்களைக் கொண்டு இவ்வகை வழக்கும் அந்நாளில் இருந்தன என்று கொள்ள இடமுண்டு.

தலைவன் அனுப்பிய தூதுவனைக் குறித்து, 'இத் தூதுவனை நெய்பெய்த தீயைப்போல ஏற்றுக்கொண்டு, தலைவன் என்னை மணந்த காலத்து உள்ள அன்பு நிலையில் சிறிதும் குறைபடாதவனாய் இருக்கிறேன் என்று எதிர்தூது விடுவோம்' எனத் தோழிக்குக்கூறுகிறாள்.

'நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
'தான் மணந்தனையம்' என விடுகம் தூதே' (குறுந்.106:5-6)

என மணநாளையும் நெய்பெய் தீயையும் இணைத்துக் கூறிய இவ்வுரையால், மணத்தையொட்டி எரிவளர்த்த நிகழ்ச்சியை உட கொண்டு கூறியதாகும் இது எனக் கருதலாம்.

தாலிகட்டுதல்

ஆய் என்பானைக் குறித்து முடமோசியார் பாடிய புறப்பாட்டில், அவன் தன்பால் உள்ள எல்லாப் பொருள்களையும் இரப்போர்க்கு ஈந்தான் என்று குறிப்பிடுகின்றார். அவன் மகளிர் அணிந்த அணிகளைக் கூட இரவலர்க்கு அளித்துவிட்டானாம். அம்மகளிரிடத்து, 'ஈகை அரிய இழையணி' (புறம்.127:5) மட்டுமே எஞ்சியிருந்ததாம். இங்கே கொடுப்பதற்கு இயலாத நிலையில் உள்ள அணி என்பது தலைவன் திருமணத்தின்போது கட்டிய தாலியைக் குறித்ததாதல் வேண்டும். 'இழையணி' என்பது கயிற்றில் கோத்துக் கட்டப்பெற்ற ஆபரணமாம். இக்காலத்திலும் திருமணத்தின்போது தாலி கயிற்றில் கோத்து அணியப்பெறுதல் யாவரும் அறிந்ததே. இங்கே பழைய உரைகாரர் இத் தொடருக்கு 'கொடுப்பதற்கரிய மங்கலிய சூத்திரத்தை' என்று விளக்கம் தருகிறார்.

நெடுநல்வாடையில் அரசனைப் பிரிந்த நிலையில் படுக்கையில் தனியே கிடந்த அரசியைப் பற்றிக் கூறிவரும் செய்திகளில், 'முத்தாரங்களைச் சுமந்து அழகுபெற்றுத் தோன்றிய அவ்வரசியின் மார்பிடத்தே திருமாங்கல்லியம் மட்டும் தாழ்ந்து அசைந்து கிடந்ததே யன்றி வேறு எவ்வகை அணியும் காணக்கூடவில்லை' என்கிறார்.

'ஆரந் தாங்கிய அவர்முலை ஆகத்துப்
பின்அமை நெடுவீழ் தாழ'

எனவரும் நெடுநல்வாடை அடிகளுக்கு (136-137), 'முன்பு முத்தாற் செய்த கச்சுச் சுமந்த முலையினையுடைய மார்பிடத்தே இப்பொழுது குத்துதல் அமைந்த நெடியதாலி நாண் ஒன்றுமே தாங்க' என நச்சினார்க்கினியர் தரும் உரைவிளக்கத்தால், தாலி அணி எக்காலத்தும் நீக்கக்கூடாத ஒரு சின்னம் என்னும் க்ருத்து இனிது புலப்படும்.

புதுமணப்பெண் பாற்சோறாக்குதல்

புதுமணப்பெண் சோறு சமைத்துக் கணவனுக்கு உண்பிப்பதையும் ஒரு சடங்காகவே நிகழ்த்தினர். மணப்பெண் தன் முதல் சமையலில் பாலை உலையாக வைத்துச் சோறாக்குவது வழக்கம். பாற்சோற்றைத்

தலைவன் முதன்முதலாக உண்ணும் இந்நிகழ்ச்சியைச் சிறப்பாகச் சுட்டிய இடங்களும் சில உள.

'துவரப் புலர்ந்து தூமலர் கஞலி,
தகரம் நாறும் தண்நறுங் கதுப்பின்
புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல் கோட்டு அடுப்பில் பால் உலை இரீஇ
கூழைத் கூந்தற் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்து
பாசவல் இடிக்கும்' (அகம்.141:12-18)

'இடுமுள் வேலி முடக்கால் பந்தர்
புதுக்கலத்து அன்ன செவ்வாய்ச் சிற்றில்,
புனை இருங் கதுப்பின் நின் மனையாள் அயர,
பாலுடை அடிசில் தொடீஇய, ஒருநாள்
மாவண் தோன்றல் வந்தனை சென்மோ' (அகம்.394:9-12)

எனவரும் பாடற்பகுதிகளில் புதுமணப்பெண் பாற்சோறு ஆக்கிக் கணவனுக்கு இடும் மரபு தெரியவருகிறது. தொல்காப்பியர்,

'......................................சொல் என
ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு என
அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்'
(தொல்.பொருள்.கற்பு.5:11-14)

என்பதனால் குறிப்பிடுகின்றார்.

விருந்தோம்பல்

மகளிர் குடும்பத்துக்கு விளக்கமாகக் கருதப்பட்டனர்.

'மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல் கணவன்' (புறம்.314:1)

'மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற (ஐங்குறு.405:2)

தாம் கொண்ட கணவரை உண்டி முதலியவற்றால் உபசரித்தும், சுற்றமும் விருந்தும் பேணியும் இல்லறத்தை நல்லறமாக்கினர்.

'அமரர்ப் பேணியும், ஆவுதி அருந்தியும்,
நல் ஆனொடு பகடு ஓம்பியும்,
நான்மறையோர் புகழ் பரப்பியும்,
பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்,
புண்ணியம் முட்டாத் தண் நிழல் வாழ்க்கை'
(பட்டினப்.200-204)

என வரும் பகுதி இல்லறத்தார் புரியும் தருமங்களை எடுத்துக்காட்டும். மகளிர் அன்பு, நாணம், ஒப்புரவு, இன்சொல் முதலியன உடையராய்க் கற்பு நெறியில் ஒழுகி நல்ல நெறிகளைப் போற்றி வாழ்ந்தனர்.

விருந்து பேணக் கணவன் உடனுறைதல் வேண்டும்

இல்லத்துக்கு வரும் விருந்தினரை நன்கு உபசரித்தனர். விருந்தினரை உபசரித்தல் தலைவன் உடன் உறையும் காலத்துத்தான். தலைவன் இல்லாத இல்லத்தில் விருந்தினரும் தங்குவதில்லை. வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவியாகிய கண்ணகியைத் துறந்து வேறிடத்தில் வாழ்ந்த காலத்தில், அவன் மனைவியாகிய கண்ணகி, விருந்தோம்ப இயலாநிலைக் குறித்து வருந்தினாளாம். ஆங்கு வந்த கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர் பெருமக்களை விருந்தேற்று உபசரிக்க இயலாமை கருதி வருந்திய நிலையையும், அப்புலவர்கள் அங்குத் தங்காமல் பேகனிடம் சென்று கூறிய மொழிகளையும் புறநானூற்றில் காண்கிறோம். (143-147).

'இளையரும் புரவியும் இன்புற, நீயும்
இல் உறை நல் விருந்து அயர்தல்
ஒல்லுதும், பெரும! நீ நல்குதல் பெறினே' (அகம்.300:20-22)

என்கிறாள் ஒரு மங்கை. விருந்தினரைத் தலைவனும் இல்லில் இருந்து உபசரிக்க வேண்டும் என்பது இதனால் புலப்படும்.

பல்வேறு இனத்தாரும் அவரவர்க்கு இயன்ற வகையில் விருந்தினர்களுக்கு உணவு, பானம் முதலியன அளித்து உபசரித்த நிகழ்ச்சிகள் பத்துப்பாட்டிலும் தொகைநூற் பாடல்களிலும் அங்கங்கே வருகின்றன. (பட்டினப்.202; மலை.169, 185, 425-426; நற்.41:6-10,81:6-9; 374:7-8; ஐங்.442: 1-2; பதிற்.21:8-13; பரி.17:42; கலி.75:16-17; அகம்.300:20-22; புறம்.42:17-18, 316:5-7; 326:7-12, 331:7-9, 374:10-15).

விருந்து பேணுவதில் பேரார்வம்

பொருள் சிறிதளவு இருப்பினும்கூட விருந்தினரை உபசரிக்க இல்லுறை மகளிர் தவறுவது இல்லை. பொருள்களைப் பணயம் வைத்துக்கூட விருந்தினரை உபசரித்தனர்.

'தவச் சிறிது ஆயினும் மிகப் பலர் என்னாள்,
நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉப் போல' (புறம்.331:7-9)

'நெருனை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்று இக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்' (புறம்.316:4-6)

காலம் அல்லாக் காலத்திலும், இரவு வேளையில்கூட விருந்தினர் தம் இல்லத்துக்கு வருவாராயினும் கற்புடை மகளிர் வெறுப்பு என்பது சிறிதும் இன்றி விருந்தினரைத் தக்க வகையில் பேணி உபசரித்தனர்.

'அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்,
முல்லை சான்ற கற்பின்,
மெல்இயற் குறுமகள்' (நற். 142:9-11)

என்று கற்புடைப் பெண்டிரின் விருந்தோம்பும் பண்பினைப் பாராட்டுகின்றது.

விருந்து வரக் காக்கை கரைதல்

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்று நம்பினர். விருந்து வருவதற்குக் காரணமாகக் கரைந்த காக்கைக்குப் பலியிட்டனர். தலைவி ஒருத்தி தலைவன் வருகையால் மகிழ்ந்து, அவ்வருகையைத் தெரிவித்த காக்கைக்கு, 'எவ்வளவு சோற்றைப் பலியாகக் கொடுப்பினும் போதாது' என்று மகிழ்ந்து கூறுகிறாள்.

> 'முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு
> எழுகலத்து ஏந்தினும் சிறிது-என்தோழி
> பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
> விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே!' (குறுந்.210:3-6)

என்பது தோழி ஒருத்தியின் வாக்கு.

பிரிந்து மீண்ட கணவர்க்கு மாலை விருந்து

தொழில் காரணமாக நீண்டநாள் பிரிந்து மீண்டும் மனை வந்து சேர்ந்த காலத்துக் கணவருக்கு விருந்து செய்து தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

> 'மாலை நனிவிருந்து அயர்மார்
> தேர் வரும் என்னும் உரை வாராதே' (குறுந்.155:6-7)

> 'சுடர்துயர் எடுப்பும் புன்கண் மாலை,
> அரும்பெறற் காதலர் வந்தென, விருந்து அயர்பு
> மெய்ம்மலி உவகையின் எழுதரு
> கண் கலிழ் உருபனி அரக்கு வோரே' (குறுந்.398:5-8)

இச்செய்யுட்பகுதிகள் கணவன் பொருட்டு விருந்து வைத்தலைத் தெரிவித்தலோடு, புதியராய் வந்தார்க்கு விருந்து என்னும் கருத்தோடு உறவின் முறையார்க்குச் செய்யும் உபசாரமும் விருந்தாயிற்று என்பதைப் புலப்படுத்துகின்றன. பிரிந்த கணவர் பெரும்பாலும் மாலைக்காலத்தில் வீடு வந்து சேர்தலைக் கருதி மாலையில் விருந்து செய்தனர் போலும். ஒருகால் விருந்துக்கு ஏற்ற காலம் மாலைக்காலமாகவும் அக்கால வழக்கில் இருந்திருக்கலாம்.

நித்தமும் நீராடல்

பொதுவாக உடலின் மாசுகளைப் போக்குவதற்காகத் தினமும் நீராடுதல் முன்னோர் வழக்கமாயிருந்தது. 'மாசு அறு விளங்கிய யாக்கையர்' (மதுரை.456). 'மாசு அற இமைக்கும் உருவினர்' (முருகு. 128) எனவரும் இடங்களில், 'நீராடியமையால் அழுக்கு அற விளங்கும் வடிவுடையவராயினர்' என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகின்றார்.

'புறம் தூய்மை நீரான் அமையும்' என்னும் வள்ளுவர் வாக்கும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

புதுப்புனலாட்டு

இல்வாழ்க்கையில் கணவன் மனைவியர் சேர்ந்து பல இடங் களுக்கும் சென்று இயற்கைக் காட்சிகளைக் கண்டும், தெய்வ வழிபாடு இயற்றியும் பல்வேறு வகையில் பொழுதுபோக்கிய நிகழ்ச்சிகளும் உள. ஆற்றில் புதுப்புனல் வரும் காலத்திலே ஆடவரும் மகளிரும் கூட்டம் கூட்டமாகச் சென்று நீரில் நீந்தியும், மூழ்கியும், துருத்தி முதலியவற்றால் நீரை வீசியும், வேழம் என்னும் கொறுக்கச்சித்தட்டையாலான தெப்பங் களைப் பற்றிக்கொண்டு நீந்துதலும் வழக்கம்(பரி.10,11). எளியோர் முதல் செல்வர் வரையில், அரசனும்கூட இந்தப் புதுப்புனல் நீராட்டத்தில் கலந்துகொள்வ துண்டு. இதனைப் 'புதுப்புனல்விழா' என்றே சிறப்பாகக் கொண்டாடினர்.

'ஆடுவார்; பாடுவார்; ஆர்ப்பார்; நகுவார்; நக்கு
ஓடுவார்; ஓடித் தளர்வார்; போய், உற்றவரைத்
தேடுவார்; ஊர்க்குத் திரிவார் இலராகி
கற்றாரும், கல்லாதவரும், கயவரும்
பெற்றாரும் பெற்றாற் பிழையாத பெண்டிரும்,
பெற்றேரான் தானும், பொலம் புரிசைக் கூடலும்
முற்றின்று வையைத் துறை' (பரி. திரட்டு 2:21-27)

வையை நதியில் புதுப்புனல் விழாவிற்கு வந்த மாந்தரையும் அவர் களுடைய ஆடல் பாடல் முதலிய மகிழ்ச்சிச் செயல்களையும் இப்பாடற் பகுதியில் காணலாம். வையை பற்றிய பரிபாடல் பாடல்களில் (10,11,12,16) புதுப்புனலாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றைக் காணலாம். நீர் விளையாட்டால் எழுகின்ற ஆரவாரம் போர் ஆரவாரத்தைவிடவும் பெரியதாக இருந்தது என்பதை,

'போர்த்து எழுந்த பறையால் புனல் செருக்குநரும்
நீர்த்தரு பூசலின் அம்பு அழிக்குநரும்
ஒலித்தலை விழலின் மலியும் யாணர்'

எனவரும் பதிற்றுப்பத்து அடிகளால் (22:28-30) அறியலாம். ஐங்குறு நூற்றில் 'புனலாட்டுப் பத்து' (8) என்னும் ஒரு பகுதியும் உள்ளது.

'சூது ஆர் குறுந்தொடிச் சூர் அமை நுடக்கத்து
நின் வெங்காதலி தழீஇ, நெருநை
ஆடினை என்பபுனலே' (ஐங்.71:1-3)

'மலர் ஆர் மலிர்நிறை வந்தென,
புனலாடு புணர் துணை ஆயினன் எமக்கே' (ஐங்.72:4-5).

கடலாடுதல்

தீவினை நீங்கக் கடலாடுதலும் முன்பு உண்டு. கடலாடியபின் நன்னீரிலும் குளிப்பர். காவிரியாறு கடலோடு கலக்கும் சங்கமத்துறையில் கடலாடியும், பின் நன்னீர் ஆடியும் வருதலை அக்கால மக்கள் சிறப்பாகக் கருதினர்.

'மாமலை அணைந்த கொண்மூப் போலவும்,
தாய்முலை தழுவிய குழவி போலவும்,
தேறு நீர்ப் புணரியோடு யாறு தலைமணக்கும்
மலி ஓதத்து ஒலிகடல்,
தீது நீங்கக் கடல் ஆடியும்;
மாசு போகப் புனல் படிந்தும்'

வந்தனர் என்கிறது பட்டினப்பாலை (95-100). முக்கியமாக உவா நாளில் கடலாடினர் என்று தெரியவருகிறது.

தீர்த்தநீர் ஆடுதல்

கடலாடுவதைப் போல் விழா நாட்களில், ஏழாம் நாளில் அந்திக்கண் தீவினை கழிய தீர்த்த நீர் ஆடுதலும் அக்கால மக்களின் வழக்கமாக இருந்து வந்தது என்பதை,

'கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடு துவன்று விழாவின் நாடு ஆரித்தன்றே'

என்னும் மதுரைக்காஞ்சியடிகளால் (429-430) அறியலாம்.

பொழிலாட்டு

புதுப்புனல் ஆடுதலைப் போலவே வேனிற் காலத்தில் பொழில்களில் சென்று தங்கி, விளையாடி, இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்து, உணவு உண்டு மகிழ்தலும் முன்பு பெருவழக்காய் இருந்தது. இல்வாழ்க்கையில் புனலாட்டும், பொழிலாட்டும் சிறப்புடை நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன என்பதை,

'நின்மலைப் பிறந்து, நின்கடல் மண்டும்
மலி புனல் நிகழ் தரும் தீம்நீர் விழலின்
பொழில் வதி வேனில் பேர்எழில் வாழ்க்கை'

என்னும் இப் பதிற்றுப்பத்து அடிகளால் (48:13-15) அறியலாம்.

உவா நாளில் பரதவர் வழிபாடு

கடற்கரையில் வாழ்ந்த பரதவர்கள் உவா நாளில் (பௌர்ணமி) கடலில் மீன் பிடிக்கச் செல்லாது மனையில் தங்கி தெய்வத்தை வழிபட்டும், பின் மகளிருடன் கூடி, கள் முதலியன உண்டு இன்பமாகப் பொழுது போக்கினர் எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது (79-93).

உவா நாளில் கடல் கொந்தளிப்பாகப் பொங்கி எழும். அந்நாளில் நெய்தல் நிலத்து வாழும் கள் விற்கும் பழையரின் மகளிர், மாலைக் காலத்தில் கடல் தெய்வத்தைப் பணிந்தனர். ஒளி படைத்த முத்துக்களோடு வலம்புரிச்சங்குகளையும் சொரிந்து, குளிர்ந்த கடல்நீர்த் துறையிலே உள்ள தெய்வத்தைத் தொழுது போற்றினர். கொற்கைத் துறையில் உவா நாளின் கண் மகளிர் கூடி மாலையில் கடல்துறைத் தெய்வம் பரவிய வகையை,

'புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்றுறை,
அவர் கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து,
தழை அணிப் பொலிந்த கோடு ஏந்து அல்குல்
பழையர் மகளிர் பனித்துறை பரவ,
பகலோன் மறைந்த அந்தி ஆர் இடை
உருகெழு பெருங்கடல் உவவுக் கிளர்ந்தாங்கு

எனவரும் அகப்பாடற் பகுதி (201:4-9) தெரிவிக்கின்றது.

திருவிழாக் காட்சியும் தெய்வ வழிபாடும்

மாந்தர் விழாக் காலங்களில் திரண்டு எழுந்து விழாக்காட்சிகளைக் கண்டும், கோயில்களில் வழிபாடு ஆற்றியும் வந்தனர். திருப்பரங்குன்றத்தில் பாண்டியன் நகர மாந்தரோடு சென்று மலைவலம் கண்டு, வழிபட்டு, விழாக்கொண்டாடிய நிகழ்ச்சியைப் பத்தொன்பதாம் பரிபாடலில் காணலாம். மகளிரும் மைந்தரும் அம்மலையில் உள்ள குரங்குகளுக்குப் பணியாரம் முதலியவற்றை எறிந்து விளையாடினர். சிலர் யாழ், குழல் முதலிய இசைக்கருவிகளை ஒலித்து மகிழ்ந்தனர். அங்கு நடைபெறும் வேள்வியைக் கண்டு அவற்றின் சிறப்புக்களை எடுத்துப் பிறருக்குக் கூறினர். /இன்னும் சிலர் கோயிலின் சித்திரமண்டபத்தில் உள்ள பற்பல சித்திரங்களையும் சுட்டிக்காட்டி அவற்றின் இயல்புகளையும் சிறப்புக்களையும் உடன் வந்தவருக்குப் புலப்படுத்தினர் (பரி.19:38-57).

மக்கள் தத்தம் குடும்பத்தாருடன் சென்று தெய்வ வழிபாடாற்றி தங்கள் விருப்பங்களையும் முறையிட்டு வரம் வேண்டினர் (பரி.2:75-76, பரி.11:116-121).

'..............................நின்அடி
தலையுற வணங்கினேம், பல்மாண் யாமும்;
கலிஇல் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்,
கடும்பொடும், கடும்பொடும் பரவுதும்-
கொடும்பாடு அறியற்க எம் அறிவு எனவே' (பரி.2:72-76)

இப்பாடல் அடிகளில் இறைவனுடைய திருவடியைத் தலைதாழ்த்தி வணங்கி, அவ்விறைவனைத் துதித்தும் வாழ்த்தியும் சுற்றத்தாருடன் வழிபாடு நிகழ்த்துதலை அறிவிக்கின்றன.

ஆதிசேடனின் திருக்கோயிலில் இளமகளிரும் நரைவாய்ந்த முதியோருமாகப் பலவகை மாந்தரும் ஒருங்கு குழுமினர். பூசைக்கு வேண்டிய தூபதீபங்களும் பூ முதலியனவும் தெய்வத்திற்குரிய படையலையும் தாங்கிவந்து வழிபாடு செய்தனர். அப்பொழுது அங்கே யாழ், முழவு முதலிய இசைக்கருவிகள் முழங்கின. ஆடவரும் மகளிரும் ஆடல் பாடல் நிகழ்த்தினர். (பரி.திரட்டு.1:35-49).

திருமால், முருகன் முதலிய பெருந்தெய்வங்களுக்கும், இல்லுறை பாவைத் தெய்வம், பொதியில் கந்து, மற்றும் மலையிலும் காட்டிலும், மரத்திலும் நீரிலும் உறையும் சிறு தெய்வங்கள் முதலியவற்றையும் வழிபட்டனர். நடுகல் வழிபாடும், பத்தினி வணக்கமும், எழுமின் வடமீன் போன்ற சில நட்சத்திரங்களைத் தொழுதலும் வழக்கத்தில் இருந்தன. சூரியனை வணங்குதலும் பெருவழக்காயிருந்தது.

'முந்நீர் மீமிசை பலர்தொழித் தோன்றி
ஏமுற விளங்கிய சுடர்' (நற்.283:6-7)

'உலகம் உவப்ப வலன்ஏற்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு' (முருகு.112)

என்பன சூரிய வணக்கத்தினைக் குறிக்கின்றன.

மாலைக்காலத்தில் மங்கையர் மனையில் விளக்கு ஏற்றுவர். விளக்கிற்கு நெல், மலர் முதலியன தூவி வணக்கம் செலுத்துவர். இந்த விளக்கு வழிபாடு பற்பல இடங்களில் சங்கப் பாடல்களில் காண்கிறோம். (நெடுநல்.39-44; பட்டின.247-248; முல்லை. 45-49; மதுரை.554-556; குறுந்.398:3-5; நற்.3:8-9; அகம்.7:8, 47:9-12; 87:13, 235:8).

மகளிர் பிறையைத் தொழுது போற்றுதலும் உண்டு.

ஒள் இழை மகளிர் உயர்பிறை தொழுஉம்
புல்லென் மாலை (அகம்.239:9-10)

என்பதனால் மகளிர் மாலைப் பிறையைத் தொழல் பெறப்படும்.

'குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழி சிறக்க நின் வலம்படு கொற்றம்' (மதுரைக். 193-194)

என்பதனாலும் உணரலாகும்.

பகுதி-2

வாழ்விலும் தாழ்விலும் மாந்தர்

ஆடவரும் மகளிரும் வாழ்விலும் தாழ்விலும் ஒருவரை ஒருவர் விரும்பி வாழ்க்கை நடத்தினர். இளமையில் செல்வச்செழிப்புடன் வளர்ந்த பெண்களும்கூடக் கணவனுடைய வாழ்க்கை நிலையை ஒட்டியும், கணவன் குடும்பத்தாரைத் தழுவியும் இல்வாழ்க்கை நடத்தினர். கணவன் வறுமையடைந்த காலத்திலும் மகளிர், தமது தந்தை எவ்வளவு செல்வமுடையவனாய் இருந்தபோதிலும் தந்தையின் உதவியை நாடிற்றிலர். கணவன் இல்லிலுள்ள வறுமை நிலைக்கேற்பக் காலமல்லாக் காலத்துச் சிறிதளவு உணவு கொண்டு இன்பமாக வாழ்ந்தனர்.

இளமையில் இனிய தேன் கலந்த பாலை உண்ணுவதற்கு மறுத்து ஓடிச் செல்வச் செழிப்பில் வளர்ந்தவள் ஒரு பெண். இப்போது இல்வாழ்க்கையில் கணவனுடைய குடியின் வறுமைக்கேற்ப வாழ்க்கை நடத்துகிறாள். அவளுடைய குடித்தனப்பாங்கைக் கண்டு செவிலித்தாய் வியந்து கூறினாள்.

'பிரசம் கலந்த வெண் சுவைத் தீம்பால்
விரி கதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்தி,
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்,
'உண்' என்று ஓக்குபு பிழைப்ப, தெண் நீர்
முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,
அரைநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந்து ஒழிய, பந்தர் ஓடி,
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென,
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்,
ஒழுகுநீர் நுணங்கு அறல் போல,
பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே!' (நற்.110)

என்பது செவிலியின் வாக்கு.

மனைவியர் பெற்றோரின் இல்லத்தைவிடவும் கணவனையும் கணவனது இல்லத்தையும் எத்தனை உயர்வாக மதித்தனர் என்பதை,

'அன்னாய், வாழி! வேண்டு, அன்னை; நம் படப்பைத்
தேன் மயங்கு! பாலினும் இனிய-அவர்நாட்டு
உவலைக் கூவற்கீழ
மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே' (ஐங்.203)

என்னும் இத் தலைவி கூற்றினால் அறியலாம்.

கணவனைப் பிரிந்து வாழ்வார் நிலை

கணவனைப் பிரிந்து தனித்து வாழும் மகளிர் நிலை சிறப்பாகப் போற்றப்படவில்லை. கணவனால் துறக்கப்பட்டு வாழும் பெண் நீருண்ட எறியப்பட்ட, எச்சிலால் பயன்படாத குடை ஓலையைப் போன்றும், குடியிருப்பார் போகிய பாழ் ஊரைப் போன்றும், தலையிலே சூட்டி எறிந்த பூவைப் போன்றும், அழகு இழந்து, பிறரால் விரும்பப்படாத நிலையினர் ஆவர் என்று ஒரு தலைவி தம் தலைவனுக்கு எடுத்துக்கூறுவதாக் கலித்தொகைப் பாடல் ஒன்று கூறுகிறது. (23:8-13).

மகளிர் பலரை மணத்தல்

கணவனைப் பிரிந்து வாழும் மகளிர் நிலை இவ்வாறாக மனைவியைப் பிரிந்து வேறு பெண்களுடன் வாழும் ஆடவர்நிலை அத்தனை கடியப்பட்டதாகத் தோன்றவில்லை. மனைவி ஒருத்தி இருக்கவும் வேறொரு பெண்ணை மணந்துகொள்வதும் வழக்கத்தில் இருந்தது. இந்நிலை மகளிர்பால் இல்லை. தொல்காப்பியர்,

'பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவைத்
தொல்முறை மனைவி எதிர்ப்பாடு ஆயினும்' (தொல்.கற்பு.31)

என்று கூறுவது முன்பு முறையாக மணந்த மனைவி இருப்பினும் பின்னும் முறைப்படி வேறு ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் உண்டு என்பதைக் காட்டும்.

பரத்தையை நாடுதல்

நலமும் குணமும் வாய்ந்த மனைவி இருந்தும், நாள்தோறும் புதுப்புது மலரில் சென்று தேனை உண்ணும் வண்டைப்போலப் பரத்தையரை நாடி அலைந்தவர்களும் சமுதாயத்தில் இருந்தனர். ஆனால் இவர்கள் மதிப்பிற்குரியவராகப் போற்றப்படவில்லை.

'நீயே பெரு நலத்தையே; அவனே,
'நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தி,
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டு, என மொழிப, 'மகன்' என்னாரே' (நற்.290:6-9)

'புதுமலர் தேரும் வண்டேபோல் -யாழ
வதுவை விழவு அணி வைகலும் காட்டினையாய்'
(கலி.98:2-3)

மனைவியின் அணிகலன்களைக்கூட அவளுக்குத் தெரியாமல் எடுத்துச் சென்று, பரத்தையர்க்குக் கொடுத்துவிடுவதும் உண்டு. ஒரு தலைவி வழியிற் கண்ட பரத்தை மேனியில் தன் அணிகலன்களைக் கண்டு, 'எனது அணிகளைக் களவு கொண்டு, தந்தாரைக் காட்டு' என்றாள். அதற்கு அவள், 'உன் கணவன் என்னைச் சேர்தற்பொருட்டு இந்த வளையையும் ஆரத்தையும் கொண்டுவந்து தந்தான். இனி, உன்

காலில் உள்ள சிலம்பையும் கழற்றுவான்; ஆதலால் கள்வன் உன கணவனே; அவனைப் போய்ப் பற்று' என மறுமொழி உரைத்தாள்.

'அ....சொல் நல்லவை நாணாமல்
தந்து முழவின் வருவாய்! நீ வாய் வாளா;
எந்தை எனக்கு ஈந்த இடுவளை,ஆரப்பூண்
வந்தவழி நின்பால் மாயக் களவு அன்றேல்,
தந்தாளைத் தந்தே தருக்கு'

என்பது தலைவி ஒருத்தியின் வினா.

'மாலை அணிய விலை தந்தான்; மாதர்நின்
கால சிலம்பும் கழற்றுவான்; சால,
அதிரல் அம் கண்ணி! நீ அன்பன் எற்கு அன்பன்;
கதுவாய்; அவன் கள்வன்; கள்வி நான் அல்லேன்'

(பரி.20:74-82)

என்பது பரத்தை கூறிய மறுமொழி.

இவ்வுரையாடற் பகுதியால் மகளிர்க்கு அவர்தம் பெற்றோர் அணிகலன்கள் செய்து தந்தனர் என்பதும், பரத்தையை நாடியவர் மனைவியின் அணிகளையும் கொண்டுசென்று பரத்தைக்கு அளித்தனர் என்பதும் புலப்படுகின்றன. காலிற் சிலம்பும் கழற்றுவாள் எனக் கூறுதலினால், சிலம்பு மகளிர் காலில் எப்பொழுதும் இருக்கும் என்பதும், அதனைக் கழற்றுதல் முறையன்று என்பதும் குறிப்பின் பெறப்படும். நகரத்தின் ஒருபுறம் பரத்தையர் சேரி அமைந்திருந்தமையும், இவ்வொழுக்கம் சமூகத்தில் வேரூன்றி இருந்தது என்பதைக் காட்டும்.

மனைவியை அன்றி எவரையும் நாடாதவர்

பலதாரமணம், பரத்தையை நாடுகை போன்றவை ஒருபுறம் இருக்கவும், மனைவியின் இழப்புக்காக நொந்து வாழ்ந்த ஆடவரும் இல்லாமல் இல்லை. சேரமான் கோட்டம்பலத்துத்துஞ்சிய மாக்கோதை என்பான் தன் துணைவி இறந்த பின்னும் தான் வாழ்வதைக் குறித்து நொந்து இரங்குகிறான். 'ஈமத்தில் அவளை எரிப்பதைப் பார்த்தும் நான் இன்னும் உயிர் வாழ்கிறேனே? இவ்வுலக இயற்கை இருந்தவாறு என்னே!' என்று ஏங்குகிறான். தன் உயிரைப் போக்கும் வலியற்ற தன் துன்ப நோயின் அளவு இவ்வளவுதானா என்றும் பேசுகிறான் (புறம்.245) இந்நிகழ்ச்சியால் மனைவியரை உயிரினும் பெரிதாக நேசித்து வாழ்ந்தாரையும் காண்கிறோம்.

பொருள் முயற்சி

ஆடவர் தம் மனை வாழ்க்கையை வறுமையால் வாட விடாது பல்வேறு தொழில்களைப் புரிந்து பொருள் ஈட்டி வந்து வாழ்க்கையை

வளப்படுத்தினர். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் பெறுதற்குக் காரணமாக பொருள் தேடும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டனர்.

'அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்,
பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்,
புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும் என,
பிரிவு எண்ணிப் பெருள்வயிற் சென்ற நம் காதலர்'
(கலி.11:1-4)

என்று ஒரு தலைவனின் பொருள் நோக்கத்திற்கான ஏதுக்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

ஈதலும் துய்த்தலும் பொருள் இல்லோர்க்கு இல்லையாதலின் ஈத்துவக்கும் இன்பமும் அதனால் வரும் இசையும் பெறுதற்குப் பொருள் அவசியம் என்பது நன்கு உணரப்பட்டது (குறுந்.63). இதன் பொருட்டு பல மலைகளைக் கடந்த வேற்று நாடுகளுக்கும் சென்று பொருள் ஈட்டி வந்தனர் ஆடவர்.

'இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அறம்புணர்வு ஈன்ம்' என,
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை'
....
மைசூழ் வெற்பின் மலைபல இறந்து,
செய்பொருட்கு அகன்ற செயிர்தீர் காதலர்' (நற்.214:1-3, 7-8)

என்பதனால் எங்குச் சென்றாயினும் பொருள் தேடி வரும் அவர்கள் உள்ளம் புலனாகிறது. 'அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு ஈன்ம்' என்பத்னால் சோம்பி இருப்போர் இசை, இன்பம், ஈதல் அடைய இயலாது என்பதை நன்கு உணர்ந்திருந்தனர்.

கல்வி-நாடு காவல்

பொருளுக்காக மட்டுமின்றி அறத்தை நிலைநிறுத்தவும், பெருங்கல்வியைப் பெற்று வருவதற்கும், மன்னர்க்காகப் போர்களில் ஈடுபட்டுப் பகையைத் தொலைப்பதற்கும் மனைவியரைப் பிரிந்து செல்வது வழக்கமாயிருந்தது.

'ஓதல் பகையே தூது இவை பிரிவே' (தொல்.பொருள்.அகத்.25)

என மூன்று பிரிவுகளைத் தொல்காப்பியர் முதன்மையாகக் குறிப்பிடு கின்றார். 'அறப்புறங்களைக்காத்தலையும் நாடு காத்தலையும்', 'மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய' (தொல்.பெர்ருள்.அகத்.28) என்னும் நூற்பாவில் இவர் சுட்டியுள்ளார்.

மேலும் பொருற்வயிற் பிரிவையும் (தொல்.பொருள்.அகத்.33) பரத்தையர் பிரிவையும் (தொல்.பொருள்.அகத்.28) இவர் தெரிவிக்

இன்றார். பரத்தையர் பிரிவு கற்பு வாழ்க்கையில் நிகழும் செய்தியாதலின் இஃது பொருள் முயற்சிக்குரிய பிரிவன்று. அதனால்தான் ஓதல், தூது முதலியவற்றைச் சிறப்பாக எடுத்து அகத்திணை இயலில் தொல் காப்பியர் விவரிக்கின்றார்.

ஓதலும் தூதும்

ஓதல் பிரிவு முதலியவற்றை அகப்புற பாடல்களில் அங்கங்கே காணலாகும்.

'கைதொழு மரபின் கடவுள் சான்ற
செய்வினை மருங்கின் சென்றோர் வல்வரின்'

(அகம்.125:14-15)

என்பது ஓதற்பிரிவை உணர்த்துகின்றது.

பார்ப்பார் முதலியோர் தூது செல்லுதலும், குறிக்கப்பட்டிருக்கின்றது. அதியமான் பொருட்டு ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றமையைப் புறநானூற்றில் காண்கிறோம். அரசர்களிடம் நேரும் பகைகளைச் சான்றோர் தூது சென்று தவிர்த்தனர். இதனை,

'இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல' (குறிஞ்சி.27-28)

என்பதனால் உணரலாம். சமூகத்தில் தோன்றும் பகைகளை நரை மூதாளராகிய பெரியோர் முன்னின்று தவிர்த்துச் சந்தி செய்து வைத்தல் மரபாகும். இதற்கு,

'இருநீர்ப் பரப்பின் பனித்துறைப் பரதவர்
தீம்பொழி வெள்உப்புச் சிதைதலின் சினைஇ,
கழனி உழவரொடு மாறு எதிர்ந்து மயங்கி,
இருஞ்சேற்று அள்ளல் எறிசெருக் கண்டு
நரைமூதாளர் கைபிணி விடுத்து
நனைமுதிர் தேறல் நுளையர்க்கு ஈயும்' (அகம்.366-6-11)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதி சான்றாம்.

போர்த்தொழில்

அரசர் பொருட்டுப் போர்த்தொழிலில் மக்கள் விருப்புடன் ஈடுபட்டனர்.

'ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' (புறம்.312:5-6)

என்று தாய்மார் தம்முடைய புதல்வர்களின் கடமைகளில் ஒன்றாகப் போரைக் கருதினர். வேற்று நாட்டுப் பாசறையில் உறைந்து மன்னர்க்காக வீரர்கள் போரிட்ட நிகழ்ச்சிகள் பல.

'பாசறை அருந்தொழில் உதவி, நம்
காதல் நல்நாட்டு போதரும் பொழுதே' (ஐங்.446:3-4)

என வருவது பாசறையில் தங்கிப் போர் செய்தலைக் காட்டும். அக்காலப்போர் முறைகளில் ஒருசில பழக்கங்களை மன்னரும் படைகளும் மேற்கொண்டிருந்தனர். போருக்குப் புறப்படுவது முதற் கொண்டு வெற்றிவிழாக் கொண்டாடுவது வரையில் பல்வேறு நிகழ்ச்சிகள் உள. அவற்றை இனி நோக்குவோம்.

போர் தவிர்க்க இயலாதது

போர் என்பது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகவே இருந்தது. மன்னர்கள் ஒருவரை ஒருவர் வென்று தங்கள் ஆணை எங்கும் செல்ல விரும்பினர்.

'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ் உலகத்து இயற்கை' (புறம்.76:1-2)

என்பதால் இது வழிவழியாக வந்த ஒரு செயற்பாடு ஆகும். ஆனால் போரினால் பொதுமக்கள் துன்பப்பட்டதில்லை. இரு பெருவேந்தரின் படைகளுக்குள்ளே குறித்ததோர் அரணைச் சார்ந்து போர் நிகழ்ந்தது. வெற்றி கொண்டோர் எதிரி மன்னனையும் படையையும் அழித்து, அவனது அரணைத் தரைமட்டமாக்கிய போதிலும் நாட்டிலுள்ள மக்கள் அதனால் நலிவுறவில்லை. போர் என்பது மன்னர்களின் பலாபலன் களைக் காட்டும் ஒரு கருவியாக அமைந்தது என்றே கொள்ள வேண்டும்.

போருக்கு முன்னறிவிப்பு

போர் தொடங்கும் இடத்திலும் கூடப் போர் தொடங்குவதற்கு முன் அங்கு வாழும் அந்தணர், பெண்கள், குழந்தைகள் முதலியோரைப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு முன்னறிவிப்புச் செய்தனர். இவ்வாறு அறிவித்தலை ஒரு அறநெறிக் கொள்கையாக அவர்கள் கடைப்பிடித்தனர்.

'ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும், நும் அரண்சேர்மின்; என,
அறத்து ஆறு நுவலும் பூட்கை' (புறம்.9:1-6)

என்பது பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் போர் முன்னறிவிப்பாகும்.

குடை வாள் பெயர்த்தல், முரசு முழக்குதல்

போருக்குப் புறப்படுவதற்கு முன்பாக அரசர்கள் தங்களுடைய வாளையும் கொற்றக் குடையையும் நல்ல நேரத்தில் பெயர்த்து வைத்தல்

மரபு (தொல்.பொருள்.புறத்.11). நாட்டிற்குப் போர் அடுத்துள்ளதைக் கேட்டு வீரர்கள் திரண்டு எழுவர். போர்க்களத்திலும் பறை அடித்தல் உண்டு. 'முரசுடைப் பெருஞ்சமம்' (பதிற். 34:10, 41:19). 'படுகண்முரசம் நடுவண்சிலைப்ப' (பதிற். 49:14, 54:13), 'போர்ப்பு உறு முரசம் கறங்க' (பதிற். 21:18). 'முரசு முழங்கு தானை' (பொருந. 54, பெரும். 33). தண்ணுமை,கிணை, பறை என்பனவும் போரில் ஒலித்தனவாகத் தெரியவருகின்றது. (பதிற்.51:33-34; புறம். 78:12.) போர் முரசின் ஒலி கடலின் ஒலியைப் போலவும் இடி முழக்கம் போலவும் பேரொலியாகப் பரந்தது (பதிற்.68: 1,69:3-4; 80:3-4).

முரசு போற்றுதல்

மன்னர்கள் பகைவருடைய காவல் மரத்தை வெட்டி, அதைக்கொண்டு தமக்குரிய முரசை அமைத்துக்கொள்வர். (பதிற்.11:12-14, 17:5; அகம்.347:4-5). இரண்டு போர் எருதுகளை மோதவிட்டு, அவற்றுள் வென்ற எருதின் தோலை மயிர் சீவாது முரசுக்குப் போர்வையாகக் கொள்வர் (புறம்.288:1-4; அகம். 334:1-2, மதுரை. 232-733). போர்முரசைப் பெருமதிப்புடன் பாதுகாத்து வந்தனர். அதற்கென அரண்மனையில் தனியிடமும் தனிக்கட்டிலும் இருந்தன. கட்டிலின் மேல் பாலின் நுரை, எண்ணெயினது நுரை போன்ற மெல்லிய பூவைப் பரப்பியிருந்தனர். மயிற்பீலியிலான மாலையும் உழிஞை மாலையுடன் சேர்த்து அதற்குச் சூட்டுவர். இம் முரசுக்கு நீராட்டி குருதிப் பலி கொடுத்து வழிபடுவர். (புறம்.50:1-8).

ஆயுதசாலை

போரில் வேல், கேடயம், வாள், வில், அம்பு முதலிய ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன. போர் ஆயுதங்களைப் பாதுகாத்தலுக்கு ஆயுதச் சாலைகளும் அரசர்கள் அமைத்திருந்தனர். அவ்வாயுதங்களுக்கு நெய் பூசி மயிற்பீலி சூட்டித் தக்க வகையில் பாதுகாத்து வந்தனர். பழுதுபட்ட ஆயுதங்களை அவ்வப்பொழுது கொல்லன் உலைக்களத்திற்கு அனுப்பிச் செப்பஞ்செய்து வைத்துக் கொண்டனர் (புறம்.97:1-7; நற்.177:5-6). போர் மறவர்கள் காலில் கழலை அணிந்து, நூலாடையை உடுத்தி, அதன்மேல் நீலக்கச்சினைக் கட்டிக்கொண்டு சென்றனர். வேல் இவர்களுடைய முக்கியமான ஆயுதம் (பதிற்.34:2-3; புறம் 100:1-2 274:1-2)

வீரரின் போர் ஆர்வம்

வீரர்கள் செருப்பறை கேட்டதும் விருப்புடன் எழுந்து, கோலுக்கு அஞ்சாது சீறிவரும் பாம்பைப்போலப் பகைவர்மேல் போருக்கு எழுவர். பொதுமன்றத்தில் தூங்கும் முழவிலிருந்து அடிக்கப்படாது காற்றின் அசைவினால் அடியுண்டு எழும் ஒலியைக் கேட்டு அதனைப் போர்ப்பறை என்று வீரர் எழுந்தனர் எனில் அவர்தம் போர் ஆர்வம் அளவிட்டு உரைப்பது அரிதாகும் (புறம்.31:9, 279:7, 89:5-98).

போர்ப்பூ

போர் நிகழ்ச்சிகளில் வெட்சி, கரந்தை, தும்பை முதலிய பூக்களை வீரர்கள் சூடினர். அதோடு மன்னர்க்குரியச் சின்னமான சிறப்புடைப் பூவையும் அணிந்தனர் (புறம்.77:1-4; பதிற்.51:31-32, 56:4-5, 79:15). வீரர்கள் பூ அணிவதற்காகப் பறை முழக்குதலும் உண்டு (அகம்.174:4; புறம்.289:8-10). பூவிலைப் பெண்டிரிடமிருந்து இவர்கள் பூவைப் பெற்றனர். இங்ஙனம் பூக்கொள்ளுதலைப் 'பூக்கோட் காஞ்சி' (புறம்.293) என்பர். பூக்கொள்ளுமாறு கட்டளையிட்டுவிட்டு மன்னர் தம் மூதூர் வாயிலிலுள்ள குளத்தில் நீராடியதன்பின் தாங்கள் மலர் அணிந்து கொள்வர். இம் மரபினை,

> 'புலிக்கணத்து அன்ன கடுங்கன் சுற்றமொடு,
> மாற்றம் மாறான் மறலிய சினத்தன்
> 'பூக்கோள்' என ஏஎய், கயம் புக்கனனே' (புறம்.341:7-9).

> 'மூதூர் வாயில் பலிக்கயம் மண்ணி,
> மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து
> தெண்கிணை முன்னர்க் களிற்றின் இயலி,
> வெம்போர்ச் செழியனும் வந்தனர்' (புறம்.79:1-4)

என வருவனவற்றால் அறியலாம்.

படைப்பயிற்சி

படைக்கலம் பயிலும் இளவீரர்களின் பயிற்சியை ஊக்குவிப்பதற்கும் தனிவிழா நடத்தல் உண்டு. இதனைப் போர்ப்பயிற்சியின் அரங்கேற்ற விழா எனலாம். இதனைப், 'பூந்தொடை விழா', 'வாளுடை விழா' எனக் குறிப்பர்.

> 'வார்கழற் பொலிந்த வன்கண் மழவர்
> பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன' (அகம்.187:7-8)

> 'தோல் மிசைத்து எழுதரும் விரிந்து இலங்கு எஃகின்
> தார்புரிந்தன்ன வாளுடை விழவின்
> போர்படு மள்ளர் ....' (பதிற்.66:12-14)

எனவரும் பகுதிகள் இப் பயிற்சி விழா நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கின்றன.

வஞ்சினம் கூறிப் போரிடுதல்

மன்னர்களும் மறவர்களும் வஞ்சினம் கூறித் தாங்கள் கூறியபடி போரில் பெருவெற்றி காணுதலைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். ஒல்லையூர் தந்தபூதப்பாண்டியன், பாண்டியன் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சோழன் நலங்கிள்ளி என்பார் கூறிய வஞ்சின மொழிகளை முறையே புறநானூறு 71,72,73ஆம் பாடல்களில் காணலாம். போருக்கு முன் வஞ்சினம் மொழிவது உண்டு.

'இன்று இனிது நுகர்ந்தனம் ஆயின், நாளை
மண்புனை இஞ்சி மதில் கடந்தல்லது
உண்குவம் அல்லேம் புகா, எனக் கூறி, கண்ணி
கண்ணிய வயவர் பெருமகன்' (பதிற்.58:5-8)

'வஞ்சினம் முடித்த ஒன்று மொழி மறவர்' (பதிற்.41: 18)

இவை வீரர்களின் ஊக்கத்தையும் வீரத்தையும் காட்டும். போர்மேற் சென்ற மன்னர் வீரர்களுடன் பாடி வீடு அமைத்துத் தம் பரிவாரங்களுடன் தங்கியிருப்பர். இப் பாசறை நிகழ்ச்சிகளை நெடுநல்வாடையிலும் (168-188) பிற சங்கப் பாடல்களிலும் காணலாம்.

போர்க்களச் செய்திகள்

போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகித்துப் புலவர்கள் பாடிய பாடல்களும் உள(புற.368-371,373). போர்களச் செய்தியை வேள்வியாக உருவகித்துப் பாடுவதும் உண்டு (புறம்.372). போர்களத்திலே பேய்கள் உணவு சமைப்பதாகக் கூறும் மரபும் காணப்படுகிறது.(புறம்.372; மதுரை.24-39)

போரில் வெற்றி அடைந்தார் பேராரவாரம் செய்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். முரசம் இடி முழக்கம் போலப் பேரொலி செய்யும், வென்ற மன்னனின் வெற்றிக் கொடியை உயர்த்துவர்.

'மதவலி யானை மறலிய பாசறை
இடிஉமிழ் முரசம் பொருகளத்து இயம்ப,
வென்று கொடி எடுத்தனன், வேந்தனும்!' (அகம்.354:1-3)

பகைமன்னரது முரசு, குடை, கலன் முதலியவற்றைக் கைப்பற்றித் தம் நாட்டிற்குக் கொண்டு செல்வர் (அகம் 36:20-23; 116:17-19; பதிற்.பதிகம்:2,6). யானைகளின் மேலே வெற்றிக்கொடி அசைந்தாடித் திகழ்ந்து வரும். இவை மலைமேல் ஒழுகிவரும் அருவிகளைப் போலக் காட்சியளிக்குமாம். (நெடுநல்.81; மலைபடு.581-582; மதுரை.367-368; பதிற்.67:1-2; அகம்.162:22-23; 358:12-14).

தோல்வியுற்ற மன்னர்களின் எயிலை அழித்துத் தரைமட்டம் ஆக்கிவிடுவர். அங்கே சிந்திய பகைவர்களின் குருதியினால் ஏற்பட்ட ஈரத்தினால் கழுதையேர் பூட்டி உழுவர்; அங்கே வெள்ளை வரகையும், கொள்ளையும் விதைப்பர். இதனால் இவர்களை, 'வில்லேர் உழவர்', 'வாள் உழவர்' என்று சிறப்பிப்பர்.

'உருக்கெழு மன்னர் ஆர் எயில் கடந்து,
நிணம்படு குருதிப் பெரும்பாட்டு ஈரத்து
அணங்குடை மரபின் இருங்களந் தோறும்
எவ்வாய்க் கழுதைப் புல் இனம் பூட்டி,

வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ! வாழிய பெரிது!' (புறம்.392:6-11)

என அதியமான் நெடுமான் அஞ்சியின் மகன் பொகுட்டெழினியின் போர்ச்செயலைப் புகழ்ந்த ஔவையார் அவனை ஒரு வில்லேர் உழவனாக உருவகித்துப் பாடியுள்ளார்.

எயிலை அழித்தலே அன்றிப் பகைவர் நாட்டிலுள்ள நீர்நிலைகளை உடைத்து விடுதலும் செய்வர். தங்கள் யானைகளைப் பகைவரது காவல் மரத்தில் கட்டி வைத்து அவர்களுக்கு அவமதிப்பை விளைவிப்பர். அவர்தம் காவல் மரத்தை வெட்டித் துண்டுதுண்டாக்கி விடுவர். அத் துண்டுகளைக் கொண்டு முரசு செய்விப்பர் (பதிற்.33:4-5; புறம்.57:10-11; 162:5-6; 336:4; பதிற்.11:12-14).

'கடிமரத்தான் களிறு அணைத்து;
நெடுநீர துறை கலங்க
மூழ்த்து இறுத்த வியன்றாணையொடு
புலம்கெட நெரிதரும் வரம்பு இல்வெள்ளம்' (பதிற்.33:3-5)

என்பதனால் நாட்டின் நீர்நிலைகளை உடைத்துப் பாழ்படுத்திச் சென்ற சேனைகளின் மிகுதி புலப்படும்.

வெட்டிய காவல் மரத்துண்டுகளைச் சகடத்தில் ஏற்றி, பகை மன்னனது களிற்றை வண்டியை இழுக்கும் கடாவாகப் பூட்டி, கணவனை இழந்த மகளிர் களைந்த தலைமயிரைக் கயிறாகத் திரித்து எருதுகளைப் பூட்டும் கயிறாகக் கொண்டு இழுத்துச் செல்லச் செய்வர் (பதிற்.44:14-17; பதிற்.பதிகம்.5:12-17).

தோற்ற மன்னர்களையும் அவர்தம் மகளிரையும் சிறைப்பிடித்து வருதலும் உண்டு. சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானோடு பொருது குடவாயில் கோட்டத்துச் சிறையிருந்த செய்தியைப் புறநானூறு(74) தருகிறது.

'ஆரியர் அறைத்தாக்கி, பேர்இசைத்
தொன்று முதிர் வடவரை வணங்குவில் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்'

எனச் சேரமன்னனது வெற்றியைப் பற்றி அகப்பாடல் (396:16-18) கூறுகிறது. வெற்றிக்கு அறிகுறியாக மன்னர் தமது இலாஞ்சனையைப் பொறிக்கும் முறையையும் இப் பாடல் பகுதியால் உணரலாம். பகைவரது தலையில் நெய்யைப் பெய்வித்து, அவரது கைகளைப் பின்கட்டாகக் கட்டி அவமதித்தல் உண்டு. சிறைப்பிடித்தவரை விடுவிப்பதற்குப் பெரும்பொருளைப் பிணையாகக் கொள்ளுதலும் மரபு.

'அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்

தன்கோல் நிறீஇ, தகைசால் சிறப்பொடு
பேர்இசை மரபின் ஆரியர் வணக்கி
நயன்இல் வன்சொல் யவனர்ப் பிணித்து,
நெய்தலைப் பெய்து, கையிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறல் மூதூர்த் தந்து' (பதிற்.2, பதிகம்.4-11)

எனவருவன மேலதற்குச் சான்றாகும்.

பகைவர் நாட்டிலிருந்து சிறைப்பிடித்து வந்த மகளிரை ஊர்ப்பொதியிலில் தொண்டு செய்வதற்கு நியமிப்பர். இம்மகளிர் நீர்த்துறையிலே மூழ்கி பொதியில் திண்ணையை மெழுகி அந்தி வேளையில் அணையாத விளக்கினையும் அங்கு ஏற்றி வைக்கின்றனர்.

'கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலர் அணி மெழுக்கம் ஏறிப் பலர்தொழ
வம்புலர் சேக்கும் கந்துடைப் பொதியில்' (பட்டினப்.246-249)

இப்பாடல் பகுதியால் மேற்குறித்த வழக்கம் தெரியவருகிறது.

வாகை சூடுதல்

வெற்றிபெற்ற வேந்தர் வாகைப் பூவைச் சூடி மகிழ்வர். வாகைப்பூ சுடர் போன்று ஒளிபடைத்தது. இவ் வாகைப் பூவில் வெற்றி மகளாகிய கொற்றவை வாழ்வதாகக் கருதினர். 'சுடர் வீ வாகை' (பதிற்.40:15) 'கடவுள் வாகை'(பதிற்.66:15) என்பதனால் வாகைப்பூவின் தெய்வத்தன்மை புலப்படும். போரில் மிகுந்த திறமையுடன் போர் செய்த வீரர்களுக்குப் பொன்னாலாகிய வாகைப்பூவைப் பரிசாக வழங்குவர். மன்னனது பெருவெற்றியைப் பாணர் முதலியோர் புகழ்ந்து பாடுவர்.

சிறுசோற்று விழா–பெருஞ்சோற்று விழா

வெற்றி வீரர்களுக்கும் பிறர்க்கும் உணவும் கள்ளும் அளித்து விருந்து செய்தலும் உண்டு. பாசறையில் நிகழும் இவ்விருந்தைச் 'சிறுசோற்று விழா' என்பர். போருக்குப் பறப்படுமுன் மன்னர் வீரர்களுக்கு அளிக்கும் பேருண்டி விருந்தைப் பெருஞ்சோற்று விழா என்பர்.

'பாடுநர் வஞ்சி பாட, படையோர்
தாது எருமறுகின் பாசறை பொலிய,
புலராப் பச்சிலை இடை இடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்து கண்டன்ன
ஊன் சோற்று அமலை பாண்கடும்பு அருத்தும்
செம்மற்று அம்ம, நின் வெம்முனை இருக்கை-
... ...
ஒதுக்கு இன், திணி மணற் புதுப்பூம் பள்ளி

வாயில் மாடந்தொறும் மைவிடை வீழ்ப்ப
நீ ஆங்குக் கொண்ட விழலினும் பலவே'

(புறம்.33:10-15;20-22)

இங்கே விழவு என்பதைச் 'சிறுசோற்று விழவு' என்றே பழைய உரைகாரர் குறிக்கிறார். மன்னனது பெருநகரில் பலர்க்கும் சோறு வழங்கி உண்டாடிய ஒரு மன்னனது முற்றம் அவன் இறந்ததனால் பாழ்பட்டுக்கிடக்கும் நிலையை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகின்றார். மன்னன் உயிரோடு இருந்த காலத்து அங்கு நிகழ்ந்த பெருஞ்சோற்று நிகழ்ச்சியை இப் புலவர் தமது இரக்கமொழியில்,

'அந்தோ! எந்தை அடையாப் பேர் இல்!
வண்டுபடு நறவின் தண்டா மண்டையொடு
விரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்,
வெற்று யாற்று அம்பியில் எற்று? அற்று ஆகக்
கண்டனென், மன்ற; சோர்க, என் கண்ணே;
வையம் காவலர் வளங்கெழு திருநகர்,
மையல் யானை அயாவுயிர்த் தன்ன
நெய் உலை சொரிந்த மை ஊன் ஓசை
புதுக்கண் மாக்கள் செதுக்கண் ஆரப்
பயந்தனை, மன்னால், முன்னே!' (புறம்.261:1-10)

எனக் கூறியுள்ளார்.

'சிறியகட் பெறினே, எமக்கு ஈயும்; மன்னே!'
பெரியகட் பெறினே,
யாம்பாட தான்மகிழ்ந்து உண்ணும்; மன்னே;
சிறுசோற்றாலும் நனிபல கலந்தன்; மன்னே!
பெருஞ் சோற்றாலும் நனிபலகலத்தன்; மன்னே!'

(புறம்.235:1-5)

என ஔவையார் அதியமானை நினைந்து பாடிய பாடலில் அம் மன்னன் தன் வாழ்நாளில் நிகழ்த்திய சிறுசோற்று - பெருஞ்சோற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிவிழா

போருக்கு முன்னும் பின்னும் வீரர்க்கு விருந்து வைத்தலேயன்றி, வெற்றி பெற்று நகருக்கு மீண்டதும் வெற்றி விழாக் கொண்டாடுதலும் உண்டு. இவ் விழாவில் பசுந்தழைகளால் பந்தர்கள் அமைத்து, இள மணல்லப் பரப்பியிருந்தனர். உணவு ஆக்குதற் பொருட்டு ஆட்டுக் கிடாக்கள் பல கொல்லப்பட்டன. மதுவும் மிகுதியாக வழங்கினர்.

வெற்றி வீரர் முதலியோர் உண்டும் தின்றும் குடித்தும் உற்சாகமாகப் பொழுது போக்கினர். இந் நிகழ்ச்சியை 'உண்டாட்டு' என்றும் குறிப்பிடுவது உண்டு.

'நறவும் தொடுமின்; விடையும் வீழ்மின்;
பாசுவல் இட்ட புன்காற் பந்தர்ப்
புனல் தரும் இளமணல் நிறையப் மெய்ம்மின்-
ஒன்னார் முன்னிலை முருக்கி, பின்நின்று,
நிரையொடு வருஉம் என்னைக்கு
உழையோர் தன்னிலும் பெருஞ்சாயலரோ' (புறம்.262)

இப்புறப்பாட்டு உண்டாட்டு நிகழ்ச்சியைக் குறிக்கிறது. போருக்கு உதவிய துடியன், பாணன் முதலியோருக்கும் உண்டாட்டில் சிறப்புச் செய்வது உண்டு (புறம்.239). மன்னர் வீரர்களுக்குக் கள் வழங்கும்போது வழிவழியாகப் போர்த்தொண்டு செய்துவரும் வீரக்குடியினர்க்கு முதலில் வழங்குவர்.

'இவற்கு ஈத்து உண்மதி கள்ளே, சினப்போர்
இனக் களிற்றுயானை, இயல் தேர்க் குரிசில்!
நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை
எடுத்து எறி ஞாட்பின் இமையான், தச்சன்
அடுத்து எறி குறட்டின் நின்று மாய்ந்தனனே;
மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இஃஉனும்,
உறைப்புழி ஓலைபோல
மறைக்குவன் பெரும! நிற் குறித்து வருவேலே' (புறம். 290)

மழையைக் காக்கும் குடையைப்போல, மன்னன் மேல் வரும் வேலை இடைநின்று காப்பர் வீரர்கள் என்பதினால் வீரர்கள் செஞ்சோற்றுக்கடன் கழித்தலை மிக உயர்வாகக் கருதினர் என்பது புலப்படும்.

வீரர்க்கு மானியம் அளித்தல்

போரில் தமக்காக அரும்பாடுபட்ட வீரர்களின் நல்வாழ்விலும் மன்னர் கருத்துச் செலுத்தினர். அவர்கள் வருத்தமுறாது வாழ்க்கை நடத்த நல்ல நிலங்களையும் ஊர்களையும்கூட மானியமாக அளித்தனர்.

'..... ....பிணங்குகதிர்
அலமருங்கழனித் தண்ணடை ஒழிய,
இலம்பாடு ஒக்கல் தலைவற்கு ஓர்
கரம்பைச் சீறூர் நல்கினன் எனவே' (புறம்.285:14-17)

'துறை நனி கெழீஇக் கம்புள் ஈனும்
தண்ணடை பெறுதலும் உரித்தே' (புறம்.297:7-8)

'தண்ணடை நக்கல் வேந்தர்க்குக் கடனே' (புறம்.312:4)

என வருவனவற்றால் வீரர்க்கு நிலமானியம் அளிக்கும் வழக்கம் புலனாகும்.

விழுப்புண் போற்றுதல்

போரில் விழுப்புண்பட்டு மாய்தலைப் பெரும் பேறாகக் கருதினர்.

'விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்கும் தன்நாளை எடுத்து' (குறள்.77:6)

என வள்ளுவர் வீரனின் உளப்பாங்கினை எடுத்து மொழிகின்றார். விழுப்புண்ணாவது முகத்திலும் மார்பிலும் போரில் பகைவர்களது அம்பு, ஈட்டி முதலிய ஆயுதங்களால் உண்டான புண்ஆம்.

போரில் புறங்காட்டி ஓடுதலையும் முதுகிலே படும் புண்களையும் வெறுத்தனர். சேரமான் பெருஞ்சேரலாதன் கரிகால் வளத்தானோடு போர் பொருது, சோழனது வேல் தன் மார்பில் புகுந்து முதுகின்வழிச் சென்றிட, அந்தப் புண்ணையும் புறப்புண்ணெனக் கருதி நாணி, அம் மன்னன் வடக்கிருந்தான் என்று தெரியவருகின்றது (புறம்.65,66). வீரன் முதுகிட்டான் என்னும் செய்தி, அவ் வீரனைப் பெற்ற தாய்க்குக்கூட வருத்தத்தைத் தந்தது. வீரத்தாய்மார், தம் புதல்வன் புறமுதுகிடும் இழிசெயலை எக்காலத்தும் புரியான் என்னும் திடநம்பிக்கையுடையராய் இருந்தனர்.

தன் மகன் படைக்கு அழிந்து புறமுதுகிட்டான் என்னும் செய்தியைக் கேட்ட ஒரு முதியாள், 'என் மகன் நிச்சயமாக இவ்வித இழிசெயலைச் செய்யமாட்டான். அப்படி ஒருகால் அவன் செய்திருப்பான் ஆயின், அவனுக்குப் பாலூட்டிய எனது தனத்தையே அறுத்து எறிந்துவிடுவேன்' என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் சென்றாள். அங்கே பிணக்குவியல்களை வாளினால் புரட்டிப்புரட்டிக் கடைசியாக, விழுப்புண் பட்டுக் கிடக்கும் தன் மகனது பாடு கண்டு பெருமகிழ்வு கொண்டனளாம்.

'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்,
முளரி மருங்கின், முதியோள் சிறுவன்
படை அழிந்து, மாறினன்' என்று பலர் கூற,
'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்
முலை அறித்திடுவென், யான்!' எனச் சினைஇ,
கொண்ட வாளொடு படுபிணம் பெயரா,
செங்களம் துழவுவோள் சிதைந்து வெறு ஆகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே!' (புறம்.278)

பகைவரின் பெரும்படையைத் தடுத்து, அஞ்சாது நின்று பெரும்போர் விளைத்து இறுதியில் எதிரிகளால் முற்றும் அழிக்கப்பட்ட ஒரு மகனைக் கண்ட அவனது வயது முதிர்ந்த தாய்க்கு மகிழ்ச்சியால் வற்றிச் சுருங்கிய முலையில் பால் சுரந்ததாம்.

'தோடு உகைத்து எழுதரூஉ, துரந்து எறி ஞாட்பின்,
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி
இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி,

வாடு முலை ஊறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே!' (புறம். 295:3-8)

தன் மகன் போரில் புகழுடன் மாய்தலைத் தாய்மார் பெரிதும் மதித்து போற்றினர் என்பது இவற்றால் விளங்கும்.

விழுப்புண் பட்டானுக்குக் காப்பு

போரில் விழுப்புண் பட்டு வந்த வீரர்களின் புண்களைப் பேய்கள் தீண்டித் துன்புறுத்தா வண்ணம் காக்கும் பொருட்டாக அவரவர் மனைவிமார் ஒருசில காப்பு முறைகளைச் செய்தனர். இரவமரம், வேப்பமரம் ஆகியவற்றின் தழைகளை ஒடித்து வந்து தம் வீட்டின் இறப்பில் செருகி வைப்பர். ஐயவி என்னும் வெண்சிறுகடுகைப் புகைப்பர். அகில் முதலிய நறும்புகைகளையும் அதனோடு புகைப்பர்; மையிடுவர். பல இசைகள் முழங்க மணி அடித்துக் காஞ்சிப் பண்ணைப் பாடுவர். இந் நிகழ்ச்சி புண்பட்டுக் கிடக்கும் வீரர்களின் இல்லங்கள் தோறும் நிகழ்ந்தன (புறம். 281, 296).

வீரமரணத்தை விரும்புதல்

மன்னர்கள் விழுப்புண் படாது நோயால் இறந்து விடுவாராயின் அவரது உடலைத் தருப்பைப்புல் பாயில் கிடத்தி, விழுப்புண் படாத குற்றம் நீங்க, நான்மறை உணர்ந்த அந்தணர், 'வீரமறவர் செல்லும் உலகத்தில் இவர் செல்வாராக' என்று கூறி, வாளால் அவர் மார்பைப் பிளந்து,பின்னர் அடக்கம் செய்தனர் (புறம். 93:1-11). குழந்தை இறந்து பிறந்தாலும் அல்லது தசைத்தடியாகிய மணை பிறந்தாலும் அவற்றையும் வாளால் பிளந்து அடக்கம் செய்தனர் (புறம்.74:1-2). இந் நிகழ்ச்சிகள் வீரமரணத்தையே மக்கள் பெரிதும் மதித்துப் போற்றினர் என்பதை விளக்குவன.

மரணத்திற்கு அஞ்சாமை

நோயும் மூப்பும் மீதூர நேரும் மரணம் போற்றப்படவில்லை. மரணத்திற்காக மாந்தர் அச்சங்கொள்ளவும் இல்லை. மூப்பும் மரணமும் நேர்வது நிச்சயம் என்பதை நன்குணர்ந்திருந்தனர். இதனை மறந்து நடக்கும் அறிவில்லாதாருடன் சேராது மக்கள் விலகினர்.

'கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓரா அங்கு
மாற்றுமைக் கொண்ட வழி' (கலி.12:18-19)

என்பதே செல்லுதற்குரிய நல்வழி என்று அறிவுறுத்தப்படுகின்றது. போர் வீரர்கள் நிலையாமையை நன்கு அறிந்தவர்களாய் இருந்தமையின், மரணத்திற்கு அஞ்சாமல் போரிட்டனர். இது பற்றியே 'காஞ்சி சான்ற வயவர்' (பதிற்.65:4) என்று பாராட்டப்படுகின்றனர்.

வடக்கிருத்தல்

வாழ்வில் மானக்கேடான சூழ்நிலையில் உண்ணா நோன்பு இருந்து உயிரைத் துறத்தல் மரபு. வாழ்க்கையில் வெறுப்புக் கொண்

டோரும் இத்தகைய தற்கொலை முயற்சியை மேற்கொள்வ துண்டு. உண்ணா நோன்பு கொண்டு உயிர்விடுதலை 'வடக்கிருத்தல்' என்பர்.

வடக்கிருப்பார் தமது இருப்பிடத்தை விட்டு வடதிசையில் சென்று தங்கி, அங்கிருந்து மீளாது உணவின்றி நியமத்துடன் இருந்து யோகப்பயிற்சியால் உயிரை நீப்பர் (புறம்.65,66,214,216,218; அகம்.55). சேரமான் பெருஞ்சேரலாதன் கரிகால் வளவனொடு நிகழ்த்திய வெண்ணிப்போரில் மார்பில் பாய்ந்த வேல் முதுகின் வழியாக ஊடுருவிச் சென்றதனைப் புறப்புண்ணாகக் கருதி வடக்கிருந்து உயிர்விட்ட செய்தியைப் புறநானூற்றில் காண்கிறோம் (புறம்.65:9-11; 66-8). அவன் வடக்கிருந்த செய்தி சான்றோர்க்கு இன்னா இன்னுரையாக இருந்ததாம் சேரலாதன் இறக்கத் துணிந்துவிட்டான் என்ற நிகழ்ச்சி அவர்களுக்குத் துன்பத்தையும், அவன் இறப்பது புறப்புண்பட்டதற்கு நாணியது காரணமாக நேர்ந்தமை அவர்களுக்கு உவப்பையும் தந்ததாம். சான்றோர்களும் அவன் இருக்கும் இடம் வந்து அவனுடன்கூட வடக்கிருந்து மாய்ந்தனராம் (அகம்.55:10-15). கோப்பெருஞ்சோழன் தன் மக்களுடன் போர்தொடுக்க நேர்ந்த அவல நிலைக்கு வருந்தி வடக்கிருந்து உயிர்துறந்தான் என்று தெரியவருகிறது (புறம்.214, 216-219). பாரிமகளிரைப் பார்ப்பாரிடம் ஒப்புவித்தபின் கபிலர் வடக்கிருந்து உயிர்நீத்தார் என்னும் செய்தி இருநூற்று முப்பத்தாறாம் புறப்பாட்டின் அடிக்குறிப்பினால் தெரியவருகிறது.

இறந்தாரை எரித்தலும் புதைத்தலும்

இறந்தோர்களைக் கால் இல்லாத கட்டிலாகிய பாடையில் தூய வெள்ளை ஆடையால் மூடிச் சுடலைக்கு எடுத்துச் சென்றனர் (புறம்.286:4-5). பிணத்தை எரித்தலும், குழிதோண்டிப் புதைத்தலும் தாழியில் மூடிவைத்து அடக்கம் செய்தலும் வழக்கமாயிருந்தது.

உடன்கட்டையேறல்

ஈமத்தீயில் கணவனுடன் அவன் மனைவியும் உயிருடன் உடன்கட்டையேறும் இந்நிகழ்ச்சியைச்சான்றோர் தடுத்து வந்துள்ளனர். இத் தடையையும் மீறிக் கணவனுக்குப் பின்னர் தமக்கு எவ்வகை வாழ்வும் இல்லை என்று கருதிய மங்கையர் சிலர் எரிபுகுந்து உயிர்மாய்ந்தனர். பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு சான்றோர் விலக்கியும் கேளாது கணவனது ஈமத்தீயில் பாயந்து தனது உயிரை விடுகின்றாள்.

'பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கு அரிதாகுகதில்ல; எமக்கு எம்
பெருந்தோட் கணவன் மாயந்தென,
அரும்புஅற அவிழ்ந்த தாமரை
நள்இரும் பொய்கையும் தீயும் ஒரற்றே' (புறம்.246:11-15)

என்பது எரிபுகுமுன் அப்பூதப்பாண்டியன் தேவி சான்றோர்களுக்குக் கூறிய துணிவுரையாகும்.

புதைகுழி

ஒரு பெண் கணவனுடன் காட்டு வழியில் சென்ற காலத்து அவன் உயிர்துறந்துவிட, அப்போது அவள், கணவனுடன் தானும் புதைக்கப் படத் தக்கதாகத் ஈமத் தாழியைப் பெரிதாக வனைந்து தாவேண்டுமென்று குயவனை இரப்பதாகப் புறநானூற்றில் ஒரு செய்தி உள்ளது (புறம்.256). மாய்ந்தோர்களைக் குழி தோண்டிப் புதைத்து, அந்த இடத்தில் மண்ணை மேடாக ஆக்கி; அதன்மேல் கல்லைப் பரப்பி வைப்பர். இவ்வகைப் புதைகுழிகள் 'பதுக்கை' எனப்படும். போரில் மாண்ட மறவர்களை இங்ஙனம் குழிதோண்டிப் புதைப்பது இயல்பாக இருந்தது. புதை குழியின் மேலுள்ள கல்லையும் தெய்வமாகக் கருதி வணங்கி வந்துள்ளனர்(அகம்.35:5-9).

கணவனுடன் உயிர்நீத்தல்

கணவன் மாய்ந்த செய்தி கேட்டவுடனேயே உயிர் நீத்துவிடும் கற்புடைப்பெண்டிரும் இருந்தனர். சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் 'போர்' என்னும் இடத்தில் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியுடன் போர் செய்தனன். இப் போரில் இருவருமே இறந்துவிட்டனர்.அப்பொழுது அம் மன்னரின் உரிமை மகளிர் வந்து அவர்தம் மார்பில் விழுந்து பிணமாயினராம்.

'களம் கொளற்கு உரியோர் இன்றி, தெறுவர,
உடன் வீழ்ந்தன்றால், அமரே; பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி ஆங்கு அமைந்தனரே' (புறம்.62:12-15)

இப் பாடற் பகுதியால் கணவன் இறந்தவுடன் துக்கம் பொறுக்கமாட்டாமல் உயிர் நீக்கும் தலையாய கற்புடைய பெண்களின் நிலையை அறியலாம்.

மகளிரின் கைம்மை நோன்பு

மேற்குறித்த பாடலில் பாசடகு மிசைதல், பனிநீர் மூழ்கல் எனக் குறிக்கப்பட்டன கணவன் மாய்ந்த பின்னும் உயிர் வாழும் கைம்மை மகளிர் ஒழுக்கமாகும். கைம்மை நோற்பார் நெய் தீண்டுவதில்லை. நீர்ச்சோற்றைக் கையால் பிழிந்து கொண்டு உண்பர். எள்துவையலும் புளி சேர்த்து அட்ட வெந்த வேளைக்கீரையும் உடன் சேர்த்துக் கொள்வர். வெறுந்தரையில் பாய் இன்றிப் படுப்பர் (புறம்.246:4-10). இவர்கள் வளை அணிந்துகொள்வதில்லை (புறம்.238:6, 250:4, 253:5). ஆம்பல் அரிசியையும் இவர் உணவாகக் கொள்வது உண்டு (புறம்.248, 250:5; 280:12-13). தமது கூந்தல் மயிரைக் கொய்து களைந்து விடுவர்

(புறம்.250:48). தலைமயிரை நன்றாக மழித்துவிடுவதும் உண்டு (புறம்.261:1). ஆபரணங்கள் எதுவும் அவர்கள் அணிந்து கொள்வதில்லை (புறம்.261:18; 280:140. ஒருவகையான துறவு வாழ்க்கை பெண்களின் கைம்மை நிலையில் பழக்கத்தில் இருந்து வந்தது என்பது மேற் குறித்தவற்றால் போதரும்.

வீரர்க்கு நடுகல் நாட்டல்

போரில் அருஞ்செயல் புரிந்து இறந்துபட்ட பெருவீரர்க்குக் கல் நாட்டிச் சிறப்புச் செய்தனர். மாய்ந்த மறவனது பெயரையும் அவனது செயற்கரிய செயலையும் அந் நடுகல்லில் பொறித்து நாட்டினர். நடுகல் ஒரு மனிதனைப் போன்ற பெருவடிவில் அமைந்திருந்தது. மயங்கு இருளில் ஒரு யானையானது நடுகல்லை ஆள் என்று கருதிக் காலால் உதைத்து, நகம் சிதைந்துபோன செய்தியை அகநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிப்பதால் (365:1-6) இது புலப்படும். இக் கற்கள் பெரும்பாலும் மக்கள் நடமாடும் வழிகளை யடுத்தே நாட்டப் பெற்றிருந்தன (அகம்.67:9-11; 131:10-12; 179:7-8). வீரர்கள் தங்கள் அம்பை இக் கற்களில் தீட்டிக்கொள்வதும் உண்டு. இதனால் அக்கற்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் சிதையவும் நேர்ந்தன. இதனால் அவ்வழிச் செல்வோர்க்குக் கற்களிலுள்ள செய்தியைப் படித்துணர்வதற்குக் கூர்ந்து நோக்கவேண்டிய தாயிருந்தது. இவ்வாறு நோக்குதலில் தளர்ச்சியுற்ற புதியோர் அதனை விடுத்து நீங்கினர்.

''கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென,
மருங்குல் நுணுகிய பேஎம் முதிர் நடுகல்,
பெயர்பயம் படரத் தோன்று குயில் எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்
ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்' (அகம். 297:6-10)

எனவரும் பாடற்பகுதியால் மேலே குறித்த செய்தி தெளிவாகும்.

வீரர்க்குரிய நடுகல்லை மக்கள் தெய்வமாகக் கருதி வழிபட்டனர். இது பண்டைத் தமிழ் மக்களின் வீர வழிபாட்டை உணர்த்தும் சின்னமாகும்.

'செல்லும் தேசத்து, பெயர் மருங்கு அறிமார்;
கல் எறிந்து, எழுதிய நல்அரை மராஅத்த
கடவுள் ஓங்கிய காடுஏசு கவலை' (மலைபடு.394-396)

இவ்வடிகளுக்குக் 'கல்லை இடந்து கொண்டு அதனிடத்தே இன்னவாறே பொருதுபட்ட இன்னான் என்று அவன் பெயரை உலகம் அறிவதற்கு எழுதிய கடவுள்' என்றும், 'நல்ல அரையினையுடைய மராஅத்திடத்தனவாகிய கடவுள் என்றது மராமரத்தின் நிழலிலே நட்டகல் என்றவாறு' என்றும், 'அக்கடவுளின் தெய்வத்தன்மைமிக்க தன் கொடுமையால் பிற காடுகளை இகழும் பல வழிகளில்' என்றும்,

நச்சினார்க்கினியர் தரும் பொருளும் நடுகல் கடவுளதாதலை நன்கு விளக்கும்.

பாறைகளில் பொறித்தல்

கற்களைப் பிளந்து கொண்டுவந்து நாட்டுதலேயன்றி நிலையாக பாறைகளின் மேலேயே வீரனின் உருவம் சமைத்து அவனுடைய பெயரையும், புகழையும் பொறித்தலும் உண்டு. இதனை,

'தறுகணாளர் நல்இசை நிறுமார்,
பிடி மடிந்தன்ன குறும்பொறை மருங்கின்,
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல்இடம் குயிற பல்பெயர் மண்ணி
நறவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண்டு ஆர்ப்பச் சூட்டி, கழற்கால்
இளையர் பதிப்பெயரும் அருஞ்சுரம்'

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியில் (269:5-13) காணலாம். நடுகல்லை வழிபடும் முறைகளும் அகப்புறப்பாடல்களில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன.

நடுகல் வழிபாடு

நடுகல்லுக்கு நன்னீர் கொண்டு நீராட்டுவிக்கின்றனர் (புறம். 329:3; அகம்.269:8). மஞ்சளை அதன்மேல் பூசுகின்றனர் (அகம்.269:6). அதிரல்பூ (அகம்.229:2-3), கரந்தைப்பூ (புறம்.261:13), வேங்கைப்பூ (புறம்.265:2-4), செந்நிறப்பூக்கள் (புறம். 264:2) ஆகியவற்றால் ஆகிய கண்ணி, மாலை ஆகியவற்றைச் சாத்துகின்றனர். (கண்ணி: அகம்.343:6; புறம். 264:2; மாலை:புறம்.265:3-4). கல்லின் மேலாகத் துணியாலாகிய பந்தரும் இடுகின்றனர் (புறம்.260:28). மயிற்பீலியும் சூட்டுகின்றனர் (அகம்.35:8; 67:10; 131:11, புறம்.232:3; 260:26; 264:31). வேலாயுதத்தை நடுகல்லின் பக்கலில் ஊன்றி, அதனோடு பரிசையையும் உடன் வைக்கின்றனர் (அகம்.67:11, 131:12; பட்டினப்.79-80). நறுமணமுள்ள தூபம் புகைக்கப்படுகின்றது (புறம்.329:4). துடியையும் முழக்குகின்றனர் (அகம்.35:8). தோப்பிக்கள்ளும் இல்லில் அடும் பிற கள் வகைகளும், நாரால் அரித்தெடுக்கப்படும் மதுவகையும் ஆன பலதிறப்பட்ட கள் வகைகள் படைக்கப்படுகின்றன (அகம்.35:9; 131:12; புறம்.232:4; 329:1-2). வெள்ளாட்டைப் பலியாகக் கொடுக்கின்றனர் (அகம்.35:9). இவற்றால் இந் நடுகல் வழிபாட்டு முறை பிதிரர்க்குச் செய்யும் வழிபாட்டைப் பெரிதும் ஒத்துள்ளமை காணலாம்.

இறந்தார் பொருட்டுப் பிண்டம் வைத்தல்

இறந்த கணவன்மார்க்கு அவன் காதலிமார் புல்லின்மேல் பிண்டம் வைத்து வழிபட்டனர் (புறம்.234, 249). காதலி பிண்டம்

வைத்தலேயன்றி, இழிபிறப்பாளனாகிய புலையனும் புல்லின்மேல் கள்ளும் பிண்டமும் வைத்து இறந்தார்க்கு வழிபாடு செய்தல் மரபாக இருந்தது(புறம்.363:10-18).

பெற்றோர்க்கு நீர்க்கடன் செய்தல்

மடிந்த தாய்தந்தையர்க்குப் புதல்வன் நீர்க்கடன் ஆற்றுதல் உண்டு. முன்னையோர்க்கு நீர்க்கடன் செய்தலுக்கும் புதல்வர்ப்பேறு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. போர்த்தொடங்குமுன் தென்புலம் வாழ்கின்றவராரகிய பிதிரர்க்குக் கடன் செலுத்தும் புதல்வரைப் பெறாதார் அப்பால் செல்லுமாறு எச்சரிக்கப்படுகின்றனர் (புறம்.9:3-5). கோப்பெருஞ்சோழன், தன்னுடன் வடக்கிருக்க வந்த பொத்தியாரை மகப்பெறாத காரணத்தால் விலக்கிவிடுகிறான். இப் பொத்தியார் தமக்கு மகன் பிறந்த பின்னர் அங்கு வந்து வடக்கிருந்தார் என்று கூறப் பட்டிருக்கிறது (புறம்.222,223).

'துறக்கம் எய்திய தொய்யா நல்இசை
முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
கூளிச்சுற்றம் குழீஇ இருந்தாங்கு' (அகம். 233:7-10)

இப்பாடற்பகுதியில் வரும் செய்தியாவது:

துறக்கம் சென்ற தமது முன்னோர்க்கு உதியஞ் சேரலாதன் கடமை செய்த காலத்து அவன் இட்ட பலிப்பிண்டத்தைப் பெறுவதற்குக் குறியவும் நெடியவுமான பேய்க்கூட்டங்கள் வந்து சேர்ந்தனவாம். அப்பொழுது சேரலாதன் பெருஞ்சோறும் வழங்கினானாம்.

மனைவியோடு தவம் இயற்றுதல்

உலகில் நிலைபெற்றுள்ள பசி, பிணி, மூப்பு, இறப்பு முதலியவற்றை உணர்ந்தோர் பேரின்பத்தையடையும் வழிகளில் நாட்டம் செலுத்தினர். முதுமைக் காலத்தில் தமது மனைவியோடு சென்று துறவிகளிடம் அறநெறி கேட்டு வானப்பிரத்த நிலையில் வாழ்ந்தவரும் உண்டு.

'உடன்உறை வாழ்க்கைக்கு உதவி உறையும்
கடவுளர்கண் தங்கினேன்' (கலி.93:6-7)

பொய்யற்ற வேள்வியால், புரையோரைப் படர்நதநீ
மை அற்ற படிவத்தான் மறுத்தரல் ஒல்வதோ?' (கலி.15:14-15)

எனவரும் பாடற்பகுதிகளால், 'உடன் உறை வாழ்க்கை' என்பதும், 'மை அற்ற படிவம்' என்பதும், மனைவியோடு உடன் உறைந்து விரதம் காக்கும் ஒழுக்கத்தைக் குறிப்பதாகும்.

உலக வாழ்க்கையில் இணைபிரியாது இன்புற்று வாழ்ந்த கணவனும் மனைவியும் தங்களது காம இச்சை நீங்கிய முதுமையில்

வீட்டின்பத்தை நாடி இவ்வகை விரதத்தை மேற்கொள்ளுதல் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. தொல்காப்பியரும் கற்பு வாழ்க்கையின் முடிந்த பயனாக மனைவியுடனும் நீக்கமுடியாத மக்கள் சுற்றத்தோடும் தவம் செய்யும் நிலையைக் குறிப்பிடுகின்றார்.

'காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

(தொல்.பொருள்.கற்பு.51)

இங்கே 'சிறந்தது பயிற்றல்' என்பது அறம்,பொருள், இன்பத்தினும் சிறந்த வீட்டின்பத்திற்குக் காரணமான தவமுயற்சியைக் குறிப்பதாகும்.

துறவு வாழ்க்கை

மனைவி மக்களைத் துறந்து தவநெறிச் செல்லுதலும் உண்டு. சுற்றத்தோடு கூடி வாழும் இல்வாழ்க்கையே துறவு நெறிக்குச் செல்ல ஒட்டாமல் தடுக்கும் தடையாகக் கருதினாரும் உளர்.

'அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,
ஓடி உய்தலும் கூடும்மன்
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே'

என்பது ஓரேருழவரின் (புறம்.193) உணர்ச்சியுரை.

உலகிலுள்ள நிலையாமையையும் வாழ்க்கையில் நேரும் பல துன்பங்களையும் எடுத்துக்காட்டி வீட்டின்பத்தைப் பெற முயல்வதற்கு வேண்டுவன செய்யுமாறு பெரியோர்கள் அறிவுறுத்தி வந்தனர்.

'இன்னாது அம்ம இவ்வுலகம்
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே'

(புறம்.194:6-7)

என்பது இவ்வகை ஓர் அறிவுரை.

கடல் சூழ்ந்த உலகெல்லாம் ஆண்ட மன்னரும் -கடைசியில் புறங்காட்டைச் சேர்ந்துவிட்டார்கள். அவர்களது நாடும் பிறர்க்குரியதாயிற்று. இவ்வாறு மாய்ந்தார் திரை ஒதுக்கும் மணலினும் பலராவர். உலகில் உடம்பொடு நிலையாக வாழும் உயிர் எதுவும் இல்லை ஆதலால் உலகப்பற்றை முற்றும் துறந்து வீட்டின்பத்தை நாட வேண்டும் என்று ஐயாதிச் சிறுவெண்டேரையார் (புறம்.363) ஒரு மன்னனுக்கு எடுத்துரைக்கின்றார். இதனால் இல்லறம் துறந்து வாழும் துறவு வாழ்க்கையும் தமிழகத்தில் இருந்தது என்பதை உணரலாம்.

இளமையில் மங்கையர் மனத்தைப் பிணிக்கும் பேரெழில் வாய்ந்து இல்லறத்தை நல்லறமாக்கிய மாந்தரும் தம் வாழ்வின் பிற்பகுதியில் காட்டில் உறைந்து நோன்பு கொண்டு, சடை தாங்கி, அருவியாடி, தீ வேட்டுத் துறவியாக வாழ்ந்த நிகழ்ச்சிகளையும் புறநானூற்றில் காண்கிறோம் (புறம்.251:252).

உலக நிலையாமையை உணர்ந்து, உலகில் நல்லது செய்து வாழ்தல் வேண்டும் என நரிவெரூஉத்தலையார் தரும் அறிவுரை சமுதாயத்திற்கு நல்கும் உயர்ந்த குறிக்கோளாகும்.

'பல்சான்றீரே! பல்சான்றீரே!
கயல்முள் அன்ன நரை முதிர் திரை கவுள்,
பயன் இல் மூப்பின், பல்சான்றீரே!
கணிச்சிக் கூர்மபடைக் கருந்திறல் ஒருவன்
பிணிக்கும்காலை இரங்குவிர் மாதோ;
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்
நல் ஆற்றுப் படூஉம் நெறியும்மார் அதுவே' (புறம்.195).

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் தமிழ்ப்பணிகள்

பி.விருத்தாசலம்

நாட்டு மக்களால் 'நாட்டாரையா' என்று அன்புடனும் பெருமையுடனும் அழைக்கப் பெற்ற நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட செந்தமிழ்ச் சான்றோர்களுள் தலைசிறந்த ஒருவர் ஆவார். கரும்பும் நெல்லும் காடுபோல் விளையும் கழனிகளைக் கொண்ட காவிரி நாடு கல்விக்கும் நுண்கலைகளுக்கும் பெயர்பெற்ற நாடாகும். அந்தக் காவிரி நாடாகிய சோழ வளநாட்டில் தஞ்சாவூருக்கு வடமேற்கே 18 கி.மீட்டர் தொலைவில் நடுக்காவிரி என்னும் சிற்றூர் உள்ளது. காவிரியின் கிளைநதிகளுள் ஒன்றாகிய குடமுருட்டி என்னும் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள நடுக்காவிரியில் முத்துச்சாமி நாட்டார் தையலம்மாள் என்னும் சான்றோர்களுக்கு அருமருந்தன்ன மைந்தராகத் தாரண ஆண்டு சித்திரைத் திங்கள் இரண்டாம் நாளில் (12-4-1884) பிறந்த வேங்கடசாமி நாட்டார் அவர்கள் அறுபது ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்து

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே'

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் 28.3.1944இல் தம் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு பெற்றார்கள்.

ந.மு.வேங்கடசாமி நாட்டார் (ந.மு.வே.) அவர்களுடைய நூற்றாண்டு விழா 1984ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இரண்டாவது வாரத்தில் ந.மு.வே. பிறந்த நடுக்காவிரியிலும், ந.மு.வே. கல்வித் தொண்டு செய்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும் சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. ந.மு.வே. நூற்றாண்டு விழாக்குழுவும், தமிழக அரசும் இணைந்து அவ்விழாக்களைச் சிறப்புற நடத்தின. அவ்விழாவில் ந.மு.வே. பெயரால் கல்லூரி ஒன்று நிறுவ வேண்டும் எனவும், தஞ்சாவூரில் அன்னாரது திருவுருவச் சிலை ஒன்று நாட்ட வேண்டும் எனவும், அன்னார் எழுதிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து நூல்களாக வெளியிட வேண்டும் எனவும் நூற்றாண்டு விழாக்குழு முடிவு செய்திருந்தது. ஆனால், அம்மூன்று திட்டங்களுமே அப்போது நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் நிறைவேற்றப் பெறவில்லை. ஆயினும், ந.மு.வே. எழுதிய கட்டுரைகளில் 'தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ்' ஆகிய இதழ்களில் வெளிவந்தவற்றைத் தட்டச்சு செய்து தொகுக்கும் பணியை இக்கட்டுரை ஆசிரியர் செம்மையாகச் செய்து முடித்துள்ளார்.[1]

---

1. 1984இல் உருவான இத்திட்டப்பணி தமிழ் வளர்ச்சித் துறையின் நிதிஉதவி பெற்று ந.மு.வேங்கடசாமி நாட்டார் கட்டுரைகள்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்வி அறப்பணிக்கழகம், தஞ்சாவூர். 1994.

மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்காலத்தில் **பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம்** என்னும் மூன்று தேர்வுகளை நடத்தி வந்தது. இம்மூன்று தேர்வுகளுமே இரண்டிரண்டு ஆண்டுகள் படித்துப் புலமை எய்தி எழுத வேண்டிய தேர்வுகள். இவ்வாறு ஆறு ஆண்டுகள் படித்துத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெறவேண்டிய அம்மூன்று தேர்வுகளையும் மூன்றே ஆண்டுகளில் முறையே 1905, 1906, 1907ஆம் ஆண்டுகளில் எழுதித் தேர்ச்சி பெற்ற ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரை தேவர் அவர்கள் பொற்பதக்கமும் தங்கத்தோடாவும் (தோளில் அணியும் அணி) அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள். அன்று முதல் ந.மு.வே. அவர்கள் பண்டிதர் என்னும் பட்டத்துக்கு உரிமை உடையவர் ஆனார். தமிழ்ப்புலமையின் பொருட்டு முதன்முதலாக ஏற்படுத்தப் பெற்ற, 'முத்தேர்வும் மூவாண்டில் முதன்மையினில் முற்றுவித்த'மையால் நாட்டாரின் புகழ் நாடெங்கும் விரைந்து பரவுவதாயிற்று.

பண்டித ந.மு.வே அவர்கள் பண்டிதர் பட்டம் பெற்ற பின்பு ஆசிரியர் பணிசெய்ய விரும்பினார்கள். அதனால், கோவையில் உள்ள செயிண்ட் மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் சில திங்கள்கள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்கள்; திருச்சியில் உள்ள எஸ்.பி.ஜி. கல்லூரியில் (பிசப் ஈபர் கல்லூரி) முதலில் 21.7.1908 முதல் 7.12.1908 முடியவும், பின்னர் 15.1.1910 முதல் 31.5.1933 முடியவும் ஆக இருபத்து மூன்று ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்கள்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 16.8.1933 முதல் 30.6.1940 முடிய ஏழு ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து தம் 56ஆம் வயதில் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்கள்; கரந்தைப் புலவர் கல்லூரியின் 2.7.1941 முதல் 28.3.1944 முடிய ஊதியம் எதுவும் பெறாமல் **மதிப்பியல் முதல்வராகப்** (Honorary principal) பணிபுரிந்தார்கள். இவ்வாறு ந.மு.வே அவர்கள் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் தமிழ்க்கல்லூரியிலும் முறையே தமிழாசிரியராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பொறுப்பேற்று முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மிகச் சிறந்த முறையில் மாணாக்கர்களுக்குத் தமிழ் இலக்கணம், இலக்கியம், தமிழ்நாட்டு வரலாறு, தமிழ்ப் புலவர்கள் வரலாறு, தமிழ் நாகரிகம், பண்பாடு முதலிய பாடங்களை எல்லாம் முறையாகவும் நிறைவாகவும் கற்பித்து மாணாக்கர் மனங்கவர்ந்தவராக விளங்கினார்கள்.

இவ்வாறு ந.மு.வே அவர்கள் மாணாக்கர்களுக்குப் பாடம் கற்பித்தலுடன் நில்லாது கரந்தைத் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, திருச்சிராப்பள்ளி சைவ சித்தாந்த சபை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச்

சார்புடைய சங்கம், சைவ சித்தாந்த மகா சமாஜம், குழித்தலைக் கம்பர் செந்தமிழ்க் கழகம், தென்காசித் திருவள்ளுவர் கழகம், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் போன்ற தமிழ்க் கழகங்களுக்குச் சென்று அவை நடத்திய ஆண்டு விழாக்களிலும், சிறப்பு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுத் தமிழ் மொழியில் உள்ள தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், தேவாரத் திருமுறைகள், திருவாசகம், திருவருட்பா முதலியவற்றின் அருமை பெருமைகளை யெல்லாம் வெள்ளம் போன்றும், குற்றாலத்து அருவிபோன்றும் தங்குதடையற்ற தமிழ் நடையிலும் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையிலும் தேனினும் இனிய தீங்குரலும் எடுத்துரைத்துச் சொற்பொழிவாற்றுதலையும் மேற்கொண்டு வருவாராயினர். ஆகவே, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 24.12.1940இல் சென்னையில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில் ந.மு.வே அவர்களின் நாவன்மையையும் தமிழ்த் தொண்டையும் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் அவர்களுக்கு நாவலர் என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

சொல்லின் செல்வர் என்னும் கட்டுரையில் ஞானியார் அடிகள் சொல்வன்மை உடையவர் என்பதை விளக்க வந்த ந.மு.வே அவர்கள் சொல்வன்மை என்றால் என்ன என்பது பற்றிக் கூறும் விளக்கம் மிக அருமையானது.

'சொல்வன்மை என்பது என்ன? கற்க வேண்டும் நூல்கள் பலவற்றையும் கசடறக் கற்றுணர்ந்தோர் தாம் உணர்ந்த அரிய பொருள்களையும் கேட்போர் மனங்கொள்ளுமாறு எளியவாகச் சொல்லுதல்; சிறந்த பயனுள்ளவற்றைச் சுருக்கமும் விளக்கமும் இனிமையும் பொருந்த வழுவிலவாகச் சொல்லுதல்; பருவம், நிலை, கல்வி, ஒழுக்கம், செல்வம் முதலியவற்றால் தமக்கும் கேட்போர்க்கும் உளவாய தகுதி வேறுபாடுகளை அறிந்து, நிரல்படக் கோத்துச் சொல்லுதல்; கூறும் பொருளுக்கேற்ப எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேறுபாடமையவும், மெய்ப்பாடு தோன்றவும் சொல்லுதல்; நிமிர்ந்த நிலையும், மலர்ந்த முகமும், தெளிந்த குரலும் உடையவராய்த் தடுமாற்றமின்றிச் சொல்லுதல் என்றின்னோரன்ன பண்புகளின் தொகுதியே சொல்வன்மை எனப்படும்.'

சொல்வன்மை என்பதற்கு ந.மு.வே கூறிய விளக்கம் அனைத்தும் அவருடைய சொற்பொழிவுகளுக்கே முழுதும் பொருந்துவனவாகும். சொல்வன்மை உடையவர்களுக்கே நாவலர் பட்டம் வழங்கிச் சிறப்பிப்பது தமிழ்நாட்டு மரபாகும். அந்த வகையில் நாவலர் என்னும் பட்டம் ந.மு.வே அவர்களுக்கு முற்றிலும் பொருந்தக் கூடிய பட்டமேயாகும்.

தமிழ்நாட்டு மக்களுள் கள்ளர், மறவர், அகம்படியர் என்னும் முக்குலத்தோரில் கள்ளர் மரபினருக்கு ஆயிரத்து முந்நூற்றுக்கும் மேற்பட்ட பட்டப்பெயர்கள் வழங்கப் பெறுகின்றன. அவற்றுள் நாட்டார் என்பதும் ஒரு பட்டப் பெயராகும். நம்முடைய வேங்கடசாமி பெருந்தகையார் அவர்களும் நாட்டார் என்னும் பட்டப்பெயர் உடையவர். இவர் அறிவாலும் பண்பாலும் மேம்பட்டு விளங்கியமையின் **மதிப்புக்குரிய தலைவர் என்பதைச் சுட்டும் ஐயா** என்னும் விளிப்பெயரையும் சேர்த்து இவரை 'நாட்டாரையா' என்று நாட்டு மக்களும் மாணாக்கர்களும் அன்புடன் அழைப்பார் ஆயினர். எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் மதிப்புக்குரிய தலைவர்களையெல்லாம் இயற்பெயரால் சுட்டாது அவர்கள் பிறந்த சாதிக்குரிய பட்டப் பெயர்களால் சுட்டுவது மக்கள் வழக்காகும்.

நாவலர் ந.மு.வே அவர்களின் தமிழ்ப்பணிகளை நான்கு வகையாகப் பகுத்துக் கொள்ளலாம். அவை பின்வருமாறு:-

1. திருவருட் கல்லூரி என்னும் பெயரில் கல்லூரி ஒன்று நிறுவப் பாடுபட்டமை.
2. தஞ்சாவூரில் தமிழ்ப்பல்லைக்கழகம் உருவாக்கம் பெறுவதற்குப் பாடுபட்டமை.
3. தமிழ் இலக்கியங்களைக் கருவியாகக் கொண்டு சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியமை.
4. வரலாற்று நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியமை.

திருவருட் கல்லூரியும்,
நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரியும்

ந.மு.வே அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வுக்குப் படித்தபோது கல்லூரிகளில் சேர்ந்து முறையாகப் பயின்றவர் அல்லர்; ஆசிரியர் எவருடைய உதவியும் இன்றித் தாமாகவே அரும்பாடுபட்டுப் படித்தவர். ஆதலால், ந.மு.வே அவர்களுக்குத் **'தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்'** என்னும் பெருமையும் உண்டு. இப்படி நாம் பெருமையோடு கூறினாலும், தாம் இலக்கண இலக்கியங்களைத் தனியே அமர்ந்து படித்தபோது, தமக்குத் தோன்றிய ஐயந்திரிபுக்களைத் அகற்றிக் கொள்ள நாட்டாரையா எவ்வளவு துயரம் அடைந்திருப்பார் என்பதை நாம் ஓரளவு உய்த்துணர முடிகிறது. சான்றோர்கள் அனைவரும் தம்மைப் போலவே பிறரும் வாழ வேண்டும் என்று கருதும் இயல்பினர்; **யாம்பெற்ற பேறு பெறுக இவ்வையகம்** என்று விரும்பித் தொண்டு செய்யும் மனப்பாங்கு உடையவர்; இன்னும் ஒருபடி மேலே போய் **நாம்பட்ட துன்பம் பகைவரும் படக்கூடாது** என்று கருதித் தொண்டு செய்வதும் அவருடைய சால்புடைமைக்கு ஏற்புடையதே. தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியராகிய ந.மு.வே அவர்கள் தாம்பட்ட துயரம் பிறரும்

படக்கூடாது என்று விரும்பிக் கல்லூரி ஒன்று நிறுவப் பாடுபட்டுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ந.மு.வே அவர்கள் தமது முப்பத்தேழாம் வயதில், அஃதாவது 1921-ஆம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளி அருகே இப்போது **சாமிநாதபுரம்** என்றும் **மோசஸ்புரம்** என்றும் கூறப்பெறும் சிற்றூரின் மேற்புறத்தில் **திருவருட் கல்லூரி** என்னும் பெயரில் கல்லூரி ஒன்று நிறுவ விரும்பினார்கள். இப்போது திருக்காட்டுப்பள்ளி சிவசாமி ஐயர் மேனிலைப்பள்ளிக்குச் சொந்தமாக உள்ள சிவசாமி ஐயர் பண்ணையே அந்த இடமாகும். நாற்பது ஏக்கர் பரப்பளவுள்ள அந்த இடம் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாகும். அந்நிலத்தைக் கல்லூரிக்குத் தரும்படி தஞ்சை வட்டாட்சியரிடம் ந.மு.வே அவர்கள் வேண்டிக் கொண்டுள்ளார்கள். இதன்பொருட்டுத் தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்களும் ந.மு.வே அவர்களுக்கு உதவி செய்துள்ளார்கள். அந்தக் காலகட்டத்தில் ந.மு.வே அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தமிழ் உணர்வு படைத்த செல்வர்களிடம் திருவருட் கல்லூரி நிறுவுவதற்குத் தேவையான பணத்தை நன்கொடை வழியே திரட்ட முயற்சி செய்துள்ளார்கள். செல்வர்கள் பலரும் தமது தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப ரூபாய் 25,50,100,200,250 என்று நன்கொடை தர முன்வந்த உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிட்டுள்ளார்கள். இதில் ஒரு பெரிய வியப்பு என்றவென்றால் **கடவுள் மறுப்புக் கொள்கையாளரும் தமிழ்நாட்டில் தன்மானப் பேரியக்கத்தைத் தோற்றுவித்தவரும் ஆகிய தந்தை பெரியார் அவர்கள் திருவருட் கல்லூரி நிறுவ ரூ.50/- நன்கொடை தர ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டுள்ளார்** என்பதாகும். திருவருட் கல்லூரியைத் தொடங்க வேண்டியதன் இன்றியமையாமையைக் குறித்து ந.மு.வே அவர்கள் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு.

திருவருள் துணை.

திருவருட் கல்லூரி

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

கடவுளின் திருவருளால் மக்கட் பிறப்பெய்தினார் யாவரும் பிறப்பின் பயனை அடைவதற்கு முயலவேண்டும். அன்பு, அருள், வாய்மை, ஒப்புரவு முதலிய குணங்களுடையோராய்ப் பிறர்க்குப் பயனுண்டாக வாழ்வோரே பிறப்பின் பயன் எய்துவோராவர். எல்லாவற்றிற்கும் கருவியாக இருப்பது கல்வி. ஆதலின், மாந்தரனைவரும் ஒருதலையாகக் கல்வி கற்கவே வேண்டும். மிகப் பழைய காலந்தொட்டு இத்தேயம் கல்வியில் மேன்மையடைந்திருந்தது. கல்வியிற் சிறந்த பெரியோர்கள் அளவிலர் இருந்து வந்தனர்.

முற்காலத்திருந்த ஆசிரியர்களும் மாணவர்களும் குணவொழுக்கங்களில் மிகமேம்பட்டு விளங்கினார்கள். இந்நாட்டில் இக்காலத்திலிருந்து வரும் கல்விமுறை பெரிதும் பிழைபாடுடையதென்று அறிஞர் பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. தமது தாய்மொழியைக் கைவிடுவது வேற்று நாட்டுமொழியாற் கல்வி கற்றுவரும் புதுமை இவ்விந்திய நாட்டில் மாத்திரமே காணப்படுகிறது. பலகலையுணர்வு பெற்று அரிய செயல்கள் செய்தற் பொருட்டன்றோ கல்வி கற்பது? இப்பொழுதோ மாணவர்கள் வெறும் மொழிப் பயிற்சியின் பொருட்டே தமது கட்டிளமைப் பருவமெல்லாம் செலவிட்டுக்கலையுணர்வு பெறுதலின்றி உடலுரமும் குன்றுகின்றனர். மாணவர்களுக்கு இருக்க வேண்டிய நற்குண நல்லொழுக்கங்கள் அருகி வந்து கொண்டிருக்கின்றன. மதவுணர்வு சிறிதும் பெறுதலின்மையால் அவர்கட்குத் தெய்வ நம்பிக்கையும் குன்றிவிட்டது. ஆசிரிய மாணவர்களின் சம்பந்தம் பெரும்பான்மை உருக்குலைந்து நிற்கிறது. இவ்வாறாக நிகழ்ந்துள்ள குறைபாடுகளுக்கு ஓர் எல்லையில்லை. இந்நிலைமையில் வறிதே காலந்தாழ்த்தாது நம் நாட்டுக் கல்வி முறையைத் திருத்துவது இந்திய நன்மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ள கடனாகும்.

இந்தியாவுள்ளும் தமிழ் நாடொழிந்த பிற இடங்களிலுள்ளவர்கள் தத்தம் மொழிச்சார்பாகப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும், தம் தாய்மொழியாற் கல்வியை வளர்த்து நாட்டின் நலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும் ஊக்கத்துடன் உழைக்க முன் வந்திருக்கின்றனர். வடநாட்டிலே பழங்கால முறைப்படி கல்வி கற்பித்து மாணவர்களை அறிவொழுக்கங்களிலும், மதப்பற்று முதலியவைகளிலும் மேன்மையுடையவர்களாக்கும் நோக்கத்துடன் 'குருகுலம்' போன்ற பல கல்லூரிகள் நடைபெற்று வருகின்றன. நமது தமிழ்நாட்டிலோ அத்தகைய கல்லூரி ஒன்றும் இல்லாதிருப்பதேயன்றி அதனை நிறுவ வேண்டுமென்னும் முயற்சியும் இதுகாறும் தோன்றவில்லை. தமிழ் மொழியானது பழைய நாளில் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் சங்கங்களினாலே வளர்க்கப்பட்டு வந்தது. முனிவரும் மன்னரும் முதலாயினாரெல்லாம் தமிழ்ப் புலவர்களாக விளங்கினார்கள்; முடியுடை வேந்தர்களும் சிற்றரசர்களும் வள்ளல்களும் தமிழ்மொழியைப் பொன்னேபோற் போற்றி ஆதரித்து வந்தனர். ஒருகாலத்தில் தமிழ்மொழி இமய முதல் குமரிகாறும் தனிச்செங்கோல் நடத்தி வந்தது. அத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியானது தற்காலத்தில் கற்பாரும் ஆதரிப்பாருமின்றி மெலிவுற்றுத் தன் தூய தன்மையையும் இழந்து வருகின்றது, தமிழ்மக்களும் தம் பண்டைப் பெருமையிற் சுருங்கி நிற்கின்றனர். எனினும், தமிழ் நாட்டிலுள்ள செல்வர்களுள்ளும் புலவர்களுள்ளும் பலருக்குத் தமிழ்மொழியை முன்போல் வளம்பெறச் செய்து நாட்டினை மேன்மையுறுவிக்க வேண்டுமென்னும் விருப்பம் இல்லாமற்

போகவில்லை. அப்படியிருந்தும் தமிழ் வளர்ச்சிக்காக ஒரு கல்லூரியேனும் இதுகாறும் நிறுவப்படாமைக்குக் காரணம் தமிழ்ப்பற்றுமிக்குள்ள செல்வர் பாற் சென்று இதனை உருவாக்குதற்கான வழிவகைகளைக்கூறி இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டு நடத்துவதற்குப் புலவர் யாரும் முன்வராத குறையே என நினைக்க வேண்டி இருக்கிறது. இப்பொழுது இந்நாட்டிலுள்ள செல்வர்களும் தமிழ்ப் பற்றுடையோரும் இச்சமயத்தை நழுவவிடாது தாராளமாக உதவி புரிந்து தமிழையும், நாட்டினையும் பேணுதல் வாயிலாகத் தமது புகழை மெய்மையில் நிலை நாட்டுவார்கள் என்று துணிந்தே யான் இவ்வகையான முயற்சியை மேற்கொண்டிருக்கிறேன்.

என் கருத்து:

1. தமிழ் நாட்டின் பல்கலைக் கழகத்துக்கு அடிப்படையான கல்லூரி ஒன்று விரைவில் நிறுவப்படல் வேண்டும்;

2. அக்கல்லூரியின் நோக்கங்கள்:-

 க. தமிழிலுள்ள தொல்காப்பியம் முதலிய சீரிய இலக்கண நூல்களையும், திருக்குறள் முதலிய ஒப்புயர்வற்ற உறுதி நூல்களையும், சங்கத்துச் சான்றோரியற்றிய செழும்பொருட் செந்தமிழிலக்கியங்களையும், பெருங்காப்பியங்களையும், பத்தி ஞானம் கனிந்து பேரின்பப்பயன் அளிக்கவல்ல தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய அருள் நூல்களையும், சமயச்சார்பான வேதாந்த சித்தாந்த சித்தயோக நூல்களையும், பிறவற்றையும் நன்கு கற்கும்படி ஏற்பாடு செய்தல்;

 உ. ஆங்கிலத்திலும் வடமொழி முதலியவற்றிலும் உள்ளனவும், தற்காலத்துக்கு ஏற்றனவுமாகிய பல்வகைக் கலைகளையும் மொழிபெயர்த்தும், தமிழிலே புதிய நூல்களை ஆக்கியும் வெளிப்படுத்தல்;

 ங. இன்றியமையாத பிறமொழிகளையும் ஏற்குமாறு கற்பித்தல்.

 ச. பல மதங்களின் உண்மையான கருத்துக்களையும் நடுவு நிலைமையோடு போதித்துத் தெய்வ பத்தியும், வாய்மை, தூய்மை முதலிய நற்குணங்களும், மக்கள் யாவரிடத்தும் அன்பும், தேசாபிமானமும் உண்டாமாறு செய்தல்;

 ரு. ஓரளவான தொழிற்பயிற்சி நடைபெறுவித்தல்;

 சு. அறிவு வளர்ச்சிக்கான நூல்நிலையம், ஆராய்ச்சி நிலையம் முதலிய அங்கங்களை அமைத்தல்;

என்பனவும்; பிறவும் ஆகல் வேண்டும் என்பதும் ஆம்.

இதனை நிறைவேற்றுதற்குப் பன்னூறாயிரம் உருபாய் வேண்டிய தாயிருக்கும் என்பது யாவரும் அறியக் கூடியதே. தொடக்கத்தில் இத்துணைப் பெரிய காரியம் சாதித்தல் அருமை உடைத்து எனினும், இவைகட்கு அடிப்படையான உண்மைகளை மேற் கொண்டுள்ள கல்லூரி ஒன்றினை விரைவில் நிறுவவேண்டுமென எண்ணி யிருக்கிறேன். இதனை நிறைவேற்றுவதில் எனக்கு ஒருசிறிதும் ஆற்றல் உண்டென்று நினைத்தவனல்லேன். எனினும், இந்நற்காரியத்திற்குத் தேசாபிமானப் பெருஞ்செல்வர்களின் பேரன்புடன் கூடிய பேருதவியும், எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளின் திருவருளும் முன்னின்று நிறைவேற்றும் என உறுதியாகத் துணிந்திருக்கின்றேன்.

குறிப்பு:-

இதற்குப் பொருள் வருவாய்களை உண்டாக்கவும் பொருளைப் பாதுகாக்கவும் வேண்டிய ஆலோசனை கூறுதற்கும், இது நடைபெறுதல் குறித்து, இதன் நோக்கங்களுக்கு உட்பட்ட மற்றுமுள்ள ஆலோசனை கூறுதற்கும், இதன் நடைபேற்று விபரங்களை அவ்வப்பொழுது உலகிற்கு வெளிப்படுத்துதற்கும் ஓர் அறிவிப்புக் கழகம் ஏற்படுத்த லாகும். அக்கழகத்தினர்களின் பெயர் பின்பு வெளிப்படுத்தப் பெறும்.

2. இக்கல்லூரிக்குப் பெரும்பொருள் அளிப்பவர்களின் பெயர் கல்லூரியைச் சார்ந்து என்றும் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

3. இது சம்பந்தமாய்க் கடிதம் எழுதுவோர் கீழ்க்குறிக்கப் பட்டிருப்போர்க்கு எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திருவாளர் உ.க.பஞ்சரத்தினம் பிள்ளை அவர்கள்,
கணபதி எண்போரியம், மலைவாசல், திருச்சி

இந்தக் காலகட்டத்தில் நாட்டாரையா அவர்கள் எஸ்.பி.ஜி. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்; மேலும், ஈளை நோயாலும் துன்புற்று வருந்தினார்கள். ஒரு கல்லூரியில் ஆசிரியராக இருந்து கொண்டு பிறிதொரு கல்லூரியை நிறுவுவதில் உள்ள தொல்லைகளைத் தாமே பட்டுணர்ந்தமையாலும், அரசு புறம்போக்கு நிலத்தைப் பெறமுடியாமல் போனமையாலும் அக்காலத்தில் வ.வே.சு.ஐயர் அவர்கள் சேரன்மாதேவியில் குருகுலத்தை நடத்தி வந்தபோது அதற்கு ஏற்பட்ட சிக்கல்களை எண்ணிப் பாரத்தும் மிகவும் மனம் வருந்திய நிலையில் நாட்டாரையா அவர்கள் கல்லூரி நிறுவும் எண்ணத்தைக் கைவிட்டனராதல் வேண்டும்.

நாட்டார் ஐயா நூற்றாண்டு விழா 1984இல் நடைபெற்றபோது விழாக்குழுச் செயலாளராக நான் பொறுப்பேற்று விழாச் சிறப்புற நடைபெற ஆவன செய்தேன். அப்போதும் திருவருட் கல்லூரியை நிறுவ விரும்பி நான் முயற்சி செய்தேன். அதற்காகக் கட்டப்பெற்ற முதல்

கட்டமே அமைதியாக நடைபெற முடியவில்லை. அதனால் ந.மு.வே. அவர்களுடைய முயற்சி அப்போதைக்கு நின்றுவிட்டது. ஆயினும், நண்பர்கள் சிலரின் ஒத்துழைப்போடு இந்தக் கட்டுரை ஆசிரியர் தஞ்சாவூரில் நாவலர், ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி என்னும் பெயரில் தனித்தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்றை 14.10.92 முதல் நடத்தி வருகின்றார். இக்கல்லூரிக்குப் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இசைவாணை(Recongnition) வழங்கியுள்ளது என்பதையும் மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இப்போது தனித்தமிழ்ப் புலவர் கல்லூரியாக நடைபெறும் கல்லூரி நம்மு ' ய ந.மு.வே. நாட்டார் திருவருள் கல்லூரி மட்டுமே.

'எண்ணி எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப்பெறின்'

என்பது வள்ளுவர் வாக்கு. புலவர் தலைமகனாகிய ந.மு.வே. ஐயா அவர்கள் திருவருட் கல்லூரி நிறுவ வேண்டும் என்று 1921 இல் கண்ட கனவு 71 ஆண்டுகள் கழித்து 1992 இல் நனவாகிவிட்டது என்பதை எண்ணத் தமிழ் அறிஞர்கள் அனைவரும் பெருமைப்படலாம்.

2. தமிழ்ப்பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் 1901 இல் மதுரைத் தமிழ்ச்சங்கமும், 1911 இல் கரந்தைத் தமிழ்ச்சங்கமும் தொடங்கப் பெற்றன. இவை போலவே மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை போன்ற கழகங்கள் தமிழ்நாட்டில் ஆங்காங்கே தோற்றம் பெற்றன. நாவலர் ந.மு.வே., தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார், பெரும்பேராசிரியர் கா.நமச்சிவாய முதலியார் போன்ற தமிழுணர்வுடைய சான்றோர் பலர் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் அல்லது திருச்சிராப்பள்ளியில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்தனர். இது தொடர்பாக ந.மு.வே அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் மேற்கொண்ட முயற்சிகளையும் பற்றிப் பேராசிரியர் உலக ஊழியனார் அவர்கள் **'நாவலர், பண்டித திரு.ந.மு.வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் வாழ்க்கை வரலாறு' என்னும் நூலில் மிக விரிவாக எழுதியுள்ளார். அது பின்வருமாறு

தமிழ்ப்பல்கலைக்கழக முயற்சி:

1925ஆம் ஆண்டு ஆக்ஸ்டு 23ஆம் நாளிலே தஞ்சைக கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்நாட்டு வளர்ச்சி நெறி அமைச்சர் திவான்பகதூர் டி.என்.சிவஞானம் பிள்ளை அவர்களுடைய தலைமையிற்கூடிய ஒரு கூட்டத்தில் கலையறிவு, நாகரிகம், பொருட்டுறை, கைத்தொழில், வேளாண்மை முதலியவைகளில் தம் பழம்பெருமைக்கேற்ப மேம்படுதற் பொருட்டாகத் தமிழர்கட்குத் தனியே ஒரு பல்கலைக்கழகம் நிறுவப் பெறல் வேண்டும் என முடிவு செய்து அம்முயற்சியைத்

தொடர்ந்து நடத்துவதற்கெனப் பன்னிருவர் அடங்கிய கழகம் ஒன்று அமைக்கப் பெற்றது. அக்கழக உறுப்பினருள் நாட்டாரும் ஒருவராவர். பின்பு, அக்கழகம் திருச்சிராப்பள்ளியில் திருவாளர், டி.என்.சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் கூடியது. அப்பொழுது பற்பல கல்லூரித் தலைவர்களும் வேறு சில தக்கவர்களும் அக்கழகத்துக்கு உறுப்பினராகச் சேர்க்கப் பெற்றனர். கழக அமைச்சராகிய திருவாளர்.எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை, பி.ஏ.,எல்.டி., அவர்களால் கழக உறுப்பினர் கட்கும் ஏனையோர்க்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுதல் பற்றிய பல கேள்விகள் அனுப்பப்பட்டு அவர்கள் விடுத்த விடைகளும் தொகுக்கப்பட்டன. பின்னர்த் திருச்சியிலேயே இதன்பொருட்டு மற்றொரு மாநாடும் நடந்தது. பின்பு 1925ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் நாளிற் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றத்தில் (Senate) திருவாளர் டி.வி.சேஷகிரி ஐயர் அவர்களால் தமிழ்நாட்டுக்கென குறைந்தது ஒரு பல்கலைக்கழகமாவது நிறுவப்படல் வேண்டும் எனவும், அதற்கு அரசியலார் உடனே முயற்சி எடுத்துக் கோடல் வேண்டும் எனவும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பெற்று நிறைவேறியது. அதன்பின் அரசியலார், இராமநாதபுரம் அரசர் மாட்சிமிக்க முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் தலைமையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பற்றி ஆய்ந்து முடிவுசெய்ய ஒரு குழுவை நிறுவினர். அக்குழுவின் செயலாளராய் இருந்த சர்.பி.டி.இராசன் அவர்களால் பலருக்கும் கேள்விகள் அனுப்பப்பட்டன. பின்பு அக்குழுவினர் தமிழ் நாட்டின் பலவிடங்களிலும் சென்று நேரிலும் உசாவி அறிந்தார்கள். தமிழ்ப்புலவர் பொருட்டு முந்திய கழகங்களில் உறுப்பினராயிருந்த நாட்டார் தமக்கு அனுப்பப்பட்டிருந்த கேள்விகட்கு விடையெழுதிச் செயலாளர்க்கு அனுப்பியதோடு, 8.4.1927ல் திருச்சிக்கு வந்த அக்குழுவினர் வினாக்கட்கு எழுதிவிடுத்தனவும் நேரில் கூறியனவும் பின்னுள்ளவையாகும்.

தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் இன்றியமையாமை:

தமிழ் நாடானது மற்றைய நாடுகளுடன் ஒத்துப் பார்க்குமிடத்தில் இப்பொழுது பொருள்நிலை, மன்பதை ஒற்றுமை முதலியவற்றில் மிகவும் பிற்போக்கடைந்துளது. தமிழ் நாட்டிலே இரண்டொரு வகுப்பினர் தவிர மற்றைய பெரும்பாலோர் கல்வியிலும் மிகுந்த கீழ்நிலையில் இருக்கின்றனர். சில வகுப்பினர் அரசியல், மதம் என்பவற்றில் சிறிதும் உரிமையில்லாதவராய் இருக்கின்றனர். அரசியல் உரிமை ஏற்பட்டு வருகின்ற இந்நாளில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தற்குரிய சொல்லுரிமையாளர்களில் நான்கில் ஒரு பங்கினராவது தங்கள் சொல்லுரிமையின் கருத்தை அறிந்திருப்பார்கள் என எண்ண இடமில்லை. கற்றவர்களுக்குள்ளும் வேலையில்லாக் குழப்பம் மிகுந்து வருகின்றது. இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துச் சூழும்போது கல்வியை எளியவர்களும் பெறத்தக்க வகையிலும், கற்றவர்கள் தங்கள் வாழ்க்கையைப் பிறர் உதவியின்றி நடத்தத்

திறமையுள்ளவர்கள் ஆகும் வகையிலும், திருத்தியமைத்துப் பரவச் செய்தற்கு ஒருவந்தம் ஏற்பட்டுள்ளமை புலனாகும். மேலும், கல்வி கற்பது வயிற்றுப் பிழைப்புக்கே என்னும் எண்ணம் மாறி அறிவு வளர்ந்து மக்கட் பிறப்பின் பயனடைவதற்காக என்னும் எண்ணம் ஓங்கும்படியும் கல்வி முறை திருத்தப்பெறல் வேண்டும்.

தமிழ் நாடானது மிகப்பழைய காலத்திலேயே நாகரிகத்திற் சிறந்திருந்ததென்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் பலராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலிய தமிழ் இலக்கியங்களிலிருந்தும், பிற நாட்டிலிருந்து நாடு சுற்றிப் பார்க்கும் வேட்கையில் வந்தோர்களின் குறிப்புகள் முதலியவற்றிலிருந்தும் தமிழர்கள், பழங்காலத்தில் வேளாண்மை, கைத்தொழில், வாணிகம், சிற்பம் முதலியவற்றில் மேன்மையடைந்திருந்த செய்தி நன்கு புலப்படுகிறது. இப்பொழுது கேட்போர் 'முடியாதது, பொய், என்று நினைக்கத் தகுந்த அருமையான மெல்லிய ஆடைகள் அப்பொழுது தமிழரால் நெய்யப்பட்டன. கி.மு.பத்துப் பன்னிரண்டு நூற்றாண்டு களின் முன்பே தமிழர்கள் கடல்வழியாக கிரேக்கர், எகித்தியர் முதலானவர்களோடு வாணிகம் செய்து தமிழ் நாட்டின் செல்வத்தைப் பெருகச் செய்தனர். அக்காலத்தில் அரசியலுள்ளிட்ட எல்லாச் செயல்களும் தமிழ் மூலம் நடைபெற்றமையாலும் தமிழ் வேந்தர்கள் சங்கங்கள் முதலியவற்றின் வாயிலாகத் தமிழைப் போற்றி வளர்த்தமையாலும் தமிழ்மொழி மிக்க திருத்தமும், வளர்ச்சியும் அடைந்திருந்தது. சமயநெறியிலும் தமிழ்நாடு தலைமையுற்றிருந்த தென்பது சைவ வைணவப் பெரியார்கள் ஆசிரியர்கள் என்போரின் தோற்றத்தாலும் தமிழ்நாட்டிலுள்ள எண்ணிறந்த திருக்கோயில்களாலும் வெளிப்படும்.

இப்பொழுது ஆந்திரநாடு தனக்கென ஒரு கழகம் ஏற்படுத்திக் கொண்டுவிட்டது. கேரள நாடும் விரைவில் ஏற்படுத்திக் கொள்ளும் நிலைமையில் உள்ளது. 24.10.1925இல் நடந்த சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட்டுச் சபைக் கூட்டத்தில், காலஞ்சென்ற மதிப்புக்குரிய டி.வி.சேஷகிரி ஐயர் அவர்கள் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஏற்படுத்துவதன் பொருட்டாகத் தீர்மானம் கொண்டு வந்து பேசியபொழுது எடுத்துக் காட்டியவாறு ஆந்திரநாடு, கேரள நாடுகளைவிடத் தமிழ் நாட்டில் கல்லூரிகளின் தொகையும் மாணாக்கர்களின் தொகையும் இரண்டு பங்கிற்கு உள்ளன. இக்காரணங்களால், தமிழ்நாடானது பிறவற்றிலும் முற்படத் தனக்கெனக் கழகம் ஏற்படுத்திக் கொண்டிருப்பின் அது மிகவும் பொருத்தமாக இருக்கும். இப்பொழுது ஆந்திரநாடு வழிகாட்டிய பின்பேனும் 'இதனை நிறைவேற்ற வேண்டியது தமிழ்நாட்டின் இன்றியமையாக் கடமை ஆகும்.

இப்பொழுதுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்தைக் கொண்டே நான் மேலே காட்டிய குறைகளை எல்லாம் நீக்கித் தமிழ் நாட்டிற்கு

நன்மை செய்துவிடலாமெனை நினைப்பது பகற்கனவாகும். அதற்கு அத்தகைய ஆற்றல் இருக்குமாயின் அது இதற்கு முன்பே வெளிப்பட்டிருக்க வேண்டும். சென்னைக் கழகமானது தமிழை எவ்வளவு புறக்கணித்துத் தாழ்த்தியும் அதன் வளர்ச்சியைத் தடுத்தும் வந்திருக்கிறது என்பதனை இப்பொழுது நான் எடுத்துக் காட்டுவது அத்துணை நாகரிகமாயிராது. அன்றியும் தமிழ் நாட்டினர்க்கு 'யாம் தமிழர்' என்ற உணர்ச்சியும் நாட்டுப்பற்றும் உண்டாக்குவதற்குத் தமிழின்பேரால் தனித்த கழகம் ஏற்படுவது இன்றியமையாதது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுவதனால் சென்னைக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தடையுண்டாகுமென்றாவது, இருகழகத்திற்கும் முரண்பாடு உண்டாகுமென்றாவாது நினைக்கக் காரணமில்லை. இரு கழகத்தின் வளர்ச்சிக்கும் வெவ்வேறான நோக்கங்கள் உள்ளன. எல்லா நாடுகட்கும் பொதுவான உயர்ந்த நூலாராய்ச்சிகளும், சட்டத் தேர்வுகளும், பொறிக்கலை, கைத்தொழிற் கல்வி முதலியனவும் சென்னைக் கழகத்தின் நோக்கங்களாக இருத்தல் கூடும்.

தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள்

தமிழ்மொழி, தமிழரின் வரலாறு, நாகரிகம், வினைத்திறம், என்பவற்றின் வளர்ச்சி இதன் தலைமையான நோக்கங்களில் ஒன்றாதல் வேண்டும். இதன் பொருட்டுத் தமிழானது எல்லா வகுப்புகளிலும் கட்டாய முதன் மொழியாக வைக்கப்பெற்று, தமிழ் இலக்கிய இலக்கணங்களும் கல்வெட்டுகளும் அவற்றின் ஆராய்ச்சிகளும் விரிவாகக் கற்பிக்கப் பெறவேண்டும்.

வரலாறு, கணிதம் முதல்ய எல்லாக் கலைகளும் தமிழ் வாயிலாகக் கற்பிக்கப் பெறல்வேண்டும். கற்கும் கால அளவையும், பொருட் செலவையும் சுருங்கச் செய்து கல்வியை மிகுதியாய்ப் பரப்புதற்கு இஃது இன்றியமையாதது. இக்கொள்கையே இக்கழகத்திற்கு உயிர்நிலையாகற்பாலது. கற்பிக்கப்பெற வேண்டிய எல்லாக் கலைகட்கும் இப்பொழுது தமிழில் நூல்கள் இல்லையாயினும் தமிழ் வாயிலாகக் கற்பிப்பது என்னும் கொள்கை உறுதியாகிவிட்டால் மிக விரைவில் நூல்கள் ஏற்பட்டுவிடும். அன்றியும் அதன்பொருட்டு ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமையுடையோர்களைக்கொண்ட ஒரு குழு ஏற்படுத்தி நாலைந்து ஆண்டுகளுக்குள் நூல்கள் எழுதி வெளிப்படுத்துதல் செய்யலாம். இத்தனை ஆண்டுக்குள் எல்லாம் தமிழ் வாயிலாகக் கற்பிப்பது என்று வரையறை செய்துவிட்டு, அது வரையில் ஒவ்வொன்றாகக் கற்பித்து வரலாம். ஆங்கிலத்திலுள்ள கலைகளை யெல்லாம் தமிழில் மொழிபெயர்க்க முடியாது என்றாவது தமிழில் ஏற்ற சொற்கள் இல்லை என்றாவது கூறுதல் சரியன்று. தமிழில் வேண்டிய சொற்கள் உள்ளன. தக்கோர்கள் மொழி பெயர்த்தால் எளிதில் முடியக்கூடும்.

விருப்பப்பாடங்களில் வேளாண்மை, வாணிகம், சிற்பம், கைத்தொழில் என்பவற்றில் யாதேனும் ஒன்று கட்டாயமாக எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

விருப்பப்பாடங்களில் சமயக் கல்வியும், மருத்துவமும் சேர்க்கப் பெறல் வேண்டும். சமயக் கல்விக்குச் சைவத் திருமுறைகளும், வைணவப் பிரபந்தங்களும், சைவசித்தாந்த நூல்களும் ஆராய்ச்சி செய்யப்பெறவும், மருத்துவக்கல்விக்குத் தமிழ்ச்சித்தர் நூல்கள் ஆராயப் பெறவும் வேண்டும்.

கல்வியில்லாத வகுப்பினர்களும் பெண்பாலாரும் கற்பதற்கு மிகுதியான வசதிகள் செய்யப்பெற வேண்டும்.

பிறமொழிகளின் நிலைமை

ஆங்கில மொழியானது தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவெய்திய ஆறாண்டுகள் வரை கட்டாய இரண்டாவது மொழியாக இருக்கலாம். அதன்பின் விருப்பப்பாடமாக அமைதல் வேண்டும். வடமொழியும் விருப்பப்பாடங்களில் ஒன்றாகச் சேர்க்கப் பெறல் வேண்டும். அன்றியும் நாட்டு மொழிப்பட்டத் தேர்வுகட்கு இப்பொழுது போன்று வைத்து நடத்தப்பட வேண்டும். வடமொழியும் கட்டாயப் பாடமாக எல்லா வகுப்புகளிலும் வைப்பதென்பது இயற்கைக்கு ஒத்ததன்று. அது கல்வியை மிகுத்தல் என்னும் நோக்கத்திற்கு மாறாகக் குறைத்தலையே செய்யும். மக்களால் பேசப்படுவதாகவோ, அரசியல் நடவடிக்கைக்குரிய தாகவோ இல்லாத அம்மொழியை அங்ஙனம் வைப்பதற்குக் காரணமும் இல்லை. கட்டாயப்பாடமாக இல்லாததனால் அதன் மதிப்புக்கும், இப்பொழுதுள்ள பயிற்சிக்கும் குறைவு வருதற்கிடமில்லை. மற்றைய திராவிட மொழிகளும் விருப்பப் பாடத்தில் சேர்க்கப்படலாம்.

கழகத்தின் தலைமையிடம்

திருச்சிராப்பள்ளியில் முதல்வகுப்புக் கல்லூரி மூன்றும், இரண்டாவது வகுப்பு மாதர் கல்லூரி ஒன்றும் இருக்கின்றன; முதன்மையான தொழிற்சாலை ஒன்றும் உளது. தமிழ் நாட்டின் நடுவாகவும், நாற்புறமும் போக்குவரவு வசதியமைந்ததாகவும் இந்நகர் உளது. இவ்வளவு பொருத்தம் வேறெந்த இடத்திலும் காணப்பெற இல்லை. முன்பு தமிழ்ச்சங்கம் இருந்தது என்னும் உலகுரையானது மதுரைக்கு இதனைவிட ஏற்றங் கொடுக்கக்கூடும். திருச்சிராப்பள்ளியும் தொன்றுதொட்டு அரசர்களின் தலைமையிடமாகவும், தமிழை வளர்த்த இடமாகவும் இருந்தே வருகிறது; கிறித்தவர்களுக்கும், மகம்மதியர் களுக்கும் முக்கிய இடமாகவும் இருக்கிறது. இக்காரணங்களால் திருச்சிராப்பள்ளியே தலைமையிடமாக நான் கருதுகிறேன்.'

'தமிழ்நாட்டில் உள்ள பலரும் தமிழ்ப்பல்கலைக்கழகம் நிறுவுவதன் இன்றியமையாமையைத் தெரிவித்த பின்னர் அரசியலார்

அதுபற்றி முயற்சி எடுப்பதற்குள் இராசா. சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சிதம்பரத்தில் நிறுவி நடத்திவந்த மீனாட்சி காலேசையும், அதன் உறுப்புகளாக உள்ள கீழ்நாட்டுமொழிப் பண்டிதர் பயிற்சிக் கல்லூரியையும் கீழ்நாட்டு மொழிக் கல்லூரியையும் ஒன்று சேர்த்து அரசியலாரின் இசைவுபெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவினமையால் தமிழ்மொழி, தமிழர் நாகரிகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அதுவே அமையும் என்னுங் கருத்தால் முன்பு மேற்கொண்டிருந்த தமிழ்ப் ப்ல்கலைக்கழக முயற்சி நெகிழவிடப் படுவதாயிற்று.

இவ்வாறு தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக வேண்டும் என்று தமிழுணர்வு கொண்டோர் முயற்சிகளை மேற்கொண்டிருந்த காலையில் செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் முயற்சியால் சிதம்பரம் அருகே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்க்கும் பல்கலைக்கழகமாகச் செயல்படும் என்று பலரும் நம்பினர். அதனால் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஒன்று தொடங்கப்பெற வேண்டும் என்னும் முயற்சி நெகிழ்வுற்றது. அறிவியற் கலைகளையெல்லாம் தமிழில் கறபிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்ப்பல்கலைக் கழகம் தொடங்கப்பெறவேண்டும் என்று தமிழ்ச்சான்றோர் வேண்டினர். அந்த நோக்கத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறைவேற்ற வில்லை எனலாம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் செயலாளராக இருந்த திருவாளர் சி.வேதாசலம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக் (Senate) கூட்டத்தில் ஒருமுறை இதுபற்றிக் கண்டனம் தெரிவித்துப் பேசியபோது, பல்கலைக்கழகச் சார்பில் விடை கூறியவர்.

'நம்பல்கலைக்கழகம்தமிழ்ப்பல்கலைக்கழகம்அன்று; தமிழ் (பேசும்) மாவட்டஙகளுக்கு உரிய பல்கலைக்கழகம். அவ்வளவுதான்'

"Our University is not a Tamil University;
It is a University for Tamil Districts. That's all.

என்று தெரிவித்தாராம். இந்த இரங்கத்தக்க நிலை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்று. தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் இந்த நிலைமையே நீடிக்கிறது. மருத்துவம், பொறியல், வேளாண்மை முதலிய அறிவியற் கலைகளைத் தமிழில் கற்பிக்க முறையான முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை. பட்டப்படிப்பு அளவில் தமிழில் கற்பிக்கப்பெறும் இயற்பியல், வேதியியல், விலங்கியல் முதலிய அறிவியல் பாடங்கள் பட்ட மேற்படிப்பில் தமிழில் கற்பிக்கப்பெறுவதில்லை.

அதனால் தமிழறிஞர்களில் ஒரு சிலர் தமிழ்ப்பல்கலைக் கழகம் தொடங்கப்பெற வேண்டும் என்று அவ்வப்போது அரசுக்கு வேண்டு கோள் விடுத்து வந்தனர்.

இவ் வேண்டுகோளைச் செவிமடுத்து தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரன் 1981இல் தமிழ்ப்பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்.

தமிழ்ப்புலவர் மாநாடுகள்

நாவலர் பண்டித ந.மு.வே.அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் செந்தமிழ்மொழிக்கும், சைவ சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றி வந்தவர்; நின்ற சொல்லராகவும் நீடு தோன்று இனியராகவும், என்றும் நம் நெஞ்சத்தைவிட்டு அகலாதவராகவும் விளங்கும் இயல்புடையவர்; தமிழ்நூற் கடலின் நிலைகண்டுணர்ந்த பெருமை உடையர்; திருமுருகாற்றுப் படையை நாளும் ஓதி வழிபாடு நிகழ்த்தி வந்த அப்புலவர் பெருமகன், அந்நூலில் வரும்.

....யாவதும்

கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்'[2]

என்னும் அடிகளுக்கோர் எடுத்துக்காட்டாய் இலங்கினார். மேலும், கபிலர், நக்கீரர் ஆகிய சங்ககாலத்துப் புலவர் பெருமக்களைப் பற்றி ஆய்வுநூல் எழுதிய ந.மு.வே அவர்கள் அச்சங்ககாலச் சான்றோர்களைப் போலவே பொய்தீர் ஒழுக்கம் உடைய புலவராகவும், அஞ்சாமை உடைய அறிஞர் பெருந்தகையாகவும் விளங்கினார். தமிழ்வளர்ச்சிக்கு உரிய வழிமுறைகளைக் கண்டறியவும், தமிழாசிரியர்நிலை உயரவும் பாடுபடவேண்டும் என்று விரும்பிய ந.மு.வே அவர்கள் திருச்சிராப்பள்ளியில் 1923, 1924, 1925 ஆம் ஆண்டுகளில் மூன்றுமுறை தமிழ்ப்புலவர் மாநாடுகளை நடத்தினார். அந்த மாநாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்குப் பொறியியல் மாமேதையாகிய பா.வே.மாணிக்க நாயக்கர் அவர்களும், திருவாளர் டி.எம்.நாராயணசாமி பிள்ளை அவர்களும் பேருதவி புரிந்தனர். தாம் மட்டுமன்றித் தம் காலத்தில் வாழ்ந்த தமிழாசிரியர் அனைவரும் சங்ககாலப் புலவர்களைப் போல விளங்க வேண்டும் என்று ந.மு.வே அவர்கள் விரும்பினார்கள்.

நோபல் பரிசு பெற்ற பாரத நாட்டுப் பெருங் கவிஞராகிய இரவீந்திரநாத் தாகூர் தாமியற்றிய கீதாஞ்சலியில் மக்களுடைய அறிவு எவ்வாறு விளங்குதல் வேண்டும் என்பது குறித்து ஓர் அருமையான கவிதை பாடியுள்ளார்.

எங்கே அச்சம் என்பது இல்லையோ,
எங்கே அறிவு தலைநிமிர்ந்து நிற்கிதோ,
எங்கே குறுகிய சுவர்களால் சிறுசிறு சிதறல்களாக
இவ்வுலகு உடைக்கப்படவில்லையோ,

2. திருமுருகாற்றுப்படை

எங்கே உண்மையின் ஆழத்திலிருந்தும் சொற்கள்
மலர்கின்றனவோ,
எங்கே சளைக்காத முயற்சி உயர்வின் எல்லையை
நோக்கிச் செல்கிறதோ
எங்கே தூய்மையான பகுத்தறிவு வெள்ளம் தன்வழியை
மண் மூடிப்போன பழக்கங்கள் நிறைந்த விழல்
மணலில் இழக்காமல் ஓடுகிறதோ
எங்கே பெருகிவரும் செயலிலும் சிந்தனையிலும்
மனம் உன்னால் வழிகாட்டப்படுகிறதோ
அங்கே-அந்தச் சுதந்தரத்தின் சொர்க்கத்தில்
என்நாடு விழித்தெழுவதாகுக! எந்தையே!

இரவீந்திரநாத் தாகூர் அவர்களைப் போலவே ந.மு.வே அவர்களும், அறிஞர்கள் என்பவர்கள் அச்சம் என்பதை அறியாத ஆண்மையாளர்களாக விளங்கவேண்டும் என்று விரும்பினார். குறிப்பாகத் தமிழ் அறிஞர்களாகிய புலவர்கள் விரிந்த உள்ளமும் சிறந்த பண்புகளும் உடையவர்களாக விளங்குதல் வேண்டும் என்று கருதினார். இதனை 1932 இல் துறையூரில் நடைபெற்ற தமிழ்ப்புலவர் மாநாட்டில் அவர் ஆற்றிய வரவேற்புரையால் நாம் நன்கறியலாம். 'பண்டை நாளிலிருந்த புலவர்கள் பரிசில் கருதி யாரையும் எங்ஙனமும் பாடினரென்று கூறுதல் பொருந்தாது. அவர்கள் தாம் குற்றமற்ற பண்புகள் உடையராய் இருந்ததோடு வேந்தர்களாயினும் பிறராயினும் தவறு டையராகக் காணப்படின் சிறிதும் அஞ்சாது அவர்களை நெருங்கி அறிவு கொளுத்தியும் வந்தனர். தாயத்தாராகிய சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போர் செய்த காலையில் கோவூர்கிழார் என்னும் புலவர் பெருமகன் அவர்கட்கு அறிவு கொளுத்துமாறு பாடிய பாட்டுகள் அவரது அஞ்சாமையையும் உயர் குணத்தையும் புலப்படுத்துகின்றன. பெண்பாற் புலவர்களும் அஞ்சாமையும் அருஞ்செயல் புரியும் ஆற்றலும் உடையராயிருந்தனர் என்பதற்கு அதியமானிடமிருந்து ஔவையார் தொண்டைமானுழைத் தூதுசென்ற வரலாறு சான்றாம். அத்தகைய அஞ்சாமையும் அருந்திறலும் பெருந்தன்மையும் இற்றைநாளில் தமிழ்ப் புலவர்கட்கு வேண்டும். ஏதோ சிறிது பொருள்கிடைத்தாற் போது மென்று தம் நிலைமைக்குத் தகாதவாறு பிறரைத் தொடர்ந்து அவர்கள் மனைவாயிலைப் பற்றி நின்று பெருமைகெட ஒழுகுவது தமிழ்ப் புலவர்கட்குச் சிறிதும் அடாது. அத்தகைய இழிதகவு யாரிடமேனும் காணப்படின் அன்னாரைப் புலவர் கூட்டத்துக்குப் புறகு என நீவிர் ஒதுக்குதல் வேண்டும். சுருங்கச் சொல்லின் பிறரெல்லாம் தம்மிடம் மதிப்புவைக்குமாறு நடந்துகொள்வது தமிழ்ப்புலவர் கடனாகும், மற்றும் உலகநடை அறிதலும் இன்றியமையாதது என்பது ந.மு.வே அவர்களின் வேண்டுகோள்.

'அஞ்சி அஞ்சிச் சாவார், இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே'

என்று பாரதி எள்ளி நகையாடிய கோழைகளாய் அறிஞர்கள் வாழ்தல் கூடாது. அறிஞர்கள் என்போர் சமுதாயத்தின் பாதுகாவலர்கள்; மக்களை வழிநடத்திச் செல்பவர்கள். அவர்கள் அறத்திற்குத் துணை நின்று அநியாயத்தை எதிர்த்துப் போரிட்டு வெல்லும் ஆற்றல் மிக்க அடலேறுகளாய் விளங்குதல் வேண்டும். அரசியல் அதிகாரங்களுக்கும் பணபலத்திற்கும் அஞ்சி அறநெறிக்கு மாறுபட்டு - கொடுமைகளுக்குத் துணைபோகும் கோழைகளாய் வாழ்தல் கூடாது என்பது அவரது உறுதியான எண்ணமாகும்.

தமிழ்ப்புலவர்கள் மட்டுமன்றித் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் தமிழ்மொழி தமிழ்நாடு ஆகிய இரண்டன் சிறப்பினையும் உணர்ந்து வீறுபெறுதல் வேண்டும் என்னும் தணியாத பெருவேட்கை உடையவர் நம் நாவலர் பெருமான். இதனை முற்கூறிய தமிழ்ப்புலவர் மாநாட்டு வரவேற்புரையின் பிறிதொரு பகுதியான் அறியலாகும்.

'இங்ஙனம் நமதுநிலை சுருங்கியதாயினும், இனிப்பெருகுதற்கு வழியில்லாது போகவில்லை. கீழ்நிலையின் வரம்பு கண்ட இனி மேனிலையிற் றிரும்பாது வேறென் செய்வது? கற்றோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முற்றோன்றி மூத்த வீரக்குடியினர் வாழ்ந்தது எமது தமிழகம் என்பதனை எண்ணின், கரிகாலனு செங்குட்டுவனும் நெடுஞ்செழியனும் முன்னான வீரமன்னர்கள் வீறுடன் ஆண்டது எமது தமிழ்நாடென்பதனை உன்னின், நக்கீரர் கபிலர் இளங்கோவடிகள் முதலாய நல்லிசைப் புலவர்கள் பல்லிசை விறுத்தது எமது தண்டமிழ் நாடென்பதனை நினையின் அவை எமக்கு ஊக்கமும் உரனும் உண்டாக்காது போமோ? ஆண்மை மிக்க வீரர் வழியில் - அரசர் வழியில் - வள்ளியோர் வழியில் - தெள்ளியோர் வழியில் வந்த யாமோ அறிவு குன்றி, ஆண்மை குறைந்து, பீடிழந்து வாடிநிற்போம் என்னும் உணர்ச்சி எம்மை உயர் நெறிக்கண் உந்தாது சாமா? 'இனிநாம் அழுங்கிக் கிடவோம்; நாடெங்கும் தமிழினை முழங்கச் செய்வோம்' என்றெழுமின்; தளரா ஊக்கமுடன் உழைமின்; நாமும் உயர்ந்தோம்; நமது நாடும் உயர்ந்தது' என்று முழங்கிய அந்தப்புலவர் மறவனின் எழுச்சிமிக்க உரையைக் கேட்கும்போது நம் நாடி நரம்பெல்லாம் சிலிர்க்கின்றன.

'உரம்பெய்த செந்தமிழுக்கு ஒன்றிங்கே நேர்ந்ததென
உரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம் உணர்வாகி
நண்ணிடீரோ?
தண்டூன்றும் முதியோரே! தமிழ்த்தொண்டென்றால்
இளமைதனை எய்தீரோ?'

என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ்காக்கும் போர் முழக்கப்பாட்டைக் கேட்பது போன்று உணர்வு பொங்குகிறது.

தமிழில் கலைச் சொல்லாக்கம்

தமிழ்மொழியில் முற்றிய புலமை உடையவராய் இருந்த ந.மு.வே அவர்கள் தமிழ்மொழியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தார். உலகில் நாடோறும் புதிது புதிதாக வளர்ந்துவரும் பல்வேறு அறிவியல் துறைகளிலும் எழுதப்பெறும் பல்லாயிரக் கணக்கான நூல்களில் காணப்படும் அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொற் களையெல்லாம் அப்படி அப்படியே கடன் வாங்கிக் கொண்டு தமிழ்ச்சொல் வளத்தைப் பெருக்கவேண்டும் என்று அடிக்கடி அறிவுரை கூறுவோரை இன்றும் ஏராளமாகப் பார்க்கிறோம். மேலோட்டமாகப் பார்க்கும்போது நல்ல ஆய்வுரைபோல் தோன்றும் இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று.

ஒருவனுடைய குடும்ப வாழ்க்கையில் எதிர்பாராத வகையில் மிகுந்த பொருட்பற்றாக்குறை ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். பற்றாக்குறையைப் போக்க உடனே நண்பர்களிடம் கடன் வாங்கிச் சமாளிக்கிறோம். நெருக்கடி நேரத்தில் கடன் வாங்கியதில் தவறில்லை. ஆனால், தொடர்ந்து அப்படியே கடன் வாங்கிக் கொண்டேபோனால் - 'வந்ததெல்லாம் கொள்ளும் மகராசன் கப்பல்' என்றபடி ஊரில் ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லாரிடமும் கடன் வாங்கி - வாங்கிய கடனைத் திருப்பித் தராமலேயே ஒருவன் வாழ்க்கை நடத்துவானாயின் அவன் நிலைமை யாதாகும்?

'ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு'

என்னும் பாட்டில் சொன்னபடி அவனது மானமும் கெட்டுப் போய்ப் பலரும் பழிக்கும் நிலை தோன்றுமல்லவா? அதற்கு மாறாக மதிப்புடனும் மானத்துடனும் வாழவேண்டும் என்று கருதுகிற ஒரு நன்மகன் என்ன செய்வான்? கடன் வாங்க நாணுவான், வேறு வழியில்லாத நெருக்கடி நேரத்தில் கடன் வாங்கியதற்காக உடலும் உள்ளமும் கூசுவான், அதனால், உழைப்பான்; நன்றாக உழைப்பான்; முன்பு உழைத்ததைவிடப் பன்மடங்கு கூடுதலாக உழைப்பான்; அதனால் கிட்டிய பொருளைக் கொண்டு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பான்; எதிர்காலத்தில் நெருக்கடி வந்தாலும் கடன் வாங்கத் தேவையில்லாதபடி பொருளாதார வளமுடையவனாகத் தன்னை உயர்த்திக் கொள்வான்; இன்னும் சொல்லப்போனால், வேறுயாருக் கேனும் பணம் தேவைப்பட்டால் கொடுத்து உதவக் கூடிய அளவுக்குத் தன் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வான். அதுவன்றோ வாழும் முறைமை.

சான்றோன் ஒருவன் தன் குடும்ப வாழ்க்கையில் மேற்கொள்ளும் இத்தகைய நடைமுறையையே மொழிவளர்ச்சியிலும் பின்பற்ற

வேண்டும். எவ்வாற்றானும் ஏற்பது இகழ்ச்சி; கடன் வாங்குவது கொடியது; ஈயென இரத்தல் இழிந்தது. அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது அந்நூல்களில் காணப்படும் கலைச்சொற்களுக்கு உரிய பொருளுடைய சொற்கள் தமிழில் உள்ளனவா என்று தேடிக்கண்டு பிடிக்கவேண்டும். அவை போதாவிடத்துத் தமிழில் உள்ள வேர்ச் சொற்களிலிருந்து புதிய சொற்களைப் படைத்துக் கொள்ள வேண்டும். புதிய சொற்களைக் கண்டுபிடிக்கக் கால தாமதம் ஆகும் போது வேற்று மொழிச் சொற்களைக் கடன் வாங்கிக் கொள்ளலாம், இவ்வாறு கடன் வாங்கும் சொற்களையும் தமிழின் ஒலியியல் இயல்புக்கேற்பத் திரித்தே வழங்குதல் வேண்டும். இக்கருத்துக்களை எல்லாம் 'நமது தாய்மொழி'[3] என்னும் கட்டுரையில் ந.மு.வே அவர்கள் மிக அருமையாக பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்கள். இப்போது அவர்கள் கருத்தினை கேட்போம்.

'பிறமொழிச் சொற்களை எடுத்துக் கொள்வது குற்றமின்றாயினும், அவற்றை வரம்பின்றிப் புகுத்துவதானது, தமிழின் தூய்மையையும் அழகையும் சிதைத்து, அதன் தொன்றுதொட்ட மாண்பினைக் கெடுப்பதாகும் என்பனைக் கருத்திலிருத்தல் வேண்டும். இக்காலத்துப் புதிய கலைகள் பலவும் எழுதுதற்குச் சொற்கள் பல வேண்டுமென்பது உண்மையாயினும், அதன் பொருட்டுத் தமிழினைத் துருவியாராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்டலும், அவை போதாவிடத்துத் தமிழ்ப் பகுதியினின்று ஏற்றுக் கொள்ளுதலுமே அறிவு ஊக்கமும் முயற்சியும் உடையார்க்கு அழகானவவாம். அந்நெறியே, கலைப்பயிற்சியை எளிதாக்குவதுமாம்.

இனி, பிறமொழிச் சொற்களை இரவல் வாங்குமிடத்தும் அவற்றைத் தமிழியல்புக்கேற்ற ஓசையினவாகத் திரித்துக் கொள்ளுதல் ஆன்றோர் கைக்கொண்ட நெறியாகும். கல்வியிற் பெரியவராகிய கம்பர் இலக்குவன் வீடணன் என்றிவ்வாறாக வட சொல்லுருவினைத் தமிழியல்புக்கேற்ப மாற்றியுள்ளமை காண்க. கிறித்துவ வேத புத்தகத்தை மொழி பெயர்த்தோர் இயேசு, யோவான், யாக்கோபு என்றிங்ஙனம் தமிழியல்புக்கேற்பச் சொற்களைத் திரித்தமையால் அதன் பயிற்சிக்குக் குறைவுண்டாயிற்றில்லை. ஒவ்வொரு மொழியிலும் இவ்வியல்பு காணப்படும். ஆகவே, பிற மொழியிலுள்ளவாறே அச்சொற்களைத் தமிழில் வழங்க வேண்டுமென்பது நேர்மையாகாது'.

தமிழ்வழிக்கல்வியும் தமிழிலக்கியக் கல்வியும்

மிகச்சிறந்த கல்வியாளராகிய ந.மு.வே அவர்கள் கல்வி என்பதற்குத் தரும் விளக்கம் மிகவும் அருமைப்பாடுடையது. 'கல்வி என்பது சிலநிகழ்ச்சிகளையும், பொருள்களையும் அவற்றின் இயல்பு

3. ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள், நமது தாய்மொழி, பி.விருத்தாசலம் (பதி), தஞ்சாவூர், 1994, ப.233-234.

களையும் அறிவது மாத்திரம் அன்று. ஊக்கமும் மகிழ்ச்சியும் விளைத்து. உள்ளத்தைப் பண்படுத்தி, உயர்ந்த எண்ணங்களைத் தோற்றுவித்து உயர்நெறியிற் செலுத்துவதே உண்மையான கல்வியாகும்.'

மகாத்மா காந்தியடிகளைப் போலவே ந.மு.வே அவர்களும் தாய்மொழி வழியாகக் கல்வி கற்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டுச் சோறு தின்று, தமிழ்நாட்டுத்தண்ணீர் குடித்து, தமிழ் நாட்டில் வீசும் காற்றை உயிர்த்துத் தமிழ் நாட்டில் உயிர்வாழ்வோர் அனைவரும் தத்தம் குழந்தைகட்குத் தமிழிலேயே கல்வி புகட்டுதல் வேண்டும். இந்த இயற்கைக்கு மாறாகத் தாய்மொழியைப் புறக்கணித்து ஆங்கிலம் முதலிய அயன்மொழிகளில் கல்வி கற்பிப்பது முறையற்ற செயலாகும். தாய்மொழிக் கல்வியை வற்புறுத்தி நாவலர் ந.மு.வே அவர்கள் பின் வருமாறு கூறுகின்றார்.

'கல்வியானது உலகில் வழங்கும் பல மொழிகளாலும் எய்தற்பாலதேயெனினும், தாய்மொழியிற் கற்றலென்பது ஒவ்வொரு வர்க்கும் பிறப்பாலுரிய கடன்களுள் விழுமியதொன்றாம். அன்றியும் நாட்டு மக்களனைவரும் கல்வி கற்று அறியாமையினீங்குதற்கு வேற்றுமொழியைத் துணையாகக் கொள்ளுதல் ஆற்று வெள்ளத்தைக் கடக்க மண் குதிரையைத் துணையாகக் கொண்டது போலும் பயினில் செயலேயாகும். இந்நாட்டிலே எத்தனை ஆண்டுகளாக எவ்வளவு பொருட்செலவும் முயற்சியும்கொண்டு ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது? அங்ஙனம் கற்பித்தும் ஆடவரினும் மகளிரினும் கற்றார் எத்துணையராகவுள்ளார்? இன்னும் எத்தனையாண்டுகள் செல்லினும் யாவரும் அம்மொழி வழியாகக் கல்வி பெறுதல் கூடுமோ? இதனைச் சிந்தித்துணர்வது அறிஞர்கடனாகும். அம்மட்டோ! தம் நாட்டின் பழைய நிலையினையும், தம் முன்னோரின் பல்வகைப் பெருமைகளையும் அறிந்து இன்புறுதற்கும், அவ்வாற்றால் ஊக்கமும் உரனுங்கொண்டு தம் நாட்டை வளம்படுத்த முயல்வதற்கும், முந்தையோர் கைக்கொண் டொழுகிய சீரிய நெறிகளைக் கடைப்பிடித்து இம்மை மறுமைப் பேறுகளை யெய்துதற்கும் தாய்மொழிக் கல்விபோல் உறுதுணையாவது பிறிதுண்டோ? கூறுமின். ஒருநாட்டிலே பண்டு தொட்டு வழங்கிவந்து மக்களுடைய குருதியிற் கலந்திருப்பதும், பின்னும் அந்நாட்டில் என்றும் நிலைபெற்றிருக்கற்பாலமாகிய மொழியன்றோ அங்கு வழிவழியாக வாழும் மாந்தர்க்கு அறிவின் செல்வத்தை வரையாது வழங்குதற்குரியதாகும்'.

தமிழறிஞர்களாக விளங்குவோர் அகநானூறு புறநானூறு போன்ற பழைய தமிழிலக்கியங்களைப் பாராட்டிப் போற்றிப் பேசும்போது, அறிவியல் வளர்ந்து வரும் இக்காலத்தில் பழைய இலக்கியங்களையே பாராட்டிப் பேசிக் கொண்டிருப்பதா என்று குறைகூறுவோரும் உண்டு. தமிழில் உள்ள பழைய இலக்கியங்களையும், காப்பியங்களையும் படிக்காமல் விட்டுவிட்டால் அடுத்த நொடியிலேயே

தமிழ் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் மாபெரும் அறிவியல் மேதைகளாகி நாள்தோறும் நோபல் பரிசு பெறுதற்குரிய புத்தம் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து குவித்துவிடுவர் என்று கருதும் விந்தை மனிதர்களுக்குத் தெளிவு ஏற்படும்படி ந.மு.வே அவர்கள் பின்வரும் கருத்துக்களைக் கூறியுள்ளார்.

'பண்டைத் தமிழ்ச் சங்கத்து நல்லிசைப் புலவர்கள் பாடித் தொகுத்தவற்றுட் புறநானூறு என்னும் ஒரு நூலால் மட்டும் நாம் எய்தலாகும் உணர்ச்சி நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; கடலினும் அளத்தற்கரிது.

புதிய புதிய கலைகளும், புதிய புதிய பொறிகளும் தோன்றி, முன்பு கனவிலுங்கருதியறியாத வியக்கத்தக்க நுண்மாண்வினைகள் எண்ணிறந்தன விரியும் இற்றை நாளிலே, மக்களுடைய ஊக்கம் நிலத்தளவில் அடங்காது திங்கள் மண்டிலத்திலும் சென்று காண்குதுமெனப் பாய்ந்தெழுகின்ற இற்றை நாளிலே பழங்கதைகளைப் படித்துப் பயனென்னோ என்றுரைப்பாருமுளர். அவர் கூற்று ஒருபுடை உண்மையுடையது. அத்தகைய புதிய கலைநெறிகளிற் சென்று பயனடைய முயல்வது யாவர்க்குமுரிய கடனே. ஆனால், பண்டையிலக்கண விலக்கியத் தீஞ்சுவை நூற்களைக் கல்லாது விடுதலினாலே அவையெல்லாம் கைவந்து விடுமோ? அல்லதூஉம், புதிய கலைகளைப் பயிலுதல் மாத்திரத்தானே யாவும் இயற்றவல்ல அறிவு நுட்பமும் வினைத்திட்பமும் எய்தலாகுமோ? இந்நாட்டிலே புதிய கலைகளாகின்ற அறிவியனூல்களைப் படித்துப் பட்டம் பெற்றவர் எத்தனையாயிரவர் உளர்? அவரெல்லாம் கண்ட புதுப்பொறிகள் யானவ? அவரியற்றிய நுட்ப வினைத்திறங்கள் யாவை? போசுவும், இராமனும் (ஜெ.ஸி.போஸ், சர்.ஸி.வி.ராமன்) முதலிய இரண்டோரறிஞர் தாமே நுண்பொருள் காணும் ஆற்றல் பெற்றுளர்? அவர்களும் பழமை பாராட்டுவோராகவேயுள்ளனர். ஆதலின், நுட்ப வினைகள் இயற்றுதற்குக் கல்லூரியிற் கலை பயிலுதல் ஒன்றுமே அமையாது. புதியன காண வேண்டுமென்னும் ஆர்வமும், கூரறிவும், விடா முயற்சியும், கெடாவூக்கமும் வேண்டும். அவை பெறுதற்கு உள்ளம் உரனுடைத்தாதல் வேண்டும். மக்கள் வறுமையானும் பிணியானும் நலிவெய்தலின்றி, பாவேந்தர்களியற்றிய காப்பிய நாடகக் கவிதை நலங்களை நுகர்ந்து இன்புறும் பொழுதிலன்றி அறிவும் உள்ளமும் உரம்பெறமாட்டா. எனவே, நாம் எவ்வகையான வினைத்திறனாற்று தற்கும் முதற்கண் வேண்டப்படுவது நல்லிசைப் புலவர்களியற்றிய சுவைபழுத்த செய்யுட்களின் இன்பங்களை நுகர்ந்தும் பன்னருஞ் சிறப்பின் முன்னையோரின் விழுமிய பண்புகளைப் பாராட்டியும் மகிழ்ச்சியிற்றிளைத்தலேயாம்.

புதியனவாகிய அறிவியற் கலையாராய்ச்சியிற் சிறந்து புதுப்பொறிகள் கண்டு நுண்மாண் வினைபுரியும் மேனாட்டினர்

ஏனொரினுஞ் சிறப்பாகத் தம் இலக்கியங்களைப் பலபட ஆராய்ந்து கற்றுக் களிகூர்ந்து, அவற்றையும் அவற்றையியற்றிய புலவர் பெருமக்களையும் எத்துணையாகப் பாராட்டுகின்றனர் என்பதை அறியின் நம் பண்டையிலக்கியங்களைப் படித்தலிற் பயனின்றெனக் கூற எவரும் ஒருப்படாரென்க'.

தஞ்சையில் நடைபெற்ற சைவர் மாநாடு

சமயமும் தத்துவமும்

ந.மு.வே அவர்கள் பழுத்த சைவர்: தமிழைப் போலவே சைவத்தையும் கண்ணேபோல் காத்து வளர்த்த பெருந்தகை. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய சைவசமயக் குரவரிடத்தும் அவர்கள் ஓதிய தேவாரத்திருமுறைகளையும், திருவாசகத்தையும் கேட்டு நெஞ்சுருகி நிற்கும் தமிழ்நெஞ்சினர், பண்டைய இலக்கியங்களில் சிவபெருமான் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று கூறப்பெற்றுள்ள திறத்தைப் பெருமிதத்துடன் எடுத்துரைக்கும் பெற்றியர்; சைவ சமய சின்னங்களாகிய திருநீற்றையும் உருத்திராக்க மாலையையும் எப்போதும் அணிந்திருக்கும் இயல்பினர். நாட்டரையா அவர்களின் மகள் திருமதி சிவ.பார்வதி அம்மையார் அவர்கள் கட்டுரை ஒன்றில் தம் தந்தையார் தோற்றப் பொலிவுபற்றிக் கூறும் செய்திகள் பின்வருமாறு:-

'தூய் வெண்ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே'

எனச் சேக்கிழார் அடிகள் அப்பர் பெருமானின் அருட்டிரு மேனியை விவரித்தவாறே எங்கள் தந்தையார் உருவம் எங்களுக்குத் தோன்றும்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க.அவர்கள் நாட்டரையா அவர்கள் பற்றிப் பின்வருமாறு கூறுவர் :-

ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் சமய ஈடுபாடு

இந்நாளில் பழம்பெரும் புலவர் வரிசையில் வைத்து எண்ணப் படுவோர் தொகை மிகச்சிறியதாயிருக்கிறது. அச்சிறிய தொகையினருள் ஒருவர் ந.மு.வே.நாட்டாரின் நுண்ணிய நோக்கில் அன்புப் புனலும் வீரக்கனலும் ஒருங்கே ஒழுகித் தழல் விடுதல் புலப்படும்.

இற்றைக்குச் சுமார் முப்பதாண்டுகட்கு முன்னர் அறிஞர் வேங்கடசாமி நாட்டாரின் பேச்சை முதன் முதல் யான் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் ஆண்டு விழாவிலே கேட்டேன். அது புலமைப் பேச்சாகவே இயங்கிற்று. நாட்டார் வீட்டிலும், பள்ளியிலும் புலமைப் பேச்சே பேசுதல் பின்னே தெரிய வந்தது. அவர் கூட்டங்களில்

பேசுவதைச் சுருக்கெழுத்தில் இறக்கிப் பெயர்த்துப் பார்த்தால் அது புலமை வாய்ந்ததாகவே காணப்படும்.

திண்டுக்கல்லுக்கும் பழனிக்கும் இடையில் ஒட்டஞ்சத்திரம் இருக்கிறது. அங்கே நாவலூற்றுச் சன்மார்க்க சங்கத்தின் இரண்டாம் ஆண்டுவிழா (1927) நடைபெற்றது. அதிலே நாட்டாரும், நானும் வாய்த்தொண்டாற்றிப் பழனி நோக்கினோம். வழியில் நாட்டார் ஐயா, 'நீங்கள் சுயமரியாதை இயக்கத்தின் சில கொள்கைகளை மறுக்கப் புகுந்தது மகிழ்ச்சியூட்டுகிறது. அக்கொள்கைகட்கு விதை விதைத்தவர்கள் நீங்களல்லவோ? சீர்திருத்தம் என்ற பெயரால் கோயில்களின் நடைமுறைகளில் சிலவற்றை வன்மையாக நீங்கள் மறுக்கப் புகுந்ததே விதையாயிற்று. நீங்கள் ஒருவிதக் கருத்துக்கொண்டு ஆபாசங்களை மறுக்கிறீர்கள். அம்மறுப்பை இராமசாமி நாயக்கர் கேட்டுக்கேட்டு அதைத் திரித்துத் திரித்து வேறுவிதமாகப் பயன்படுத்துகிறார். 'போனது போக, இனியாவது கோயிலைக் குறை கூறாது இருங்கள் என்று தண்மையும் வெம்மையும் கலந்து ஒலியில் உரைத்தது என் உள்ளத்தை உறுத்தியது. பழனியில் நாட்டார் திருமுருகாற்றுப்படை ஓதி ஆண்டவனை வழிபட்டது உள்ளத்தை உருக்கியது. துறையூர், பூவாளூர் முதலிய இடங்களில் நாத்திகத்தின் பெயரால் சில குறும்புச் செயல்கள் எழுந்தது. அவைகள் எனக்கு வேடிக்கையாகவே தோன்றின. நாட்டாருக்கு அவ்வாறு தோன்றவில்லை. குறும்புகளைக் குறித்து நாங்கள் இருவரும் உரையாடினோம். சமயக்காப்புக்கு எல்லாஞ் செய்யலாம் என்ற எண்ணமுடையவர் நாட்டார் என்று உணரலானேன்.

ந.மு.வே அவர்கள் சமயக் காப்பின் பொருட்டு எதனையும் செய்யலாம். என்ற எண்ணம் கொண்டவராயின் அவருக்குச் சைவசமயத்தின்பால் எத்துணை ஈடுபாடும் உறுதியும் இருந்திருக்கவேண்டும் என்பதை எவரும் எளிதாக உய்த்துணர முடியும். இவர் சைவசித்தாந்த மகாசமாஜம் என்னும் சைவர்சபையில் உறுப்பினராக இருந்தார். அதன்சார்பில் தமிழ்நாட்டின் பலநகரங்களிலும் நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றினார்; தாமே முன்னின்று தஞ்சையில் 1933 டிசம்பர் மாதத்தில் சைவர் மாநாடு ஒன்றை நடத்தினார். அம்மாநாட்டில் தலைமை ஏற்றுச் **சமயமும் தத்துவமும்** என்னும் தலைப்பில் அரியதோர் உரையாற்றினார். அதன் ஒரு பகுதியில் **பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை** என்னும் கொள்கையை வற்புறுத்திக் கூறியுள்ளார். அது பின்வருமாறு:-

'இனி தமிழருடைய மற்றொரு சிறந்த கொள்கை பிறப்பினால் உயர்வு தாழ்வு இன்று என்பது.

'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

'நல்ல குலமென்றும் தீய குலமென்றுஞ்
சொல்வன வல்லாற் பொருளில்லை - தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றா னாகுங் குலம்'

என்பன தமிழருடைய அடிப்படையான கொள்கையைத் தெரிவிப்பன. பன்னிரு திருமுறைகளையும் எழுத்தெழுத்தாகச் சோதித்துப் பார்ப்பின் சைவசமயத்தில் அடிப்பட்ட கொள்கையும் இதுவே யென்பது போதரும். சமய நெறியிலே சாதிகுலம் என்னும் எண்ணம் உதித்தலே உய்தியில் குற்றமாம் என்பது சான்றோர் கருத்து'[4]. சமயக் காழ்ப்பை அறவே வெறுத்த ந.மு.வே அவர்கள் முற்கூறிய சைவர் மாநாட்டில் சமயப் பூசலை எதிர்த்து இவ்வாறு கூறினார்.

'எந்தக் கடவுளரையோ சமயத்தையோ இகழ்தல் என்பது பழைய தமிழரிடத்து ஒருசிறிதும் காணப்படாத தொன்று. அத்தகைய சிறந்த பண்பினை நாமும் கொண்டு ஏனையோரும் கொள்ளுமாறு செய்யின்சமயப்பூசல்என்பது இல்லாது ஒழியும். திருமால் வழிபாடு சைவர்கட்குப் புறம்பாய தொன்றன்று, மற்றும் எச்சமயத்தினர் தங்கள் சமயமே உயர்ந்தது எனக்கூறினும் அன்னார்க் அவ்வுரிமை உண்டென்பதனை மதித்து நம் நிலையினின்று வழுவாதிருத்தலே நமது கடனாம். எந்தச் சமயத்தையோ சமயத் கடவுளரையோ எள்ளி நகையாடல் என்பது புன்மையாம் என்பதனைக் கருத்திற் பதிப்போமாக[5]

என்றும் தெளிவாக அறிவுரை கூறியுள்ளார்கள்.

திருக்கோயில் நுழைவு

சாதிவேறுபாடு கருதாது ஒருசமயத்தைச் சார்ந்த அனைவரும் அச்சமயத்தார்க்குரிய கோயிலின் உள்ளே சென்று வழிபாடு நிகழ்த்த உரிமைதரப்படவேண்டும் என்பதையும் ந.மு.வே அவர்கள் சைவர் மாநரட்டில் வலியுறுத்திக்கூறியுள்ளார்கள்.

'சாதிகுலம் என்பன உலகியல் நடைபேற்று முறையில் ஏற்பட்ட சில கட்டுப்பாடுகள் அல்லது சட்ட திட்டங்கள். சமயங்களோ உயிர்களின் கடைத்தேற்றத்திற்குரிய நெறிகள். உடல் பற்றுக் கோடாகத் தோன்றிய சாதி உயிரின் ஈடேற்றத்தைக் குறிக்கோளாக வுடைய சமயத்திற் புகுந்து சிலமக்களை அதற்குரியர் அல்ல தாக்குதல் முறையாகுமோ? நம் சைவசமய அருட்குரவர்கள் கோயில் தோறுஞ்சென்று இறைவனை வணங்கி உய்யுமாறு பதிகங்கடோறும் வற்புறுத்தருளியது சிலரை மட்டும் கருதியோ? சிவநேயர்காள் இவற்றை ஓர்ந்துபாருங்கள்.

---

4. மேற்படி, பக்கம் 107
5. மேற்படி, பக்கம் 107

வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும் நிலைகண்டவரும், வேத ஆகமங்களின் விளைபொருளெல்லாம் உணர்ந்து சிவஞான போதத்திற்குத் திராவிடமாபாடியம் என்னும் ஒப்புற்ற பேருரை வகுத்தவருமாகிய மாதவச் சிவஞான முனிவர்

'சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடின்
அவனுடன் உறைக.
அவனொடு கலந்து பேசுக, அவனோடு
அருகிருந் துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப்பொருடனை நம்பா
ஊமரோ டுடன்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தால் ஐயனே
கதிவே றெனக்கிலை கலைசை யாண்டகையே'

என்றருளிய அருமைச் செய்யுளின் பொருளைச் சிந்தனை செய்யுங்கள்'.

'காலமென்னும் கடுநீர்ப் பெருக்கானது சமய நெறியுள்ளும் முன்னும் எத்தகையோ பல மாற்றங்கள் செய்துள்ளது. இனியும் செய்யவல்லது என்பதனை உணர்ந்து அதற்கேற்பத் தலைசாய்த்துக் கொடுப்பதே அழிவினைத்தடுக்கும் சதுரப்பாடாகும்' என்று சைவர்களுக்கு அறிவுரை கூறுவது மிகவும் அருமையாக உள்ளது.

இதுகாறும் கூறியவற்றால் ந.மு.வே அவர்களின் சமயப் பொறைமையும், சமுதாய சீர்திருத்தத்தை ஏற்கும் மனப்பக்குவமும் மற்றவர்களைச் சீர்திருத்தத்தை ஏற்கச்செய்யும் தூய நெஞ்சமும், சொல்வன்மையும் இனிதே புலனாகின்றன.

1. நூல்வெளியீடுகள்

நாவலர் ந.மு.வே. அவர்கள் எழுதிய தமிழ் நூல்கள் இருபத்தொன்று ஆகும்.[6]

இந்த இருபத்திரண்டு நூல்கள் தவிர யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் ஆகிய நூல்களைப் பதிப்பிக்கும் பணியிலும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு ந.மு.வே அவர்கள் உதவி செய்துள்ளார்கள். மேலும், உயர்நிலைப் பள்ளிகளில் நான்காம் ஐந்தாம் படிவங்களுக்குப் (9,10 வகுப்புகளுக்குப்) பாட நூலாக வைக்கப்பெற்ற செந்தமிழ்ப் பூம்பொழில் என்னும் பாட நூல்களும் இவரால் எழுதப் பெற்றவையாகும்.

6. நூல்கள்	வெளிவந்த ஆண்டு
1. வேளிர் வரலாற்று ஆராய்ச்சி	1915
2. நக்கீரர்	1919
3. கபிலர்	1921
4. கள்ளர் சரித்திரம்	1923
5. இன்னாநாற்பது உரை	1925
6. களவழிநாற்பது உரை	1925
7. கார் நாற்பது உரை	1925
8. ஆத்திசூடி உரை	1925
9. கொன்றைவேந்தன் உரை	1925
10. வெற்றிவேற்கை உரை	1925
11. மூதுரை உரை	1925
12. நல்வழி உரை	1925
13. நன்னெறி உரை	1925
14. அகத்தியர் தேவாரத்திரட்டு உரைத்திருத்தம்	1925
15. கண்ணகி வரலாறும் கற்புமாண்பும்	1926
16. சோழர் சரித்திரம்	1928
17. திருவிளையாடற் புராணம் உரை	1931
18. கட்டுரைத்திரட்டு பகுதி - 1	1940
19. சிலப்பதிகார உரை	1942
20. மணிமேகலை	1942
21. அகநானூறு உரை	1944

2. கட்டுரைகள்

ந.மு.வே. அவர்கள் எழுதிய ஏராளமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் அக்காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த செந்தமிழ், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், தமிழர், கலா சிந்தாமணி, விவேகோதயம், பூரண சந்திரோதயம், குமரன், நச்சினார்க்கினியன், தமிழ்ச் செல்வி, தாய்நாடு, ஈழகேசரி, ஆனந்த போதினி ஆகிய இதழ்களில் இடம் பெற்றன.

இவற்றுள் செந்தமிழ், தமிழ்பொழில், செந்தமிழ்ச் செல்வி என்னும் மூன்று இதழ்களிலும் வெளிவந்த எழுபத்தைந்து கட்டுரைகளைத் தொகுத்து 'நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆராய்ச்சிக் கட்டுரைகள்' என்னும் பெயரில் தொகுப்பு நூலொன்றை நாவலர் ந.மு.வேங்கடமாமி நாட்டார் கல்வி அறப்பணிக்கழகம் தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது 1-1-1995 இல் தமிழ்நாட்டு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

3. வேளிர் வரலாற்று ஆராய்ச்சி

அறிஞர் பெருமகனாகிய மு. இராகவ ஐயங்கார் அவர்களால் எழுதப் பெற்ற வேளிர் வரலாறு என்னும் நூல் கி.பி.1913-ஆம் ஆண்டில் வெளி வந்தது. அந்நூல் சென்னைப் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் இண்டர்மீடியட் வகுப்புக்கு இரண்டு ஆண்டுகள் பாடமாக வைக்கப் பெற்றிருந்தது. அதனால், திருச்சி எஸ்.பி.ஜி.கல்லூரியில் (பிசப் ஈபர் கல்லூரி) தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த ந.மு.வே. அவர்கள் வேளிர் வரலாற்றை மாணாக்கர்களுக்குப் பாடம் நடத்தினார்கள். அப்போது அந்நூலாசிரியரின் முடிவுகள் பல உண்மைக்கு மாறுபட்டவையாய் உள்ளன என்று ந.மு.வே. அவர்கள் உணர்ந்தார்கள். இராகவ ஐயங்கார் அவர்கள் தம் நூலில்

> 'தமிழகத்தே சங்க நாளில் விளங்கிய வள்ளல்களான பாரி, பேகன் முதலிய வேளிர் குல முன்னோர் இன்றைக்கு 2900 ஆண்டுகளின் முன் துவாரகையினின்றும் குடியேறியவர்; கண்ணபிரான் வழி வந்தவராகிய யாதவர். அவரெல்லாம் ஆரிய வம்சத்தினர்; அன்னவர் தெற்கில் குடியேறிய பின்னர்ப் பல்வேறு தொழில் களைச் செய்துபோந்து பல்வேறு சாதியினராயினர்; இப்பொழுது தமிழ் நாட்டகத்தேயுள்ள வேளாளர், கொல்லர், குயவர், தந்துவாயர், ஆயர் என்போரெல்லாம் அவ்வகுப்பினரே யாவர்........'

என்பன போன்ற வரலாற்று உண்மைகளுக்கு மாறுபட்ட பல கருத்துக்களைக் கூறியிருந்தார்கள்.

பழந்தமிழ் இலக்கியப் புலமையும், தமிழர் வரலாறு பற்றியத் தெளிவும், தம் காலத்தில் வெளிவந்த நூல்களைத் தேடிப் படித்துத் தேர்ந்த ஞானமும் வாய்க்கப் பெற்றிருந்த நாவலர் பண்டித ந.மு.வே. அவர்கள் வேளிர் வரலாறு என்னும் நூலுக்கு 'வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி' என்னும் பெயரில் தக்க மறுப்புரை ஒன்று எழுதிக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு விழாவில் தம் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். அதனைப் பின்னர் 1915 ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். தம் நூலில் வேளிர் பற்றி ந.மு.வே. அவர்கள் கூறிய கருத்துக்கள் பின் வருவனவாகும்:-

நாம் இவ்வாராய்ச்சி உரைக்குப் பொருளாகக் கொண்ட வேளிர் என்பார், மேல் 'மண்பெறு மரபினேனோர்' எனப்பட்ட குறுநில மன்னராவார். வேளிரையும் வேளாளரையும் பெயரின் ஒருபுடை ஒப்புமை கண்டு ஒருகுலத்தவராகக் கூறுதல் பொருந்தாது. நச்சினார்க்கினியரும்,

'வேந்துவினை இயற்கை வேந்தனி னொரிஇய
ஏனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே'

என்னுஞ் சூத்திரத்து வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்தென்கின்றது என அவதாரிகை எழுதியும், முடியுடை வேந்தருக்குரியத் தொழிலாகிய இலக்கணங்கள் அம்முடியுடை வேந்தரை யொழிந்த குறுநில மன்னரிடத்தும் பொருந்தும் இடனுடையது எனப் பொருள் வரைந்தும், 'அவர்க்குரிய இலக்கணமாவன தன் பகைவயிற்றானே சேறலும், தான் திறைபெற்ற நாடுகாக்கப் பிரிதலும், மன்னர் பாங்கிற் பின்னோ ரெனப்பட்ட வேளாளரை ஏவிக்கொள்ளுஞ் சிறப்புமாம்' என விசேடமெழுதியும், வேளிர்க்கும் வேளாளர்க்குமுள்ள வேற்றுமையை நன்கு விளக்கிப் போந்தனர். மற்றும் வேளிரைப் பற்றி எழுந்த புறப்பாட்டு முதலிய சான்றோர் செய்யுட்களினெல்லாம் அவரை வேளாளரென்று கூறுதற்கு இயைபு சிறிதும் காணப்படவில்லை யாண்டும் வேந்தர் தொழில்களும் கருவிகளுமே அவர்க்குக் கூறப்படுகின்றன'. மேலும், வேளாளர், ஆயர், சளுக்கியர், ஹொய்சளர், துவராபதி என இராகவ ஐயங்கார் கூறிய பல செய்திகளுக்கும் ந.மு.வே. அவர்கள் இலக்கியம் மற்றும் வரலாற்றுச் சான்றுகளோடு உண்மைப் பொருள் நமக்குத் தெளிவாக விளங்கும்படி எழுதியுள்ளார்கள்[7].

---

7. வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி என்னும் நூலைப் படித்துப் பார்த்த பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் அவர்கள் 16-9-1915 இல் நாட்டாரையா அவர்களுக்கு எழுதிய கடிதம் பின்வருமாறு:-

அன்புள்ள ஐயா, சுபம். தாங்கள் எழுதி வெளியிட்ட 'வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி' என்னும் புத்தகம் ஒன்று உரிய காலத்தே வரப் பெற்றேன். யான் குற்றால முதலிய தலங்கட்குச் சென்று வந்தமையாலப் பொழுதே பதிலெழுதக் கூடவில்லை. மன்னிக்க வேண்டும்.

4. கள்ளர் சரித்திரம்

நாவலர் ந.மு.வே. அவர்கள் தமிழ்நாட்டில் வாழும் கள்ளர், மறவர், அகம்படியர் என்னும் முக்குலத்தோரும் கள்ளர் மரபினர்; நாட்டார் என்னும் பட்டப்பெயர்கொண்டவர். கள்ளர்வகுப்பைச்சார்ந்தவர்கள்இன்றும்தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் செல்வாக்குடன் வாழ்ந்து வருகின்றனர். 'ஒரு காலத்தில் தமிழர்கள் பெருவாழ்வு வாழ்ந்தனர்; இன்று, தாழ்வுற்று வறுமை மிஞ்சி வாடுகின்றனர்' என்னும் கூற்றை மெய்ப்பிக்கக் கூடியவர்களாய் தமிழ்நாட்டில் இன்று வாழ்வோர் கள்ளர்களே.

தாம் பிறந்த கள்ளர் மரபின் வரலாற்றுப் பெருமையை உலகம் உள்ளவாறு உணர்ந்து கொள்ள வேண்டும் என்னும் நன்னோக்கம் கொண்டே ந.மு.வே அவர்கள் கள்ளர் சரித்திரம் என்னும் இந்த நூலை எழுதினார்கள்.

பல்லவர்கள், சோழர்கள் ஆகிய மன்னர்கள் வழிவந்தவர்களே கள்ளர்கள் என்பது இந்நூலில் ந.மு.வே.அவர்கள் கூறியுள்ள முடிவாகும். இதனை இந்நூலில் 40 ஆம் பக்கத்தில்

'இதுகாறும் காட்டிறயவற்றிலிருந்து பல்லவர் வழியினராகிய கள்ளரோடு சோழரும் கலந்துவிட்டமை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். பல்லவர் வழியும் சோழர் வழியும் ஒன்றுபட்ட ஓர் வகுப்பு இஃது எனலும் பொருந்தும்'. என்று ந.மு.வே. அவர்கள் எழுதியிருப்பது கொண்டு நாம் உணரலாகும். கள்ளர்சரித்திரம் எழுதுவதற்கு வரலாற்று அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் அவர்களும், கல்லல் கு.க. மணிவாசக சரணாலய சுவாமிகளும் இவருக்குப் பெரிதும் உதவி செய்துள்ளனர்.[8]

ஆராய்ச்சியை முற்றும் படித்துப் பார்த்தேன். வரலாற்றுரைகாரரின் கருத்துக்கள் பல முறையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. நீங்கள் காட்டும் ஏதுக்கள் திட்ப முள்ளவைகளாயும், நடுநிலை திறம்பாதனவாயுமிருக்கின்றன. கற்றுணர்ந்தோரெழுதும் கண்டனம் இதுவென்று அறிவுள்ளோருணருமாறு செய்திருக்கின்றீர்கள். வரலாற்றுரைகாரர் தங்கருத்திற்கு எதிர்ப்பட்டாரெல்லாரும் வேளிரென்று கூறிச் செல்லும் இயல்பைச் செவ்வனே கண்டு மறுத்திருத்தல் பெரிதும் மகிழ்ச்சி தருவதாக இருக்கின்றது. இத்தகைய செயலில் தலையிட்டு முன்வருதல் நம் தமிழ்ப் புலவரிடத்து மிகுமாயின் நம் தமிழின் இயல் இன்னும் விசேட நலமுடையதாகும்.

அன்பன்,

(ஓம்) மு. கதிரேசன்.

8. தமிழ்நாட்டு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 'நாட்டாரையா என்று தமிழ்கூறும் நல்லுலகத்தினரால் அழைக்கப்பட்ட ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் எழுதிய கள்ளர் சரித்திரத்தில் காணப்பட்ட சில குறிப்புகளின் துணையோடு தென்பாண்டிச் சிங்கம் என்னும் நாவலைத் தாம் எழுதியுள்ளதாக அந்நாவலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களும் கள்ளர் சரித்திரம் என்னும் இந்நூலைப் பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார்.[9]

ந.மு.வே. அவர்கள் தாம் கள்ளர் சரித்திரத்தை எழுதியதற்கான காரணங்களையும், இந்நூலைப் படிக்கும் கள்ளர் மரபினர் தாம் பிறந்த குடியின் பெருமையை உயர்த்தும் பொருட்டுச் செய்யவேண்டிய செயல்களையும், பிற இனத்தினருடன் அன்பான உறவு கொண்டு வாழ வேண்டியதன் இன்றியமையாமையையும் இந்நூலில் தெளிவாகக் கூறியுள்ளார்.

அவை இந்நூலின் பின்வரும் பகுதிகளால் விளங்கக் காணலாம். இதனைப் படிக்கும் அறிஞர்கள் சில கற்பனைக் கதைபோலன்றி உண்மையாராய்ச்சியுடன் கூடிய சரித்திரமாக எழுதுதற்குப் பெரிதும் முயன்றுளேன் என்பதனையும், ஒரு வகுப்பினைப் பெருமைப் படுத்துதற்காக ஏனை வகுப்புக்களை இழித்துரைக்கும் குறுகிய மனப்பான்மை உடையார்க்கு இஃது அறிவு கொளுத்தக் கூடியதாம் என்பதனையும் நன்கு அறியக்கூடும். இஃது ஒரு வகுப்பினைக் குறித்து எழுதப்பெற்ற தாயினும் இதிலுள்ள செய்திகள் பெரும்பாலனவும் தமிழ் மக்கள் அனைவரும் படித்தறிய வேண்டியனவாம். தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை யாராலும் வெளிவராத பல அரிய செய்திகளை இந்நூலின் ஐந்தாம் அதிகாரத்திற் காணலாகும். (முகவுரைப் பக்கம் VII)

கள்ளர் வகுப்பினர் சிற்சில இடங்களில் செல்வம், கல்வி முதலியவற்றிலும், பழக்க வழக்கங்களிலும் மிகவும் கீழ்நிலை யடைந்தவர்களாய்க் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றனர் என்பது உண்மை. அத்தகையோர் சிறிதேனும் நன்மையுடைதற்குத் துணைபுரிதலே இஃது எழுதியதன் முதல் நோக்கமாகும்.

(முகவுரைப் பக்கம் VIII)

பழைய தமிழ் இலக்கிய, இலக்கணங்களையும், புராண இதிகாசங்களையும், கல்வெட்டு, பட்டயம், பிற்காலத்தோர் எழுதிய சரித்திரங்கள் என்பவைகளையும் பற்றாகக் கொண்டு, இக்காலத்து மக்களியல்புகளிற் பொருந்துவனவற்றை அவற்றுடன் ஒப்பிட்டுப்

---

9. இந்நூலின் இரண்டாம் பதிப்பின் (1928) முகவுரையில் ந.மு.வே. அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்.

இந்நூல் 1923-ஆம் ஆண்டில் வெளியான பொழுது பல சிறந்த புலவர்களின் மதிப்புரையையும், பல பத்திரிகைகளின் பாராட்டுரையையும் பெறுவதாயிற்று. சங்க இலக்கியங்களும், இலக்கணங்களும், புராணங்களும், பிரபந்தங்களுமாக அளவில்லாத தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளிப்படுத்தி வரும் சான்றோராகிய மகா மகோபாத்தியாயர் ஸ்ரீமத் உ.வே.சாமிநாதையரவர்கள் தாம் இதனை முழுதும் படித்துப் பார்த்தாகவும், கலாசாலை மாணாக்கர்கள் படித்துப் பயனெய்துமாறு இது பாடமாக வைக்கத் தகுந்தது எனத் தாம் கருதுவதாகவும் அன்புடன் தெரிவித்தார்கள் என்பதனை இங்கே குறிப்பிடுகிறேன். கள்ளர் சரித்திரம்,ப. VII

பார்த்து ஒருவாறு உண்மையெனத் தோன்றுபவைகளை வெளிப் படுத்தலே இவ்வாராய்ச்சியின் நோக்கமாம். (பக்கம் 2)

இவ்வகுப்பினர் (கள்ளர்) யாவரும் கல்வியில் விருப்ப முடையவர்களாய்த் தம் பிள்ளைகட்கு எவ்விதத்திலும் கல்வி கற்பித்தல் வேண்டும்.

'தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்'.

என்று, கல்வியொன்றைத்தானே மக்களுக்குத் தேடித்தர வேண்டுமெனத் திருவள்ளுவர் கூறிவைத்தார். கல்வியின் பிற பயன்களையெல்லாம் அறியாவிட்டாலும், ஒரு மனிதனாவது ஒரு கட்டமாவது கல்வி யினாற்றான் உலகத்தில் நாகரிகமாய் வாழ முடியும் என்பதையும், கல்வியில்லாத மனிதன் அல்லது கூட்டம் ஒருகாலத்தில் மற்றையோர்க்கு அடிமையாய்ப் போக நேரிடும் என்பதையும் சிந்தித்தாவது தம் மக்களுக்கு அழியாப் பொருளாகிய கல்வியைத் தேடி வைப்பார்களாக. இனிக் கள்ளர் நாடுகளில் ஓர் ஊரிலாவது பள்ளிக்கூடம் இல்லாதிருத்தல் கூடாது, ஒரு பிள்ளையாவது படிக்காமல் இருத்தல் கூடாது என்று பெற்றோர்களும், பெரியோர்களும் உறுதி செய்து கொள்வார்களாயின் சில ஆண்டுகளில் இவ்வகுப்பு வியக்கத்தக்க விதமாக மேன்மை யடைந்துவிடும். இவ்வகுப்பினர்க்கு இயல்பிலே கூரிய அறிவும், மேற்கொண்டதைச் சாதிக்கும் உறுதியும் உண்டு. இத்தகையோர் கல்வியை மேற்கொண்டால் உலகிற்கே பெரிய நன்மையுண்டு.

(பக்கம் 93)

இனி இவ்வகுப்பினரில் மதுவுண்டல் என்னும் தீய வழக்கமுடையோர் இருப்பின் அஃது எவ்வளவு இழிவானது என்பதை உணர்ந்து இனியேனும் அவர்கள் அதைக் கைவிடுவார்களாக. மது உண்போரை மிக இழிந்தவரென மதித்து, மற்றையோர் அவர்களோடு எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளாதிருப்பின் அவர்கள் விரைவில் திருந்துதற்கு இடமுண்டு. களவுத் தொழில் செய்வார் யாவரே யாயினும் அவர்களை அரசாங்கத்தினரிடம் பிடித்துத் தருவார்களாயின் இவர்கள் தம் வகுப்பிற்கு எவ்வளவோ நன்மை செய்தவர்களாவர். (பக்கம்.93)

5. சோழர் சரித்திரம்

சோழர் சரித்திரம் 1928 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. இந்நூலில் தமிழகத்தின் பழமையும், சோழநாட்டின் பழமையும் சோழர் குடியின் தொன்மைச் சிறப்பும், பழங்காலத்தில் நடைபெற்ற சோழநாட்டின் அரசியல், கைத்தொழில், வாணிகம், கல்வி, சமயம் ஆகியவையும் விரிவாக ஆராய்ந்து எழுதப் பெற்றுள்ளன. மேலும், மனு, முசுகுந்தன், சிபி, காந்தன், தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன்,

கரிகாலன், கிள்ளி வளவன், நலங்கிள்ளி, தித்தன், பெருங்கிள்ளி, நல்லுத்தரன், கோப்பெருஞ்சோழர், கோச்செங்கோட் சோழர் ஆகிய பதின்மூன்று சோழ வேந்தர்களைப் பற்றிய வரலாறுகளும் கூறப் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ள இந்நூலைப் படிப்பதனால் பழந்தமிழ்நாட்டுப் பண்பாடும், நாகரிகமும், சமுதாய வரலாறும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். மேலும், உயர்ந்த குறிக்கோள்களைத் தெரிவிப்பனவும் அணிநலமும் பொருட்செறிவும் மிக்கனவும் ஆகிய பல சங்க இலக்கியப் பாடல்களையும் அவற்றின் கருத்துக்களையும் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவும் கூடும் என்பது உறுதி.

6. உரைச்சிறப்பு

நாவலர் ந.மு.வே. அவர்கள் அகநானூறு, சிலப்பதிகாரம், திருவிளையாடற் புராணம், மணிமேகலை (முதல் 26 காதைகள்) ஆகிய பெருநூல்களுக்கும் இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய சிறிய நூல்களுக்கும் உரையெழுதியுள்ளார்கள். 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்னுமாறு போல முதல் மூன்று நூல்களுக்கும் எழுதப் பெற்ற உரைகளின் சிறப்புக்கு இரண்டு மூன்று எடுத்துக்காட்டுக்கள் கூற விழைகின்றேன்.

அகநானூற்று உரை

சங்க இலக்கியங்களுள் நெடுந்தொகை என்னும் அகநானூற்றுக்கு ந.மு.வே.அவர்கள் கரந்தைக் கவிரயசு அரங்க.வேங்கடாசலம் பிள்ளை அவர்களின் துணையுடன் உரையெழுதினார்கள். அறிஞர் பெரு மக்களாகிய வேங்கடசாமியும் வேங்கடாசலமும் சேர்ந்து எழுதிய உரையாதலின் இவ்வுரைக்கு வேங்கட விளக்கம் என்று பெயர் சூட்டினர். நூலின் இறுதியில் 'வேங்கட விளக்கம் என்னும் அகநானூற்று உரைமுற்றிற்று' என்று எழுதியுள்ளமையால் இதனை அறியலாம்.

ந.மு.வே., நூற்றாண்டு விழா 1984 இல் கொண்டாடப் பெற்றபோது தமிழரசு இதழ் 16-4-1984 இல் சிறப்பு மலர் வெளியிட்டுப் பெருமை பெற்றது. அச்சிறப்பு மலருக்கு முனைவர் வ.சுப.அவர்கள் எழுதித் தந்த கட்டுரையில் அகம் 24, 124 ஆகிய இரண்டு பாடல்களையும் எடுத்துக்காட்டி அவற்றுக்கு ந.மு.வே. எழுதிய உரைச்சிறப்பைப் போற்றிப் பாராட்டியுள்ளார்கள்.

1. அகம் 24 ஆம் பாட்டில் இரவுத்துயில் மடிந்த தானை என்னும் தொடர் வந்துள்ளது. இத்தொடருக்குப் போர்க்களத்தில் படைகள் இரவு தூங்கிப் போயின என்று பொருள்கொள்ளலாமா? அது மறப்படைக்கு இழுக்காகுமே என்று எதிர்நோக்கிய நாட்டார் 'பலநாளும் துயிலின்றிப்

போர் செய்து வினைமுற்றும்காலைத்துயின்றதானை'' என்று விளக்கம் செய்தனர். வெற்றிக்குப்பின் தூங்கின என்னும் கருத்து.

2. அகம் 124 ஆம் பாடலில்

'மாட மாணகர்ப் பாடமை சேக்கைத்
துனிதீர் கொள்கைநங் காதலி'

என்று பாடுவர் இளவேட்டனார். கணவரைப்பிரிந்த பெண்டிர் அனைவரும் வருத்தத்தோடு இருப்பதே இயற்கை. இதற்கு மாறாகத் துனிதீர் கொள்கைநங் காதலி என்று பாடுவது பொருந்துமோ என்று ஐயுறுவார்க்கு விளக்கம் கூறுவது போன்று

'கணவர் சொற்பிழையாத கற்பினால்
வருத்தத்தை மாற்றிக் கொண்டவள்'

என்று ந.மு.வே. உரைகூறியுள்ளார்.

3. மேலும், ந.மு.வே.அவர்கள் 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்' என்னும் அதிவீர ராமரின் வெற்றிவேற்கைக்கு 'அறிவுடையோன் ஆறு அரசுஞ்செல்லும்' என்ற புறநானூற்றுக் கருத்தை ஒப்பிட்டுக் காட்டுவதையும் வ.சுப. அவர்கள் சுட்டிக் காட்டிப் பாராட்டியுள்ளார்கள்.

சிலப்பதிகார உரை

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூண்டி வாண்டையார் கல்லூரியில் (அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி) தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிப் பணியிலிருக்கும் போதே மறைந்துபோன, பெருந்தமிழ் அறிஞரான முனைவர் வே.காத்தையன் அவர்கள் முற்சுட்டிய தமிழரசு சிறப்பிதழில் ந.மு.வே.அவர்களின் சிலப்பதிகார உரைத்திறன் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். அதனின் ஒரு பகுதி பின்வருமாறு:-

1. உரைபெறு கட்டுரையில், 'அன்றுதொட்டுப் பாண்டியனாடு மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்புநோயும் குருவும் தொடர' என்று வரும் தொடரில் வெப்புநோய் - தொழுநோய் என அடியார்க்கு நல்லார் உரையெழுத, ந.மு.வே. அவர்கள் வெப்பு நோய் - வெம்மை விளைக்கும் நோய் குரு - கொப்புளம், வெம்மையால் உண்டாவது. என விளக்கம் தருவது பொருத்தமாக உள்ளது. (வெப்பு நோய் - காய்ச்சல், குரு - அம்மைக்கொப்புளம்)

2. அரங்கேற்று காதை முடிவில் மாதவிபால் விடுதல் அறியா விருப்பங்கொண்ட கோவலன் தன் வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். வடுநீங்கு சிறப்பின் மனையகம் என்பதற்கு அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் குற்றமற்ற கற்புச் சிறப்பினை உடைய மனைவியும்,

மனையும் என வாளாவெழுத, நாவலரோ, வடுநீங்கு சிறப்பு என்பதற்கு மனையாட்குக் கற்பின் சிறப்பும், மனைக்குச் செல்வச் சிறப்பும் என விளக்கவுரை தருகின்றார்.

3. இந்திர விழவூரெடுத்த காதையில் காவற்பூதம் என்ற தொடருக்குப் புகாருக்கும் அரசர்க்கும் காவலாகிய பூதம் என்று உரைகூறுவதும், காட்சிக்காதையில் முதுநீர்க்காவிரி என்ற தொடருக்குப் பொருள்கூறுங்கால் முதுமையைக் காவிரிக்கு ஏற்றுக என எழுதுவதும் நாவலர் புலமை நலம் ஒளிரும் தொடர்களுள் சில எனலாம்.

திருவிளையாடற் புராணம் - உரைச்சிறப்பு

ந.மு.வே. அவர்கள் திருவிளையாடற் புராணம் முழுமைக்கும் உரையெழுதியுள்ளார்கள். இந்நூல் மதுரைக் காண்டம், கடற் காண்டம், ஆலவாய்க்காண்டம் எனனும் மூன்று பெரும்பகுதிளாகப் பிரிக்கப்பட்டு அழகிய முறையில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பெற்றுள்ளது. திருவிளையாடற்புராணத்தில்

'கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை
வெல்வாம்'

என்னும் பாடலுக்கு ந.மு.வே.அவர்கள் எழுதியுள்ள உரையும் விளக்கமும் மிகவும் சிறப்புடையவை என்று ஐயாவின் அருமைத் திருமகளார் சிவ. பார்வதியம்மையார் அவர்கள் பெருமையுடன் கூறுகின்றார்கள். இப்பாடலின் உரையும் விளக்கமும் பின்வருமாறு:-

நான்மறை - இருக்கு, எசுர், சாமம், அதர்வனம், என்பன; தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமம் எனலுமாம்

ஆறங்கம் - சிட்சை, வியாகரணம், நிருத்தம், கற்பம், சந்தம், சோதிடம் என்பன. இவை வேதத்திற்கு உறுப்புக்கள் போறலின் வேதாங்கம் எனப்படும்;

இதனை

கற்புங்கை சந்தங்கால் எண்கண்
தெற்றெ னிருத்தம் செவிசிக்கைமூக்கு
உற்ற வியாகரண முகம்பெற்றுச்
சார்பிற் றோன்றா, வாரண வேதக்
காதி யந்த மில்லை

என மணிமேகலை (27:100 - 104) கூறுவதாலும் அறிக. முதல் என்றதனால் அறநூல், புராணம் முதலாயின கொள்ளப்படும். கேட்டல் எனப்

பொருட்படுதலன்றிக் கல்வியெனவும், வேதம் எனவும் பொருள்படும். நால்வர் சனகர், சனத்தரர், சனாதரர், சனற்குமாரர் எனுமிவர். இறைவன் வாக்கிறந்து நிற்றலை,

'மாற்ற மனக்கழிய நின்ற மறையோன்'

'சொற்பதங் கடந்த தொல்லோன்'

என ஆளுடைய அடிகள் அருளுமாற்றான் அறிக. வேதம் முதலிய கலைகளெல்லாம் பாசஞான மாகலானும், இறைவன் பாசஞானத்தாலும், பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரன் ஆகலானும் 'மறைக்கப்பாலாய்' என்றார்.

இறைவன் எல்லாமாய் இருத்தலை, 'இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங்காற்றுமாகி'எனவும்,

அல்லதுமாய் இருத்தலை

'விரிகதிர் நாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர்
விண்ணும் நிலனும்'

என்னும் பாடல்களிலும் திருநாவுக்கரசர் அருளிச் செய்தமை காண்க.

'ஒன்று நீ யல்லை யன்றி யொன்றில்லை யாருனை அறியகிற்பாரே'

என்னும் திருவாசகமும் சிந்திக்கற்பாலது. இறைவன் 'உலகெலாமாகி வேறாயுடனுமாய்' நிற்பன்' என மெய்கண்ட நூல்கள் கூறாநிற்கும்.

இருந்ததனை - வினையால் அணையும் பெயர்;

தன்னை எனப்பிரித்தலுமாம்

இருந்துகாட்டிச் சொல்லாமற் சொல்லுதல்-

மோன முத்திரைக் கையுடனமர்ந்து அருளாலுணர்த்துதல்

'ஒருகை மார்பொடு விளங்க
ஒருகை தாரொடு பொலிக'

என்னும் திருமுருகாற்றுப்படைத் தொடருக்கு 'முனிவர்க்குத் தத்துவங்களைக் கூறி உரையிறந்த பொருளை யுணர்த்துங்காலத்து ஒருகை மார்போடே விளங்கா நிற்க, ஒருகை மார்பின் மாலை தாழ்த்தனோடே சேர்ந்து அழகுபெற, இறைவன் மோன முத்திரையத்தனாய்த் தானாயே யிருந்து காட்ட ஊமைத் தசும்புள் நீர் நிறைந்தாற்போல் ஆனந்தமயமான வொளி மாணாக்கர்க்கு நிறைத்தலின் ,அதற்குரிய மோனமுத்திரை கூறிற்று' என நச்சினார்க்கினியர் உரை விரித்திருப்பது இங்கு நோக்கற்பாலது.

'ஓரானமு லோன்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை'

என்பது திருவெழு கூற்றிருக்கை.

நினையாமல் நினைந்து - பிறிதொன்றையும் நினையாமல் நினைந்து; இடையறாது பாவித்து என்றபடி; சிந்திக்கும் முறையிற் சிந்தித்து என்றலுமாம்; அது தற்போதத்தாற் சிந்தியாது திருவருள் வழியாற் சிந்தித்தல் என்பதாம். இதனை

'அறியாமை அறிவகற்றி யறிவினுள்ளே
அறிவுதனை யருளிறை யறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில்'

என்னும் சிவஞான சித்தியால் அறிக. மாணிக்கவாசகப் பெருமானும்

'நினைப்பற நினைத்தேன்' என்றார் என விளக்கியுள்ளார்கள்.

7. இலக்கணத் தொண்டு

தொல்காப்பியம் முதலான தமிழ் இலக்கண நூல்களை எழுத்தெண்ணிக் கற்ற ந.மு.வே.அவர்கள் தொல்காப்பியம் என்னும் கட்டுரையில் தொல்காப்பியத்தின் அருமை பெருமைகளை மிகத் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கின்றார். எழுத்து, சொல், பொருள் மூன்றையும் அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களாக வகுத்துக்கொண்டு விளக்கும் பான்மையைப் போற்றுகின்றார்.

'இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆராய்ந்து முந்து நூல் கண்டு முறைப்படத் தொகுத்தியற்றப்பட்ட தென்பது வடவேங்கடம் என்று தொடங்கும் இதன் சிறப்புப்பாயிரத்தால் அறியலாவது. இந்நூலை ஆராய்ச்சி செய்யுமிடத்தே இது நன்கு தெளிவாம். இந்நூலின் எழுத்ததிகாரத்து மொழி மரபின் கண்ணே மொழிக்குஈறாகும் எழுத்துக்களைக் கூறிவரும் இடத்தே சகர மெய்யூர்ந்த முற்றுகரமும், நகரவொற்றும் இவ்விரண்டு (இரண்டிரண்டு) மொழிகட்கே ஈறாகுமென்றும் (உசு,முசு; பொருந்வெரிந்), பகர மெய்யூர்ந்த வுகர வீற்றுச்சொல் (தபு என்னும் சொல்) ஒன்றே தன்வினைப் பொருளும் பிறவினைப்பொருளும் பயப்பதாம் என்றும் உணர்த்துவார்.

'உச்ச காரம் இருமொழிக் குரித்தே'

'உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டாகும்மே'

'உச்ச காரமொடு நகாரம் சிவணும்'

'உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அட்பொரு ளிரட்டா திவனை யான'.

என ஆசிரியர் கூறி வைத்திருப்பன சிலவற்றிலிருந்தே தமிழில் இருவகை வழக்கிலுமுள்ள சொற்பரப்பெல்லாம் ஒருங்கு தொகுத்துவைத்துக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டதென உணரலாகும். மற்றும் தொகைமரபின் கண்ணே

'அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாம்
கசதப என்றா நமவ என்றா
அகர வுகரமோ டவையென மொழிப'

என்னும் சூத்திரத்தால் தமிழக முழுவதும் வழங்கிய அளவுப்பெயர் நிறைப்பெயர்களை அவற்றின் முதலெழுத்து எடுத்தோதிக் குறித்து வைத்ததும், பொருளதிகாரத்து மரபியலில் இளமைப்பெயர், ஆண்மைப்பெயர், பெண்மைப் பெயர் எல்லாம் எடுத்தோதி இன்னின்னவற்றுக்கு இன்னின்ன பெயர்கள் உரியவெனக் கூறி வைத்திருப்பதும் போல்வன இவ்வுண்மையை நன்கு விளக்கு வனாவாகும். தமிழுக்கே உரிய சிறப்பு வாய்ந்த பொருளதிகாரத்தில் மக்களுடைய ஒழுகலாறெல்லாம் தொகுத்துணர்த்தியிருக்கும் மாட்சி அளவிடற் பாலதன்று.

தமிழ் எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்கள் என்னும் கட்டுரையில் எழுத்து என்னும் சொல் பற்றி ஆராய்ந்து, எழுதப்படுதலின் எழுத்தே என்னும் கருத்தை மறுத்து

'இவற்றால் எழுத்தென்னும் பெயர் மொழிக்கருவியாம் ஒலியைக் குறிப்பதொன்றாகவே தொல்காப்பியனார் கொண்டுள்ளாரெனக் கருதுதல் பொருத்தமுடைத்தெனத் தோன்றுகின்றது'

என்றும்[10],

'எழு என்னும் பகுதியின்று எழுத்தென்னும் பெயர் தோன் றிற்றாகக் கொள்வது பொருத்தமுடைத்தெனத் தோன்றுகிறது. அதுபின்பு அவ்வெழுத்தினையுணர்த்தற்குக் கருவியாக வேண்டப் பட்ட வடிவினையும் குறித்ததாகல் வேண்டும்'

என்றும் ந.மு.வே. அவர்கள் தெளிவாகக் கூறுகின்றார்கள்.[11]

இகரத்தின் குறுக்கம் குற்றியலிகரம் என்றும், உகரத்தின் குறுக்கம் குற்றியலுகரம் என்றும், ஒரு மாத்திரை உடைய இகர உகரங்கள் இடனும் பற்றுக்கோடும் காரணமாகக் குறுகி அரைமாத்திரை ஒலிக்கும். குற்றியலிகர குற்றியலுகரங்கள் ஆயின என்னும் ஒருசார் இலக்கண நூலார் கருத்துக்களை மறுத்து

'குற்றியலிகரம் குற்றியலுகரம் என்பன இகர வுகரங்களில் குறுக்கமாயினும், அவை முன் ஒரு மாத்திரையாய் நின்று பின் அரை மாத்திரையாய்க் குறுகின எனற்கிடனின்றி, இடமும்

10. ந.மு.வே.ஆய்வுக்கட்டுரைகள் பக்.302
11. மேற்படி, ப.302

பற்றுக்கோடும் சார்ந்து இயற்கையாய் அரைமாத்திரை பெற்று நிற்றலானும் அப்பெயர்க் குரியவாயின'.[12]

என்னும் நச்சினார்க்கினியர் கருத்தை ந.மு.வே. அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

உயிரையும் மெய்யையும் முதலெழுத்து என்றும், முத லெழுத்தைச் சார்ந்து பிறப்பனசார்பெழுத்து என்றும்கூறப்படும்கருத்தையும்நாட்டாரையா அவர்கள் ஏற்கவில்லை. உயிரெழுத்துகளைத் தனித்து ஒலிக்கலாம். மெய்யெழுத்துக்களை அகரச் சாரியை புணர்த்தித் தனியே ஒலிக்கலாம். ஆனால், மூன்று சார்பெழுத்துக்களையும் தனித்தோ சாரியை புணர்த்தோ தனியெழுத்தாக ஒலிக்கவியலாது. மொழியிடை வைத்தே ஒலிக்க முடியும். ஆகவே, மொழியைச்சார்ந்து ஒலிப்பனவே சார்பெழுத்துக்களாகும் என்பதும் நாட்டார்கருத்தாகும். இதனை

'அம்மூன்றும் தனித்தேனும் சாரியையோடு பொருந்தியேனும்
வருதலின்றி மொழியைச் சார்ந்தே வருதலாகிய
சிறப்பின்மையைப் பற்றி என்க'

என்று நாட்டாரையா கூறுவதாய் அறியலாம்.[13]

இளம்பூரணம்

'தொல்காப்பியத்துக்கு இளம்பூரணம் என்னும் உரையெழுதிய இளம்பூரணரும், உரையாசிரியர் எனப்படுபவரும் ஒருவர்தாமா? அல்லது இருவரும் வேறுவேறு உரைகாரர்களா என்பது ஓர் ஐயம். இருவரும் ஒருவரே என்பது பல அறிஞர்கள் கருத்தாகும். ஆனால்,. உரையாசிரியர் கருத்தாக நச்சினார்க்கினியர் குறிப்பிடும் பல செய்திகள் தொல்காப்பிய எழுத்ததிகாரத்துக்கு இளம்பூரணர் உரை என்று இப்போது அச்சாகி வெளிவந்துள்ள நூல்களில் காணப்பெறவில்லை. ஆகவே, உரையாசிரியரும் இளம்பூரணரும் இருவேறு உரையாளரென்றாதல், இருபெயரும் உடையார் ஒருவரே, அவருரையிற் சிலசில பகுதிகள் எழுதினோரால் விடப்பட்டன வென்றாதல் கோடலமையும். ஏட்டுப்பிரதி முதலிய சாதனங்களால் உண்மை கண்டு வைத்துளோர் வெளியிடுவாராக'.

என்று ந.மு.வே அவர்கள் இளம்பூரணம் என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார்கள்.

யாப்பருங்கல நூலாசிரியர் பெயர்

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் யாப்பிலக்கண நூல்களை எழுதிய ஆசிரியர் பெயர் அமுர்த சாகரர் என்றும், அமுதசாகரர் என்றும் கூறப்பட்டு வந்தது. யாப்பருங்கலப்பாயிரம்

12. மேற்படி, ப.303

13. மேற்படி, ப.304

'அளப்பரும் கடற்பெயர் அருந்தவத் தோனே'

என்று நூலாசிரியர் பெயரைக் குறிப்பிடுகின்றது. இதனை நன்கு ஆராய்ந்த ந.மு.வே அவர்கள்

> 'பாயிரத்திலுள்ள 'அளப்பரும் கடல்' என்னும்
> தமிழ்ச் சொற்றொடரும், 'அமித சாகரம்'
> என்னும் வடசொற்றொடரும் ஒருபொருளனவாகலின்
> ஆசிரியர் பெயர் அமிதசாகரர் என்பதாமென்றும்,
> அதுவே அமிர்த சாகரர், அமுத சாகரர் எனப்பலராலும்
> திரித்து வழங்கப்பட்ட தென்றும் நான் கருதுகின்றேன்'.

என்று **யாப்பருங்கல நூலாசிரியர் பெயர்** என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார்கள்.

இலக்கண விளக்க உரையாளர் யார்?

இலக்கண விளக்கம் எழுதிய வைத்தியநாத தேசிகரே அந்நூற்கு உரையும் எழுதினார் என்று சுவாமிநாத தேசிகர் தமது இலக்கணக்கொத்து என்னும் நூற் பாயிரத்தில் கூறுகின்றார். அதனை மறுத்து ந.மு.வே. அவர்கள் **இலக்கண விளக்க உரையாளர் யார்** என்னும் தலைப்பில் கட்டுரை எழுதினார்கள். அக்கட்டுரையின் இறுதியில் நாட்டாரையா அவர்கள் தம் கருத்தைக் கூறும்போது

> 'இதுகாறும் செய்த இவ்வாராய்ச்சியால் இலக்கண விளக்கம்
> உடையாரும், அதற்கு உரைகண்டாரும் வேறுவேறாவர்
> என்பதும், வைத்தியநாத தேசிகரே நூலும் உரையும்
> இயற்றினாரெனக் கொண்டு பிறர் மேற்கோள் காட்டியதும்,
> மறுப்புரை வரைந்ததும் பிழையாம் என்பதும் அங்கை
> நெல்லியென விளங்குதல் காண்க.

என்று எழுதியுள்ளார்கள்.[14]

ந.மு.வே. அவர்களின் கருத்தை மறுத்துத் திருவாளர் வி.சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்களாலும், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்களாலும் செந்தமிழ்ச் செல்வி மறுப்புரைகள் எழுதப்பெற்றன. அவற்றை மறுத்து **இலக்கண விளக்க உரையாளர், மயக்க மறுப்பின்மேற் குறிப்பு** என்னும் இரண்டு கட்டுரைகளை ந.மு.வே. அவர்கள் எழுதியுள்ளார். இப்பகுதியில் சுட்டிய ஐந்து கட்டுரைகளும் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்தவையாகும்.

---

14. மேற்படி, ப. 280

8. இலக்கியத் தொண்டு

ந.மு.வே. அவர்கள் எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் சிறப்பை விளக்க ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக்கட்டுரைகள் என்னும் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள சுந்தரர் செந்தமிழ் என்னும் கட்டுரையின் சுருக்கத்தை இங்கே கூறுகின்றேன்.

சுந்தரர் செந்தமிழ்

தேவாரம் பாடிய மூவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருமை பெருமைகளும், அவர் ஆலாலசுந்தரர், நம்பி ஆரூரர், தம்பிரான் தோழர் என்னும் பெயர்களால் அழைக்கப்பெற்றமைக்குரிய காரணங்களும் சுந்தரர் செந்தமிழ் என்னும் கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளன. இக்கட்டுரையில் வரும் சில சிறப்புடைய பகுதிகள் பின்வருமாறு:-

'நம் சுந்தரர்க்குக் கல்வி எங்ஙனம் இனித்தது என்பது

இன்பமே உருவாகிய இறைவனைக் குறித்து, அவர்

'கற்ற கல்வியிலும் இனியானை'

எனக்கூறுவதனால் இனிது விளங்கும். இங்ஙனம் பொதுப்படக் கல்வியை உவமங் கூறியதன்றி

'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்' என்றும்

'பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே'

என்றும் சிறப்புவகையால் தமிழின் இனிமையை இறைவன் இன்பொடு சார்த்தி யுரைத்தலின் தமிழ்க்கல்வியானது அவர்க்கு எல்லையில்லா இன்பினை அளித்ததாகல் வேண்டும்'. (பக்கம் 172)

'தோற்றமுண்டேல் மரணமுண்டு துயர மனைவாழ்க்கை'

'இன்பமுண்டேல் துன்பமுண்டு ஏழை மனை வாழ்க்கை'

'மணமென மகிழ்வர் முன்னே

மக்கள்தாய் தந்தை சுற்றம்

பிணமெனச் சுடுவர் பேர்த்தே

பிறவியை வேண்டேன் நாயேன்'.

என்று பொதுவாகவும், உலகியலில் வைத்தும் பிறப்பின் பொல்லாங்கினை எடுத்துக்காட்டி, ஆதலால் பிறவியை வேண்டேன் என்று அறுதியிட்டுரைக்கின்றார். (பக்கம் 178)

'திருவைந்தெழுத்தினை அவர் நெஞ்சமும் நாவும் எங்ஙனம் பற்றி நின்றன என்பது

'வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான் அறியேன் மறு மாற்றம்'

'நாற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே'

என்பவாற்றால் விளக்கமாம்.

இதுகாறும் கூறியவற்றால் நாவலர், பண்டித ந.மு.வே. அவர்கள் வடசொற் கலப்பில்லாமல் தூய தனித்தமிழில் பேசவும் எழுதவும் வல்லார் என்பதும், தமிழ் நாட்டு மக்கள் கல்வியிலும் அறிவிலும் மேம்பாடு பெற்றுச் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து ஒருதாய் வயிற்று மக்களைப் போல ஒற்றுமை உணர்ச்சி உடையவராய் இன்பமுற்று அன்படன் இணங்கி வாழ்ந்திடல் வேண்டும் என்னும் பேரார்வம் கொண்டவராய் விளங்கினார் என்பதும், தமிழகத்தின் தொல்பழங்கால வரலாறும் பழந்தமிழ்ப் புலவர்களின் வரலாறும் இன்று வாழும் பல்வேறு இனத்து மக்களின் வரலாறும் முறையாக எழுதப்பெற வேண்டும் என்று விரும்பினார் என்பதும், இளம்நிலை மாணவர்களும் சிறிதளவே கல்வி அறிவுடைய பொதுமக்களும் பண்டைத்தமிழ்ச் சான்றோர்கள் எழுதிய சங்க இலக்கியங்களையும் பிற காப்பியங்களையும் சைவ சமயக் குரவர்கள் இயற்றிய தேவார, திருவாசகங்களையும் தெளிவாகப்படித்து உணர்ந்து சுவைத்து உவப்பும் ஊக்கமும் பெறும்வகையில் எளிய தெளிவான உரைகளும் திறனாய்வு நூல்களும் வெளிவருதல் வேண்டும் என்னும் வேணவா உடையவராய் விளங்கினார் என்பதும், நாட்டு மக்கள் செய்ய வேண்டுமென்று தாம் எதிர்பார்த்த அனைத்துச் செயல்களுக்கும் தாம் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினார் என்பதும் எளிதில் புலனாகும்.

SOME FEATURES OF THE MON RAMA STORY

Newly found version in Burma and its comparison with Kampan's Ramayana

Ohno Toru

Introduction

Recently I obtained two handwriting copies of the Mon version of Rama story. Both of them have been brought to Japan by Nai Pan Hla, a professor of the South East Asian History, Meio University, Okinawa, Japan. The first copy is composed of 190 pages, all in verse, and transcribed from an original palm-leaf manuscript preserved in the Bernard Free Library, Rangoon, Burma, several decades ago. The second copy was brought from Lopburi, Thailand, to Burma by a Mon citizen named Mahaphun in 1950. It is composed of 372 pages, all in verse too. Both of them are at first written, according to the description of the preface of the original palm-leaf manuscripts, by a Buddhist monk named Uttamu in 1834. It is found that the content of two copies is quite identical. It is evident therefore that they are derived from the common original.

Prior to the representation of the comparison of the Mon version of Rama story with Kamba Ramayana, it may be desirable to introduce the Mon people and their history. The Mon is one of the ethnic group living mainly in the Mon State in Myanmar and partly in Thailand, too. The population of Mon in Myanmar is eight hundred and twentysix thousand approximately according to 1983 Census. Since the total population of Myanmar is reported as thirtyfive millions, the Mon occupies about 2.4 percents of her total population.

Historically the Mon seems to have been chief inhabitants in the Central basin of Burma, depending upon wet-rice cultivation before the Burman's arrival at the Upper Burma. The Burman is believed to have accepted the method of paddy cultivation from the Mon immediately after they reached the Central zone of Burma about 9th or 10th century A.D. The Mon is said, so far as the descriptions of the Mon inscriptions are concerned, to have called Rmañ or Rmeñ for

millenium from 11th to 15th century A.D. The Burmese chronicles state that the pure Buddhism was brought by a monk called Shin Arahan, a teacher from the Hinayana sect, to Pagan from Thaton, the Mon capital near sea coast at that time.

D.G.E. Hall, the late professor of history in the University of Rangoon, regards that the Mon kingdom of Thaton had adopted its Buddhism from/conjeveram in South India.Since Shin Arahan had brought no sacred books, Anawrahta, the then king of Pagan, captured Thaton to procure the Thirty complete sets of the Tripitaka which Thaton possessed. The entire population over thirty thousand had been deported from Thaton to Pagan. The Burman came to know, for the first time, how to write their language with scripts by adopting the Mon alphabet.

G.H. Luce, a prominent scholar on Burmese history, however, doubts whether the Buddhism introduced to Pagan from Thaton in those days was the pure Buddhism. He claims, with the evidence of the Mon inscription written by the successive king of Pagan, that Narayana is worshipped in the course of king Kyansittha's ceremonial proceeding. The religious beliefs and practices in Lower Burma are, therefore, considered to have been really a mixture of both Brahmanism and Buddhism.

According to the descriptions of Coedès and Halliday, several Mon inscriptions are found at Lamphun in Lopburi in Thailand. It is reported that the oldest Mon inscriptions in Thailand dates from the seventh or eighth century A.D. It is a historical fact, therefore, that the central part of Thailand, the Menam Basin, particularly in the early State of Dvaravati, were, once peopled by a Mon speaking race.

Since that late half of Eighteenth century. A.D. when the Southern region of Burma occupied by the military campaign of the Burmàn under the leadership of Alaungpaya, the Mon was called "Talaing" by the Burmans. The term "Talaing" is regarded to have been derived from an Indian place name Kalinga or Telingana in Madras coast. The Mon people, however, disgust against this appellation, for the term "Talaing" conveys the meaning of a bastard.

The Mon language is not a tonal language like the Burmese and the Tai. It is entirely different from both Burmese and Thai languages. It is generally believed that the Mon is an Austroasiatic language and closely related to Khmer. It is worth mentioning here

that the language of Khasi spoken in Assam and the language of Munda spoken in the Central India are also classified as one of the Mon-Khmer language group.

The majority of the Mon are said to be bilingual, using Burmese as a second language. It is no wonder, however, that some among the Mons from the rural area are unfamiliar with Burmese language at all. I have an experiance of meeting with a Buddhist monk who could by no means understand Burmese language when I asked him by means of Burmese in 1967.

It is to be noted that the Mon version of Rama story is not subdivided into major sections such as Kānda or chapters. It deals with, however, the main drama, covering such major episodes as the birth of Ravana, the birth of Rama, his success in archery contest and marriage with Sita, Rama's exile, Ravana's abduction of Sita, Jatayu's encounter with Ravana, Rama's meeting with Hanuman and Sugriva, the fall of Vali, Hanuman's journey to Lanka, the destruction of Lanka city by fire, the construction of the causeway across the sea, the siege of Lanka, fall of Ravana, Sita's Ordeal by fire, Rama's reunion with Sita and their return to Ayodhya.

During the Eighth International Conference of Tamil Studies held at Tamil University for five days from 1st to 5th January 1995, I have read my research paper entitled "A comparative study of the Ramayana versions prevailed in Southeast Asia with Kamba Ramayana" at the Section 2, Session 5 on 4th January 1995. In that paper, I have pointed out that the Southeast Asian versions of Rama story can be divided into three groups. The first group is, so far as the episodes and the order of arrangement are concerned, basically royal to Valmiki Ramayana. It is composed of Ramayana Kakawin from Java and Reamker from Cambodia. The second group is composed of Hikayat Seri Rama of Malaysia and Ramakien of Thai, with their abundant interpolations and acculturations. This group seems to have been influenced directly or indirectly by Kamba Ramayana in their episodes. The third group is composed of Burmese vesion, Muongsing version of Laos, and Lanka Xiho, the Tai (not Thai) version of Yunnan, China. Their peculiarities are different both from the second group and from the third group. They seem to have been closely related with Bengali Ramayana such as Krittivasa and also with Jaina versions. The Mon version of Rama story is, under the circumstances, regarded to belong to the third group.

The names of the main characters:

The Mon names of the main characters together with place names remain in general the same with Vālmiki and Kamba Rāmāyanas with slight modifications. They are Ram (Rāma), Bali (Vāli), Kummakan (Kumbhakarṇa), Anuman (Hanumān), Inda Reje (Indrajit) and Lenka (Lankā).

Some of the names show, however, strong affinities with those in Ramakien of Thai or those in Burmese Ramayanas. Those having affinities with Thai names are Phiphek (Vibhīṣaṇa), Sammanokot (Sammanakha), Tossarotta (Daśaratha), Kata (Tādakā) and Wirakan (Birakvan) and Ongkhot (Anggada). Tossagri (Daśagrīva) and Lekkhana (Lakśmaṇa) are believed to have been directly derived from the Burmese names.

A few denote Mon's own peculiarities which can be found neither in Vālmīki nor Kamban nor Thai nor Burmese. They are Paddama Devi (Mandodarī), Canda Devi (Kausalyā), and Ganga Devi (Kāla Acanā in Ramakien). Dwawati (Dvāravatī) is Mon's peculiar denomination to Ayodhya. Soingrid (Sugrīva) and Soite (Sītā) are the modified forms corresponding to Mon phonology. A complete list of the main characters of Mon Ramayana as compared to Vālmīki, Kampan, Thai and Burmese is given in Appendix.

A comparison with Kamba Rāmāyaṇa

It is needless to say that the Mon version of Rama story comprises both the features similar to those of Kamba Ramayana and also the Mon's own peculiarities which are by no means found in Kamba Ramayana.

1. The story commencing with Uttara Kānda

Appendix : A list of the names of the main characters of the Mon Ramayana

Vālmīki	Kamba	Burmese	Thai	Mon
Daśaratha	Dasharatha	Dattharattha	Thosorot	Tossarotta
Rāma	Rama	Yama	Phra Ram	Ram (Ramma)
Lakṣmaṇa	Lakshmana	Lekkhana	Phra Lak	Lekkhana.
Bharata	Bharata	Barata	Phra Phrot	Ratta kumma
Śatrughna	Shatrughna	Thattarugana	Phra Satrud	Jata Sataru

Sītā	Sita	Thida	Nang Sida	Soite
Kausalyā	Kausalya	Kawthanla	Kausuriya	Canda Devi
Kaikēyī	Kaikeyi	Kawke	Kaiyakesi	Sowen Devi
Sumitra	Sumitra	Thumeittara	Samuthra	Ruppa Devi
Janaka	Janaka	Zanekka	Janaka	-
Rāvana	Ravana	Datthagiri	Thotsakan	Totsagiri
Vibhīṣaṇa	Vibhishana	Bibithana	Phiphek	Phiphek
Kumbhakarna	Kumbhakarna	Koumbakanna	Kumphakan	Kummakan
Śūrpanakhā	Shurpanakhạ	Trigata	Sammanakha	Sammanukot
Khara	Khara	Khaya	Khorn	-
Dūṣaṇa	Dushana	Tuthaya	Thut	-
Mandodarī	Mandodari	Mandawdari	Montho	Paddama Devi
Indrajit	Indrajit	Eindaseitta	Inthorochit	Einda Reje
Tāṭakā	Tataka	Kakawunna	Kakanasura	Kaka
Vāli	Vāli	Bali	Phali	Bali
Sugrīva	Sugriva	Thugyeit	Sukhrip	Soingrit
Hanumān	Hanuman	Hanuman	Hanuman	Anuman (Kon Swahā)
Anggada	Angada	Aunggut	Ongkot	Ongkhot
Lava	-	Lawna	Phra Loph	Ni Kwe
Kuśa	-	Kusha	Phra Monghut	Ni Choa
-	-	-	Kala Acana	Ganga Devi
-	-	-	Maiyarab	Waiyarap
Ayodhyā	Ayodhya	Ayouttaya	Ayudhya	Dwawati (Dwaravati)
Lankā	Lanka	Theinkho	Lanka	Lenka

Vālmīki begins his Rāmāyana with Bāla Kānda dealing with the Genealogy of Rāma. Both the Kamba Ramayana and the Mon Ramayana commence their stories with the descriptions of the origin and the creation of Rākṣasa and monkeys. These include the births of Rāvanā and his three siblings.

2. The pre-matrimonial love of Rāma and Sīta

Kamba Rāmāyaṇā states that the sage Vishvāmitra takes Rāma and Lakshmaṇa through the street where Sita's residence is situated. Sita is standing on the top floor of her residence, sorrounded by her female attendants. When Rāma sees her for the first time, Sita's eyes also have lighted on him. They speak not a word in their pre-matrimo-

nial love. In Mon Rāmāyaṇa, while Rāma is reporting their arrival to the hermit, Sīta notices their conversations. Entering the room of her foster father, Sīta's eyes meet Rāma's, they fall in love. This episode can be seen in Thai Ramakien, too.

It is however, neither found in Vālmiki nor Adhyatma Ramayana

3. Vāli as the son of the Sun God and Sugriva as the son of the Moon God

Kamba Ramayanā describes Vali as the son of the Sun God and Sugriva as the son of Lord Indra. Mon Ramayana states Vali as the son of the Son God, but Sugriva as the son of the Moon God. An account of two apes is depicated in Mon Ramanyana as follows:

In Himavanta forest, a hermit devotes himself to mediation for several decades. He reteirs from the life of ascetics and returns to a city named Rajathani. The king of Rajathani gets his daughter named Ganga Devi married with the ex-hermit. Ganga Devi bears a daughter to him. The daughter is named Swaha. The ex-hermit becomes weary of secularlife and enters forest to resume his austerities as an asectic. Ganga Devi and her daughter, Swaha, are left behind without any assurance. Having been bewildered, they recite an Incantation(Mantra) which the ex-hermit taught them during his stay in his home. The Sun God descends to earth attracting the incantation and enchants Ganga Devi. He begets a son by her. Longing for the Sun God, Ganga Devi recites the incantation once again. Having been charmed by her incantation, the Moon God descends to earth and impregnates her. Ganga Devi bears another son. The hermit abandons his asceticism and comes back to his home. His daughter, Swaha, is jealous of her brothers and grumbles that her mother is treating illegal children better than her own child. Thus she reveals the secret of her mother's infidelity to her father.

The ex-hermit throws three children into the air in order to test their legitimacy with the prayer that whoever is his own child will come back to him and the children of others be transformed into monkeys only Swaha comes back to him the two sons become white monkeys with long tails and vanish into the forest. Having lost her beloved sons, Ganga Devi gets furious with ther daughter and invokes a curse her for betraying her mother declaring that Swaha will step across the river Ganga and eat wind only.

4. Hanuman's encounter with Rāma and Lakshmaṇa

In Kamba Ramayana, Sugriva sees Rama and Lakshmana climbing Rishamuka mountain. He hides in a cave lest they are persons sent by Vali. Hanuman goes to Rama in the guise of a Brahmachari and tells Rama that he is the son of Vayu and Anjani and came on orders from Sugriva. In Mon Ramayana, ahuman encounters Ram and Lekkhana carrying bows. He wants to know their abilities of archery. He throws leaves at them sleeping under the tree. Lekkhana is furious with the insolent monkey and immediately shoots at him. Curiously the monkey snatches the arrow. Lekkhana wakes up his brother and tells him about the strange monkey.

Similarities with burmese Ramayana

1. The previous status of Rāma

The Mon version mentions the previous status of Rama as a Bodhisattva, the future Buddha, like that found in the Burmese Ramayanas. Rama is, according to the description of Kampan, recognized as an incarnation of Vishnu in human form.

2. Ravana's attendance at the archery contest

In Mon version, Totsagri, the king of Lenka, attends at the archery contest in order to ask for the hand of Soite, along with other kings from one hundred one countries. He attempts to raise the bow but the bow remains on the floor with slight removal. In a Burmese version, Rama Vatthu, Dattagiri(Ravana) can lift up the bow upto his knees with all his might. When Rama can raise the bow and release his arrow, Dattagiri is terrified at Rama's strength and runs away from there in haste.

Ravana's attendance at the bow lifting contest can be seen also in Serat Kanda of Java, Vientiane version of Laos and Lanka Xiho of Yunnan, China.

3. Rāma's exile for twelve years

In Mon version, Rama is banished into forest from the palace, due to a request from the youngest queen of king Totsarottha. The term of his banishment is described as fourteen years both in Valmiki and Kamba Ramayanas. It is, however, twelve years, according to the description of the Mon version of Laos and Lanka Xiho of Yunnan. The term of twelve years is found also in Jaina version and Dasaratha Jataka of the Kuddhaka Nikaya of the Buddhist Canon.

4. Rama's encounter with Totsagri's younger sister and her two sons

In Mon version, Ram, Soite and Lekkhana are assaulted by three Raksasa and kill two of them with their arrows. Having been slayed her sons by two human beings, the female Raksasa named Sammanukot runs away to Lenka and asks her brother, Totsagri, to abduct Soite, taking vengeance upon Ram and Lekkhana for her son's death. Valmiki and Kampan Ramayanas described that Ravana's sister, Surpanakha, is deformed by Laksmana and asks her brothers Khara and Dusana to revenge upon Rama and Laksmana. Surpanakha is related with Khara and Dusana as sibling. The Mon version together with Burmese version, Muonsing version of Laos and Yunnan version of China state the relationship between Surpanakha and Khara, Dusana as the mother and her children.

5. Ravana's sister transforms herself into a golden hind

The Mon version relates that Sammanukot, Titsagri's sister, resumes herself into a hind in order to entice Ram and Lekkhana out. Valmiki and Kamba Ramayanas narrate that Maricha, Tadaks's son, changes himself into a golden deer. The Burmese, Muongsing version of Laos and Lanka Xiho of Yunnan, correspond with the description of the Mon version, while, Ramayana Kakawin of Java, Serat Kanda of Indonesia, Ramakien of Thai and Reamker of Cambodia, follow the descriptions of Valmiki and Kampan.

6. A gigantic crab destroying the foundation of a causeway across Lenka

The cause way constructed by Ram's army collapses everyday. Anuman goes down to the bottom of the sea and finds a gigantic crab destroying the foundation of causeway. The destruction of the foundation of the causeway by a giganatic crab is found also in the Burmese version, Lanka Xiho of Yunnan and Hikayat Seri Rama of Malaysia. The crab is wrenched its claws off and released in the Burmese version but is boilded and easten by monkeys in Hikayant Seti Rama of Malaysia.

7. The one who has not seen the face of his sister-in-law for three years

In Mon version, Totsagri becomes invisible by concealing himself among clouds. Pipek suggests that nobody can see him except

only the one who has not seen the face of his sister-in-law during past three years. Lekkhana only fulfills the term and finds out Totsagri.

Both in the Burmese version and Lanka Xiho of Yunnan, it is not Ravana but Indrajit, Ravana's son, who conceales himself among clouds. The period of rejection of staring a woman in face is twelve years instead of three in Burmese version. This episode is belived to have been derived from Bengali version composed by Krittivasa. According to the description of Bengali Ramayana, the sage Agasta says that one who did not sleep, nor took any meal, nor saw any woman's face for fourteen years, is alone capable of killing Indrajit.

8. Soite's exile from the palace

In Mon Version, Soite draws a portrait of Totsagri on a slate at the request of her female attendants. King Ram orders his brother Lekkhana to take Soite to the forest and kill her. This episode of Sita's banishment from the palace is widely known among the Southeast Asian Ramayanas, such as Serat Kanda of Java, Hikayat Seri Rama of Malaysia, Ramakien of Thai, Luangprabang version of Laos, Rama Vatthu of Burma and Lanka Xiho of Yunnan, China. It is one of the typical Non-Valmiki elements. This account of Episode is described also in Bengali, Jaina, Telugu, Malayalam and Ceylon version of Ramayana.

Similarities with Ramakien of Thai

1. A quarrel between male and female birds

In Mon version, a female bird rebukes her husband of his infidelity because of his absence all the night through. The male bird contradicts such accusation and dares to swear his innocence in front of a hermit who devoted himself to meditation for several decade in Himavanta forest. This quarrel between male and female birds is narrated also in Thai Ramakien preceeding to an episode of a hermit Gotama's creation of a beautiful maiden, Kala-Achana.

2. Hanuman putting his tail into his own mouth and extingusishing a flame

In Mon version, after conflagration of Lenka city, Anuman dives into the sea to extingusih a flame of his body, but the tip of his tail kept burning. Eventually he puts the tip of his own mouth. The mehtod of extingusishing a flame of his tail in the mon version is quite identical with that of Thai Ramakien.

3. Motcha's obsctruction against the construction of a causeway

In Mon version, the emperor of the Nether world, Waiyarab has a daughter named Motcha who disturbs the construction of a causeway, by order of her father. The same episode can be found in Thai Ramakien. Maccha in Ramakien is, however, not Maiyarab's daughter, but Totsakan's daughter.

4. An ultimatum sent by Ram to Totsagri

Before commencement of an attack against Totsagri, Ram sends Anuman and Ongkot as emissary to Totsagri with an ultimatum stating that Totsagri should yield Soite at once. As Anuman and Ongkot find no seat for them, Anuman lengthens his tail, rolls up and sits on it, so as to be on the same level as Totsagri. Thai Ramakien describes that Phra Ram sends Ongkot only as his envoy to Totsakan. Therefore, the one who rolls up his tail and sits on it is, of course, not Hanuman but Ongkot.

5. Anuman kills, Waiyarab, the king of the Under world

